# இந்துதருமம்

'94



2306
இந்து
SLIPR

இந்து மாணவர் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகம் 1993-94

உ

சிவமயம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# இந்து தருமம் '94

# HINDU DHARMAM

இதழாசிரியர்

செல்வன் மாரியாபிள்ளை ரவிச்சந்திரன்

விஞ்ஞான பீடம்

இந்து மாணவர் சங்கம் 1993/94

பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராதனை.

# இந்து தருமம் '94

இதழாசிரியர் (1994) - செல்வன் மாரியாபிள்ளை ரவிச்சந்திரன்
வெளியீடு - இந்து மாணவர் சங்கம்,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை,
இலங்கை

# HINDU DHARMAM '94

EDITOR (1994) - MARIYAPILLAI RAVICHANDIRAN
PUBLISHED BY - HINDU STUDENTS UNION
UNIVERSITY OF PERADENIYA,
PERADENIYA,
SHRI LANKA.

PRINTERS - TECHNO PRINT
DEHIWALA

அட்டையில் - சரஸ்வதிதேவி
(அட்டைப் படத்திற்காக மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட ஓவியங்களில் தெரிவு செய்யப்பட்டது.)

வரைந்தவர் - எஸ்.சுசந்தன்
இறுதி ஆண்டு,
மிருக வைத்திய பீடம்,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.

ஓம்

# காப்பு

கலைமாதும் திருமாதும் களித்தே வாழும்
கவின் பேரா தனை நகரிற் கோயில் கொண்டு

நிலையான நற்கல்வி கலையின் ஞானம்
நெஞ்சுருகும் பக்தருக்கே யருளுஞ் சேந்தன்

தலையான தண்டமிழின் ஊஞ்சலேறித்
தமிழ் குறிஞ்சிக் குமரனவன் கனிந்தே யருள

மலை மீதில் பாரதத்தை எழுதும் ஞான
மதகரியின் செஞ்சரணம் காப்பதாமே

# உள்ளடக்கம்.....


| | | | பக்கம் |
|---|---|---|---|
| முகப்பு | | | |
| ஆத்மகனாநந்த சுவாமிகளின் ஆசியுரை | | | I |
| நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி | | | II |
| Vice - Chancellor's message | | | III |
| இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளரின் செய்தி | | | IV |
| இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவரின் வாழ்த்து | | | V |
| இந்து மாணவர் சங்கப் பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி | | | VI |
| தலைவரின் உள்ளத்திலிருந்து | | | VII |
| செயலாளர்களின் சிந்தைகளிலிருந்து | | | VIII |
| உங்களுடன் சில நிமிடங்கள் | | | IX |
| அமரர். பேராசிரியர். அழகையா துரைராஜா | | | X |
| இந்து மாணவர் சங்க செயற்குழு விபரம் | | | XI |
| பொறுப்பாண்மைக் குழு விபரம் | | | XII |
| | பகுதி I - ஆன்மீகக் கட்டுரைகள் | | |
| கலியுக வரதனே! | | | 01 |
| அமைதிக்கு வேண்டிய ஆன்மீக விளக்கம் | - | பேராசிரியர் சி.தில்லைநாதன் | 02 |
| கீதை கூறும் ஆன்ம ஈடேற்றம் | - | செல்வி அம்பிகை வேல்முருகு | 07 |
| இந்து மதம் லொகீகமும் ஆத்மீகமும் | - | கலாநிதி க. அருணாசலம் | 09 |
| சைவ சித்தாந்தம் காட்டும் முக்தி நெறி | - | கலாநிதி. திருமதி. மகேஸ்வரி அருட்செல்வம் | 14 |
| இறைவரே ஏகமான குரு | - | சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷீஓம்சர் | 18 |
| ஆன்மீக தேடலில் | - | செல்வன். T.V.R.சங்கர் | 21 |
| இந்திய மெய்யியலின் ஆத்மீக மரபு | - | திருமதி. ம. இராஜரத்தினம் | 24 |
| சமயம் என்பது எதற்காக? | - | செல்வன். மு. சுந்தரச் செல்வன் | 26 |
| பிறவிப் பெருங்கடல் | - | வைத்திய ககலாநிதி. தி. ஆனந்த மூர்த்தி | 28 |
| ஆத்ம தரிசனம் | - | திரு. வை. நந்தகுமார் | 31 |
| இந்து மதம் காட்டும் ஆன்மீக வழியில் அன்பு நெறி | - | செல்வன். முருகேசு வேணுகோபாலன். | 34 |

| | | |
|---|---|---|
| அருள் புரிவாய் | - செல்வி. ஞானாம்பிகை விஸ்வநாதன் | 37 |
| இல்லறத்தில் ஆன்மீகம் | - திருமதி. வளர்மதி சுமாதரன் | 38 |
| இந்து சமயம் காட்டும் ஆன்மீக வழி | - திரு. குமாரசாமி சோமசுந்தரம் | 41 |
| இந்து சமயம் காட்டும் ஆன்மீக பாதை | - சாயி சங்கல்பன் | 45 |
| கீதையின் பார்வையில் ஆன்மீகம் | - செல்வன். இரா. இரவிசங்கர் | 49 |
| பகவான் இராமகிருஷ் பரமஹம்சருடைய ஆத்மீக வாழ்வும் இராமகிருஷ்ண மிஷனின் பணிகளும் | - செல்வன் சி.மகேஸ்வரன் | 51 |
| மனித வாழ்க்கையும் இந்து மதமும் | - செல்வன் இ. சாந்தசொரூபன் | 55 |
| உன்னைப் பிரிகையிலே முருகா | - செல்வன் மு.தாரகன் | 58 |


பகுதி II - வரலாறு


| | | |
|---|---|---|
| குறிஞ்சியிலே ஒரு அழகன் | - க.பாலகிருஷ்ண ஐயர் | 59 |
| தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்கள் | - கலாநிதி. ந.வேல்முருகு | 60 |
| பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய சைவ சமய இயக்கங்கள் (1854 -1870) | - திரு.இரா.வை.கனகரத்தினம் | 66 |
| சுவாமி விவேகானந்தரும் பெண்களும் | - கலாநிதி துரை மனோகரன் | 75 |
| சைவ சமய வளர்ச்சியில் சோழப் பெரு மன்னர்கள் | - கலாநிதி அம்பலவாணர் சிவராசா | 78 |
| இறைவனின் திருவடிவங்கள் | - செல்வன் மு.தாரகன் | 81 |
| எங்கே போகிறது இந்து மதம்? | - செல்வன் இ.ஸ்ரீதர் | 86 |
| ஆகமங்கள் கூறும் வழிபாடுகள் | - செல்வன் வ.சிவலோகதாசன் | 89 |
| இந்து சமயத்துக்கு புதிய விளக்கம் வேண்டுமா? - ஒரு கண்ணோட்டம்... | - வே.இராஜ கோபாலசிங்கம் | 93 |
| ஈழத்திருநாட்டின் சமய வளர்ச்சியில் சித்தர்கள் | - செல்வன் சாந்தகுமார் சிதம்பரம் | 96 |
| அவதாரபுருஷா!ஆபந்பாந்தவா!! | - செல்வி கேதாரேஸ்வரி பொன்னம்பலம் | 98 |
| 1993/94ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்க 38வது செயற்குழுவின் ஆண்டறிக்கை | - | 99 |
| நன்றியுரை | | |

ஸ்ரீ ராமகிருஷ்ண சரணம்

# ஆத்மகனாநந்த சுவாமிகளின் ஆசியுரை

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் ஒவ்வொரு ஆண்டும் 'இந்து தருமம்' என்ற சஞ்சிகையை வெளியிட்டு வருவதை அனைவரும் அறிவர். இவ்வாண்டு 'இந்து மதம் காட்டும் ஆன்மீக வழி' என்ற தலைப்பில் இவ்விதழ் மலர இருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறோம்

உயர்ந்த, நிறைவான வாழ்க்கைக்கு ஆன்மீகமும் மிக்க அவசியம் என்பதை இளம் உள்ளங்களில் நன்கு பதியும் வண்ணம் எடுத்துக் கூறுதலே இச்சஞ்சிகையின் நோக்கமாக அமைந்திருப்பதை பாராட்டுகிறோம்.

இச்சஞ்சிகையில் வெளியாகும் கட்டுரைகள் மிக்க தரம் உள்ளவையாகவும், சிந்தனையைத் தூண்டுபவையாகவும் உள்ளன என்பதை யாரும் மறுக்க இயலாது.

இந்து மாணவர் சங்கத்தினரின் நன்முயற்சியை மனமாரப் பாராட்டி, அவர்கள் பணி மேன்மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகிறோம்.

***அனைவருக்கும் இறையருள் கூடுவதாக!***

**அன்புடன்**
**சுவாமி ஆத்மகனாநந்தா**

**இராமகிருஷ்ண மிஷன்,**
**(இலங்கைக் கிளை)**
**40, இராம கிருஷ்ண வீதி,**
**கொழும்பு - 06**

உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

சைவ செம்மனச் செல்வர்களே மாணவ மணிகளே!

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் அவர்களது இந்து தருமம் சஞ்சிகையில் **'இந்து மதம் காட்டும் ஆன்மீக வழி'** என்ற அரிய பொருளை வெளியிடவிருப்பதையறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். ஆன்மீக சைவ சமய வளர்ச்சியில் ஊக்கம் காட்டும் இம் மாணவர்களைப் பாராட்டுகிறோம். பரம் பொருளின் அருள் முன்னமேயே செறியப்பெற்று இருந்தால் தான் இவ்வகை உணர்ச்சிகள் நெஞ்சில் உதித்தெழும். எமது ஞான புருஷர்கள் ஆன்மீக ஈடேற்றத்திற்கான பெறற்கரிய பொக்கிஷங்களை உவந்தளித்துள்ளார்கள். அவைகள் கிடைக்கப்பெறாதோர் பலர். அவற்றை ஆய்ந்தறிய முற்படாதோர் பலர். இவ்வழியில் முயற்சி எடுக்கும் அன்பர்களுக்கு இவ்வெளியீடு நற்பயன் அளிக்கும் என்பது திண்ணம். இம்மாணவ மணிகளின் சைவ சமய முன்னேற்றத்துக்கான நற்பணிகள் மேன்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகிறோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு சிவ சிவ.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனம்**
**பருத்தித்துறை வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

# *VICE-CHANCELLOR'S MESSAGE*

*It is with great pleasure and admiration that I send this message to the Hindu Students' Union of the University of Peradeniya on the occasion of the publication of the annual journal "Hindu Dharmam".*

*Hinduism is one of the oldest religion in the world which matured the human society through the ages. As people of the South Asian macro-cultural region we are proud of its heritage. The publication of "Hindu Dharmam" which incorporates the contemporary thinking of the young generation and the essence of the philosophical traditions of Hinduism is an important event that will contribute to the harmony and the spiritual upliftment of our communities.*

*I wish to extend my good wishes to the Hindu Students' Union in its activities, and congratulate the editior for an excellent job done.*

*OFFICE OF THE VICE-CHANCELLOR*
*UNIVERSITY OF PERADENIYA*
*30 DECEMBER, 1994*

*Prof. C. M. Madduma Bandara*
*VICE CHANCELLOR*
*UNIVERSITY OF PERADENIYA*

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

பல்லாண்டுகளாக தொடர்ந்து வெளிவரும் 'இந்து தருமம்' என்னும் ஆண்டு சஞ்சிகை இந்து சமயத்திற்கும் தமிழிற்கும் அரிய சேவையை ஆற்றி வருகிறது. தமிழில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய துறைகளிற்கான தரமான பருவ இதழ்கள் போதிய அளவில் வெளி வருவதில்லை. பயனுள்ள ஆக்கங்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் தாங்கி ஆண்டுதோறும் மலரும் இந்துதருமம் இக்குறையை நிவர்த்தி செய்து வருகிறது.

***பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் நற்பணிகள் சிறப்புற வாழ்த்துகிறேன்.***

**க. சண்முகலிங்கம்**
**பணிப்பாளர்.**
**இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம்**

# இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவரின் வாழ்த்து.....

கணணி கொண்டு ஜனனமான இந்து தருமம்- இத்
தரணி மீது திருவருள் பரப்பும் புனித கருமம்
சிலர் திறமை கொண்டு உருவெடுத்த போதும்
பலர் பரவசத்தில் திளைத்து நீந்த உதவும்

ஆண்டாண்டு தோறும் மலரும் இப் புஷ்பம்
பல நாடேகி நம்மவர் பலரும் காண வேண்டும்
இந்து கலாச்சாரம் சார்ந்த அறிவை ஊட்டும் - இது
இந்து மாணவர் தம் முயற்சி தனை எடுத்துக் காட்டும்

நடை நடையாய் பல கடை கடையாய் ஏறி இறங்கி
கொடையாய் நன் கொடையாய்ச் சேர்த்த நிதியம் - இன்று
மணி மணியாய்க் கோர்த்துத் தொகுத்து உதயம் - இப்
பணி தொடர வாழ்த்தும் பல இதயம்

பலரும் கைகொடுத்து உதவும் இக் கைங்கரியத்துக்கு
குறிஞ்சிக் குமரன் அருள் வேண்டி நிற்கும் இவ் வேளையில்
படரட்டும் இந்து தருமத்தின் அருள் கதிர்கள் இப் புவி மீது எனவும்
தொடரட்டும் இப் பணி என்றென்றும் எனவும்
இதயம் கனிய வாழ்த்துகிறேன்.

**கலாநிதி இ. சிவகணேசன்**
**பெருந் தலைவர்**

**வைத்திய பீடம்,**
**பேராதனைப் பல்கலைக் கழகம்,**
**பேராதனை.**

## பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி...

பேராதனைக் குன்றத்தில் வீற்றிருக்கும் குறிஞ்சிக் குமரனின் அருளைப் பெற இந்து மாணவர்கள் பல்வேறு தொண்டுகளைச் செய்து வருகிறார்கள். இவற்றில் மிகச்சிறப்பு வாய்ந்தது ''இந்து தருமம்'' வெளியீடாகும்.

இவ்வருடமும் இந்து தருமம் சிறந்த மலராக வெளியிட முயற்சி செய்த பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்திற்கும், இம்மலரை சிறப்பாக வெளியிட பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர்களுக்கு குறிஞ்சிக் குமரனின் அருள் கிடைக்க குறிஞ்சிக் குமரனிடம் பிரார்த்திக்கிறேன்.

**வைத்தியக் கலாநிதி. வி. விஜயகுமாரன்**
**பெரும் பொருளாளர்.**

**விரிவுரையாளர்,**
**பல் வைத்திய பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை .**

# தலைவரின் உள்ளத்திலிருந்து....

''அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி'' என்ற அருள் வாக்கிற்கமைய முருகப்பெருமானது திருவருளினால் இம்முறையும் எமது சங்கத்தினால் ''இந்து தர்மம்'' என்கின்ற இந்த மலரை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இவ்வுலகிலே இந்து சமயம் பழம் பெரும் சமயங்களில் சிறந்த ஒன்றாக விளங்கி மனித சமூகத்தின் வளர்ச்சிக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் துணை புரிகின்றதென்றால் மிகையாகாது.

இன்றைய நிலையில் இந்து சமயத்திலோ அல்லது வேறு எந்த ஒரு சமயத்திலோ சமயக் கிரியை களுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதே அன்றி சமயத்திலுள்ள கருத்துக்களை, அவற்றில் பொதிந்துள்ள உண்மைகளை வெளிக்கொணர்வதற்கோ அல்லது அவற்றை விளங்கிக் கொள்வதற்கோ இடமளிக்கப்படுவதில்லை என்ற பொதுவான குறைபாடு கூறப்படுகின்றது.

அவற்றை நிவர்த்தி செய்யும் ஒரு சிறு முயற்சியாகவே நாம் ஆன்மீக சொற்பொழிவுகள் சிலவற்றையும், இந்து சமயக் கருத்தரங்கொன்றினையும் ஒழுங்கு செய்திருந்தோம். அதுமட்டுமல்லாது இந்நூலையும் ''இந்து மதம் காட்டும் ஆன்மீக வழி'' என்ற கருப்பொருளை மையமாக வைத்தே அமைத்துள்ளோம்.

இவைகள் ஓரளவுக்காவது சமய உண்மைகளைப் புரிந்து கொண்டு எமது நாளாந்த வாழ்க்கையை சிறந்த முறையில் அமைத்துக் கொள்ள உதவும் என மனப்பூர்வமாக நம்புகின்றோம்.

''தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டின் கொல்லோ'' என்ற கந்தபுராண பாடலை மனதின் கண் கொண்டு எல்லாம் வல்ல குமரப் பெருமானின் திருவடியினை சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வு அடைவோமாகுக.

**''புன்னெறி யதனிற் செல்லும் போக்கிவை விலக்கிமேலா**
**நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி**
**யென்னையு மடியனாக்கி யிருவினை நீக்கியாண்ட**
**பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கையங்கள் போற்றி.**

**நன்றி.**

**இறுதி வருடம்**
**பொறியியற்பீடம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

**ச. கணநாதன்**
**தலைவர்**
**இந்து மாணவர் சங்கம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

# செயலாளர்களின் சிந்தைகளிலிருந்து.....

அருள்மிகு குறிஞ்சிக்குமரன் கிருபையுடன் இந்துமதமும் தமிழும் தழைத்தோங்கச் செய்யும் பணியிற் செயலாற்றி வரும் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க செயற்குழுக்களின் வரிசையில் 38வது செயற்குழுவாக, 1993/94ம் ஆண்டிற்கான பணியினை மேற்கொள்ளச் சந்தர்ப்பமேற்பட்டதில் நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

இப்பல்கலைக்கழகத்தில் எமக்குமுன் கல்விகற்ற இந்து மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பலரின் அயராத உழைப்பின் பயனாக குறிஞ்சிக் குமரன் ஆலயம் அழகுறக் கட்டி முடிக்கப்பட்டது. இவ்வாலயத்தைப் பராமரிப்பது, அபிவிருத்தி செய்வது, நித்திய கருமங்களையும் விழாக்களையும் ஒழுங்காகச் செய்வது மட்டுமல்லாமல் சமய உண்மைகளையும் தத்துவங்களையும் அறிவதும் பிறருக்கு உணர்த்துவதும் நமது பணியும் கடமையும் என்பதை நாம் மறந்து விடலாகாது. இந்த வகையில் எமது செயற்குழு. சமய சொற்பொழிவுகள், ஆன்மீக அருளுரைகள் மற்றும் கருத்தரங்கு போன்றவற்றை ஒழுங்கு செய்வதில் மிக்க ஆர்வத்துடன் செயற்பட்டது.

மேலும் ஆலயத்தில் நாம் ஒன்றுகூடி வழிபடும்போதும், பிற கருமங்களில் ஈடுபடும் போதும் எம்மத்தியில் ஒற்றுமையுணர்வு வலுக்கிறது; ஆணவம் இல்லாது பொதுப்பணியிற் பங்கு கொள்ளும் சுகானுபவமும் பணிவுடைமையும் பொறுப்புணர்வும் வளர்கிறது. இந்த அனுபவமும் மனப்பாங்கும் எதிர்காலத்தில் வாழ்க்கைத் துயரங்களைப் புறங்கண்டு ஆன்மீக அமைதி பெறப் பெரிதும் உதவுவதுடன் நாம் மேற்கொள்ளப்போகும் உலகியற் காரியங்களில் பொது நலத்தை மறந்து விடாமல் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவும் எம்மைப் பயிற்றும் என்பதில் ஐயமில்லை.

நாம் இப்பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் போது இந்த நாட்டை அல்லது இந்த உலகத்தையே ஆலயமாக மதிக்கும் மனப்பாங்கு எமக்கு வளர்ந்துவிடுமாயின், நாம் பணிபுரியப் போகுமிடத்தில் கள்ளமற்ற புனித உள்ளத்துடனும் மானிட உணர்வுடனும் பணிவுடனும் செயற்படுவோமாயின் அது இந்து மதத்திற்குப் பெருமை சேர்க்கும். இவ்வாறு தான் நாம் எமது மேன்மையான சைவ நீதியை உலகமெல்லாம் விளங்கவைக்க முடியும்.

**வாழ்க இந்து தருமம்**

**வளர்க மாணவர் தம் பணி**

**இந்து மாணவர் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**செல்வன் தி. கேதீஸ்வரன்**
3ம் ஆண்டு/ பொறியியற் பீடம்
**செல்வி. ஸ்ரீ. வதனா**
3ம் ஆண்டு/ பல் மருத்துவ பீடம்
**(இணைச் செயலாளர்கள்)**

# உங்களுடன் சில நிமிடங்கள்......

எம்மைக் காக்கும் குறிஞ்சிக்குமரன் திருவருளால் இந்து தருமம்'94 உங்கள் கைகளிற் தவழ்கிறது. ''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்'' என்பதற்கிணங்க இயங்கிவரும் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் ஆண்டு மலரான இந்த இதழ் நாற்பது ஆண்டுகளுக்கு முன் 1954ம் ஆண்டில் முதன் முதலாக வெளிவந்தது. இருந்த போதும் எமது நாட்டில் ஏற்பட்ட பல்வேறு அசம்பாவிதங்களின் காரணமாகவும், பல்கலைக்கழகத்தினுள் ஏற்பட்ட குழப்பகரமான நிலைகளின் காரணமாகவும் குறிப்பாக 1980க்கும் 1990க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கிரமமாக வெளிவரவில்லை. ஆனால் அதன் பின்னர் பல சிரமங்களுக்கும் நிதிப்பிரச்சினைகளுக்கும் மத்தியில் அவற்றை இறைவன் கிருபையால் வெற்றி கொண்டு தொடர்ச்சியாக வெளிவருகிறது.

''இந்து மதம் காட்டும் ஆன்மீக வழி'' என்பது இவ்விதழின் பிரதான கரு. என்றாலும் பிரதான கருவுக்குள் அடங்காத சில ஆக்கங்களும் கிடைக்கப் பெற்றன. எனவே இவ்விதழ் இருபகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

முதலாவது பகுதி ''ஆன்மீக கட்டுரைகள்'' என்ற தலைப்பின் கீழ் தொகுக்கப்பட்டு பிரதான கருவுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கின்றது. இவற்றுள் சில கட்டுரைகள் ஒரே கருத்தினை வலியுறுத்திய போதிலும் அவை அணுகிய விதங்களில் வேறுபட்டு நிற்கின்றன. இரண்டாவது பகுதி ''வரலாறு''. இதனுள் இந்து மதத்தின் வளர்ச்சி கலை, கலாச்சார பாரம்பரியங்களை பிரதிபலிக்கக்கூடிய வகையில் அமைந்த கட்டுரைகளை இயன்ற வரையில் தொகுத்துள்ளேன். இவை தொகுக்கப்பட்ட விதம் எந்த அளவுக்கு சரியானது என்பதை இச்சஞ்சிகையை வாசிப்பவர்களின் சிந்தனைக்கு விட்டு விடுகிறேன்.

மேலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினதும், மாணவர்களினதும் ஆக்கங்களோடு தரமான சஞ்சிகையாக இதனை வெளியிட வேண்டும் என்ற எனது அவாவிற்கு ஆதரவு நல்கியோர் பலர். இவர்களில் கட்டுரைகளை தெரிவு செய்ய உதவிய இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. இரா. வை. கனகரத்தினம் அவர்களுக்கும் பல்வேறு வேலைப்பழுக்களுக்கு மத்தியில் மொழி நடைமுறையினைப் பரிசோதித்து கட்டுரைகளை தேர்வு செய்யவும், மற்றும் பல வழிகளிலும் அவ்வவ் வேளைகளில் உதவியும் ஆலோசனைகளும் வழங்கிய தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. வ. மகேஸ்வரன் அவர்களுக்கும் வழிகாட்டிய ஏனைய ஆசிரியர்களுக்கும் எனக்கு பல்வேறு வகையில் உதவிகள் நல்கிய விஞ்ஞான பீட இறுதி வருட மாணவன் மு. தாரகன், கலைப்பீட மாணவன் சி. மகேஸ்வரன் ஆகியோருக்கும், மற்றும் பல வழிகளில் உதவிகள் நல்கிய நண்பர்களுக்கும், இறுதியாக இச்சஞ்சிகை வெளிவர ஆக்கங்கள் தந்து சிறப்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் சக மாணவ நண்பர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிளைத் தெரிவிப்பதோடு, வளரும் புத்தாண்டில் உலக மாந்தர்கள் அனைவரிடத்திலும் வன்மீக உணர்வுகள் அழிந்து, ஆன்மீக உணர்வுகள் தழைத்தோங்குவதன் மூலம் எங்கும் சாந்தி, சமாதானம், சுபீட்சம் நிலவ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**''என் கடன் பணி செய்து கிடப்பதே''.**

நன்றி.

**செல்வன் மாரியாபிள்ளை ரவிச்சந்திரன்**
**(இதழாசிரியர்)**

**விஞ்ஞான பீடம்,**
**(இறுதி ஆண்டு)**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**

# அமரர். பேராசிரியர் அழகையா துரைராஜா

''தோன்றின் புகழொடு தோன்றுக அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

பவ வருஷம் (1934) ஐப்பசித்திங்கள் மண்ணுலகில் உதித்த அழகையா துரைராஜா, தனது ஆரம்பக்கல்வியை, உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலையில் ஆரம்பித்து, பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தொடர்ந்து, 1953ல் பட்டப்படிப்பிற்காக, இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தார். முதலாம் தர சிறப்புச் சித்தியுடன், குடிசார் எந்திரவியலில் விஞ்ஞான மாணிப்பட்டம் பெற்று, அரசுப் புலமைப்பரிசிலில் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் சென்று அங்கு தனது ஆய்வினை மேற்கொண்டார். கிங்க்ஸ் கல்லூரியில் இருந்த இவர் மண்ணுட்பவியலில் செய்த ஆய்வினால், 1962ல் கலாநிதிப்பட்டம் பெற்றார்.

அதன் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில், விரிவுரையாளராகச் சேர்ந்து, 1971ல் பேராசிரியரானார். குடிசார் எந்திரவியல் துறைத்தலைவராக இருந்த இவர் 1975-79லும், 1982-85 லும், பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பிடாதிபதியாகவும் கடமை புரிந்தார். பின்னர் 1985ல் திறந்த பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, 1987-88 வரை எந்திரவியல் தொழில்நுட்பபீட, பீடாதிபதியானார். 1988லிருந்து 94 வரை யாழ்பல்கலைக்கழக, உபவேந்தராகவும் பணிபுரிந்தார்.

இலங்கை எந்திரிமார் நிறுவனத் தலைவராக 1989-90ல் பணியாற்றியதோடு, மண்ணுட்பவியல் சங்கத்தை உருவாக்கி வளர்த்து இறுதிக்காலம் வரை அதன் தலைவராகவும் பணியாற்றினார். இலங்கையின் அறிவியற் சஞ்சிகையான ''ஊற்று'' என்பதனை வெளியிட்ட நிறுவனத்தின் தலைவராகவும் இருந்தார். இவற்றுடன் மேலும் பல்வேறு அமைப்புகளில், முக்கிய பொறுப்புகளை வகித்தும், ஆலோசகராகவும் இருந்து தனது சேவையை ஆற்றினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசகராகவும் இருந்தார். மண்ணுட்பவியலில் ஆளுமையுடன் திகழ்ந்த இவர், பொறியியல் பீடத்தில், தொழில்நுட்ப ஆலோசனைச் சேவையை முதலில் அறிமுகப்படுத்தி வைத்தார். கற்பித்தல் நுட்பத்திலும் மிகச் சிறந்தவராக விளங்கி மாணவர்களின் பெருமதிப்பிற்குரியவராக இருந்தார். மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் சுபாவத்தைக் கொண்டவராகவும் அனைவரையும் பாராபட்சமின்றி நடத்தியவராகவும், பல்வேறு மட்டங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும், சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்துடனும், சினமெனும் செருக்கை அடக்கியவராகவும் திகழ்ந்தார்.

''அன்பெனும் ஆர்வம் உடமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு''

கல்வித்துறை, நிர்வாகத்துறை மட்டுமல்லாது தொழிற்சங்க நடவடிக்கைகள், சமூக சேவைகள் என்பவற்றிலும் ஈடுபாடுடையவராகவும் இருந்தார். குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் பதிவு செய்யப்பட்ட முதலாவது பொறுப்பாண்மைக்குழு அங்கத்தவராக இருந்த காலத்தில் ஆலயத்திற்கு பல அரிய சேவைகளை ஆற்றினார். பல்தேசிய மண்ணுட்பவியல் சம்பந்தமான பிணக்குகளில் நடுவராகவும் கடமை புரிந்தார். இவர் பணி புரிந்த இடங்களில் இன்றும் பின்பற்றக்கூடிய அளவிற்கு சிறந்த நடைமுறைகளை ஏற்படுத்திச் சென்றுள்ளார்.

''தன்னைத்திருத்த உலகம் திருந்தும்'' என்ற கோட்பாட்டிற்கு முன்மாதிரியான செயல்வீரனாக வாழ்ந்து காட்டியவர்களுள் பேராசிரியரும் ஒருவராவார். எத்தருணத்திலும் துன்பத்தைக் கண்டு அஞ்சாதவராகவும், எடுத்த காரியங்களை உறுதியுடனும், துணிச்சலுடனும், ஒழுங்காகவும் நிறைவேற்றும் பக்குவம் படைத்தவராகவும் இருந்தார். எவ்விடத்திலும் தனதுகருத்துகளை உறுதியாக உரைக்கும் மனத்திடம் கொண்டவராக விளங்கினார்.

''பகையகத்துச்சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சாதவர்.''

எளிமையான வாழ்க்கையை நடத்தியவரும், சுவாரசியமான பேச்சை உடையவருமான பேராசிரியரது ஆத்மா நிகழும் பவ வருஷ வைகாசித் திங்களன்று உடலை விட்டுப் பிரியும் தருணத்திலும் புன்முறுவலுடன் திகழ்ந்தார்.

**'தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்.'**


**இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.**

# இந்து மாணவர் சங்க செயற்குழு
# 1993 - 94

| | |
|---|---|
| பெருந்தலைவர் | கலாநிதி .இ.சிவகணேசன் |
| பெரும் பொருளாளர் | வைத்திய கலாநிதி. வி.விஜயகுமாரன் |
| தலைவர் | செல்வன். ச.கணநாதன் |
| உபதலைவர் | செல்வன். ச.சிவாதரன் |
| இணைச் செயலாளர்கள் | செல்வன். தி.கேதீஸ்வர சுதன்<br>செல்வி. ஸ்ரீ.வதனா |
| இளம் பொருளாளர் | செல்வன். க.சிவநேசன் |
| இதழாசிரியர் | செல்வன். மா.ரவிச்சந்திரன் |
| நூலகர் | செல்வன். சி.பரணீதரன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | செல்வன். சி.தயாபரன்<br>செல்வன். க.நவரத்தினராசா<br>செல்வன். சி. மகேஸ்வரன்<br>செல்வி. கு.மதிவதனி<br>செல்வி. து.அகிலா |

# இந்து மாணவர் சங்க செயற்குழு

## 1993-94



முன்வரிசை (இ.வ) : செல்வி. ஸ்ரீ. வதனா (இணைச் செயலாளர்), செல்வன். ச. கணநாதன் (தலைவர்), கலாநிதி. இ. சிவகணேசன் (பெருந்தலைவர்), பேராசிரியர் C. M. மத்தும பண்டார (உபவேந்தர்), வைத்திய கலாநிதி. வி. விஜயகுமாரன் (பெரும் பொருளாளர்), செல்வன். தி. கேதீஸ்வர சுதன் (இணைச் செயலாளர்), செல்வி. கு. மதிவதனி (குழு உறுப்பினர்).

பின்வரிசை (இ. வ) : செல்வி. து. அகிலா (குழு உறுப்பினர்), செல்வன். சி. பரணீதரன் (நூலகர்), செல்வன். க. சிவநேசன் (இளம் பொருளாளர்), செல்வன். மா. ரவிச்சந்திரன் (இதழாசிரியர்), செல்வன். ச. சிவாதரன் (உப தலைவர்), செல்வன். சி. மகேஸ்வரன் (குழு உறுப்பினர்), செல்வன். க. நவரத்தினராசா (குழு உறுப்பினர்), செல்வன். சி. தயாபரன் (குழு உறுப்பினர்)

# குறிஞ்சிக் குமரன் ஆலய பொறுப்பாண்மைக் குழு
# 1993 - 94

| | |
|---|---|
| தலைவர் | - பேராசிரியர் த.யோகரட்ணம் |
| பொதுச் செயலாளர் | - திரு. வை. நந்தகுமார் |
| நிர்வாகச் செயலாளர் | - கலாநிதி வ. முத்துக்குமாரசுவாமி |
| பொருளாளர் | - கலாநிதி இ. சிவகணேசன் (பெருந் தலைவர் இந்து மாணவர் சங்கம்) |

**உறுப்பினர்கள்:**

| | |
|---|---|
| பேராசிரியர் சி. தில்லைநாதன் | |
| கலாநிதி அம்பலவாணர் சிவராசா | (தலைவர், இந்துப் பட்டதாரிகள் சங்கம்) |
| வைத்திய கலாநிதி வி. விஜயகுமாரன் | (பெரும்பொருளாளர், இந்து மாணவர் சங்கம்) |
| திரு. க. நீலகண்டன் | (செயலாளர், அகில இலங்கை இந்து மா மன்றம்) |
| திரு. அ. துரைசாமிப் பிள்ளை | (தலைவர், மத்திய மாகாண இந்து மா மன்றம்) |
| திரு. க.பாலதாசன் | (பொருளாளர், இந்துப் பட்டதாரிகள் சங்கம்) |
| செல்வன். ச. கணநாதன் | (தலைவர், இந்து மாணவர் சங்கம்) |
| செல்வன் தி. கேதீஸ்வர சுதன் | (செயலாளர், இந்து மாணவர் சங்கம்) |
| செல்வன் க. நந்தகுமார் | (இந்து மாணவர் சங்கப் பிரதிநதி) |
| செல்வன் ம. மகிழ்ராஜன் | (இந்து மாணவர் சங்கப் பிரதிநிதி) |

# குறிஞ்சிக் குமரன் ஆலய பொறுப்பாண்மைக் குழு

## 1993-94



முன்வரிசை (இ.வ) : கலாநிதி அம்பலவாணர் சிவராசா, பேராசிரியர் .சி. தில்லைநாதன், கலாநிதி. இ. சிவகணேசன் (பொருளாளர்), பேராசிரியர். த. யோகரட்ணம் (தலைவர்), திரு. அ. துரைசாமிப்பிள்ளை, வைத்திய கலாநிதி. வி. விஜயகுமாரன், திரு. வை. நந்தகுமார் (செயலாளர்).

பின்வரிசை (இ.வ) : செல்வன். க. நந்தகுமார், செல்வன். ச. கணநாதன், செல்வன். தி. கேதீஸ்வர சுதன், செல்வன். ம. மகிழ்ராஜன்.

# பகுதி - I

## ஆன்மீகக் கட்டுரைகள்

ஓம்

இந்து தருமத்திற்கு எமது
நல்வாழ்த்துக்கள்!


# ஞானமலர் ஸ்டோர்ஸ்

102/2, இரத்தினசோதி சரவணமுத்து மாவத்தை,
கொழும்பு 13.

# கலியுக வரதனே!

**இராகம் : கல்யாணி** **தாளம் : ஆதி**

கலியுக வரதனே! கந்தனே!! குமரனே!!!
தேவாதி தேவா தீன தயாளா
ஓங்கார ரூபா சக்திவடிவேலா

அபயக் கரம் நீட்டி ஆறுதல் அளித்திடுவாய்
இன்பமாய் நாம் வாழ இனிதேயெமக் கருளிடுவாய்
ஈஸ்வரன் மைந்தா ஈந்திடு வரமெமக்கு
(தேவாதி தேவா)

உள்ளக் கோவிலிலே உனை வைத்துப் பூசிக்க
என்றுமுனை மறவா மனமதைத் தந்திடுவாய்
ஐங்கரன் சோதரா ஆறுமுக வேலவா
(தேவாதி தேவா)

மரகத மயிலேறி மலையிலே அமர்ந்திடுவாய்
மாணவர் தொண்டுகளை மகிழ்வுடன் ஏற்றிடுவாய்
மாண்புறு மால்மருகா வரமருள் வேல்முருகா
(தேவாதி தேவா)

தைப்பூசத் திருநாளில் திருவூஞ்சல் ஆடிடுவாய்
ஆனியுத்தரத்தில் அருட்கோலம் காட்டிடுவாய்
கார்த்திகைக் கந்தா குறிஞ்சிக் குமரா
(தேவாதி தேவா)

குன்றிலே குடியிருந்து குறைகளைத் தீர்த்திடுவாய்
''குமரா'' என்று கூவியழைத்தால் குற்றங்களைத் தீர்த்திடுவாய்
இருவாய் வந்தெமக்குத் தந்திடுவாய் நல்லறிவை
(தேவாதி தேவா)

பேரழகுசூழ் பேராதனையிற் பெருமையுடன் கோயில்கொண்டாய்
நாடிவந்த அடியவர்க்கு நல்லருள் நல்கிடுவாய்
திருமுருகா அருள் தந்திடும் சண்முகா
(தேவாதி தேவா)

***செல்வி திருமகள் குருநாதன்***
***பல் மருத்துவ பீடம் (இறுதி ஆண்டு)***

# அமைதிக்கு வேண்டிய ஆன்மீக விளக்கம்

**பேராசிரியர். சி.தில்லைநாதன்.**

மனிதகுலம் அதன் வரலாற்றில் தன் தேவைகளுக்கு அமையப் பல்வேறு வாழ்க்கைத் திறன்களையும் கருவிகளையும் நிறுவனங்களையும் தத்துவங்களையும் வளர்த்து வந்திருக்கிறது. மனித வரலாற்றை எழுதுபவர்கள் மனித கண்டு பிடிப்புகளும் சாதனைகளும் நாகரீக வளர்ச்சிக்கு எவ்வாறு உதவினவென்பதை எடுத்துக்காட்டுவர். ஆனால், எங்கு நோக்கினும் அமைதியற்றசூழலையும் மிகப் பெரும்பாலான மக்கள் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ' முடியாது விசனப்படுவதையுமே காண்கிறோம். விருத்தி செய்யப்பட்ட கருவிகளும் நிறுவனங்களும் வல்லமைகளும் சிலரது ஏகபோக உரிமைகளாக, பெரும்பாலானவர்கள் அவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்களாகவும் அவர்களின் கைகளை எதிர் பார்த்துக் கிடப்பவர்களாகவும் ஆகியிருப்பதை அவதானிக்கிறோம்.பெரும்பாலான மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தங்களுடைய வாழ்வு தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சக்திகளின் நிர்ப்பந்தத்துக்கு உட்படுவதாக உணர்கிறார்கள்.

பணபலத்தாலும் ஆயுத பலத்தாலும் சிலரது ஆதிக்கம் மேலோங்கிய விடத்து, அரசியலமைப்புத் திட்டங்களும் ஜனநாயக, சுதந்திர கோட்பாடுகளும் பாராளுமன்றங்களும் எவ்வளவு தூரம் மனித சமுதாய நலன்களையும் அமைதியையும் பேணுவதற்கு உதவுகின்றன என்ற வினா எழுகிறது. வல்லமைகளையும் வசதிகளையும் பெருக்கிக் கொள்பவர்கள் அந்த அகந்தையில் பிறர் துன்பங்களை உணரும் மன ஆர்வத்தையும் பொதுநலம் விழையும் மனநெகிழ்ச்சியையும் இழந்து விடுவார்களா? மின்விளக்கு, ஒலிபெருக்கி, கணணி முதலான வசதிகள் வளர்ந்தமையின் காரணமாக மனிதர்களின் இயல்பான பார்க்கும், கேட்கும், கணிக்கும் சக்திகள் குறைந்து விட்டன என்று கூறுகிறார்கள். அவ்வாறாயின். உலகியல் வசதிகள் வலுத்துத் தங்களை மற்றவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்ற கர்வம் அதிகரிக்குமிடத்து மானிட உணர்வு மழுங்கிப் போகுமா?

இன்று பலராலும் முன்னெடுக்கப்படும் திறந்த சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில், இலாபநோக்கும் சுயநலமும் அதன் உந்து சக்திகளாகும் என்றும் போட்டி அதனை நெறிப்படுத்தும் என்றும் கூறப்படுகிறது. அப்படியான ஒருநிலையில் அன்பு, பிறர்நலம் பேணும் பண்பு, எளியவர்களிடத்துப் பரிவு முதலானவை மனித நடவடிக்கைகளை நிர்ணயிப்பதில் முக்கியமற்றவையாகிவிடலாம். இன்றுபலர் கல்வியைத் தேடுவதுகூட எதிரிகளைப் போட்டியிட்டு வென்று பணம் சம்பாதித்தப்பதை முதன்மையான குறியாகக் கொண்டேயாகும். கல்வியின் தலையாய நோக்கம் மக்கட் பண்பினை வளர்த்து மனிதனை முழுமையுறச் செய்வது என்று பேசப்பட்டாலும், அவ்விடயத்தில் அதிக அக்கறை காட்டப்படுவதாகத் தோன்றவில்லை.

தொழில் நுட்பம், பொருளாதாரம், அரசியலாதிக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நவீன நாகரிகத்தில் பொருள் வேட்கையும் ஆதிக்க வேட்கையும் மிகுந்து அலைபவர்கள் அறம், ஒழுக்கம், நீதி. நியாயம் போன்றவை குறித்து அதிகம் சிந்திப்பதாய்த் தெரியவில்லை. கட்டடங்கள், இயந்திரங்களைத் தயாரிப்போரையும் திருத்துவோரையும் விட்டுவிட்டு, மனிதர்களின் ஆரோக்கியத்தைக் கவனிக்கும் மருத்துவத் துறையினரை எடுத்துக் கொண்டாற்கூட அங்கும் பரிசோதனைக் கருவிகளும் படுக்கை வசதிகளும் பணம் சேர்க்கும் வேகமும் பெருகிய அளவுக்கு சேவைவிருப்பும் ஆதரவும் மனிதப் பெறுமதியினை மதிக்கும் மனப்பாங்கும் பெருகியிருப்பதாய்த் தோன்றவில்லை.

நீதிவெல்லும், அநீதி வீழும் என்று சிறுவயதில் படித்தவர்கள், போலி வேடதாரிகளும் விவஸ்தை கெட்டவர்களும் அதீத துணிச்சலுடன் நேர்மையற்ற வழிகளில் பொருளையும் பதவிகளையும் சம்பாதிப்பதைப் பார்க்கிறார்கள்; இலஞ்சம், ஊழல், ஏமாற்று, கொடுமை, வன்முறை போன்றவை நினைத்ததை முடிப்பதையும் பணம் உலகினை ஆள்வதையும் பார்க்கிறார்கள். கோடிக்கணக்கான எளியமக்கள் வறுமையிலும் பிணியிலும்

அறியாமையிலும் வீழ்ந்து கிடப்பதைப் பார்க்கிறார்கள்; தொடர்பாடல் விருத்தியால் உலகம் ஒரு கிராமமாகப் போகிறதென்ற வாய்ப்பேச்சின் மத்தியில் போட்டி பொறாமையினதும் அநீதிகளினதும் விளைவாகப் பிரிவினைச் சக்திகள் வலுப்பெறுவதையும் பார்க்கிறார்கள்.

கல்விநிலையங்களும் சமய நிறுவனங்களும் கூடத் தம் உன்னத குறிக்கோள்களை மறந்து, ஊன்றிய நலன்களுக்கு ஆட்பட்டு, அரசியலாதிக்கத்துக்கும் பணபலத்துக்கும் அடிபணிகின்றன. யார் காட்டிய வழியில் யார் செல்வது? அரசும் பொருளும் காட்டிய வழியில் கல்வியும் சமயமுமா அல்லது கல்வியும் சமயமும் காட்டிய வழியில் அரசும் பொருளுமா? மனுக்குலத்தின் உன்னத இலட்சியங்களும் கனவுகளும் அபிலாஷைகளும் உருக்குலைந்து வீழ்ந்து கிடப்பதைக் கண்டு விரக்தியும் நம்பிக்கை வரட்சியும் கொண்ட பலர் பிரச்சினைகளிலிருந்து மெல்ல நழுவும் மார்க்கங்களைத் தேடுகிறார்கள்; போதை வஸ்துகளை நாடுகிறார்கள்; வன்முறைகளில் இறங்குகிறார்கள்.

பொதுவாக வாழ்க்கையில் ஏமாற்றங்களும் பிரச்சினைகளும் தோன்றாத ஒரு நிலையினை உருவாக்குவது சாத்தியமில்லை. உயிர்வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மாறுதல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாவர். சவால்களைச் சமாளிப்பதற்கு மனவலியும் திடசங்கற்பமும் அவசியமாகும். மனிதரைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அதலபாதாளத்தில் வீழ்ந்துவிடக்கூடிய பலவீனம் மட்டுமன்றி உன்னத நிலைகளை எட்டத்தக்க ஆற்றலும் உண்டென்று கூறப்படுகிறது. அத்தகைய ஆற்றல் இருக்குமிடத்து நம்பிக்கை நலிந்து, 'வாடித் துன்பமிக உழன்று பிறர் வாடப் பல செயல்கள் செய்து' வாழ்வைக் கழிப்போமாயின், அது மனிதவியல்புகளுக்கும் மனித கௌரவத்துக்கும் இழைக்கப்படும் இழுக்கும் துரோகமுமாகும். மனிதரிடத்து அள்ள அள்ளக் குறையாத ஆத்மீக வளம் உள்ளதென்றும் சொந்த ஆத்மீக வளங்களில் அவர்கள் தங்கியிருக்க வேண்டுமென்றும் சுவாமி விவேகானந்தர் கூறியமை இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது.

மனிதரிடத்திலுள்ள ஆக்க உணர்வுகள் செயலிழந்துவிடும் போது அழகினை விழையும் ஆர்வம் குன்ற அசிங்கமானவை மேலோங்குகின்றன. சமயம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் முதலானவை மனித சுயாதீனத்தையும் ஆற்றலையும் வளர்ப்பதற்கான விசாரங்களே ஆகும். சமயமும் கலையும் விஞ்ஞானமும் மனிதரிடத்து இயல்பாயுள்ள ஆக்க உணர்வுகளைத் தூண்டவல்லன. அந்தவகையில் வேண்டத்தகாத குறைபாடுகள் நீங்கவும் வேண்டத்தக்க வல்லமைகள் வளரவும் அவை உதவுவனவாக வேண்டும். மனிதர் தம்மிடமுள்ள ஆற்றலையும் தெய்வீகத்தன்மையையும் தேடியுணர்ந்து விருத்தி செய்து கொள்ள வியலுமாயின் அது செவ்விய மானிட நோக்கு அமைவதற்கு அத்திவாரமாகும். அந்த நோக்கு இயந்திரங்கள், ஆயுதங்கள் யாவற்றுக்கும் மேம்பட்ட மனிதபெறுமானத்தை மதிக்கும் பண்பினை வளர்ப்பதாகும்.

''மானிடம் போற்ற மறுக்கும் ஒரு மானிடன் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்'' என்பது பாரதிதாசனின் கூற்று. மனிதன் தன்னை மதிக்க வேண்டும். அத்தன்னம்பிக்கையின் அடித்தளத்தில் நின்று ஏனைய யாவரையும் ஒப்பமதிக்க வேண்டும். தன்மீது நம்பிக்கை வைக்க முடியாதவன் பிறர்மீது நம்பிக்கை வைப்பான் என்றும் தன்னை மதிக்கவியலாதவன் பிறரை மதிப்பான் என்றும் எதிர்பார்த்தல் துன்பமாகும் . தன்னையும் பிறரையும் மதிப்பவர்களாலேதான் சிறந்த குணநலன்களைக் கட்டியெழுப்ப முடியும். சிறந்த குணநலன்களைக் கொண்டவர்களே தமது வாழ்வைப் பயனுள்ளதாக ஆக்கும் பூட்கையுடையோராவார். மெலிந்துவாடி வறிதேகிடந்த ஒரு பாணனின் சுற்றத்தை வர்ணிக்கப்போந்த புறநானூற்றுப் புலவரான ஆலத்தூர்கிழார், ''பூட்கையில்லோன் யாக்கை போல'' என்றார். பயன்படும் குறிக்கோள் இல்லாதவனின் உடல் வெறுமையான தென்பது அவர் கருத்தாயிற்று.

தன்னம்பிக்கையுடனும் குறிக்கோளுடனும் பொறுப்புணர்வுடனும் பரந்த பார்வையுடனும் செயற்பட்டவர்களினால் மானிடம் பயனுற்றமைக்கு வரலாற்றில் பல சான்றுகளுண்டு. அவ்வாறே ஒடுங்கிய பார்வையுடன் சுய ஆதிக்கம் கருதிப் பொறுப்புணர்வின்றிச் செயற்பட்டவர்களால் மனித சமுதாயத்தில் ஏற்பட்ட சீரழிவுகளுக்கும் வரலாற்றில் பல எடுத்துக்காட்டுகளுண்டு. வீழ்ச்சிக்கு வழி கோலுபவற்றை விலக்கி, வளர்ச்சிக்கு உகந்தவற்றை முன்னெடுக்க முயற்சிக்க வேண்டும் என்பதே வரலாறு புகட்டும் பாடமாகும்.

மனித வரலாற்றில் முன்னேற்றமடைந்த ஒரு கட்டமாக ஜனநாயகத்தைக் கருதுகிறோம். ஆனாலும், வாக்களிப்பதால் மட்டும் ஜனநாயகம் உருவாகி விடுமா? வாக்குரிமை வழங்கப்படுவதால் மட்டும்

வெகுஜனங்களுக்கு ஜனநாயகத்தின் பலன்கள் யாவும் வாய்த்துவிடுமென்று கூறமுடியாது. மனிதர் ஒவ்வொருவரினதும் கௌரவத்தையும் பெறுமானத்தையும் உறுதி செய்வதே உண்மையான ஜனநாயகமாக முடியும். ''எல்லாருமோர் நிறை எல்லாருமோர்விலை'' என்று மகாகவி பாரதி கூறியது அதனையே. உலகியல் வாழ்க்கையில் எல்லோருக்கும் சமவாய்ப்புகளை வழங்குவதன் வாயிலாக சமாதான சகவாழ்வுக்கு வழிசமைக்கவியலும் என்பதை மறுக்காவிட்டாலும்கூட, 'பகுத்துண்டு பல்லுயிரோம்பும்' தலையாய மனிதவிழுமியத்தை வளர்க்காது அசட்டை செய்தல் சாலாது. எம்மிடத்துப் பிறர் எவ்வாறு நடந்து கொள்ளக்கூடாது என்று கருதுகிறோமோ அவ்வாறு பிறரிடத்து நடவாத பழக்கத்தை யாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். எமக்கு எவைநேரக் கூடாது என்று நினைக்கிறோமோ அவை பிறருக்கும் நேராதவாறு தடுப்பதில் முனைந்து நிற்க வேண்டும். அதற்கு இன்றியமையாத ஆன்மபலத்தை யாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

''உனது மதக்கொள்கைகள் லௌகிகக் கொள்கைகள், வைதிகநடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங்கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும் கூட்டத்திலும் எதிலும் எப்போதும் நேர்மையாய் இருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர்பிறரை வஞ்சிப்பதை நீ இயன்றவரை தடுக்க வேண்டும்'' என்று மகாகவி பாரதி கூறியதை எண்ணிப் பார்த்தல் நன்று. ஒருவரை ஒருவர் வாஞ்சையுடன் மதித்து நிதானமான ஒருமுகநோக்குடன் உலக வாழ்வினை வாழ வழிகாட்டுவனவாகவே சமயங்களும் கருதப்படுகின்றன. அந்த வகையிலேதான் சமயங்களைப் பண்பாட்டின் தோற்றுவாய்களென்றும் நாகரீகத்தின் ஆதாரங்களென்றும் போற்றுவர்.

சமயம் என்றால் என்னவென்பது பற்றிப் பலவாறாகப் பேசப்பட்டாலும், பொதுவாகச் சமயங்கள் எல்லாம் உலகம், ஆன்மா, இறை ஆகியன குறித்த விளக்கங்களை உணர்த்துவன என்றே கொள்ளலாம். அவ்விளக்கங்கள் ஒழுக்க மேம்பாட்டுக்கும் சமூக அமைதிக்கும் தன்னலமற்ற மானிட சேவைக்கும் உதவுவனவாம். உண்மையான சமயம் எனப்படுவது கீழான தன்மைகளை விலக்கி மேலான இயல்புகளை வளர்ப்பதாகும் என்றும் அது இயன்றவிடத்து மானிடத்தின் தகுதிக்கு ஏற்றதொன்றாக இவ்வுலகினைப் புனர்நிர்மாணம் செய்தல் கூடுமென்றும் டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் கூறுவர்.

தொகுத்து நோக்குமிடத்து, மனிதவாழ்வில் அமைதியையும் ஆனந்தத்தையும் நல்கக்கூடிய ஒழுக்கவிழுமியங்கள் பேணிவளர்க்கப்பட வேண்டியமையின் அவசியம் புலனாகும். சமயங்களே பலநூற்றாண்டுகளாக நல்லவை கெட்டவை குறித்த விளக்கங்களை வழங்கி வருகின்றன. உயர் இலட்சியங்களற்றவிடத்து ஒழுக்கப் பிரமாணங்களைப் பேணுவது கடினம் என்றும் மேலான சக்தியொன்றில் நம்பிக்கையில்லாதவிடத்து இலட்சியங்கள் சாய்ந்து விடலாம் என்றும் கூறப்படுகிறது.

ஒழுக்கமும் குறிக்கோளும் இல்லாத மனிதனோ சமூகமோ செம்மையுறவோ நிலைக்கவோ முடியாதென்பர். ஒழுக்கம் விழுப்பம் தரும் என்ற வள்ளுவர் வாக்கும் இங்கு நினைவு கூரத்தக்கது. நவீன ஜனநாயகத்தின் முன்னோடியாக மதிக்கப்படும் வால்ட் விட்மன் ஒழுக்கத்தின் இன்றியமையாமையை உணர்த்தக் கருதியே, உயர்ந்த மனிதர்கள் வாழும் இடம் சிதைந்த சில குடிசைகளையே கொண்டதாயிருப்பினும் உலகின் உன்னத நகரமாகும் என்றார். ''எவ்வழி நல்ல ராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்ற சங்கப்புலவரான ஔவையார் கூற்றும் அதனையே வலியுறுத்துவதாகும்.

இயற்கைக்கு உகந்த ஒரு சக்தியில் நம்பிக்கை வைத்து அதில் தங்கியிருப்பதாக உணர்ந்து அதனைப் பணிவதோடு சம்பந்தப்பட்ட சமயமும், நன்மையும் தீமையும் குறித்த ஒழுக்க சாத்திரமும் வெவ்வேறானவை என்று சிலர் கூறுவர். ஆனால், விருத்தியடைந்த சமயங்களைப் பொறுத்தவரையில் , அவை கடவுளைச் சிருஷ்டிகர்த்தாவாகவும் விதிகளை வகுக்கும் மேலாதிக்கம் உடையவராகவும் ஒழுக்க முறைகளை நேர்நிறுத்துபவராகவும் கொள்ளுகின்றன. அந்தவகையில் சமயமும் ஒழுக்கமும் ஒன்றுடனொன்று சம்பந்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். உயிர்களைப் படைத்த தந்தையாகக் கடவுளைக் கருதுமிடத்து மக்கள் மத்தியில் பரவசமும் பணிவுடைமையும் ஒட்டுணர்வும் ஓங்கவும், பொது அமைதிக்கு வேண்டிய ஒழுக்க நெறிகளைப் பேணும் உணர்வு வலுக்கவும் அது உதவியாகலாம்.

நவீன காலத்தில் விஞ்ஞான, தொழிநுட்பத் துறைகளில் கவனமும் மதிப்பும் பெருகிவருவதனையும் சமய,

ஒழுக்கத்துறைகளிலான ஈடுபாடு அருகி வருவதனையும் ஒரு பிரச்சினையாகப் பலர் குறிப்பிடுகின்றனர். இயற்கையும் சூழலும் மனிதவாழ்வில் விதித்துள்ள கட்டுப்பாடுகளைக் கடப்பதிலும் மனிதனுக்குத் தேவையான ஆற்றல்கள், அதிகாரங்கள், ஆடம்பரங்கள் முதலானவற்றை விருத்தி செய்வதிலும் காட்டுகின்றளவு ஆர்வத்தை இன்றைய விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் மனித இயல்பையும் கௌரவத்தையும் மேம்படுத்துவதிலும் அன்பு, ஒழுக்கம், உதாரகுணம், மனச்சாட்சி போன்றவற்றை வளர்ப்பதிலும் காட்டுகின்றனவா என்று வினவப்படுகிறது.

**''சென்ற இடத்தில் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.''**

என்ற வள்ளுவர் மொழிக்கேற்ப மனதைத் தீமையினின்றும் விலக்கி நன்மையிற் செலுத்துவதில் அக்கறையின்றி நுகர்வுகளை அதிகரிப்பதிலும் நுகர்பொருள்களை வழங்குவதிலும் கண்ணாயிருப்பின் மனிதவாழ்வு, 'பூட்கையில்லா யாக்கை போல' வெறுமையுற்றுவிடக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

ஆன்மபலத்தை வளம்படுத்துவதில் அதிக ஆர்வமின்றி லௌகிக முன்னேற்றம் கருதி அனேகர் முயல்கின்றனர். அடுத்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் புதிய கைத்தொழில் வளர்ச்சி நிலை காண அவாவுறுகிறோம். மனைவியின் நடத்தையில் ஐயம்கொண்ட இராணுவ கமாண்டோ ஒருவன் அவளையும் அக்கம்பக்கத்திற் காணப்பட்டவர்களையும் துரத்தித் துரத்திச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தன்னையும் சுட்டுக் கொண்டதாகப் பத்திரிகைகளிலே செய்தி வெளிவருகிறது. சக்திமிக்க ஆயுதங்களை வைத்திருக்கிறோமென்பது உண்மைதான். ஆனால் மக்களையும் மண்ணையும் பாதுகாக்கவென்று அவ்வாயுதங்களை ஏந்தி நிற்பவர்கள் எத்தகையவர்களாய் இருக்கிறார்கள்? ஆயுதங்கள், ஏவுகணைகள், தொடர்பு சாதனங்கள், தொழிற்சாலைகள், கட்டடங்கள் முதலானவற்றை விருத்தி செய்வதனால் மட்டும் ஒரு தேசத்தின் நாகரீகத்தை வளர்த்துவிட முடியுமா?

ஆன்மீக உணர்வுகளும் பண்பாடும் இல்லாத விடத்துத் துன்பமற்ற அமைதியான சமுதாய வாழ்வு அமையாது. ஆன்மீக உணர்வுகளாகக் கொள்ளப்படும் அன்பு, அகம்பாவமின்மை, வைராக்கியம், தூய்மை ,வாய்மை முதலானவற்றை இழந்து விட்டால் மனிதன் மிருகநிலையிற் சீரழிய நேரிடும். எனவே, ஆன்மீக வழியினை யாம் புறக்கணித்தல் சாலாது.

ஆன்மீக வழியிற் கவனம் செலுத்துவதென்றால், அது உலகியல் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகளைப் புறக்கணிப்பதென்று ஆகாது. அவற்றினாலாய நன்மைகளை யாவர்க்கும் முறையாக வாய்க்கச் செய்யும் மனப்பாங்கினை வளர்க்க ஆன்ம விளக்கம் அவசியமாகும். ஆன்மீகத்தை மனிதனது உலக வாழ்க்கையினின்றும் வேறுபட்டதாகவோ முரண்பட்டதாகவோ கொள்ள வேண்டிய தில்லை. மனிதனுடைய அன்றாட நடைமுறை வாழ்வும் ஆன்மீக வாழ்வும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றவை. மனிதன் சட உலகிலும் ஆன்மிக உலகிலும் வாழ்பவனாவான். ஒன்று செயலற்றவிடத்து மற்றதன் ஆதிக்கம் ஓங்கிவிடும். பொருளை மனிதன் ஆளவேண்டுமேயன்றிப் பொருள் மனிதனை அடிமைகொள்வதை அனுமதிக்கக் கூடாது. இந்துக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் உலகியலையும் ஆன்மிகத்தையும் வேறுபடுத்திக் காண்பதில்லை. உலகியல் வாழ்வினை நெறிப்படுத்தி அமைதிக்கு வழிகாட்டுவதாகவே ஆன்மீகத்தை அவர்கள் கருதினர்.

ஆன்மாவானது ஆணவ, பாசத்தளைகளினின்றும் விடுபடவேண்டுமென்றும் மனிதன் உலகியலை இகந்த உயர் நற்பேற்றினை நாட வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினர். ஆன்மாவைச் செவ்வனே அறிந்து கொண்டால் துன்பமற்ற பெருநிலையினை அடையலாம் என்று அவர்கள் நம்பினர். ஆன்மஞானம் பெற்றவன் தான் பிரம்மத்தின் ஓர் அம்சமென்று உணருமிடத்துத் தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்திடம் தன்னையும் காண்பான் என்றனர்.

'எவன் பிரம்மத்தை அறிகிறானோ அவன் பிரம்மமாகவே ஆகிறான்.'' என்று உபநிடதமும் ''யோகத்தில் கலந்தவன் எங்கும் சமப்பார்வையுடையவனாய், எல்லா உயிர்களிடத்தும் தானிருப்பதையும் தன்னுள் எல்லா உயிர்களுமிருப்பதையும் காணுகிறான்'' என்று பகவத் கீதையும், ''உயிர்களெலாந் தெய்வமின்றிப் பிறவொன்றில்லை'' என்று மகாகவி பாரதியும் கூறியுள்ளவை எண்ணிப்பார்க்கத் தக்கவை.

அவ்வாறு உயிர்கள் அனைத்தையும் ஒக்க நோக்கிய இந்துக்கள், இறைவனை அன்புவடிவாகவும் சத்திய சொரூபியாகவும் அனைவர்க்கும் நன்மை விழையும் லோக கல்யாண குணத்திரனாகவும் போற்றினர்.

''நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை'' என்ற குதூகலத்தில் அனைத்துயிரையும் ஒப்ப மதிக்கும் உணர்வும் மக்கள் சேவையை மகேஸ்வர சேவையாகக் கொள்ளும் மனப்பண்பும் விளக்கம் பெறலாம். அவ்வாறு எல்லோரது இன்பதுன்பங்களையும் ஒட்டியுணர்ந்து வேறுபாடுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் ஒழிக்கக் கருதும் நிலையினை ஆன்மநேயம் என்று போற்றுவர். அந்நிலை தன்னலத்தினின்றும் விடுபட்டது; மற்றவர் துன்பம் கண்டு உருகுவது; பிறருக்காகத் தியாகம் செய்வதில் ஆர்வமுடையது. அவ்வாறான ஆன்மநேயம் குறித்த சிந்தனை தமிழர்க்குப் புதியதன்று.

தமக்காகவன்றிப் பிறர்பொருட்டு வலிய முயற்சிகளை மேற்கொண்டவர்களைச் சங்கப்புலவரான இளம்பெருவழுதி போற்றினார். மன்னுயிர் ஓம்புவோரைத் திருவள்ளுவர் அருளாள்வார் என்றார். ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றார் திருமூலர். பசியிலும் பிணியிலும் வருந்தியவர்களையும் வாடிய பயிரையும் கண்டு தாம் துடித்ததாக இராமலிங்க சுவாமிகள் பாடினார். அவ்வாறான அனுபவத்தை வெளியிடும் பல பாடல்களைத் தமிழிலக்கியப் பரப்பிலே பார்க்கலாம். நவீனகாலத் தமிழ் மகாகவி பாரதியின் பாடலொன்று அந்தவகையிலே குறிப்பிடத்தக்கது.

**''பக்கத் திருப்பவர் துன்பம் - தன்னைப்**
**பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி**
**ஒக்கத் திருத்தி உலகோர் - நலம்**
**உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி.''**

*★ நான் தனிப்பட்ட ஜீவன் எனக் கூறுவது, கங்கைக் பிரவாகத்திற்குள் ஒரு சிறு பாகத்தை அணையிட்டுக் காட்டி அவ்வணைக்குள்ளிருக்கும் நீரை என்னுடைய கங்கை என்று கூறுவதற்கொப்பாகும்.*

*★ மனிதர்கள் இருவகுப்பினர் - மனிதர் என்ற பெயர் மாத்திரம் வகித்தவர் (மனுஷ்யர்), அறிவு விளங்கப் பெற்றவர் (மன் - ஹுஷ்யர்). ஈசுவரனை அடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தை உடையவர்கள் பின்னர் சொன்ன வகுப்பினர். காமமும் பண ஆசையும் பிடித்து அலைபவர்கள் மனிதர் என்ற பெயர் மாத்திரம் வகிப்பவர்கள்.*

*★ சர்வ சக்தி வாய்ந்த கடவுளுடைய அருள் வந்தடையும் போது ஒவ்வொருவனும் தன் குற்றத்தை காண்பான். இதனை அறிந்து நீ வெறும் தர்க்கம் செய்யாதே.*

**- ஸ்ரீ ராமகிருஷ்ணர்.**

# கீதை கூறும் ஆன்ம ஈடேற்றம்

செல்வி. அம்பிகை வேல்முருகு, தமிழ்ச் சிறப்புக் கலை, கலைப்பீடம்.

இந்துக்களாலே இந்து தர்மத்தின் ஆதார நிதிகளாக உபநிஷதம், பகவத்கீதை, வேதாந்த சூத்திரம் என்ற மூன்று பிரஸ்தானத்திரயங்களும் கருதப்படுகின்றன. இவற்றுள் பகவத்கீதை என்ற புகழ்வாய்ந்த பகுதி மகாபாரதத்தில் உள்ளது. குருசேத்திரப் போர்க்களத்தில் பாண்டவ-கௌரவ அணிகளுக்கிடையில் போர் மூளவிருந்த சூழலில் பாண்டவ வீரனான அர்ச்சுனன் உறவு சார்ந்த உணர்வுகளால் பாதிக்கப்பட்டு மனம் சோர்வடைகின்றான்; இந்நிலையில், சாரதியான கண்ணன் அவனது மனச்சோர்வுக்கான அடிப்படைகளை அகற்றும் வகையில் புத்தி புகட்டுகிறான்; தனது தெய்வீகக் காட்சியை வழங்கி, அதன் மூலம் அவனை போர் புரிவதற்கு நெறிப்படுத்துகின்றான். ஈற்றில் சோர்வகன் அர்ச்சுனன் கண்ணன் சொற்படி செயற்பட ஆயத்தமாகின்றான். மகாபாரதம் கதையமைப்பில் கீதை என்ற பகுதி தரும் காட்சி இது.

பகவத்கீதையில் பதினெட்டு அத்தியாயங்கள் உள்ளன. அவை ஆறு அத்தியாயங்கள் கொண்ட மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று பகுதிகளும் முறையே தத்துவம், இதம், புருஷார்த்தம் ஆகிய மூன்றையும் விரித்துக் கூறுகின்றன. மூன்று காரணங்களால் கீதை இணையற்ற ஒரு நூலாக விளங்குகின்றது. அவை **அது உபதேசிக்கப்பட்ட சந்தர்ப்பம், அந்த உபதேசத்தைப் பெற்ற நபரின் தகுதி, தனிநபரின் முயற்சிக்கு கீதை கொடுக்கும் முக்கியத்துவம்** என்பனவாகும். கீதையின் சிறப்பு என்னவெனில் இதை உபதேசிப்பதற்கு போர்க்களத்தை பகவான் தேர்ந்தெடுத்ததும், போர் செய்ய மறுத்த எந்த நிமிடத்திலும் தலை போய்விடக்கூடும் என்ற அபாயத்திலிருந்த அர்ச்சுனனுக்கு இது உபதேசிக்கப்பட்டதும் தான். ஆன்மீக ஞானத்துக்கு மனிதன் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை கீதை விளக்குகின்றது. தெய்வீகத்தைப் பெறுவதற்கு கீதையில் சொல்லப்படுகின்ற ஆன்மீக விளக்கங்களும், வாதங்களும் நடைமுறையில் கடைப்பிடிக்க முடியாத செயலுக்கு ஒத்துவராத வெறும் வெற்றுச் சொற்களோ அல்லது அடுக்கு வாதங்களோ அல்ல. அவை வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவை. ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்கக் கூடியவை.

பகவத்கீதை தர்மசாஸ்திரமாக மட்டும் விளங்குகின்றது என்று பலரும் நினைப்பர். இது தவறான ஒரு கருத்தாகும். பகவத் கீதை மோட்ச சாஸ்திரமாகவும் விளங்குகின்றது. மனிதன் சர்வ துக்கங்களிலிருந்தும் விடுபடும் வழியைப் போதிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' இதுவே பக்தி. அவனை நம்பினோர் செய்யத்தக்கது எதற்கும் துயரப்படாதிருத்தல் ; எதற்கும் ஐயுறவு கொள்ளாதிருத்தல்.

''ஸம் சயாத்மா விநச்யதி'' - ஐயமுடையோர் அழிவான் நம்பினவன் மோட்சமடைவான்

மோட்ச சாஸ்திரமாகிய பகவத்கீதையை சிலர் கொலை நூலாகக் கருதுவர். துரியோதனன் முதலியோரைக் கொல்லும்படி அர்ச்சுனனைத் தூண்டுவதற்காகவே இந்தப் பதினெட்டு அத்தியாயங்களும் கண்ணபிரானால் கூறப்பட்டனவாதலால் இது கொலையைத் தூண்டுவதையே தனி நோக்கமாகவுடையது என்று சிலர் கூறுவர். உண்மையில் பகவத் கீதையின் உட்கருத்து ஜீவாத்மாக்கள் இறைவனது துணையுடன் காமக் குரோதங்களை விட்டு நீங்கி ஆன்மீகத்தை அடைய வேண்டும் என்பதாகும். பகவத்கீதையில் துரியோதனன் முதலானவர்கள் காமம், குரோதம், சோம்பல், மடமை, மறதி, கவலை, துயரம், ஐயம் முதலிய பாவ சிந்தனைகள்; அர்ச்சுனன் - ஜீவாத்மா; ஸ்ரீ கிருஷ்ணன் - பரமாத்மா. இந்த உட்கருத்தை உணராதவர்கள் பகவத்கீதையை ஒருபோதும் விளங்கிக் கொள்ள மாட்டார்கள்.

பகவத்கீதை சந்நியாச நூலன்று. வீடு, மனைவி, மக்கள், சுற்றத்தைத் துறந்துவிட்டு சந்நியாச நெறியில் செல்லும்படி கீதை கூறவில்லை. அது கடமையையே வற்புறுத்துகின்றது. ''ஒவ்வொருவரும் தங்களுக்கு வாழ்வில் இயல்பாக அமைந்துள்ள கடமைகளைச் சரிவரச் செய்வதே வாழ்க்கையின் மிக உயர்ந்த தர்மம்'' என்ற கொள்கையை மிக அழுத்தமாக உபதேசிக்கின்றது. இத்தகைய கடமையைச் செய்ய முடியாமல் நிலைகுலைந்துபோன மிகப்பெரிய வீரனான அர்ச்சுனனுக்கு இந்தத் தர்மத்தை மிகத் தெளிவாக அது வலியுறுத்துகின்றது. ''அர்ச்சுனா சத்திரியனான நீ உன் கடமையாகிய போரைச் செய்'' என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறுகின்றார். இது போன்றே நமக்கும் வாழ்க்கைப் போரைப் போன்றது. நாம் வாழ்க்கையில் பல தடவைகள் சோம்பலாலும், கோழைத்தனத்தாலும் கடமைகளிலிருந்து

விலகி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம். ''அரசே எழுந்திரு! இந்த மனத் தளர்ச்சியை, இந்த பலவீனத்தை ஒழி; எழுந்து நின்று போர் புரி'' (2-3) என்று கண்ணபிரான் அர்ச்சுனனுக்குக் கூறும் இவ் வார்த்தை மகவும் கருத்து நிறைந்ததாகக் காணப்படுகின்றது. வாழ்க்கை கடமைகளைச் செய்துகொண்டு வாழ்வதற்குரியது; துறப்பதற்குரியதன்று என்பது இதன் தொனிப்பொருள்.

கீதையில் தனிச்சிறப்புடன் விளங்கும் இன்னொரு கொள்கை பற்றின்மை என்பதாகும். ''கடமைக்காகவே செய்யப்படும் கடமையே வினைத் தளையைப் போக்கும்'' என்று கிருஷ்ணபரமாத்மா கூறுகின்றார். எல்லாச் செயல்களையும் கடவுளுக்கென்று சமர்ப்பித்துவிட்டு பற்றுதல் இன்றி எவன் தொழில் செய்கின்றானோ அவனைப் பாவம் தீண்டுவதில்லை. ஒருவனுக்கு பற்றின்மை ஏற்படும்போது அவனுக்கு ஏனையோரில் பொறாமையும் சஞ்சலமும் கொள்ள வழியில்லை. தன் செயல்களுக்கு இடையூறாக நிற்குமென்ற எண்ணத்தால் அவன் பிற உயிர்களுடன் முரண்படவும் மாட்டான்.

''சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலனுக்காக தனிமனிதன்
தன்னை முழுமையாக ஒப்படைக்க வேண்டும்''

கீதையின் தொனிப்பொருள் இதுதான். இதன் பதினெட்டு அத்தியாயங்களில் அமைந்த 700 சுலோகங்களும் இதன் விரிவுரைகளே. இவ்வாறு ஒப்படைப்பதற்கு அமையவேண்டிய மனப்பக்குவம் என்ற வகையில் கீதை ''பலனில் பற்றுவைக்காத செயல்திறன்'' செயலில் துறவு என்பது பற்றிப் பேசுகின்றது. இவ்வாறான பற்றின்மை செயலூக்கத்தைப் பாதிக்கலாகாது என்பதைச் சுட்டுவதற்காக கடமையுணர்வு வற்புறுத்தப்படுகின்றது. கடமையில் உணர்வு பூர்வமாக ஈடுபடுவதற்காக அந்நூல் 'தியானம்', 'பக்தி' ஆகிய அணுகுமுறைகளை முன்வைக்கின்றது.

கல்வியும், விநயமுமுடைய அந்தணரிடத்திலும், மாட்டினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும், அதையுண்ணும் சண்டாளனிடத்திலும் அறிஞர் சமமான பார்வையுடையோர்'' (5-18) என்று பகவான் கூறுகின்றார். எனவே கண்ணபிரான் மனிதருக்குள் ஜாதிவேற்றுமை, அறிவுவேற்றுமை போன்றன ஏற்படக் கூடாதென்றும், எல்லா உயிர்களுள்ளும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தல் அறிஞர்களுக்கு அழகு என்றும் கூறுகின்றார். வேற்றுமைகளுள்ள இடத்தில் பயமுண்டு; ஆபத்துண்டு; மரணமுண்டு.. ஏற்றத்தாழ்வு பற்றிய நினைப்புள்ளவர்கள் என்றும் துக்கங்களிலிருந்து விலகமாட்டார்கள். எனவே எல்லா வேற்றுமைகளும் நீங்கி நிற்பதே ஆன்ம ஈடேற்றத்துக்குரிய வழியாகும்.

மேலும் ஆன்ம ஈடேற்றத்தை அடைய விரும்புவோனுக்கு முக்கியமான சாதனம் அவனது சொந்த மனமேயாகும் என்று கீதை கூறுகின்றது. ''தன்னைத்தானே வென்றவன் தனக்குத்தானே நண்பன் தன்னைத்தான் ஆளாதவன் தனக்குத் தானே பகைவன் இங்ஙனம் ஒருவன் தனக்குத்தானே பகைவன் , தானே தனக்கு நண்பன்'' என்று கண்ணபிரான் கூறுகின்றார். உள்ளப் பகையே பகை; புறப்பகை பகையன்று என்ற இக்கருத்து மனித வாழ்க்கையில் முக்கியமானது.

எந்த ஜந்துவுக்கும் இம்சை செய்வோர் உண்மையான பக்தராகமாட்டார்.; எந்த ஜீவனையும் பகைப்போர் கடவுளின் மெய்த்தொண்டராகார்; எந்த ஜீவனையும் கண்டு வெறுப்பெய்துவோர் ஈசனுடைய மெய்யன்பரென்று கருதத்தகார்; மாமிச போஜனம் பண்ணுவோர் கடவுளுக்கு மெய்த்தொண்டராகார் போன்ற கருத்துக்களையம் கீதை கூறுகின்றது. ''அஹிம்ஸா பரமோ தர்ம'' கொல்லாமையே முக்கிய தர்மம் என்பது இந்து மதத்தின் முக்கிய கொள்கையாகும். பிறருக்குத் தீங்கு இழைக்கும் பொருட்டு அவரை வெறுத்துக் கொண்டும், பகைத்துக் கொண்டும் இருப்பவர்கள் இறுதியில் தாமே அழிந்துவிடுவர் என்று கீதையில் கூறப்படும் கருத்து சிந்திக்கற்பாலது.

இவ்வாறு சிந்திக்கும் போது கீதை கூறும் வாழ்வியலானது காலம், இடம், சமூகம், ஆகிய எல்லைகளைக் கடந்ததாகவும் பலநிலைப்பட்ட பிரச்சினைகளுடனும் தொடர்புபடுத்தத்தக்கதாகவும் அமைவதை அவதானிக்கலாம். பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய நிலவுடைமை உருவாக்கத்தின் ஒரு கட்டத்திலே முன்வைக்கப்பட்ட கீதையின் வாழ்வியல் நோக்கானது காலந்தோறும் பேணப்பட்டு வந்துள்ளமையையும் வெவ்வேறு அடிப்படைகளில் புரிந்து கொள்ளப்பட்டமையையும் வரலாறு உணர்த்தும். இந்திய தேசிய விடுதலைப் போராட்டக் காலத்தில் மகாத்மாகாந்தி முதல் வேறும் பலர் கீதையைத் தமது நோக்கத்துக்கு ஏற்ப அணுகியுள்ளனர். அதனை வழிகாட்டியாகவும் கொண்டுள்ளனர்.

## இந்துமதம்:

# இலௌகீகமும் ஆத்மீகமும்

கலாநிதி க. அருணாசலம், முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை,

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஆத்மீகத்தின் பெருமையையும் இன்றியமையாமையையும் பயன்பாட்டையும் உள்ளபடி உணர்ந்து பேணிப் பாதுகாத்து வரும் தலையாய நாடுகளுள் ஒன்றாக விளங்கும் இந்தியா, சமயங்கள் பலவற்றைத் தோற்றுவித்துள்ளது; உலகின் புகழ்பூத்த ஆத்மிகப் பெரியார்கள் பலரை ஈன்றெடுத்துள்ளது. கௌதம புத்தர் முதல் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகாந்தர், மகாத்மாகாந்தி முதலியோர் வரை இவ்வகையில் நினைவு கூரத்தக்கவர்கள்.

இன்றைய உலகின் நாற்பெருஞ்சமயங்களாக விளங்கும் கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து பௌத்தம் ஆகியவற்றுள் இந்து, பௌத்த மதங்கள் இந்திய மண்ணிலேயே தோன்றின. உலகச் சமயங்கள் யாவற்றுள்ளும் தொன்மைமிக்கதாக விளங்கும் இந்துமதம் குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று. தொன்மை மிக்க சமயமாகவும் வாழ்க்கை நெறியாகவும் விளங்கும் இந்து மதம் காலமாறுதல்களுக்கும் சமுதாய வளர்ச்சி நிலைகளுக்கும் ஈடுகொடுத்துப் பரிணாமம் பெற்று வளர்ந்து வந்துள்ளது. வரலாற்றின் ஆரம்ப காலத்திலிருந்து பண்டைய சிந்தனைகளையும் இடைக்காலச் சிந்தனைகளையும் நவீன உலகின் பலதுறைச் சிந்தனைகளையும் தத்துவங்களையும் கருத்துக்களையும் அது தன்னுள்ளே அடக்கியுள்ளது. இவை யாவற்றினுள்ளும் ஊடுருவி மேலோங்கி நிற்பது ஆத்மீகம் தொடர்பான மிக உயரிய கருத்துகளே என்லாம்.

இந்துசமய உலகில் அடிக்கடி பேசப்படும் சொற்பிரயோகங்களாக ஆத்மா (ஆன்மா), ஆத்மசுத்தி, ஆத்மஞானம், ஆத்மீகம் (ஆன்மீகம்) முதலியன விளங்குகின்றன. ஆத்மா, ஆன்மா என்பன ஒரு பொருட்சொற்கள் உடலிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் வேறானதாகக் கருதப்படும் பொருளே ஆன்மா (Soul) அல்லது ஆத்மா எனப்படுகிறது. ''நீ உடம்பன்று; மனமன்று; புத்தியன்று; சித்தமன்று; நீ ஆத்மா; ஆத்மா ஒரு நாளும் அழியாது'' என்பது இந்து சமய மகான்களின் முடிவான கருத்தாகும். ஆத்மாவை உணர்ந்து அறிவது ஆத்மஞானம் எனப்படும். ஆன்மா தொடர்பானது ஆன்மீகம் அல்லது ஆத்மீகம் (Spirituality)எனப்படும்.

ஆத்மா பற்றி இந்து, சமண, பௌத்த மதங்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்ற போதும் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் முதலிய இந்து சமயப் பிரிவுகளும் வைதிக தரிசனங்கள் எனச் சிறப்பிக்கப்படும் தத்துவ சாஸ்திரங்களும் ஆத்மா பற்றி மிக நெருங்கிய கருத்தொற்றுமையைக் கொண்டுள்ளன.

பொதுவாக ஆத்மா பற்றிப் பின்வருமாறு விளக்குவர்; ''ஆன்மா உயிர்ப்பது என்னும் பொருளுடைய 'அன்' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இது உயிர் என்னும் பொருளுடைய பிராணன் எனும் சொல்லுடனும் தொடர்புடையது. ஆன்மாவை வடமொழியில் 'ஆத்மா' என்பர். இந்தச் சொல் இருக்கு வேதத்தில் ஏறக்குறைய முப்பது முறை பல பொருளில் வந்துள்ளது. பொதுவாக ஆன்மா என்பது உடலினின்று வேறுபட்டதும் உடல் இறந்த பிறகும் உள்ளதும் உடல் போன பின் பூமியில் செய்த செயல்களின் பலன்களைத் துய்ப்பதுமான மனித ஆவியையே குறிக்கிறது. உபநிடதங்களிலும் ஆன்மா இந்தப் பொருளிலேயே ஆளப்பட்டிருக்கிறது.''

''ஆன்மா என்பது சடப்பொருள்களாகிய பருவுடல், ஐம்பொறிகள், நுண்ணுடம்பு, பிராணவாயு முதலியவற்றுள் ஒன்று அன்று; வெறுமையும் அன்று; அறிவே வடிவாகிய பரம்பொருளும் அன்று; அது ஒரு தனிமுதல்.'' என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். மனிதன் இயன்றவரை ஆன்மாவை முழுமையாக அறியமுயலும் மார்க்கத்தைக் காட்டுவது ஆன்மீகம் எனலாம். ஆன்மா என்றுமே அழிவற்றது என்பதும் ஆன்மாவை முழுமையாக அறிவதே முத்தியாகும் என்பதும் வேதங்களின் முடிவாக கொள்ளப்படும் . வேதாந்தத்தின் கருத்தாகும். நடைமுறை வாழ்க்கையுடன் இணையாததும் நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படாததுமான கொள்கைகள் பயனற்றவை. இதனையே ''வறட்டு வேதாந்தம்'' என்பர். ஆயின் உண்மையில் வேதாந்தம், இவ்வுலக வாழ்வு செம்மையாக அமைய வேண்டுமாயின் நடைமுறை வாழ்வும் ஆத்மீகமும் பின்னிப் பிணைந்திருத்தல் வேண்டும்; ஆத்மீகத்தை அத்திவாரமாகக்

கொண்டதாகவே வாழ்க்கை அமைய வேண்டும் என வற்புறுத்துவதால் சுவாமி விவேகானந்தர் வேதாந்தத்தை நடைமுறைவேதம் (Practical Vedanta)எனக் கூறியுள்ளார்.

இலௌகீகம், உலக வாழ்க்கை, இல்லறம் முதலிய சொற்றொடர்கள் குடும்ப வாழ்க்கையைக் குறித்து நிற்கும். இலௌகீக வாழ்க்கையில் ஈடுபடுவோர் துறவிகளிலும் பார்க்க அதிக அளவில் துன்பங்களை அனுபவிப்பதுடன் உலக இன்பங்களையும் அதிகம் துய்க்கின்றனர்; உலக இன்பங்களைத் துய்ப்பதில் தீவிர முனைப்புக் காட்டுகின்றனர்; அதன் காரணமாகச் சுய நல முனைப்பு மேலோங்குகின்றது. அந்நிலையில் மனம் போனபடியெல்லாம் நடக்க முயன்று ஈற்றில் பெருந்துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் உள்ளாகி விரக்தியுற்றுத் தற்கொலையை நாடுகின்றனர்; ஹிப்பிகளாக மாறுகின்றனர்; தமக்கு மட்டுமன்றிப் பிறருக்கும் இன்னல்களை விளைவிக்கின்றனர்; சிலர் உலக வாழ்வை வெறுத்துத் துறவு பூணுகின்றனர். இத்தகைய பரிதாப நிலையிலிருந்து மனிதர்களைக் காப்பாற்றி அவர்களை வாழ்வாங்கு வாழவைக்க முயல்வனவே சமயங்கள். அவை காட்டும் வழிமுறைகள் வெவ்வேறானவையாக இருக்கலாம். ஆயின் அடிப்படை நோக்கம் ஒன்றேயாகும்.

நாம் இவ்வுலகில் மானிடராகப் பிறந்தது வாழ்வதற்கே. ஆயின் மனம் போனபடி வாழ்வதற்காகவல்ல; வாழ்வாங்கு வாழ்வதற்கே என்ற உண்மையை உணர்த்தி அதற்கான வழிமுறைகளையும் இந்துமதம் போதிக்கின்றது. இந்துமதம் வற்புறுத்தும் செவ்விய வாழ்க்கை நெறி முறைகள் பற்றியனவாகவே ஆத்மீகம் விளங்குகின்றது.

ஆத்மீகம், ஆத்மீக வாழ்வு என்றதும் அவை துறவிகளுக்கேயுரியன எனச் சிலர் தவறாகக் கருதுகின்றனர். உலகியலும் ஆத்மீகமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவா? உண்மையில் உலக வாழ்வும் ஆத்மீகமும் வெவ்வேறானவையல்ல. இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தனவாக இருத்தல் வேண்டும். உலக வாழ்வைப் புறக்கணிக்கும் ஆத்மீகமோ ஆத்மீகத்தைப் புறக்கணிக்கும் உலகவாழ்வோ சிறந்தோங்க முடியாது என்பதையே உலக வரலாறு திரும்பத் திரும்ப நிரூபித்து நிற்கிறது. மனித குலத்தின் இரு கண்கள் போன்றவை இலௌகீகமும் ஆத்மீகமும் எனலாம். இரண்டும் செம்மையுற இணையுமிடத்து உலகம் மகோன்னத நிலையை அடையலாம். யுகப் பெருங்கவிஞன் பாரதி காணவிழைந்த சத்தியயுகம் கிருதயுகம் இத்தகையதே. இந்துக்களுள் தலைசிறந்த ஆத்மீகவாதிகளாகத் திகழ்ந்தவர்களுட் பலர் குடும்பஸ்தர்களே; இல்லற வாழ்வில் ஈடுபட்டவர்களே என்பது மனங்கொளத்தக்கது. இவ்வகையில் வேதகால ரிஷிகள் தொடக்கம் தாயுமானவர், மகாத்மா காந்தி, பாரதியார் முதலியோர் வரை நோக்கத்தக்கவர்கள்.

தமிழில் எழுந்துள்ள பல்வேறு சமயங்களையும் சமயப் பிரிவுகளையும் சார்ந்த புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள் சான்றோர் பாடல்கள், பக்திப் பனுவல்கள், சமய தத்துவ நூல்கள் முதலியன தொடக்கம் அண்மைக்கால ஆத்மீகப் பெரியோர்களின் ஆக்கங்கள், அருள்மொழிகள் முதலியன ஈறாக மனித வாழ்வில் ஆத்மீக நெறியின் இன்றியமையாமையையும் பயன்பாட்டையும் வெவ்வேறு அளவிலும் வெவ்வேறு வடிவிலும் பன்னிப்பன்னி அழுத்திக் கூறுவதை அவதானிக்கலாம்.

''விஞ்ஞானமானது மனிதரின் ஐம்புலங்களைக் கருவியாகக் கொண்டு, ஆறாம் அறிவாகிய பகுத்தறிவினால் ஆராய்ந்து அறியப்பட்டு வருவது. சரி எனத் தக்க ஆதாரங்களின்றி உறுதி செய்யப்படாவிட்டால் எதையும் விஞ்ஞானம் ஏற்றுக் கொள்ளாது. மெய்ஞ்ஞானம் அல்லது தன்னையுணர்தல் எனப்படுவது ஐம்புலன்களாலும் பகுத்தறிவினாலும் ஆராய்ந்து அறியப்படும் ஒன்றல்ல என்பதை நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும். விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஒன்றிலொன்று போட்டுக் குழப்பமடைவோர் இதைத் தெளிவாக உணர வேண்டும். விஞ்ஞானமானது தனது ஆராய்ச்சி விடயத்தில் உளவியலுக்கு அப்பாற் செல்லமுடியாது. ஆனால் அதை விட உயர்ந்ததான ஆன்மீக உணர்வை மெய்ஞ்ஞானமே விளக்க முடியும்'' என விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் ஆகியன பற்றியும், ''விஞ்ஞான முடிவுகளைச் சமயம் மறுதலிக்காமலும் சமய உண்மைகளை விஞ்ஞானம் அலட்சியம் செய்யாமலும் இரண்டும் இணைந்திருத்தல் வேண்டும். நவீன வாழ்வின் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடியனவாக விஞ்ஞானமும் சமயமும் விளங்குதல் வேண்டும்'' என விஞ்ஞானத்துக்கும் சமயத்துக்குமிடையிலான பிணைப்பின் இன்றியமையாமை பற்றியும் கூறுவர். இவ்வுலக வாழ்வு சிறந்தோங்க வேண்டுமாயின் விஞ்ஞானமும் சமயமும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருக்க வேண்டுமோ அது போன்றே இலௌகீகமும் ஆத்மீகமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருத்தலும் அவசியமே.

முற்போக்குவாதியாகவும் ஆத்மீகவாதியாகவும் திகழ்ந்த யுகப் பெருங்கவிஞன் பாரதி, இந்து மதத்தின் சிறப்பியல்புகளையும் இந்து மதம் வற்புறுத்தும் ஆத்மீக நெறியின் மகோன்னதத்தையும் உலகெங்கும் ஓங்கி ஒலித்த சுவாமி விவேகானந்தர், அவரது குருநாதர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், ஆத்மீகத்தின் ஒப்பற்ற வலிமையைத் தமது செயற்கரும் செயல்களால் உலகுக்கே உணர்த்திய மகாத்மா காந்தி, விஞ்ஞானியாகவும் தலையாய ஆத்மீகவாதியாகவும் திகழ்ந்த சுவாமி விபுலானந்தர் முதலியோர் இலௌகீகம், ஆத்மீகம் ஆகியன தொடர்பாகக் கூறியுள்ள கருத்துகள் இவ்விடத்தே உன்னிப்பாகக் கவனிக்கத்தக்கவை.

தனிமனிதன் ஒருவன் விஞ்ஞான, தொழில் நுட்பதுறைகளிற் போதிய அறிவைப் பெற்றிருக்கலாம்; பெரும் முன்னேற்றங்களைக் கண்டிருக்கலாம்; பெருஞ் செல்வந்தனாக இருக்கலாம். அதே போன்று சமூகங்களோ நாடுகளோ விளங்கலாம். ஆயின் இவற்றால் அமைதியையோ, முழுமையையோ எய்திவிட முடியாது என்பதையே இன்றைய உலக நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்ப வற்புறுத்துகின்றன. விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றங்களும் பொருளாதாரவிருத்தியும் அதிகரித்து வரும் பொருளாதாரத் தேவைகளும் இயல்பாகவே தனிமனிதனிடமோ சமூகங்களிடமோ நாடுகளிடமோ இயந்திர மயமான வாழ்க்கையையும் வக்கரித்த குணாம்சங்களையும் முனைப்புப் பெறச் செய்ய முயல்வதையும் மனிதனுக்கு இயல்பாக இருக்க வேண்டிய இரக்கம், பொறுமை, மன்னுயிர்களையும் தன்னுயிர் போல மதித்தல், கடமையுணர்வு, ஒழுக்கநெறிகள் முதலியன நற்பண்புகள் அலட்சியப்படுத்தப் படுவதையும் மனித விழுமியங்கள் மேலோங்குவதற்குப் பதிலாக அகங்காரம், பேராசை, குரோதம், பொருளாதார மோகம், ஆடம்பரவாஞ்சை, அதிகாரவெறி, பதவிமோகம் முதலியன மனிதனை ஆட்டிப் படைப்பதையும் இவற்றால் மக்கள் அமைதியிழந்து தவிப்பதையும் 'நிம்மதி' யைத் தேடி அலைவதையும் இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

இலௌகீகமும் ஆத்மீகமும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருத்தல் எத்துணை அவசியமோ அதேபோன்று அறிவியலும் ஆத்மீகமும் இணைதல் வேண்டும். அறிவியல் கலவாத ஆத்மீகமோ ஆத்மீகமற்ற அறிவியலோ பயனற்றது; ஆபத்தானது. உலகியலைப் புறந்தள்ளி ஆத்மீகத்தை ஏற்றிப் போற்றிக் கொண்டிருந்த காலப்பகுதிகளிலேயே இந்தியா , இலங்கை உட்பட்ட கீழைநாடுகள் பல அந்நியரின் பிடியிற் சிக்கித் தவித்தன; சீரழிந்தன. ஆத்மீகத்தைப் புறந்தள்ளி விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றங்களிலும் பொருளாதாரத்திலும் மேம்பாடடைந்து வரும் மேலைநாடுகள் பல அமைதியிழந்து தவிக்கின்றன; ஹிப்பிக் கூட்டங்களையும் மனநோயாளர்களையும் வன்செயலாளர்களையும் உருவாக்குகின்றன; மனிதத் தன்மையின் சீரழிவுக்கு வழிவகுக்கின்றன.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தமிழகச் சமூக வரலாற்றினையும் வேதகாலத்திலிருந்து இற்றை வரையிலான இந்து சமூக வரலாற்றினையும் உற்று நோக்கும் போது சில உண்மைகள் புலப்படும். வரலாற்றின் சில காலகட்டங்களில் இலௌகீகமும் ஆத்மீகமும் ஒன்றிணைந்து செழிப்புற்றிருந்தமையையும் வேறுசில காலகட்டங்களில் இலௌகீகம் புறக்கணிக்கப்பட்டு ஆத்மீகம் அளவுகடந்து போற்றப்பட்டமையையும் அதனால் இலௌகீக வாழ்வு சீரழிந்தமையையும் சிலகால கட்டங்களில் ஆத்மீகம் பெருமளவு புறக்கணிக்கப்பட்டு இலௌகீக இன்பங்களையே ஏற்றிப் போற்றியதால் அவை நாளடைவிற் சமுதாயச் சீரழிவிற்கு வழிவகுத்ததையும் அவதானிக்கலாம்.

சங்ககாலச் சமூகம் உலகியலின்பங்களை அனுபவிக்கத் துடித்த அளவிற்கு ஆத்மீகத்தைப் பேணவில்லை. உலகியலின்பங்களை வேண்டிய அளவிற்குத் துய்க்க முயன்ற மக்களின் செயற்பாடுகள் நாளடைவில் அரசியல், பொருளாதார, சமுதாயச் சீர்கேடுகளுக்கு வழிவகுத்ததுடன் சங்க மருவிய காலத்தையும் உருவாக்கின. சங்கமருவிய காலப் பகுதியில் ஆத்மீகம் அளவு கடந்து போற்றப்பட்ட அதேவேளை உலகியலின்பங்கள் தூற்றி ஒதுக்கப்பட்டன. இதனால் இலௌகீக வாழ்வு சிறந்தோங்க முடியவில்லை. இவ்விரு காலகட்டங்களும் ஏற்படுத்திய படிப்பினைகள் அடுத்து வந்த பல்லவர் காலச் சமூகத்தைப் புதியதொரு நெறியிற் செல்ல வைத்தன. சங்க காலத்தைப் போன்று ஆத்மீகத்தைப் புறந்தள்ளி உலகியலின்பங்களை ஏற்றிப் போற்றுவதையோ சங்கமருவிய காலத்தைப் போன்று உலகியலின்பங்களைத் தூற்றி ஒதுக்குவதையோ விடுத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும். அதற்கு ஆத்மீக உணர்வு இன்றியமையாதது; ஆத்மீக உணர்வை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளமுயல வேண்டும்; ஆத்மீகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இலௌகீகம் அமைய வேண்டும் என்னும் கருத்துகள் மேலோங்கின. அன்றைய பக்தி இயக்கமே இவற்றை முன்னெடுத்துச் சென்று பெரு வெற்றியையும் ஈட்டியது. இவற்றின் தொடர்ச்சியையும்

வளர்ச்சியையும், நாம் சோழப் பேரரசர் காலத்திற் காண முடிகின்றது. ஆயின் துரதிஷ்ட வசமாக அடுத்து வரும் காலப்பகுதிகளிற் பல்வேறு காரணங்களால் இந்நிலைமை போற்றப்படவில்லை. இலௌகீகமும் சீரழிந்தது; ஆத்மீகமும் சீரழிந்தது. மீண்டும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இற்றை வரை இலௌகீக நாட்டம் முனைப்புப் பெற்று வருவதோடு ஆத்மீகத்தின் இன்றியமையாமையை மக்களுக்கு உணர்த்தி, இலௌகீகத்தையும் ஆத்மீகத்தையும் இணைப்பதற்கான முயற்சிகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆத்மீக உணர்வு ஒருவரிடம் மேலோங்குமிடத்து ஒருவர் தமக்காக மட்டுமே வாழும் நிலை மாறித் தமது குடும்பத்தின் மேன்மைக்காகவும் அதனையும் கடந்து தனது சமூகத்தினதும் நாட்டினதும் உயர்வுக்காகவும் இறுதியில் உலகின் மேன்மைக்காகவும் தம்மை அர்ப்பணிக்க முயல்வர். ஆத்மீக உணர்வு மேலோங்குமிடத்துச் செல்வச் செழிப்போ விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றங்களோ நவீன வசதிகளோ தனிமனிதரையோ சமூகங்களையோ நாடுகளையோ மமதை கொள்ள வைக்காது; வாழ்க்கையை வெறுத்தொதுக்கும் விரக்திநிலையேற்படாது; வன்செயல்கள் பெருகுவதற்கிட மிராது. ஆத்மீக உணர்வு அற்றுப் போகுமிடத்து அழிவே ஏற்படும்.

மேற்கண்ட உண்மைகள் பலவற்றை வேதங்கள், ஆகமங்கள், தோத்திரப் பாடல்கள் முதலியவற்றின் மூலமாகவும் கதைவடிவில் அமைந்த புராணங்கள், காப்பியங்கள், இதிகாசங்கள் முதலியவற்றின். மூலமாகவும் தத்துவ சாஸ்திர நூல்கள் மூலமாகவும் இந்து மதம் தெளிவாகப் புகட்டியுள்ளமை மனங்கொளத்தக்கது. பாரத, இராமயணக் கதைகள் முதல் பகவத்கீதை, திருக்குறள் முதலியன ஈறாக இவ்வகையில் நோக்கத்தக்கவை.

ஆத்மீக நெறி நின்றோர் எத்தகைய துன்பங்களுக்கும் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளானாலும் இறுதியில் வெற்றி பெறுவர்; மேன்மையடைவர்; போற்றுதலுக்குள்ளாவர். ஆத்மீக நெறியினை உதாசீனம் செய்வோர் தற்காலிகமாக இன்பத்தை அனுபவிக்கலாம்; வெற்றி பெறலாம்; ஆயினும் இறுதியில் அழிவையே தேடிக் கொள்வர்; தூற்றுதலுக்குள்ளாவர் என்னும் கருத்துகளை விளக்கும் வகையிற் காப்பிய, இதிகாச, புராணப் பாத்திரங்கள் பலவும் விளங்குகின்றன. 'இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட அழகானவற்றுள் எல்லாம் முதன்மையானது பெண் படைப்பே' எனக் கூறப்படினும் நடைமுறையில் ஆண்களுள் எத்தனை ரகம் உளரோ அதேபோன்று பெண்கள் மத்தியிலும் அத்தனை ரகத்தினர் உள்ளதைக் காணலாம்.

இதிகாசங்களும் புராணங்களும் காப்பியங்களும் படைத்துக் காட்டியுள்ள இராமன், இலக்குவன், பரதன், குகன், தருமன், வீமன், அர்ச்சுனன், அரிச்சந்திரன், சத்தியவான், கர்ணன், இராவணன், கும்பகர்னன், விபீஷணன், துரியோதனன், சகுனி, துச்சாதனன், கோவலன், சீவகன் முதலியோரும் சீதை, திரௌபதை, கண்ணகி, மாதவி, சந்திரமதி, சாவித்திரி, மணிமேகலை, கூனி, தாடகை, சூர்ப்பனகை, கைகேயி, கோசலை முதலியோரும் வெறுமனே கற்பனையில் உதித்தவர்களல்லர். வகை மாதிரியானவர்களே. இத்தகையவர்கள் மனிதகுலத்தில் என்றும் வாழ்ந்து வருவதனை அவதானிக்கலாம். அன்றும் சரி, இன்றும் சரி, ஆண்கள் மத்தியில் இராமர்களையும் தருமர்களையும் மட்டுமன்றி இராவணர்களையும் துரியோதனர்களையும் துச்சாதனர்களையும் அத்தகையவர்களுக்குத் துணை நிற்பவர்களையும் காண்கிறோம். அதே போன்று பெண்கள் மத்தியிலும் சீதைகளையும் கண்ணகிகளையும் சாவித்திரிகளையும் சந்திரமதிகளையும் கோசலைகளையும் மட்டுமன்றிக் கூனிகளையும், சூர்ப்பனகைகளையும் தாடகைகளையும் காண முடிகின்றது. ஆத்மீக நெறியைப் புறக்கணிக்கும் தீய சக்திகளே இத்தகைய வேறுபாடுகளுக்கான காரணங்களுள் முதன்மையானவையெனலாம்.

மக்கள் மத்தியில் ஆத்மீக உணர்வை வளர்த்தெடுப்பதில் இந்து மதமும் இந்து மத நிறுவனங்களும் காலத்திற்குக் காலம் பலவித முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். இந்து சமூகத்திற் பல்லாயிரம் ஆண்டுகளாகப் போற்றப்பட்டு வந்த 'குருகுலக்கல்வி' முறையில் ஆத்மீகக் கல்விக்கு முதன்மையிடம் அளிக்கப்பட்டு வந்தமை குறிப்பிட்டுக் கூறக்கூடியதொன்றாகும். ஆத்மாவை உணரவும் அதனைப் பயன்படுத்தவும் அடிகோலும் கல்வியே ஆத்மீகக் கல்வியெனலாம். நவீன யுகத்தில் நவீன கல்விமுறை விருத்தியடையத் தொடங்கியதையடுத்துக் குருகுலக்கல்வி முறை அருகத் தொடங்கிய போதும் சமயக் கல்வி கட்டாய பாடமாக்கப்பட்டமை இதனை ஓரளவு ஈடுசெய்கின்றது எனலாம். ஆலயங்கள் பலவும் இராம கிருஷ்ண மிஷன் முதலிய நிறுவனங்களும் மடாதீனங்களும் இவ்வகையில் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டத்தக்கன.

ஆண், பெண் ஆகிய இருபாலாரும் ஆத்மீக உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும்

வளர்த்துக் கொள்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் விரிவான முறையில் இந்து மத நூல்கள் பல விளக்கியுள்ளன. உலக வாழ்வில் ஈடுபடுவோர் பலவகை இன்பங்களைப் பெறுவதைப் போலவே சொல்லொணாத் துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் உள்ளாகின்றனர். இதுனால் ஆத்மீகவாதிகள் சிலர் உலகவாழ்க்கை துன்பமயமானது எனக் கருதி அதனை வெறுக்க முயன்றனர். 'துன்பமே இயற்கை' எனப் போதித்தனர். ஆத்மீக நெறி நிற்போர் உண்மையில் வாழ்வைத் துன்பமயமானதாகக் கருதாது, இன்பம், துன்பம் ஆகிய இரண்டும் வாழ்வின் இயற்கை எனக்கருதி இரண்டையும் சமநிலையில் வைத்து நோக்க முயல்வர். இதனால் வாழ்வில் வெறுப்புக் கொள்ள வேண்டிய அவசியமேற்படாது. தலைசிறந்த ஆத்மீகவாதியாகத்திகழ்ந்த பாரதி,

'கவலைப் படுதலே கருநரகு அம்மா!
கவலையற் றிருத்தலே முத்தி'

எனவும்,

'துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டிபிற்போம். யாவுமவள் தருவாள்.''

எனவும் கூறியுள்ளவை கவனத்திற் கொள்ளத்தக்கவை.

உலகைத் துன்ப மயமாகக் காண முயலுதல் சமூக முன்னேற்றத்துக்கோ நாட்டு முன்னேற்றத்துக்கோ முட்டுக் கட்டையாக அமையும். உலகின் பலவகை இன்பங்களையும் மனிதன் அனுபவிக்க விரும்புவது தவறாகாது. ஆயின் அவ்வின்பங்களை அடைய முயலும் வழிமுறைகள் அறத்தினின்றும் வழுவாதனவாகவும் ஆத்மீக நெறிப்பட்டனவாகவும் அமைதல் அவசியமானது என்பதைப் பாரதியார், ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்சர், சுவாமி விவேகானந்தர் முதலியோர் உட்படப் பல ஆத்மீகப் பெரியோர்கள் வற்புறுத்தியுள்ளமை கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

உலகில் வாழும் ஒவ்வொரு சமயத்தவர்க்கும் அவரவர் சமயமே மெய்ச்சமயமாகவும் மேலானதாகவும் தென்படலாம். உலகச் சமயங்கள் யாவுமே மனித வாழ்வைச் செம்மைப்படுத்தவே முயன்றன; முயன்று கொண்டிருக்கின்றன; மிக உயர்ந்த கருத்துக்களைக் கொண்டுள்ளன; ஆத்மீக நெறிமுறைகளை வற்புறுத்துகின்றன. ஆயின் நடைமுறை வாழ்வில் மனிதருள் எத்தனைபேர் இவற்றைக் கைக்கொள்கின்றனர் என்பது கேள்விக்குரியே. இந்து மதத்தவர்களுட் பலரும் இதற்குப் புறனடையல்லர்.

ஆத்மீகம் தொடர்பாக இந்து மதம் போதிக்கும் மிக உயர்ந்த கருத்துகளை இந்துக்களுட் பலர் அலட்சியம் செய்தனர்; செய்கின்றனர். ஏழை பங்காளனாகவும் பெண் பங்காளனாகவும் (அர்த்த நாரீசுவரர்) பன்றிக் குட்டிகளுக்கும் பரிந்து பாலூட்டியவராகவும் விளங்கும் இறைவனின் பக்தர்களாகவும் ஆத்மீக நெறி நிற்போராகவும் காட்டிக் கொண்டு நடைமுறையில் அதற்கு மாறானவற்றையே செய்கின்றனர்; செய்ய முயலுகின்றனர். போலி ஆஸ்திகர்களிலும் பார்க்க நாஸ்திகர்கள் பலர் மிக உயர்ந்த மனிதாபிமானிகளாகவும் ஏழைபங்காளர்களாகவும் பெண்மையைப் போற்றுபவர்களாகவும் விளங்குவதும் நாம் காணக்கூடியதே.

பசிக்கொடுமையைப் பற்றி ஒருவருக்கு எவ்வளவு தான் எடுத்துக் கூறினாலும் அதனை அவர் முழுமையாக உணர்ந்து கொள்ளுதல் அரிது. ஆயின் அவரே பசிக்கொடுமையை அனுபவிக்கும் போது அதனை முழுமையாக உணர முடிகிறது. 'தலைவலியும் துன்பமும் தனக்கு வந்தால் தான் தெரியும்' என்பது பழமொழி. ஆத்மீக அனுபவம் என்பதும் அத்தகையதேயாகும்.

**முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்!**
**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்!**
**மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய**
**சுகத்தைச் சொல்லெனிற் சொல்லுமா றெங்ஙனே!**

என்னும் திருமூலரின் அருள்வாக்கு இவ்விடத்தே நினைவு கூரத்தக்கது.

**''மனிதனிடம் இயல்பாக அமைந்திருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே சமயம்''**

- சுவாமி விவேகானந்தர்

# சைவ சித்தாந்தம் காட்டும் முத்தி நெறி

கலாநிதி திருமதி. மகேஸ்வரி அருள்செல்வம், B. A. Hons (Ceylon) D-Phil (Oxford),
சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதத் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஏனைய இந்திய தத்துவங்களைப் போன்று சைவ சித்தாந்தமும் மானிட வாழ்க்கையை ஒரு தளையெனக் கருதுகிறது. அவித்தை 'அறியாமை', தன்ஹா 'ஆசை' என்பன இக்கட்டுநிலைக்குக் காரணமாகக் காணப்படுகின்றன. சைவ சித்தாந்தமோவெனில் அவித்தை, ஆசை என்பவற்றைப் பார்க்கிலும் ஒரு படி ஆழமாகச் சென்று, ஆணவமே மனிதனுடைய கட்டுநிலைக்கு ஏதுவாகக் கருதுகின்றது. 'அணு' என்ற பதத்தினின்று பெறப்பட்ட ஆணவமென்னும் சொல் ஆன்மாவின் சக்திகளை அணுவாக்குகிற, அதாவது சிதறச் செய்கிற சக்தியைக் குறிப்பதாயிற்று. ஆணவமே ஆன்மாவின் அடிப்படை மலமாகையால் அது மூலமலமென்னும் அநாதியாகவே ஆன்மாவோடு கூட இருப்பதால் சகஜ மலம் 'உடன் தோன்றிய மலம்' என்றும் கூறப்படுகிறது. 'நான்' 'எனது' என்னும் தன் முனைப்பை ஆன்மாவில் உண்டாக்குவதும் ஆணவமே. தன்னோடு அநாதியே தங்கியிருக்கும் இறைவனை மறைக்கும் இருளும் ஆணவமே தான். 'சத்', 'மாற்றமற்ற உள் பொருள்' என்ற வகையிலும், சித் 'அறிவுப் பொருள் என்ற வகையிலும் தனக்கும் இறைவனுக்குமுள்ள உறவை மறக்கச் செய்து, மாற்றமடையக் கூடிய, அறிவற்ற சடப் பொருளிற் பற்று வைக்கச் செய்வதுவும் ஆணவமே. சுதந்திரமாகச் செயற்படக்கூடிய கர்த்தா, தான் என்ற மோகத்தை உண்டாக்குவதும் ஆணவமே. ஆன்மாவாகிய தான் சுதந்திரமற்றவன், இறைவனையோ உலகத்தையோ சார்ந்து வாழ வேண்டியவனென்ற உண்மையை மறக்கச் செய்வதுவும் இவ்வாணவமே. சுருங்கக் கூறின் தற்பெருமை, இருள், மோகம், அறியாமை ஆகியவற்றை ஏற்படுத்தி ஆன்மாவை இறைவனிடமிருந்து பிரித்து வைப்பது இவ்வாணவமே. எனவே இந்த ஆணவத்தினைச் சிதைப்பதும் வலி குன்றச் செய்வதுமே முத்திக்கு ஒரே வழியாகிறது. இந்த ஆணவ மலத்தினின்று ஆன்மாவை விடுவித்துத் தன்பால் ஈர்த்துக் கொள்ளுதல் இறைவனின் நோக்கமுமாகிறது.

ஆணவ மலத்திற் கட்டுண்டிருக்கும் ஆன்மாவானது தன் நிலையுணராது தன்னை விடுவிக்க வகை தெரியாது பிறவிக்கு முற்பட்ட நிலையாகிய கேவல 'தனித்த' நிலையிற் கிடக்கும். இந்நிலையிற் கிடக்கும் ஆன்மாவை விடுவிக்கச் சித்தங் கொண்ட அருட்கடலாகிய இறைவன் ஒரு மலத்தைத் துடைக்க மாயை, கன்மம் ஆகிய இன்னும் இரு மலங்களைக் கூட்டி, ஆன்மாவை சகல அவத்தையாகிய பிறவி நிலையிற் கொண்டு வந்து விடுகிறார். ஒரு வண்ணான் ஆடையிலுள்ள அழுக்கைப் போக்கச் சவர்க்காரத்தைச் சேர்த்துப் பின்னர் அழுக்கையும் சவர்க்காரத்தையும் ஒருங்கே அலசி அகற்றுவது போல, இறைவன் ஆன்மாவின் ஆணவ மலத்தை நீக்க மாயையைக்கொடுக்கிறார். மயையினின்று ஆன்மா தனு, கரண, புவன போகங்களைப் பெறுகிறது. அதாவது உடல், உறுப்பு, உலகம் அனுபவங்களைப் பெறுகிறது. சைவ சித்தாந்தக் கோட்பாட்டின்படி ஆன்மா சித்துப் பொருளாகவிருப்பினும் தானாக அறியாது, அறிவித்தால் அறியும். உலகத்தோடும் உடலோடும் சேர்ந்து உலகத்தையும் தன்னையும் பற்றி அறியும். இறைவனோடு சார்ந்து இறைவனைப் பற்றி அறியும். உலகத்தின் உண்மையைப் பற்றிய பாச ஞானத்தையும், பசுவாகிய தன்னைப் பற்றிய பசு ஞானத்தையும் பெற்ற நிலையிலேயே ஆன்மா உலகப் பற்றையும் தான் என்ற முனைப்பையும் விடுத்து இறைவனைப் பற்றிய அறிவாகிய பதி ஞானத்தை நாடும். எனவே ஆன்மா பிறவியெடுத்து இவ்வுலக அரங்கிலே நடமாடுவது அவசியமாகிறது. உலக வாழ்க்கையின் அனுபவங்களுக்கூடாகவே ஆன்மாவின் அறிவு முதிர்ச்சி அடைகிறது. உலக இன்பங்களையும், தான் என்ற தற்பெருமையையும் விடுத்து இறைவனை நாடவும் செய்கிறது.

மாயையைப் போலவே கன்மமும் ஆன்மாவுக்கு நன்மை பயக்கிறது. ஒரு வைத்தியன் இனிய, கசப்பான மருந்துகளைக் கொடுத்து நோயைக் குணமாக்குவது போல இறைவனாகிய பரம வைத்தியனும் ஆன்மாவின் கன்ம பலனுக்கேற்ப இன்ப துன்பங்களை வருவித்து ஆன்மாவுக்குப் புத்தி புகட்டுகிறார். இவ்வனுபவங்களின் விளைவாக ஆன்மா ஒரு பற்றற்ற மனநிலையடைந்து இருநிலையொப்பாகிய வெறுப்பு, விருப்பற்ற நிலையை அடைகிறது. எனவே கன்மமும் ஈற்றில் ஆன்மாவுக்கு நன்மையே பயக்கிறது. இவ்வனுபவங்களால் புத்தி தெளிந்த ஆன்மா

மூன்றாவது நிலையாகிய சுத்த அவத்முதையை அடைகிறது. இம்மூன்று நிலைகளுக்கும் சித்தாந்த நூல்கள் ஓர் உவமை கூறும். சூரிய ஒளி சிறிதும் வெளிப்படாத வண்ணம் மேகப் படலங்கள் ஆகாயத்தை மூடிய நிலையை ஒக்கும் கேவல நிலை. மேகங்கள் சிறிதளவு கலைந்து சூரிய வெளிச்சம் சிறிது தெரிவது போன்றதே சகல நிலை. மேகங்கள் முற்றாகக் கலைந்து சூரிய ஒளி பிரகாசிப்பது போன்றதே சுத்த நிலை.

ஆன்மாவின் ஆன்மீக யாத்திரையிலே மூன்று முக்கிய கட்டங்களைச் சைவ சித்தாந்தம் விளக்குகிறது. நாம் முன்னர்க் குறிப்பிட்ட இருவினையொப்பு என்பதே இவற்றுள் முந்தியது. இந்நிலையையடைந்த ஆன்மா நற்பலனை ஆசித்து நன்மை செய்யவும், தீய பலனுக்குப் பயந்து தீமையைத் தவிர்க்கவும் நாடுவதில்லை. பற்றற்ற மனத்தோடு தன் கடமைகளாகிய கருமங்களைச் செய்யும்.

அடுத்த கட்டம் மலபரிபாகம் எனப்படும். பரிபாகமெனில் முதிர்ச்சியடைதலாகும். கண்ணிலுண்டாகும் படலம் முதிர்ச்சியடைந்த நிலையிலேயே அதனை நீக்கலாம். இங்ஙனமே ஆன்மாவும் தன் ஆணவ மலத்தைக் கைவிட உடன்படும் நிலையிலேயே இறைவன் அவ்வாணவ மலத்தைப் போக்குவார். பழம் முற்றிப் பழுத்த நிலையிலே தான் தண்டினின்று விழும். ஆணவ மலமும் அங்ஙனமே தான். ஆகவே மலபரிபாகம் என்பது ஆன்மாவினது ஆணவமலம் நீக்கப்படுவதற்குரிய முதிர்ச்சியடைந்த நிலையாம்.

மூன்றாவது கட்டமாகிய சத்தி நிபாதம் 'சக்தியின் இறக்கம்' எனப் பொருள்படும். இறைவனினின்று பிரிதலின்றி இருக்கும் சக்தியானவள் திரோதமான சக்தியாக, அதாவது மறைப்புச்சக்தியாக, இதுவரை காலமும் ஆன்மாவை உலக இன்பங்களில் மூழ்கடித்தது. இப்போதோ அதே சக்தியே அருள் சக்தியாக பதிஞானத்திற்கு ஆன்மாவை ஆயத்தப்படுத்தும். ஊஞ்சலின் இரு கயிறுகளும் அறுந்த வேளையில் ஒருவனுக்குப் பூமி ஆதாரமாவது போல் உலகப் பற்றும் தான் என்ற ஆணவமுமாகிய இரு கயிறுகளும் அறுந்த நிலையில் ஆன்மா இறைவன் மடியில் விழுகிறது. இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதமாகிய மூன்று கட்டங்களையும் கடந்து இறைவனே தஞ்சமென்று அவர்பால் திரும்புகிற ஆன்மா பதிஞானத்திற்குப் பக்குவமடைந்துள்ளது. இஞ்ஞானம் ஆன்மா தன் சொந்த முயற்சியாற் பெறுவதொன்றல்ல. இது இறையருளாற் கிட்டுவது. ஆழ்ந்த நித்திரையிலுள்ளவன் தன் கையில் வைத்திருந்த பொருளை நழுவ விடுவது போல ஆன்மாவும் தன் முயற்சிதனை நிறுத்தி இறையருளுக்குக் காத்திருக்கும் கட்டம் வந்துள்ளது. போதிய பக்குவம் அடைந்துள்ள ஆன்மாவுக்கு இறைவன் தன்னை வெளிப்படுத்துவார்.

வேத காலக் கல்வி முறையிலும் உபநிடத, வேதாந்த சைவ சித்தாந்த ஞான வழிகளிலும் தான் குருவுடன் ஏற்படும் சந்திப்பு, அதி முக்கியமானது. முத்தியனுபவத்தை வாழ்க்கையிற் சுவைத்து அறிந்த பக்குவமுடைய ஒருவரே குருவாக இருக்கலாம். பழக்கப்பட்ட மிருகங்களைக் கொண்டு காட்டு மிருகங்களைப் பிடிப்பது போல இறைவன் இத்தகைய ஒரு குருவில் ஆவேசமாகவிருந்து வேறு ஆன்மாக்களைத் தன்பால் இழுக்கிறார். குருவோடு ஏற்படும் இம்முதற் மந்திப்பில் ஆன்மா தீட்சை பெறுகிறது. தீட்சை என்னும் பதம் 'சுத்திகரித்தல்', 'தூய்மையடைதல்' என்னும் பொருள்படும். பார்வையாலோ, சொல்லாலோ, செயலாலோ ஸ்பரிசத்தாலோ வேறு வகையிலோ இத்தீட்சை ஏற்படலாம். எனினும் ஞானத்திற்குப் பக்குவமடைந்த ஒருவருக்கே இவ்வனுபவம் ஏற்படும் . முதிர்ச்சியடைந்த தாமரை மொட்டுக்கள் மாத்திரமே சூரிய ஒளி பட மலரும். ஏனைய பிஞ்சு மொட்டுக்கள் மலரா. அங்ஙனமே பதிஞானம் பெறுவதற்குரிய பக்குவம் அடைந்த ஆன்மாவே குருவை இனங் கண்டு கொள்ளும் . திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் இருந்த மக்கட் கூட்டத்தில் மணிவாசகர் ஒருவரோடு குருவைக் குருவாக உணர்ந்து கொண்டார்.

இங்கனம் குருவைச் சந்தித்துப் பதிஞானம் பெற்ற ஆன்மா சீவன் முத்தியடைகிறது. வாழ்க்கையிலேயே கிட்டுகிற முத்தியனுபவம் சீவன் முத்தியெனப்படும். அத்துவித வேதாந்தத்தைப் போலச் சைவ சித்தாந்தமும் சீவன் முத்தி பேசுகிறது. குருவைச் சந்தித்துப் பதிஞானம் பெற்ற அதே கணத்திலேயே ஆன்மா முத்தியனுபவத்தையடைகிறது என்பதே சித்தாந்தக் கோட்பாடு. முத்தியனுபவத்தைச் சுவைத்தவர்களாகத் தம் வாழ்நாளின் எஞ்சிய பகுதியைக் கழித்து ஈற்றிலே இவர்கள் விதேக முத்தியடைவர். இவர்களுக்கு இனிமேற் பிறவியில்லை.

சீவன்முத்தர்கள் கூடச் சில சமயம் மீண்டும் மல பந்தத்தில் அகப்படலாம். கசப்பான வேப்பிலையுண்டு வாழ்ந்த புழு கரும்பைச் சுவைத்த பின்னும் வேப்பிலையை நாடும். பாசி படர்ந்த ஒரு கிணற்றிலே போடப்பட்ட கல் ஒரு சில நேரம் அப்பாசியை விலகச் செய்யும். எனினும் அப்பாசி மீண்டும் வந்து நீரை மூடிக் கொள்ளும். இதே

வண்ணமே ஆணவ, மாயா மலங்களின் பந்தத்தினின்று விடுபட்ட ஆன்மாவானது மீண்டும் உலக ஆன்மப் பற்றில் சிக்கவும் கூடும்.

இந்நிலை ஏற்படா வண்ணம் ஓர் ஆன்மா தன்னைத் தற்காத்துக் கொள்ளச் சைவ சித்தாந்தம் நான்கு வழிவகைகளை விளக்குகிறது. அவையாவன சோகம்பாவனை, அஞ்செழுத்தைத் (பஞ்சாட்சர) தியானித்தல், அடியார் சங்கமம், இறை வழிபாடு. சோகம்பாவனை என்பது இறைவனும் தானும் ஒன்று என்ற உண்மையைப் பாவனை செய்தலாம். சோ எனின் 'அவன்', அதாவது இறைவன், அகம எனில் 'நான்' கருட மந்திரத்தைத் தியானிப்போர், கருடனும் தானும் ஒன்று என்று பாவனை செய்து பாம்பு விஷத்தின் சக்தியைக் டுெக்கின்றனர். அங்ஙனமே இறைவனும் தானும் ஒன்று என்று பாவனை செய்வோர் அவ்வனுபவத்தில் நிலைத்திருந்து மல பந்தத்தில் சிக்குதலரிதாம்.

திருவைந்தெழுத்தாகிய பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுதலும் சீவன் முத்தருக்கு உகந்தது. சிவாயநம என்னும் அம் மந்திரத்தின் ஐந்தெழுத்தும் முறையே சிவன், சித்தி, ஆன்மா, திரோதான சத்தி, ஆணவ மலம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். இது ஓதப்பட வேண்டிய முறை திருவருட்பயன் ஒன்பதாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

சிவ பக்தரோடு உறவாடுவதும் அவருக்கும் சேவை செய்வதும், அவரோடு கூட இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களைப் பூசிப்பதும் சீவன்முத்தருக்கு உகந்த ஆசாரங்களாம். இங்ஙனம் சோகம்பாவனை செய்தலும், பஞ்சாட்சரத்தை உச்சரித்தலும், சிவபக்தரைச் சேவித்தலும், திருத்தலங்களைத் தரிசித்தலும் சீவன் முத்தர்கள் தம் முத்திய அனுபவத்தை உறுதிப்படுத்த உதவும் ஆசாரங்களாம்.

அத்துவித வேதாந்தத்தைப் போலச் சைவ சித்தாந்தமும் ஞானமே முத்திக்கு வழியென்று கூறுகிறது. ஞான வழியாலேயே மேலான முத்தியாகிய சாயுச்சிய முத்தியை அடையலாம். எனினும் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று மார்க்கங்களையும் சைவ சித்தாந்தம் அங்கீகரித்துள்ளது. திருக்கோயிற் கைங்கரியங்கள் செய்தல் சரியையென்றும், சிவலிங்க வணக்கம் கிரியையென்றும் அஷ்டாங்க யோக முறையில் உடலையும், மனதையும் நெறிப்படுத்ததுதல் யோக வழியென்றும் போற்றப்படுகின்றன. இம்மூன்று வழிகளும் ஞான வழிக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டு (சோபான மார்க்கம்) என்றும், இவை தரும் சாலோக, சாமீப்பிய, சாரூப்பிய முத்திகள் நிரந்தர முத்திகள் அல்லவென்றும், பதமுத்திகளேயென்றும் கூறப்படுகிறது. இவ்வழிகளைப் பின்பற்றியோர் கூட ஈற்றில் ஞான வழியாலேயே நிரந்தர சாயுச்சிய முத்தியையடைவர் என்று சைவ சித்தாந்தம் கூறும். சைவ நாயன்மார், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முறையே சரியை, கிரியை, யோக ஞான வழிகளில் வாழ்ந்தோரெனப் போற்றப்படுகின்றனர்.

சைவ சித்தாந்தம் கூறும் ஞானம் தான் என்ன என்ற வினா இக்கட்டத்தில் எழத்தான் செய்யும். வேதாந்தமும், சைவ சித்தாந்தமும் வேறு சமய தத்துவங்களும் கூட அறிதலை இரு வகைப்பட்டதாக விளக்குவன. உலகியல் மட்டத்தில் நாம் ஒன்றை அறியும் போது எம்மினின்று வேறாய் 'அது' 'இது' என்று சுட்டி, முன்னிலைப்படுத்தி அறிகிறோம். சமய தத்துவங்கள் கூறும் அறிதலோ இன்னொரு வகைப்பட்டது. இது அனுபவ ஞானம், அனுபூதி ஞானம் ஆகும். இவ்வனுபூதி ஞானம் காண்பானும், காணப்படு பொருளும், காணுதலும் கடந்த நிலையென சமய நூல்கள் விளக்குவன. ஆன்மா இறைவனைத் தன்னின்று வேறாய் சுட்டறிவாற் காண்பதில்லையென்று சைவ சித்தாந்த நூல்கள் மீண்டும் மீண்டும் கூறும். எனவே இறைவனோடு ஒன்றி, தன்னை மறந்து, அவரை அறிகிற அறிவே இங்கு குறிப்பிடப்படுகிற ஞானமாம்.இந்த ஞான நிலையிற் காண்பவனாகிய ஆன்மா காணப்படு பொருளாகிய இறைவனில் இலயித்துத் தன்னை மறந்து விடும். இறைவனோடு ஆன்மா ஒன்றுகிற இந்த இன்ப அனுபவத்தைச் சித்தாந்த நூல்கள் பல விதமாக வருணிக்கின்றன. கரும்பும், தேனும், பாலும், கற்கண்டும், பழமும் கலந்த இனிமையையொக்கும் இவ்வனுபவம். கண் பார்வையற்றவனுக்குப் பார்வை கிடைப்பது போலவும், பிறவி வெப்பத்தில் அல்லலுறுபவனுக்குக் குளிர் நிழல் போலவும், காதலர் ஒன்று கூடுவது போலவும் ஓர் இன்ப அனுபவம் இது என்கிறது சைவ சித்தாந்தம்.

வேதாந்தத்தைப் போலவே சைவ சித்தாந்தமும் அத்துவிதம் கூறும். எனினும் அவை கொடுக்கும் விளக்கங்களில் வேற்றுமையுண்டாம். அத்துவிதம் என்ற பதம் வேதாந்தத்தில் ஒருமையெனும் பொருள் பெறும். பிரமமும் ஆன்மாவும் ஒன்று என்பதே அத்துவித வேதாந்தத்தின் நிலைப்பாடு. சைவ சித்தாந்தமோவெனில்

முப்பொருள் உண்மை கூறும். இறைவன் உண்மை, எண்ணிறைந்த ஆன்மாக்களும் உண்மை. சாயுச்சிய முத்தியனுபவத்தில் ஆன்மா தன்னை மறந்து இறைவனோடு ஒன்றுமே தவிர இறைவனாக மாறுவதில்லை. இறைவன் இறைவனாகவே இருப்பார். ஆன்மா ஆணவமாகவே இருக்கும். ஆன்மா என்றும் அவர் அடிமை. எனவே அத்துவிதம் என்னும் பதம் சித்தாந்த விளக்கத்தின்படி 'இரண்டல்ல' என்று பொருள்படும். இறைவனும் ஆன்மாவும் உண்மையில் வேறாக இருப்பினும் பிரிதலின்றி இணைந்துள்ளன என்பதாம்.

இவ்வனுபவம் புதிதாக உண்டாவதொன்றல்ல. சித்தாந்த விளக்கத்தின்படி இறைவன் என்றுமே கள்வன் போல் ஆன்மாவின் இருதயத்தில் ஒளிந்திருக்கிறார். ஆனால் அவர் உடன் இருத்தலை ஆன்மா உணருவதில்லை. முத்தி ஞானம் ஏற்பட்டதும் என்றுமே உள்ள ஓர் உண்மையை ஆன்மா உணருகிறது. துரதிஷ்ட வசமாக வேட்டுவர் கையில் அகப்பட்டு வேட்டுவனாய் வளர்ந்த அரசிளங் குமாரனொருவனை அவன் தகப்பனாகிய அரசன் 'நீ என் மகனே தான். வேட்டுவனல்ல' என்று மீட்டுச் சென்றாற் போல் ஐம்புலன்களாகிய வேடர் வலையிற் சிக்கிய ஆன்மாவை இறைவன் குருவாக வந்து உண்மை உணர்த்தி முத்தி கொடுக்கிறார். வீணையும், நாதமும் போலவும் பழமும் சுவையும் போலவும் பிரிதலின்றித் தன்னோடிணைந்துள்ள இறைவனை ஆன்மா உணர்தலும் அவ்வின்ப உணர்விற் தன்னை மறத்தலே சைவ சித்தாந்தம் கூறும் முத்தி அனுபவம்

**அடிக்குறிப்புகள்**

1. சிவஞானசித்தியார் ள. ல. 2. 81, 6.12
2. மேற்படி 2.4, 15-16, 34-35
3. சிவஞானபோதம் 11.2
4. மேற்படி 8.1
5. திருவருட்பயன் 45
6. சிவஞானபோதம் 9.2
7. மேற்படி 8.4
8. மேற்படி 8

✸ தன்னை ஜீவன் என்று நினைத்துக் கொள்பவன் ஜீவனாகவே இருந்து விடுகிறான். தான் ஈஸ்வரன் என்று நினைத்துக் கொள்பவன் ஈஸ்வரனாகவே ஆவான். ஒருவன் தான் நினைக்கிறபடியே ஆவான்.

✸ இவ்வுலக வாழ்க்கையில் இருப்பதும், அதனைத் துறப்பதும் ஈஸ்வர இச்சையைப் பொறுத்திருக்கின்றன. ஆதலால் எல்லாவற்றையும் ஈஸ்வரனிடம் ஒப்புவித்துவிட்டு உன் வேலையைச் செய். அதைத் தவிர உன்னால் என்ன செய்ய முடியும்?

**- ஸ்ரீ ராமகிருஷ்ணர்**

# இறைவரே ஏகமான குரு (திருமூலரும் குருவும்)

சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஒம்ஷர், ''மௌனாச்சிரம்'', கொழும்பு - 06

திருமூலருக்கு 'குருவே சிவம்' என நந்தியெம்பெருமான் கூறுகின்றார். திருநந்தி தேவரே, குரு - சிவம் - தெட்சணாமூர்த்தி ஆவர். 'சிவம்' தான் குரு என்பதை திருமூலர் உணர்த்துகின்றார். 'சிவம்' தான் குருவாகவும் தலைவனாகவும் நிற்கும் என்பதைக் குறிப்பாக உணர்ந்து கொள்ளச் சொல்கிறார். 'சிவம்' தான் குருவாகி உரை, உணர்வு அற்றதோர் தலைவனென, கோவெனத் திருமூலர் வெளிப்படுத்துகின்றார். (1581)

குரு - சிவம் - அதன் சொரூபம் உரையற்றது; ஆனந்தமானது; மௌனமானது. இதனைக் கரைகாண முடியாத சத்தியாகிய ஆதியின் உதவியுடன் காணுவோமானால், உணர்வோமானால்; ஆகாரமாகிய சிவம் மருவுகின்றது, மறைகின்றது, மௌனமாகின்றது, உகரமாகிய சத்தி அகரமாகிய சிவத்தை எமது இல்லத்திலேயே வெளிப்படுத்துகின்றது. அது உள் ஒளியாக வெளிப்படுகின்றது. புலப்படுகின்றது. உணரப்படுகின்றது. (2844)

உரையற்றது ஒன்று இருப்பதாகத் திருநந்திதேவர் திருமூலருக்கு மொழிகின்றார். 'உரையற்றது ஒன்றை'ப் பற்றி அவர் கூறவில்லை. அப்படிக் கூறுவதாயின் ; 'அது உரையற்றது, கரையற்றது, திரையற்றது, புரையற்றது' என்று மட்டும் கூறலாம். மேலும் அதனைக் கூறுவோமானால், அது மடமை, பேதமை, அறியாமை என்கின்றார் திருமூலர். (2648/2955)

குருநெறி - சிவம் ஆகின்ற நெறி, அது திருநெறி, பெருநெறி, ஒரே நெறியாக உள்ளது. அது ஒன்றாக , ஏகமாக எங்கும் உள்ளது. அதனை இடைவிடாது, எப்பொழுதும் ஓதுவதால் உணர்ந்து கொள்ளுங்கள் என்று திருமூலர் கூறுகின்றார். (54)

குருவினுடைய - சிவத்தினுடைய அருவ, உருவ அருவுருவத் திருமேனியைக் காணாத கண்ணால் காணும் பொழுது தெளிவு ஏற்படுகின்றது. குருவினது திருநாமத்தை - அந்தப் பொன்னான மந்திரத்தைப் பேசாது பேசும்பொழுது உள்ளே தெளிவு ஏற்படுகின்றது. குருவினது திருவார்த்தையை - சப்தத்தைக் கேட்கமுடியாத காதால் கேட்கும் போது தெளிவு ஏற்படுகின்றது. குருவினது உருவத்தைக் கற்பனையற்ற, மனமற்ற, நினைவற்ற நிலையில் சிந்திப்பதால் சதா நினைதலால் ஆத்மார்த்தமான பரிபூரணமான தெளிவு ஏற்படுகின்றது. (139)

இந்தப் பெருநெறியிலே, குருநெறியிலே, திருநெறியிலே பிரணவத்தினை ஓர்ந்து, ஆய்ந்து அது நாலாவதைத் தேர்ந்து ஓதி, அதன் கிரியை வழியில் சாதனை வழியிலே செல்லும் பொழுது அதன் சொரூபத்தை ஒவ்வொரு அணுக்களிலும், அணுக்களுக்குள்ளே உள்ள துகள்களிலும் பார்க்கலாம். உணரலாம் எனத் திருமூலர் கூறுகின்றார். (227)

இந்தத் திருநெறியிலே, குருநெறியிலே; சித்தத்தைக் கைவிட்டுச் சித்தையும் கைவிட்டு அதன் திருவருளாகிய ஞானபாதத்தைச் சார்ந்து, சேர்ந்து கருமநியமாதிகள் எல்லாவற்றையும் முழுமையாகக் கைவிட்டு நீங்கள் எல்லோரும் வாருங்கள். அப்பொழுது காணும்; துரிய நிலையைத், துரியா துரிய நிலையை, சமாதி நிலையைப், பரிபூரணத்துவமான தெளிவு நிலையை, தூய்மையான மறையை, மறைபொருளை உணரலாம். அடையலாம் எனத் திருமூலர் கூறி எம்மையெல்லாம் கூவி அழைக்கின்றார். (232)

முழுமையான பணிவுடன், சரணாகதி நிலையில், சோதனை வேதனைகளை எல்லாம் நீக்கி அதனை முழுமையாக வழிபாடு செய்யுங்கள். (721)

சைவத்திற்குப் பெருமை தரக்கூடிய தனித் தலைவனாக - நாயகனாக விளங்கும் திருநந்திதேவர்; நாம் எல்லோரும் உய்யும் வகையிலே வீடுபேறு அடையும் வகையிலே வகுத்து வைத்துள்ள ஏகமாகிய குருநெறியைத் திருமூலர் கூறுகின்றார். அது தெய்வநெறி என்றும், தெய்வச் சிவநெறி என்றும், சன்மார்க்க நெறி என்றும், காதான்மை

நெறி என்றும்., அன்பு நெறி என்றும் இயம்பப்படுகின்றது. (1478)

குருநெறியை - குருபக்தியை திருமூலர் கூறும்பொழுது;

முதலாவது :- உண்மையை, சத்தியத்தை, சிவத்தை, பரம்பொருளை நேரடியாகத் தெரிசிக்கின்ற நிலை - நேரடியாகக் காணுகின்ற நிலை. இதுவே மாசறு காட்சியாகும்.

இரண்டாவது :- உண்மையை, சத்தியத்தை, சிவத்தை, பரம்பொருளை நேரடியாகப் பூசிக்கின்ற நிலை - வழிபடுகின்ற நிலை.

மூன்றாவது :- உண்மையை, சத்தியத்தை, சிவத்தை,பரம்பொருளை, மன நினைப்புகள் எல்லாமே அற்றுப்போக நினைக்கின்ற சிந்தனை செய்கின்ற நிலை.

நான்காவது :- உண்மையை, சத்தியத்தை, சிவத்தை, பரம்பொருளை ஆத்மார்த்தமாக உணர்கின்ற நிலை. மெய் உணர்கின்ற நிலை பரிசிக்கின்ற நிலை. ஆத்மார்த்தமாகத் தீண்டுகின்ற நிலை.

ஐந்தாவது :- உண்மையை, சத்தியத்தை, சிவத்தை, பரம்பொருளை மெய்யுணர்ந்த நிலையிலே புகழ்ந்து பாடுகின்ற நிலை. ஏத்துகின்ற நிலை.

ஆறாவது :- உண்மையினுடைய, சத்தியத்தினுடைய, சிவத்தினுடைய, பரம்பொருளினுடைய, திருவருட்கமலமாகிய ஞானத் திருவடியை இதயத்திலே, சிரசிலே சூடுகின்ற நிலை.

இவ்வாறாக ஆறு நிலைப்பாட்டினை - குருபத்தி செய்கின்ற முறையைத் திருமூலர் தெளிவுபடுத்தினார். (1479)

இந்தத் திருநெறியை ஞானச்சமயம் என்றும், ஞானவிசேடம் என்றும் ஞானநிர்வாணம் என்றும் திருமூலர் கூறுகின்றார். ஞானத்தால் பெரிய குரு பாதத்தை அபிடேகம் செய்யுங்கள் என்று கூறுகின்றார். (1476)

இருவினை முற்றுமுழுதாக நீங்கும் பொழுது, வியாபகமான மனம் நடுவு நிலைமையை அடைகின்ற பொழுது, உண்மையினுடைய சத்தியத்தினுடைய, சிவத்தினுடைய, பரம்பொருளினுடைய இன் அருளாகிய சத்தியே குருவாக வெளிப்படுத்தலைத் திருமூலர் வெளிப்படுத்துகின்றார். சத்தியே குருவாக வந்து பலவிதமான குணங்களை எல்லாம் நீக்கும்பொழுது; உள்ளே தானாகவே ஞானமாகிய ஆன்ம மலர் மலர்கின்றது. அப்பொழுது மூன்று மலங்களும் தீர்ந்து போகின்றன. முப்புரங்களாகிய மும்மலங்களும் எரிந்து போகின்றன. அதனால் எல்லாமே சிவமாகின்றது .(1527)

ஆன்மா பக்தியாலே பரவிப் பணிந்து பாதாரவிந்தங்களைத் திருவடித் தாமரையினைச் சுத்தமான உரையாகிய மௌனத்தால் நாடும்பொழுது; மாயா மயக்கங்கள் உண்டா இல்லையா என்று சோதிக்கப்படுகின்றது. அதன் பின்னர் ஆன்மாவுக்கு சத்தியத்தைப் பரம்பொருளை உணர்த்த, காட்ட சித்தத்தின் ஊடாக இறைவனே சிவமாக குருவாக வெளிப்படுகின்றான். இது தான் முழுதும் உண்மையானது (1573)

'அது' பாசத்தை, அஞ்ஞானத்தை, மயக்கத்தை, தூலக்கத்தை முற்று முழுதாகச் சேர்த்துக் கட்டி அதனைப் பறித்து எடுத்து அகற்றி; நேசித்த, விரும்பிய காயத்தை உடம்பை விடுவித்து விடுகின்றது. அப்பொழுது 'அதில்' இருந்து - அம்பலத்தில் இருந்து - வெறுவெளியில் இருந்து ஆசு அற்ற சற்குரு வெளிப்பட்டு உண்மையைச் சத்தியத்தைப் பரம்பொருளை உணர்த்துகின்றது. (1574)

எல்லா உலகங்களுக்கு அப்பாலாகவும் இப்பாலாகவும் நல்லோர்களுடைய உள்ளத்திலே உட்கார்ந்து மிகுந்த நிறைந்த, அருளை, நல்குவதற்காக, வழங்குவதற்காக; எல்லோரும் உய்வடையும் பொருட்டு சொல்லார்ந்த நற்குரு - மௌனகுரு - 'சுத்த சிவம்' ஆக வெளிப்படுகின்றது. (1576)

இங்கே ஓர் உபாயம் நிகழ்கின்றது. 'சுத்த சிவம்' குருவாக வந்து பசுவையும் பாசத்தையும் முற்று முழுதாக மாற்றித்; தெளிவான தெளிவின்பால் சேர்த்து யாவற்றையும் அன்புடனே மௌனத்தாலே நல்குகின்றது. (1577)

'சுத்த சிவம்' குருவாக வந்து தூய்மை செய்து, அருள் செய்து; சத்தியத்தைப் பரம்பொருளைத் தன்னை

உணர்த்துகின்றது. அப்பொழுது ஆன்மகோடிகள் எல்லாம் சிவகுருவினுடைய பாதாரவிந்தங்களுடன் ஐக்கியமாகிப் பணிந்து கொண்டு இருக்கின்றன எனத் திருமூலர் கூறுகின்றார். (1578)

இசைவாகத் - தானாக அன்பு மலர்ந்து எழுகின்ற போதுதான் அந்த அன்பான உள்ளத்திலே குரு- சிவம் தானாகவே உவந்து விரும்பி வந்து அதன் திருவருளாகிய கமலபாதங்களை எம் இதயத்திலே பதித்து வெளிப்படுத்தி எம்மை எல்லாம் ஆட்கொள்ளுகின்றது. (1590)

இவ்வாறாக சிவம் - குரு பாதம் பதித்து, அருட் பார்வையை வீசுவதற்காக; திருநந்தியெம்பெருமான் தன்னை நெறிப்படுத்துவதாக திருமூலர் கூறுகின்றார். குருவினுடைய, உண்மையினுடைய, சத்தியத்தினுடைய வடிவம் தாங்கிய தலைவனைக், கோவைக்கோனைத், தெட்சணாமூர்த்தியைத் தான் காண்பதாகவும் அவ்வேளையிலே இரு வழியும் அடைபடுகின்றது, அற்றுப் போகின்றது எனத் திருமூலர் கூறுகின்றார். (1597)

அஞ்ஞானத்தை - மாயையை மயக்கத்தை இருளை நீக்குபவர் சிவம் - குரு ஆவர். சிவம் - தெட்சணாமூர்த்தி தான் ஏகமாகிய ஒரே குரு. இவரைத்தான் குருவாக கொள்ளுங்கள். வேறு எவருமே குருவாக இல்லை. குருட்டு வழியைக் கறுக்கு வழியை நாடாதீர்கள் என எச்சரிக்கின்றார் திருமூலர். (1680)

இவ்வாறு சிவம் தான் குரு என முழுமையாக உணர்ந்து, முழுமையாக ஏற்று, உள்ளத்தைப், பொருளை, உடலை, ஆத்மாவை அக்கணமே அதனிடம் முழுமையாக ஈந்து , ஒப்படைத்து; இடைவிடாது அதனுடனே உள்ளத்தால் ஆத்மாவால் நிற்கும் பொழுது; தெள்ளிய தெளிந்த உணர்வு, ஞானம் ஏற்படுகின்றது. இது பேரானந்தப் பேராப் பெருவாழ்வாகிய சிவபதத்திலே. சிவபுரத்திலே எம்மை எல்லாம் ஐக்கியப்படுத்துகின்றது. (1693)

முழுமையாகவே ஞானத்தில் விருப்பம் ஏற்பட வரமுடியாத காதல், வற்றாத காதல் வந்து, அன்பாகி மலர்ந்து சிவம் பால், குருவின் பால் பொழிந்து கொண்டிருப்பதே ஒரு சாதகனுக்கு வேண்டியது, சிறப்புடையது ஆகும். அப்பொழுது சாதகனுக்கு எங்கும் சாராத நிலை, ஆராய்வுகள் எல்லாம் அற்றுப் போகின்ற நிலை ஏற்படுகின்றது- ஞானம் முழுமையாக மலர்வடைகின்றது எனத் திருமூலர் கூறுகின்றார். (1699)

சிவம் - குரு எம்மை முற்று முழுதாக ஆட்கொண்டு உய்வடைவிக்கும் போது உயிர், சரீரம், பிராணண், வியக்கத்தகுந்த ஒண் பொருளான சத்தி எல்லாம் செயலற்றுப் போகின்றது. (1779)

இவ்வாறு எம்மை எல்லாம் ஆட்கொள்ளும் சிவம் - குரு - ஆசாரியார், நித்தலும் இடைவிடாது பரம்பொருளை 'நினையவைத்து,' 'வாய்திறவாதே' என்று மௌனநிலையில் அமர்த்துகின்றார். (1780)

தாளினைத் திருத்தாளினைத் -திருவடியினைப்- பாதகமலங்களைத் தீட்சையாக எமக்கு எல்லாம் தருகின்றார். ஆன்மகோடிகளின் தலைவராகிய, சற்குருவாகிய சிவம். (2049)

வேதங்களும், ஆகமங்களும் சிவத்தையே பரம்பொருளையே, சத்தியத்தையே, உண்மையையே குருவான விதந்து வியந்து விளம்புகின்றன. இந்தப் பெரும் வழியையே திருநந்திதேவர் குருவழி எனப் பேசுவதாகத் திருமூலர் கூறுகின்றார். எல்லோரும் இந்த வழியில் வந்து கூடுங்கள் எனத் திருமூலர் அழைக்கின்றார். (2057)

மௌனதாதாலே - மௌன உரையாலே முற்றாக மலங்கள் எல்லாம் எரிக்கப்படுகின்றன. இருள் முற்றாகவே அறுக்கப்படுகின்றது, அகற்றப்படுகின்றது. இவ்வாறு நிகழ்வதை மௌனநிலையில் இருந்தே குரு இயம்புகின்றார். (2066)

குருவை மிகவும் நுட்பமாகத், துல்லியமாகத், தெளிவாக திருமூலர் வெளிப்படுத்துகின்றார். திருமூலரை திருமந்திரத்தை நாம் பெற்று அனுபவிப்பது நாம் எல்லோரும் செய்த பாக்கியமாகும், பிறவியின் பெரும் பயனுமாகும்.

# ஆன்மீகத் தேடலில்...........

T. V. R. சங்கர், மூன்றாம் வருடம், பொறியியல் பீடம்.

மனித சமுதாயத்தின் குறிக்கோள் ஞானத்தை அடைவதாகும். ஞானம் ஒன்றுதான் வாழ்வின் இலட்சியம். ஞானம் ஒன்றுதான் ஆன்மாவை மூடியிருக்கும் திரைகள் அனைத்தையும் நீக்கி விடுதலைக்கு வழிவகுக்கும். நாம் விடுதலை பெற வேண்டுமென்றால் இந்தப் பிரபஞ்சத்தின் எல்லைக்குள்ளிருந்து விடுதலை பெறவேண்டும். அவ்வாறான விடுதலையே ஆன்மீக விடுதலையாகும்.

ஆன்மீக விடுதலைக்கு இந்துமதம் காட்டும் பாதை தனிச்சிறப்புடையது. இந்து மதம் காட்டும் ஆன்மீக விடுதலைப் பாதை வாழ்க்கையைத் துற என்கிறதா? இல்லை அது தவறு. உண்மையில் வாழக் கற்றுக் கொடுப்பதுதான் இந்துமதம். ஆன்மீக விடுதலைக்கு இரு வழிகள் காட்டப்படுகின்றன. ஒன்று உடன்பாட்டு வழி மற்றையது எதிர்மறை வழி. பின்னால் கூறப்பட்டது மிகவும் கடினமானதாகும். இது உலக இன்பங்களைத் துறப்பதன் மூலம் ஆன்ம விடுதலையை அடைவதாகும். இது எல்லையற்ற மனவலிமையும் கட்டுப்பாடும் உடையவர்களால் மட்டுமே கடைப்பிடிக்கக் கூடியது. ஆனால் இவ்வுலக மக்களுக்கு பொருத்தமான வழி உடன்பாட்டு வழியாகும். இது உலகை அனுபவித்தவாறே உலகைத்துறக்கின்ற, இன்பதுன்பங்களை எதிர்கொண்டு; அது தரும் அனுபவங்களை மனதிற்கொண்டு வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து இன்பதுன்பம் இரண்டிலுமிருந்து விடுபடுதலாகும்.

வாழ்க்கையின் அர்த்தத்தைப் புத்தகங்களிலோ சாஸ்திரங்களிலோ அல்லது ஒரு புத்திசாலித்தனமான விளக்கத்திலோ தேட முயற்சி செய்யாதீர்கள். இவைகள் எதுவும் வாழ்வின் விழிப்புணர்வை தரமுடியாது. இது உங்களுடைய வாழ்வு, உங்களுடைய வாழ்வின் விளக்கத்தை வேறு யாரும் உங்களுக்கு கொடுக்க முடியாது. உங்களது மூச்சிலும், உங்களது ஒவ்வொரு செயற்றுடிப்பிலும் அது இருக்கிறது. நீங்கள் உண்மையாக வாழ்க்கையை நெருங்கி வாழ்வதன் மூலமே வாழ்வெனும் புதிர் உங்களுக்கு விளக்கமாகும்.

''நீங்கள் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தால் உணர்வைத் தாண்டிச் சென்றால் உங்களுக்கு மரணம் இல்லை. நித்தியஜீவர்களாக இருப்பீர்கள்''

இதை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் முட்டாள்தனமானது. பிரமச்சரியம் என்பது இயல்பாக, இயற்கையாக மனதின் முதிர்ச்சி காரணமாக நிகழ்வது. பிரமச்சரியம் என்றால் உண்மையில் கடவுள் போல் வாழ்தல் என்று பொருள்படும்; பிரமச்சரியத்தை நீங்களே உங்கள் மேல் திணித்துக் கொள்ளலாம், உங்களின் பால் உணர்வை நீங்களே கட்டுப்படுத்திக் கொள்ளலாம். நான் ஏற்கனவே கூறியது போல் எல்லையற்ற மனக்கட்டுப்பாடு உள்ளவர்களுக்கு உலகத்திற்கு புற நடையான மனிதர்களுக்கு; உண்மையில் அவர்களின் மனது இளமையிலேயே முதிர்ச்சியடைந்திருப்பதால் சாத்தியமாகலாம். ஆனால் சாதாரண மனிதன் பால் உணர்வை அடக்கும்போது அதிகமான பால் உணர்விற்கு ஆளாகின்றான். பால் உணர்வு அவர்களின் உள்ளுணர்வில் கலந்து கனவில், கற்பனையில் ஊடுருவி விடுகின்றது. உண்மையில் பால் உணர்வு அருவருக்கத்தக்கதல்ல. அதனைக் கண்டு நீங்கள் பயப்படாதீர்கள். உங்களுக்கு கோபம், பயம் போன்ற உணர்ச்சிகள் வருவது எந்தளவிற்கு இயற்கையானதோ அந்தளவிற்கு பாலுணர்வும் இயற்கையானது.பால் உணர்வு தெய்வீகமானது அல்ல. ஆனால் அதுதான் பிறப்பு, வாழ்வு, மரணம், அன்பு, ஆத்மீகம், கடவுள் தன்மை எல்லாவற்றுக்கும் அடிநாதமான ஆதாரமாகும். ''பால் உணர்வை அறிந்து கொள்ள முயலுங்கள். அதற்கென்று ஒரு போற்றத்தக்க அழகு அதன் ஆழத்தில் இருக்கின்றது. இதை ஒரு யோகமாகக் கருதி செயற்படுங்கள். இது ஒரு அபூர்வமான பரிபூரண வாழ்வின் மிகப்பெரிய அதிசயம். அது ஒரு அற்புத இரகசியம். வாழ்வு அதிலிருந்துதான் மலர்கின்றது. நீங்கள் எப்பொழுது அதன் உச்சநிலையை

பரிபூரணமாக அடைகிறீர்களோ அப்போது அதில் உள்ள ஈடுபாடு மெல்லக் குறைவதைக் காண்பீர்கள்'' என்கிறார் தத்துவஞானி ஒஷோ. அப்போது உங்களில் பிரமச்சரியம் பரிணமிக்கின்றது; ஆன்மிகம் துளிர்விட ஆரம்பிக்கின்றது.

மனித மனம் எப்போதும் தனித்துவத்தை நிலைநாட்ட முற்படும். இது அகங்காரத்தின் ஆதிக்கத்தால் எழுவது. அகங்காரம் அகலும் போது சாதாரண வாழ்விற்கு நீங்கள் தயாராகுகிறீர்கள் எப்பொழுதுமே நீங்கள் சாதரணமாக வாழ தயாராகுகிறீர்களோ அப்போது நீங்கள் மிக மிக அசாதாரமானவர்களாக ஆகி விடுகிறீர்கள். அப்போது நீங்கள் ஒரு கர்மயோகி நிலையை அடைகிறீர்கள். கர்மயோகிகள் எப்பொழுதும் தங்கள் கடமையை செய்வதிலேயே -செயல்வீரர்களாக குறியாக இருப்பார்கள்.

கர்ம யோகம் என்பது செயல் புரிவதன் மூலம் ஆன்ம விடுதலையை நாடுதலாகும். மிகச் சாதாரணமாக செயல்புரியுங்கள். பற்றற்றுச் செயல்புரியுங்கள், பேரையோ, புகழையோ பாராட்டையோ பரிசையோ எதிர்பார்த்து செயல்புரியாதீர்கள். கட்டாயத்தின் பேரில் செயல்புரியாதீர்கள் இதையேதான் பகவத்கீதை கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்கிறது.

கர்மயோகமும் பக்தியோகமும் கலியுகத்தின் ஆன்ம ஈடேற்றத்திற்கு சிறந்தது என்று விவேகானந்தர் கூறுகின்றார். எவ்வாறு ஞானி தன் அறிவு மூலமாகவும், எழுச்சி மூலமாகவும் இலட்சியத்தை அடைகிறானோ; பக்தன் தன் பக்தியாலும் அன்பாலும் சாதிப்பது போல கர்மயோகி இடைவிடாது ஒவ்வொரு வினாடியும் செயல் புரிவதால் இலட்சியத்தை அடைந்து சாதனை புரிகிறான். உண்மையில் நீங்கள் பற்றற்று செயல் புரிவதற்கு பேரன்புடையவர்களாக - அன்பே உருவாக -இருக்க வேண்டும்

ஆத்மீகம் என்பது அறிவு சம்பந்தப்பட்டதல்ல. ஆத்மீகம், அன்பு, உண்மை, தியானம் என்பன பற்றி நீங்கள் நிரம்ப அறிந்திருக்கலாம்; நிறைய நூல்களை வாசித்திருக்கலாம்; சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கலாம். நீங்கள் அன்பைப்பற்றி பேசலாம்; கவிதைகள் எழுதலாம்; இவை வெறும் விடய ஞானமே. இவையெல்லாம் உங்களுக்கு உண்மையான அனுபவத்தைத் தரமுடியாது. அன்பைப்பற்றி பிறர் கூறுவதெல்லாம் வெறும் வார்த்தை ஜலாங்களே. வெல்லம் இனிப்பானது, மிகுந்த சுவையுடையது, தித்திப்பானது, திகட்டாது என்று வெல்லத்தின் சுவைபற்றி நான் வார்த்தை ஜாலங்ள் புரியலாம். நான் வார்த்தைகளைக் கையாளுவதிலும் விளங்க வைப்பதிலும் வாதிப்பதிலும் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் இதற்கு முன்பு நீங்கள் வெல்லத்தை சுவைக்காதவராயின் நான் எப்படி தித்திப்பை விளக்கினாலும் உங்களுக்கு அது புரியப் போவது இல்லை. நீங்கள் உணரப் போவதுமில்லை. நீங்கள் எப்போது ஒரு கரண்டி வெல்லத்தை மெல்கிறீர்களோ அப்போதுதான் அதன் சுவையை உணர்வு பூர்வமாகத் தெரிந்து கொள்கிறீர்கள்.

அன்பும் இதைப் போன்றதுதான். அன்பு ஆத்மீக அனுபவங்கள் தியானம், உண்மை இவை உங்களுடன் எவருடைய உதவியின்றி, மொழியின்றி எந்தவித வார்த்தைகளுமின்றி, ஊடகம் இன்றி நேரடியாக உங்கள் உணர்வுகளை நெருங்கி இரண்டறக்கலக்க விரும்புகின்றன. நீங்கள் உண்மையில் மனப்பூர்வமாக ஒரு பெண்ணில் அன்பு செலுத்தினால் அங்கு அன்பு மட்டுமே இருக்க வேண்டும். நீங்கள் அன்பைப்பற்றி காதலைப்பற்றி அறிந்த எல்லாவற்றையும் ஃபிராய்ட (Freuds) ஜங் (Jungs) திருமூலர், தாகூர் போன்றவர்கள் அன்பைப்பற்றி கூறியவற்றையும் மறந்துவிடுங்கள். உங்கள் அன்பு அப்பெண்ணிற்கு தடையாக இருக்கக்கூடாது, இருக்கவும் முடியாது. ஏனென்றால் அது உண்மையான அன்பு, அன்புக்கு அன்பைத்தவிர வேறெதுவும் தெரியாது. அங்கு காதல் மட்டும் மலரட்டும்; அது தூய்மையானதாக இருக்கட்டும்; அப்போதுதான் உங்களால் அன்பை - அதன் உண்மைத்தன்மையை அதன் ஆளுமையை மனப்பூர்வமாக இதயபூர்வமாக உணர முடியும். நீங்கள் தூய்மையாக அன்பு செலுத்தும் போது அகங்காரம் உங்களைவிட்டு விலகுகின்றது. அந்த அன்பு உங்களை ஆத்மீகம் நோக்கி வழிநடத்தட்டும். வாழ்வின் உள் அர்த்தத்தையும் இரகசியத்தையும் அறிய அது உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கட்டும்.

அன்பின் உச்சநிலையில் நீங்கள் இறப்பதற்குக்கூட தயாராக இருப்பீர்கள். உண்மையில் அன்பின் உச்சநிலையில் இறப்பை நேசிப்பீர்கள். நீங்கள் எப்பொழுதெல்லாம் உண்மையாக, ஆழமாக வாழ்வை அனுபவிக்கிறீர்களோ அப்போதெல்லாம் நீங்கள் இறப்பை விருப்புடன் நெருங்குகிறீர்கள். இறப்பைக் கண்டு

பயப்படாதீர்கள். நீங்கள் பிறக்கும் போதே இறப்பும் பிறக்கின்றது. இறப்பு என்பது இயற்கையானது. அதை இயல்பாக நிகழ அனுமதியுங்கள். உண்மையில் நீங்கள் வாழ்வை அனுபவித்து வாழ்ந்திருப்பீர்களேயானால் இறப்பைக் கண்டு பயப்படமாட்டீர்கள்.

ஆகவே உண்மையாக, உணர்வு பூர்வமாக இதயபூர்வமாக வாழுங்கள். அவ்வாறு வாழும் போது அந்த நிலையிலேயே இறந்து விட வேண்டும் போல் தோன்றும்.

பெரும்பாலான காதலர்கள் அன்பில் கட்டுண்டு இருக்கும் போது ''நான் இந்த நிலையில் இந்த அன்பை அனுபவித்தபடியே இறந்துவிட வேண்டும்'' என ஒரு முறையாவது நினைத்திருப்பார்கள். ஆம், அந்தக் கணத்தில் மாத்திரமே அவர்கள் உணர்வுபூர்வமாக, உண்மையாக வாழ்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு கணத்தையும் நான் மேலே கூறியது போன்று உங்கள் வாழ்வில் அனுபவித்து இறப்பதற்கு தயாராக வாழுங்கள். இறப்பு என்பது உங்கள் பிறப்பில் இருந்து தொடரும் ஒரு தொடர்பு நிகழ்வு. ஒரு மெழுகுதிரி எரிகிறது என்றால் அது ஒவ்வொரு கணமும் தன்னை அழித்துக் கொள்கின்றது. அதேபோல் நீங்கள் வாழும் ஒவ்வொரு கணத்திலும் இறக்கிறீர்கள். நீங்கள் அன்பினால் வாழ முற்படும்போது உங்கள் அகங்காரம் இறந்து அன்பினால் மற்றவரிடம் சரணடையத் தயாராக இருப்பீர்கள். எப்போதெல்லாம் நீங்கள் உங்களை மறக்கிறீர்களோ, வாழ்வின் உச்சத்தை அனுபவிக்கிறீர்களோ, அகங்காரம் இறக்கும் போதெல்லாம் இறப்பு உங்களை ஆக்கிரமிப்பதை, நீங்கள் வரவேற்பீர்கள்; மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வீர்கள்.

வாழ்வின் போக்கு நிலையற்றது; வாழ்வு பாதுகாப்பற்றது தான் அது ஒவ்வொரு விநாடியும் பாதுகாப்பற்ற எதிர்வு கூறமுடியாத நிலையை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கின்றது. யாரும் பாதுகாப்பான, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வாழ்க்கையை உங்களுக்குத் தரமுடியாது. இயந்திரங்களுக்கு மாத்திரமே, வாழ்க்கை பாதுகாப்பானதும் தீர்மானமானதாகவும் இருக்கும். தீர்மானிக்கப்பட்ட வாழ்க்கையில் அச்சம், ஆனந்தம், எதிர்பார்ப்பு, ஆச்சரியம் எதுவுமே இருக்காது. உண்மையில் வாழ்க்கையில் என்ன நிகழப் போகின்றது என்று யாராலும் எதிர்வு கூற முடியாது. அதுதான் வாழ்வின் அழகும் கூட.

தீர்மானமான, திட்டமிட்ட நெறிகளைத் தேடி அலையாதீர்கள். அவை மிகவும் மலிவானவை. அவற்றை தாராளமாக வழங்குவதற்கு அரசியல்வாதிகள், மதகுருமார்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வினாடியும் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளுங்கள். வாழ்வு மிகவும் அற்புதமானது. அதில் வாழ முயலுங்கள். அப்போது வாழ்க்கையில் தவறே செய்ய மாட்டீர்கள் என்பதல்ல அதன் அர்த்தம். நீங்கள் நிச்சயம் தவறு செய்வீர்கள் ஆனால் ஒரே தவறை மீண்டும் மீண்டும் செய்யாதீர்கள். அப்போது நீங்கள் கர்ம யோகத்தின் மூலம் வாழக் கற்றுக் கொள்கிறீர்கள் என்று அர்த்தம். வாழ்வும் சாவும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள். வாழ்வின் உச்சநிலையில் இறப்பும் உச்சநிலையை அடைகின்றது. வாழ்வு முழுமையடையும்போது மரணமும் முழுமையடைகின்றது. வாழ்வு முழுமையடையும் போது நீங்கள் இன்பத்தையும் துன்பத்தையும் வாழ்வையும் சாவையும் ஒரே மாதிரியாக ஏற்றுக் கொள்வீர்கள். இதுதான் உண்மையான ஆத்மீகத்தின் அடிப்படை. இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்விலும் சாவிலும் முழுமையை உணர வேண்டும். இவ்வாறு முழுமையைக் கடக்கும் போது நீங்கள் இருமையை இரண்டுபட்ட தன்மையை கடந்து உங்களில் நீங்கள் ஐக்கியமாகி விடுவீர்கள். இவ்வாறு நீங்கள் ஒருமைப்படுதல் தான் அந்த உண்மை. இதை நீங்கள் முத்தி என்றோ, ஞானம் என்றோ, பேரின்பம் என்றோ, பரம்பொருள் என்றோ, பெருவாழ்வு என்றோ, ஆன்ம ஈடேற்றம் என்றோ எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள்.

# இந்திய மெய்யியலின் ஆத்மீக மரபு

திருமதி. ம. இராஜரத்தினம், சிரேஸ்ட விரிவுரையாளர், மெய்யியல் துறை.

மெய்யியல் அல்லது தத்துவஞானம் என்பது பிரபஞ்சத்தினைப் பற்றியும் மனிதனைப் பற்றியதுமான அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்ளும் முயற்சியாக அமைகின்றது. இந்திய மரபில் மெய்யியல் என்பது வெறும் அறிவியல்ரீதியான தேடுதலாக அல்லது அறிவாராச்சியல் விளக்கமாக மட்டும் அமையாது ஒரு வாழ்வியல் நெறியாகவும் அமைகின்றது. உண்மைபற்றிய அறிவு உள்ளுணர்வு சார்ந்த நேரடியான ஆத்மீக அனுபவமாக உணர்வதனால் இந்திய மெயியியல் இலக்கியங்கள் தர்சனங்கள் (Visions) என அழைக்கப்படுகின்றன. தாம் உள்ளுணர்வில் கண்டுகொண்ட உண்மைகளை வாழ்வியலுக்கு கொண்டு வருவதில் இந்திய தத்துவஞானிகள் அதிக அக்கறை கொண்டிருந்தனர். இதனாலேயே இந்தியதத்துவ ஞானிகள், தீர்த்தங்கரர் அல்லது துறைவகுப்போர் என அழைக்கப்பட்டனர். இந்திய மெய்யியல் மரபு அறிவிற்காக மட்டும் வாழும் மரபாக இல்லாது வாழ அறிந்து கொள்ளும் மரபாக அமைகின்றது.

மேலைநாட்டு மெய்யியல் மரபு அதன் சொல்வரலாற்றியல் விளக்கத்துக்கு அமைய அறிவுபற்றிய விருப்பாகவே (love of Wisdom) பெரும்பாலும் அமைகின்றது. அங்கு அறிவுசார் மெய்யியலும், அறிவாராச்சியலும் முதன்மையான அழுத்தம் பெறுவதனால் மெய்யியலின் நடைமுறைத் தன்மை பிரபல்யம் அடையவில்லை. இந்திய மெய்யியலின் மையக்கருத்தாக அமையும், தன்னையுணர்தல் (Self Realisation) என்பது, சோக்ரட்டீஸின் மெய்யியல் ''உன்னை அறிந்து கொள்'' (Know thyself) என்பதாக அமைகிறது. உயர்ந்த பண்பே ஒரு வகையான அறிவு போன்ற ஒருமைப்பாடுபற்றிய அறிவுத் தளத்தினையும் விழுமியங்கள் பற்றிய அறிவினையும் பற்றி சோக்ரட்டீஸ் குறிப்பிட்டிருந்த போதிலும் அறிவு என்பது எண்ணக் கருக்களுக்கூடாக வருகின்றது என்ற கருத்தினைக் கொண்டவராக இருந்தார். இக்கருத்து பிளேட்டோவின் அறிவு சார் மெய்யியல் அழுத்தம் பெறுவதற்கு காரணமாக இருந்தது. இதனால் மேலைத்தேச மெய்யியல் அறிவுசார் மெய்யியலுக்கு முதன்மை கொடுத்தது.

வாழ்க்கை என்ற அடித்தளத்தில் மெய்யியல், சமயம், கலைகள், அறவியல் போன்ற அனைத்து சமூகவியல் துறைகளும் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கும் தன்மைதான் இந்திய மரபின் தனித்துவமாகும். இவ்வனைத்து துறைகளுக்கும் ஒரே ஆத்மீக நோக்கு இறுதி இலட்சியமாகக் காணப்படுகின்றது. எல்லா உயிரினங்களினதும் அடிப்படை ஒருமையை காணும் முயற்சியாகவே ''தன்னையுணர்தல்'' அமைகின்றது. உள்நோக்கிய ஆய்வின் ஊடாக (Introspective search) ஒருவன் தன்னை பொது உண்மையாகக் காணுவதே இதன் நோக்கமாகும். ஒருமை அனுபவத்தினூடான பொதுமை நிலையே இந்திய ஆத்மிகத்தின் சாரமாகும். அதாவது தன்னையுணர்தல் என்பது தன்னைப் பொதுமனிதனாகக் (Universal Man) காணும் நிலையே ஆத்மிகநிலையாகும்.

இவ்வாத்மிகநிலை பற்றி உபநிடதங்கள் மிக ஆழமாக எடுத்துரைக்கின்றன. கிறிஸ்துவுக்கு முன் 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இலக்கியங்களாகக் கருதப்படும். உபநிடத இலக்கியங்கள் உண்மையின் தன்மைபற்றி பலவாறாக எடுத்துச் சொல்கின்றன. ஆனால் அநேகமான ஆரம்பகால உப நிடதங்களில் மீண்டும் மீண்டும் வற்புறுத்தப்படும் கொள்கையாக கருத்துநிலை ஒருமைவாதம் (Indealistic Monism) காணப்படுகின்றது. இவற்றில் தனிநிலை ஆத்மாவையும் (Individual Self) பிரபஞ்ச ஆத்மாவையும் (Cosmic-self) சமமாகக் காணும் கூற்றுக்கள் காணப்படுகின்றன. அதாவது பிரபஞ்சத்தின் பொதுவுண்மையும், மனிதனும் பொதுவுண்மையும் அல்லது சாரமும் ஒன்று என்பதாக அவ்வொருமை வாதம் விளக்குகின்றது. இதனையே சாந்தோக்கிய உபநிடதம் ''அது நீயாக இருக்கின்றாய்'' (That Thou Art) எனக் கூறுகின்றது. இதே கருத்தினை ஏனைய உபநிடத மகா வாக்கியங்களான ''நான் பிரமமாக இருக்கின்றேன்'', ''எல்லாமே பிரமமயம்'', ''என்னுடைய ஆத்மா பிரமம்'' என்றவாறு விளக்குகின்றன. நாம் பலவாக நினைக்கும் ஆத்மா அடிப்படையில் ஒன்று என்பதை உணர்வதே விடுதலை நிலையாகும். இத்தகைய ஒருமையுணர்வு அல்லது ஆத்மிகஞானம் அறவியலின் அடித்தளமாக அமைகின்றது. ஒரு மறைஞானிக்கு நன்மை, தீமை, தர்மம் அதர்மம் என்பவற்றை பிரித்தறியும் தெளிவான ஆளுமை இயல்பாகவே அமைகின்றது. அவ்வுணர்வின் ஊடாக ஒருவன் எல்லா விதமான வேறுபாடுகளையும் கடந்த பொது மனிதனாக வாழ்வதற்குரிய தளத்தினைப் பெறுகின்றான்.

இந்திய மெய்யியல் வைதீக தர்சனங்கள், அவைதீக தர்சனங்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவது வழக்கமாகும். வைதீக தர்சனம் என்பது வேதத்தை ஏற்றுக் கொள்ளும் சாங்கியம், யோகம், நியாயம், வைஷேஷிகம் பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை அல்லது வேதாந்தம் என்ற ஆறு மெய்யியல் முறைமைகளை உள்ளடக்குகின்றது. வேதத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் கடவுள் இருப்பினை மறுக்கும் பெரும்பான்மையான வைதீக தர்சனங்களைக் காணலாம். குறிப்பாக வேதத்தின் முற்பகுதியாகிய கரும காண்டப் பகுதியை விளக்கும் மெய்யியலான பூர்வமிமாம்சை கடவுள் உண்மையை ஏற்றுக் கொள்ளவில்லை. வேதத்தின் பிற்பகுதியாகிய ஞானகாண்டத்தின் குறிப்பாக உபநிடதங்களில் விளக்கமாக அமையும் சங்கர வேதாந்தத்திலும் கடவுள் உண்மையை விட ஒரு பொதுநிலை ஆத்மாகவே முதன்மை பெறுகின்றது. சாங்கிய மெய்யியல் நிரிஸ்வர வாதமாக அல்லது கடவுள் கோட்பாட்டினை மறுக்கும் மெய்யியல் முறைமையாக உள்ளது. சாங்கிய மெய்யியலின் பௌதீக அதீதத்தினை (Meta-physics) அப்படியே ஏற்றுக் கொள்ளும் யோக மெய்யியல் முறைமை கடவுளை படைப்பவராகவோ, முழுமுதலாகவோ அன்றித் தியானத்துக்குரிய உயர்நிலை மையப் பொருளாக ஏற்றுக் கொள்கிறது. கடவுள் கோட்பாட்டின் முதன்மையை ஏற்காவிடினும், மெய்யியல் முறைமைகள் ஆத்மிக மரபினை முதன்மைப்படுத்தின.

அவைதீக தர்சனங்களாக அமையும் உலோகாயுதம், பௌத்தம், சமணம் என்பன வெளிப்படையாக கடவுள் இருப்பினை ஏற்காத மெய்யியல் மரபாக உள்ளன. இவற்றில் சார்வாதம் தவிர்ந்த ஏனைய பௌத்தம், சமணம் என்பனகடவுள் உண்மையை இறுதி உண்மையாகக் காட்டாவிடினும், ஆழமான ஆத்மிக உணர்வினைக் கொண்ட மனித விடுதலையை முதன்மைப்படுத்தும் மெய்யியல் மரபுகளாக விளங்குகின்றன. குறிப்பாக பௌத்த மெய்யியல் உபநிடத மெய்யியலின் அளவையியல் முடிவாக அமைகின்றது என இந்திய மெய்யியலை ஆராய்ந்த அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். உபநிடத மெய்யியலைஆராய்ந்த, அல்லது விளக்கிய சங்கரரும், மறைமுக பௌத்தர் என அழைக்கப்பட்டார். இதனூடாக இந்திய மெய்யியல் மரபின் விடுதலை பற்றிய எண்ணக்கரு ஆத்மிக ஞானத்தினையே முதன்மைப்படுத்துகிறது.

''சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ -பல
பித்த மதங்களிலே தடுமாறிப்
பெருமையழிவீரோ''

என்ற பாரதியாரின் அறிவே தெய்வம் என்ற கருத்தும் திருமூலரின் அன்பே சிவம் என்ற கருத்தும் உண்மையான ஆத்மீக ஞானத்தின் உயர்ந்த அன்பு நிலையை உண்மையாகக் காட்டுகின்றன.

சைவசித்தாந்தம், இராமானுஜ வேதாந்தம், மத்துவ வேதம் என்பன போன்ற மெய்யியல் முறைமைகள் கடவுள் உண்மையை ஏற்றுக் கொள்கின்றன. இவற்றில் கூறப்படும் கடவுளின் தன்மையும் இறுதியில் சத் சித் ஆனந்தம் என்ற உணர்வின் வெளிப்பாடாக அருவமான உண்மைநிலையை ஆத்மீக உணர்வாகக் காட்டுகின்றன. அளவையியலுக்கும், கருத்துக் கோட்பாடுகளுக்கும் அப்பாற்பட்ட உயர்ந்த ஞானநிலையே மெய்யியலின் உயர்நிலையாகும்.

இதே பொதுவுண்மையை ஈசாவாஸிய உபநிடதம் ''எவனொருவன் தன்னில் எல்லாவற்றையும், எல்லாவற்றில் தன்னையும் காண்கிறானோ அவன் பிரமஞானி'' எனக் கூறுகிறது. இக்கருத்தினை பகவத் கீதை மீளவும் எடுத்துரைக்கின்றது. இத்தகைய ஆத்மீக ஆளுமை சுயநலத்தை விடுத்து பொது நன்மைக்காக தனது கடமையை பற்றற்ற நிலையில் ஆற்றும் ஆளுமையை வழங்குகின்றது. பகவத் கீதையில் இத்தகைய ஆத்மீக ஞானத்தினை அடைந்தவன் ஸ்திதபிரக்ஞன் (அறிவில் உறுதி பெற்றவன்) எனக் குறிப்பிடப்படுகின்றான். இத்தகைய நிறைஞான நிலையே மனசமநிலை அல்லது யோகம் எனப்படுகின்றது. இந்நிலை கரும யோகத்திற்கு அல்லது பற்றற்ற செயலுக்கு அடிப்படையாகின்றது. பகவத் கீதையின் குறிக்கோள் ''செயலைத் துறத்தல்'' அல்ல, ஆனால் ''செயலில் துறவு'' என்பதாகும். இத்தகைய இந்திய மெய்யியலின் வாழ்வியல் நோக்கு ஆத்மிக ஞானத்தினூடாக தெளிவு பெறுகின்றது. இதனைப் பகவத்கீதை பக்தியோகம், ஞானயோகம், தியான யோகம் என்பவற்றினூடாகவும் அடையலாம் எனக் கூறுகின்றது.

ஒவ்வொரு நாடும் தமது சுய அனுபவம், வெளிப்பாடு என்பவற்றிற் கூடாக உலக நாகரிகத்துக்கு ஏதோவொன்றைப் பங்களிக்கின்றன. இந்தவகையில் இந்தியாவின் பங்களிப்பு அதனுடைய மெய்யியலே ஆகும். மனிதகுல முன்னேற்றத்துக்கு இந்தியாவின் செழுமையான ஆத்மீக மரபு வழிகாட்டக் கூடிய மரபாக அமைகின்றது.

# சமயம் என்பது எதற்காக?

மு. சுந்தரச் செல்வன், பொறியியல் பீடம், இறுதி ஆண்டு

சமயம் என்பது எதற்காக என்னும் வினாவைக் கேட்டுத் தெளிய வேண்டியது மிகவும் இன்றியமையாதது. சமயம் என்பது அவசியமா? சமயத்தின் மூலம் என்ன நன்மை அல்லது சமயம் இல்லாவிட்டால் என்ன தீமை முதலிய வினாக்கள் மிக முக்கியமானவை. ஏனெனில் எதற்காக நாம் சமயத்தை அனுஷ்டிக்கிறோம் என்பது தெரியாவிட்டால் இதன் விளைவு மிகவும் விபரீதமாகவிருக்கும். இதனை விளக்கும் மிகச் சிறந்த சான்றாக இன்று உலகெங்கும் நிலவும் மிகப்பெரும் பிரச்சினைகள் பலவற்றின் பின்னனியில் சமயம் இருப்பதைக் கூறலாம். எனவே இன்றைய காலகட்டத்தில் சமயம் என்பது எதற்காக என்பதை சரியாக அறிந்திருக்க வேண்டியது அத்தியாவசியமாகிறது. சமயத்தின் நோக்கம் பற்றி அறிய வேண்டிய நிர்ப்பந்தமொன்று மாத்திரமே இங்கு எழுந்ததாயினும் உண்மையில் இவ்வாறு அறிவது நடைமுறை வாழ்க்கைக்கான அத்தியாவசிய அறிவுமாகுமெனலாம். அதாவது சமயம் எதற்காக என்பதைத் தெரிந்து இவ்வாறு தெரிந்து கொண்டதற்கிணங்க நடத்தல் மிகவும் அவசியம். ஏனெனில் இதுவே மனிதவாழ்வின் உண்மையான இலட்சியத்திற்கான சரியான மார்க்கமாகும். ஆனால் மிகவும் துரதிஷ்டமான விடயம் யாதெனில் இன்று சமயத்தை ஏற்றுக் கொண்டவர்களில் பெரும்பாலானோர் சமயம் எதற்காக என்பதையிட்டு உண்மையான விளக்கமற்றிருப்பதாகும். இத்தகைய நிலையின் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. இதில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் யாதெனில் சமயம் என்றாலே ஒரு வித்தியாசமான அதாவது அன்றாட நடைமுறைவாழ்க்கையுடன் பெரிதளவில் தொடர்புபடுத்தக்கூடாத அல்லது முடியாத ஒன்றாக அநேகரால் கருதப்படும் நிலைக்கு சமயம் இட்டுச் செல்லப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

மனித இனத்தைப் பொறுத்தவரை இவ்வுலக வாழ்வின் உயரிய தேவை ஆன்ம வளர்ச்சி ஒன்றே. இத்தகைய ஆன்ம வளர்ச்சியின் மூலமே துன்பம் நீங்கி பேரின்பத்தை உணர முடியும். இத்தகைய பேரின்பத்தை மனித இலத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்காகவே உலக சமயங்களனைத்தும் பாடுபடுகின்றன. இந்த வகையில் நாம் கடைப்பிடிக்கும் இந்து சமயம் இவ் ஆன்ம வளர்ச்சியை அடைவதற்கான உறுதியான வழிவகைகளையும் தெளிவான நெறிமுறைகளையும் மிகவும் சிறப்பாக தன்னகத்தே கொண்டுள்ளது. ஆயினும் மேற்படி வழிவகைகளைப் பற்றி பெரும்பாலான இந்துக்கள் அறியாமலிருப்பதும் அலட்சியப் போக்குடன் இருப்பதுமே நமது சமயமும் சமூகமுமே முறையே பின்னடைவெய்தலும் பெருந்துன்பமெய்தலும் ஓர் முக்கிய காரணமெனலாம். சமயம் கூறும் கருத்துக்களையிட்டு பிழையான அல்லது தெளிவற்ற அறிவை உடையவர்களாகவிருப்பது பெரும் சீர்கேட்டிற்குக் காரணமாகிறது. ஏனெனில் இத்தகைய அறிவை செயலாக்குவது ஈற்றில் மிகவும் விரும்பத்தகாத அல்லது எதுவித பயனும் அற்ற நிலையைத் தோற்றுவிக்கிறது. இந்துக்கள் இந்து சமயத்தைக் காப்பதற்காகவென இந்து சமயக் கருத்துக்களுக்கே முரணாக நடத்தல், இந்துக்கள் எதுவித ஆன்ம முன்னேற்றமுமின்றியே வாழ்ந்து மடிதல் என்பன மேற்கண்ட நிலையின் தோற்றங்களே. எனவே நாம் சமயம் பற்றிய வித்தியாசமான தெளிவற்ற பிழையான கருத்துக்களை மாற்றிச் சரியான உண்மையான சமயக்கருத்தை அறிதல் மிகவும் இன்றியமையாதது.

உண்மையான அல்லது சரியான சமயநெறி, சமயக் கோட்பாட்டு என்பது சாதாரண வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத தர்மநெறியை முற்றுமுழுதாக வலியுறுத்துவதாகும். சமயச் சின்னங்களும் சமயக்கிரியைகளும் உண்மையில் சமயத்திற்கான ஒரு சிறு அடையாளம் மாத்திரமே. இச்சிறு அடையாளமே முற்று முழுமையான சமயம் என எண்ணுதல் அறியாமையே. இன்றைய காலகட்டத்தில் ஏறக்குறைய எல்லாச் சமயங்களிலும் குறிப்பாக நமது இந்து சமயத்தில் இச்சிறு அடையாளம் மிகமுக்கியமான சமயத்தின் அறநெறிக் கோட்பாடுகளை பின்தள்ளி விட்ட நிலையிலே மேலோங்கியுள்ளது. உதாரணமாக இந்து சமயத்தில் சமயக்கிரியைகள் சமயத்தை முழுமையாக ஆக்கிரமித்துள்ளதையும் இதன் காரணமாக இந்துக்கள் சமயத்தின் மேலான, வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய தர்ம நெறிக்கோட்பாடுகளில் போதிய ஆர்வமின்றி மேற்படி கிரியைகளே சமயம் என வாழ்தலைக் குறிப்பிடலாம். இத்தகைய நிலை மிகவும் கவலைக்குரியது. இந்து சமயத்தின் தர்மநெறியே உண்மையான சமய வாழ்க்கை. இதுவே மனித குலத்திற்குத் தேவையானதும் மனித வாழ்க்கையை மேம்படுத்தி இன்னல்கள், குழப்பங்கள், சச்சரவுகள் முதலியன அற்ற சிறந்த

சமூகத்தை உருவாக்கவல்லது. இத்தகைய இந்து தர்ம நெறியை விடுத்து கிரியைகள் முதலியவற்றை முதன்மையானதெனக் கருதி வாழும் நிலை நமது சமயத்தையும், சமூகத்தையும் நலிவுறச் செய்ததோடு நம் வாழ்விலும் எதுவித ஆன்ம அபிவிருத்தியையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றே கூறலாம்.

முழுமுதற் பரம்பொருளை முழுமையாக ஏற்றுக் கொள்ளல்' என்பதுவே இந்து தர்மநெறியின் அடிப்படைக் கருத்தாகவுள்ளது. இங்கு முழுமையாக ஏற்றுக் கொள்ளுதல் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது. மூலப் பரம்பொருளை முழுமையாக ஏற்றுக் கொண்டவனே இந்து தர்மநெறியினைச் செயற்படுத்தப் பூரண தகைமையுடையவனானான். இத்தகைமையுடையவனின் நடத்தை உயர்தரத்தையுடையதாகவிருக்கும். எனவே உண்மைச் சமய நெறியின் வித்து இறைவனை முழுமையாக ஏற்றுக் கொள்ளுதலாகும். இறைவனை நம்புகின்றவர்கள் அனைவரும் அவனை முழுமையாக ஏற்றுக் கொண்டவர்களாக இல்லை. இறைவனை முழுமையாக ஏற்றுக் கொண்டவன் இறைவனிடம் தன்னை அர்ப்பணித்தவனாகிறான். அறநெறிகளின் இருப்பிடமாகிறான். அப்படிப்பட்டவனிடம் நான் எனும் ஆணவமும் இவ் ஆணவத்திலிருந்து தோன்றும் சுயநலம் அல்லது பேராசையும் வலிமை குன்றியவையாகவிருக்கும். மனிதனின் சகல துன்பங்களுக்கும் காரணமான நான், எனது எனும் தன்னாதிக்க எண்ணம் இறைவனை முழுமையாக ஏற்றுக் கொண்டாலன்றி அகலும் தன்மையுடையதன்று.

இறைவனை முழுமையாக ஏற்றுக் கொண்டவன்; அவனே பிரபஞ்ச முதலும் மூலவிசையும் என்பதைத் தெரிந்து அவன் மேல் அளவற்ற பக்தியும் தூய அன்பும் கொள்கிறான். இத்தகையவன் சமூகச் சீர்கேட்டிற்குக் காரணமான வேறுபாட்டுணர்வு அல்லது பாகுபாடு காட்டும் தன்மைகளை நீக்கி தன்னையும் ஏனைய சகலரையும் சமனாகவே, அந்தப் பரம புருஷனின் வடிவங்களாகவே காண்பான். உலக நன்மைக்காகவும் நன்மைபுரியும் நிலையை அடைவதற்காகவும் கர்மம் புரிதலே தனது கடமை என்றும் உணர்வான். இதில் இத்தகைய கடமை புரிதல் பரம திருப்தியையும், உண்மை இன்பத்தையும் கண்டு ஆன்ம அபிவிருத்தியை நாடிச் செல்வான். இந்து தர்மநெறி இதனையே உணர்த்தி நிற்கின்றது. உண்மை சமயநெறியின் முக்கிய செயற்பாடுகளாவன:

(1) மூலப்பொருள் மேல் தூய அன்பையும் பக்தியையும் செலுத்துதல்.
(2) பௌதீக வேற்றுமைகளுக்கப்பால் உள்ள ஒற்றுமையை, சமத்துவத்தைப் பேணல், சமனாக மதித்தல்.
(3) உலக நன்மைக்காகப் பாடுபடல்.

இத்தகைய செயற்பாடுகளை கைக்கொள்பவன் அல்லது கைக்கொள்ள முயற்சிப்பவனே சமயத்தின் சரியான நோக்கத்தைப் புரிந்தவனாகிறான். இத்தகையவன் அன்பு, அஹிம்சை, நடுநிலைமை முதலிய அறப்பண்புகளைப் பூண்டு தர்மநெறியையே பிரதானமெனக் கருதுவார். எனவே ஒரு உண்மையான சமயியை அவன் உலகத்தோடு கொள்ளும் தொடர்பிலிருந்து கண்டறியலாம். சமயத்தின் உண்மையான நோக்கம் ஒவ்வொரு மனிதனையும் மேற்கண்ட தர்மநெறியில் வாழச்செய்து உண்மை இன்பத்தையும் ஆன்ம அபிவிருத்தியையும் பெற்றுக் கொடுப்பதே. கோயில், பூஜை, யாகம் எல்லாம் உண்மை சமயத்தில் இரண்டாம் பட்சமே. இத்தகைய உண்மை சமயநெறியைப் பின்பற்ற பல தடைகள் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை

(1) சமயம் பற்றிய பிழையான வழிகாட்டல்.
(2) சமயத்தின் பெயரில் அநாவசியமானவை மேலோங்கியுள்ளமை.
(3) மனிதனிடம் குறைவாகவுள்ள பண்பட்ட தன்மையும் ஆன்மீக நாட்டமும்

இத்தகைய தடைகள் காரணமாக மனித சமூகம் உண்மை சமயத்தினின்றும் தூர விலகியுள்ளதென்றே கூறலாம். இதன்காரணமாகவே இன்று மனித சமூகத்தில் துன்பங்கள் மலிந்துள்ளன. எங்கெல்லாம் தர்மநெறி புறக்கணிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் துன்பம் மிகுதியாகும். இன்பமும் மனத் திருப்தியும் நிலையற்றதாகும். இது மாபெரும் உண்மையும் உலக இயற்கையுமாகும். சமயம் என்பது மனிதனை இத்தர்மநெறிப்படி வாழவைப்பதற்காகவே. இத்தகைய வாழ்க்கையே மனிதனின் உண்மையான தேவை. இந்நிலையில் மனிதனிடம் அச்சமும் துன்பமும் நிலைத்திருக்கமுடியாது. இறைவன் இத்தகையவனுக்கு பார்த்த சாரதியாக உதவி புரிவார். இத்தகையவனுடன் இறைவன் மனித உருவில் உறவாடுவார், வழிகாட்டுவார். எனவே இறைவனை முழுமையாக ஏற்று அறவழியினைத் தேர்ந்து உண்மையான சமயத்தை வாழ்க்கைக்குத் தேவையான சமயத்தைக் கடைப்பிடிப்போமாக. இதுவே எமது உய்விற்கான உண்மையான வழி. இதுவே இந்து சமயமும் ஏனைய சமயங்களும் காட்டும் ஆன்மீக வழியுமாகும்.

# பிறவிப் பெருங்கடல்

**வைத்திய கலாநிதி. தி. ஆனந்தமூர்த்தி, பல் மருத்துவ பீடம்**

விஞ்ஞான தொழில் நுட்பம் இன்று அளப்பெரிய வளர்ச்சி பெற்று ஒவ்வொரு மனிதனதும் நாளாந்த வாழ்வில் அதிக நேரத்தையும் முக்கிய கவனத்தையும் கவர்ந்து கொண்டுள்ளது. மனிதன் தன் புலன்களுக்குக் கட்டுப்பட்டு தன் வாழ்க்கை முழுவதையும் புலன் நுகர்ச்சியில் களிப்பதிலேயே கழித்து விடுகிறான். கண்டு, கேட்டு , உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புல இன்பங்களை அனுபவிப்பதில் தான் அவனுடைய மனம், வாக்கு, காயம் என்பன ஒவ்வொரு கணமும் ஈடுபடுகின்றன.

அத்தகைய வாழ்வில் மூழ்கிக் கழிக்கின்ற மனிதனுக்குத் தன்னைப் பற்றியோ மேலான ஒரு சக்தியைப் பற்றியோ இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியோ சிந்திக்க நேரம் கிடைப்பதில்லை. தானே உடல் என்றும் தன் புலன்களுக்கு அப்பால் வேறேதும் இருக்கமுடியாது என்றும் நினைத்து வாழ்கிறான். ஒரு சிலருக்கு மட்டுமே அவற்றைத் தேட வேண்டும், அறிய வேண்டும், அவற்றை நாமும் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கமும் தாகமும் ஏற்படுகின்றன. அவர்களே ஞானிகள். தான் உடலல்ல, ஆத்மாவே என்றும், இந்த உலகம் நிலையானதொன்றல்ல, சதா மாறிக்கொண்டே இருக்கின்றது என்றும், எல்லாவற்றிற்கும் அப்பால் ஒரு நிலையான மேலான சக்தி உண்டு என்பதையும் உணர்பவர்களே ஞானிகள். இத்தகைய உண்மைகளை ஆராய்ந்து அவற்றைத் தம்முள்ளே தியானத்தின் மூலம் கண்டு உணர்ந்தவர்களே யோகிகள், கடந்த கால நிகழ்கால எதிர்கால உண்மைகளை உணர்ந்தவர்களே முனிவர்கள்.

பாரதப் பூமியில் காலத்திற்குக் காலம் தோன்றிய முனிவர்களாலும், யோகிகளாலும் ஞானிகளாலும் அறியப்பட்ட பல உண்மைகளைத் தன்னகத்தே கொண்ட சனாதன தர்மமே இந்து மதமாகும். முனிவர்கள் தமது ஞான சிருஷ்டியால் அன்று அறிந்து கூறியவற்றைத் தான் இன்று விஞ்ஞானம் எவ்வளவோ சிரமப்பட்டு, சோதனைகள், ஆராய்ச்சிகள் செய்து அவை சரியானவை என நிரூபித்துக் காட்டுகின்றது. இந்து மதம் எப்போது தோன்றியது என்று கூறுமளவிற்கு காலவரையறை இல்லை. ஆயிரக்கணக்கான வருடங்களாக வேதங்கள் குருசீடர் பரம்பரையாக செவிவழியாக மட்டுமே பரப்பப்பட்டு வந்தது.

மரணம் என்பது எமது விருப்பத்திற்கமைய தடுக்கப்படக் கூடியதொன்றல்ல. தோன்றிய ஒவ்வொன்றும் மறைய வேண்டும் என்பதே உலக நியதி. தோன்றிய உடல் அழிந்து விடுகின்றது. அதன் உள்ளே உள்ள ஆத்மா என்றும் தோன்றுவதும் இல்லை, அழிவதும் இல்லை. மரணத்தின் பின் எமது உடல் சிதைந்து, அழிந்து பஞ்ச பூதங்களுடன் கலந்து விடுகின்றது. எதிலிருந்து உடல் தோன்றியதோ அதில் அது கலந்து மறைந்து விடுகின்றது. ஆனால் பிறப்பு, இறப்பு அற்ற ஆத்மா தனது பயணத்தைத் தொடர்கின்றது. அந்த ஆத்மா வேறு ஒரு உடலில் மறுபடியும் பிறக்கின்றது. இது சங்கிலித் தொடர் போலத் தொடர்கின்றது. இதனையே வள்ளுவர் '' பிறவிப் பெருங்கடல்'' என உரைக்கின்றார்.

மனித உடலை விட்டுப் பிரிந்த ஆத்மா சில காலம் அதன் சூக்கும உடலுடன் வாழ்கின்றது. இந்த நிலையில் அந்த ஆத்மாவாகிய ஆவியுடன் மீடியம் (Medium) மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும். மீடியம் தன் உணர்வு அற்ற நிலையில் ஆவியுடன் தொடர்பு கொண்டு பல உண்மைகளை அறிந்து கொள்ள முடியும். அப்படி ஆவிகளுடன் பேசி நாம் ஆவியுலக உண்மைகளை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

உடலுக்கும், மனத்துக்கும் உலகிலுள்ள சடத்துக்கும் , சக்திக்கும் அப்பால் எதையும் ஏற்றுக் கொள்ளாத விஞ்ஞானிகளும் இன்று '' மரணத்தின் பின்னர் வாழ்வு'' (Life after death) ஒன்றுண்டு என ஆராய்ச்சிகள் மூலம் ஏற்றுக் கொள்கிறார்கள். இருதய சத்திர சிகிச்சையின் போது குணங்குறிகள் மூலம் இறந்து விட்டதாக (Clinically Dead) காணப்பட்ட பலர் மீண்டும் உயிர் பெற்று தமது அனுபவங்களைக் கூறினார்கள். முதலில் இவற்றை உதாசீனம்

செய்த டாக்டர்கள் பின்னர் பல நோயாளர்கள் அதே அனுபவங்களை கூறக் கேட்டு அதில் ஏதோ உண்மை உண்டு என்று ஏற்றுக் கொண்டனர்.

பல நோயாளிகள் தங்கள் மரணத்தைத் தழுவிய அனுபவங்களைக் கூறினர். (Near Death Experience) தாம் உடலை விட்டு வெளியே சென்று தமது உடலைப் பார்த்ததாக விபரித்தனர். டாக்டர்கள் பயன்படுத்திய கருவிகளைப் பற்றி விபரித்தனர். ஒரு ஆனந்தமான ஜோதியைக் கண்டதாகவும் அங்கே விபரிக்க முடியாத ஒரு அமைதியை அனுபவித்ததாகவும் கூறினர். அதுவே கடவுள் என்றும் உணர்ந்தனர். முன்னர் மரணமடைந்த தமது உறவினரைக் கண்டதாகவும், பின்னர் தமது உடம்புக்குள் திரும்பி வரத் தீர்மானித்ததாகவும் தமது அனுபவங்களை உரைத்தனர். இப்படி நூற்றுக்கணக்கான நோயாளிகளின் மரணத்தைத் தழுவிய அனுபவங்களைக் கேட்டு அவற்றைப் பதிவு செய்து கொண்ட டாக்டர்கள் பலர். டாக்டர் Raymond Moody என்பவர் இவற்றை அடிப்படையாகக் கொண்டு"Life After Death" என்ற புத்தகத்தையே எழுதியுள்ளார். அன்று ஆத்மா உண்டென்பதை ஏற்க மறுத்து எள்ளி நகையாடிய விஞ்ஞானிகள் இன்று மரணத்தின் பின்பும் வாழ்வு உண்டு என்ற உண்மையை ஏற்கின்றனர்.

ஆனால், இந்துக்களாக, பிறந்த நாமோ இவற்றை எல்லாம் பெறிதாக பொருட்படுத்துவதில்லை. ஆத்மாவைப் பற்றியோ, ஆத்மீக வாழ்வு பற்றியோ மோட்சம் அல்லது வீடு பற்றியோ எமது இந்து மதம் கூறும் உயர்ந்த கருத்துக்களை உதாசீனம் செய்கின்றோம். உலகியல் இன்பமான சிற்றின்பமே பெரிதென நினைத்து வாழ்ந்து மடிந்து மீண்டும் மீண்டும் பிறக்கின்றோம். ஆனால் மேல் நாட்டவரோ எமது இந்து மதக் கொள்கைகளை ஏற்று அவற்றைக் கடைப்பிடித்து, யோகம், தியானம் போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டு பயன்பெறுகிறார்கள். நாமோ எமது ஆத்மீக பாரம்பரியத்தை மறந்து உலகியல் வாழ்வில் மூழ்கி விடுகின்றோம். இச்செயல் வெட்கப்படவும் வேதனைப்பட வேண்டியதுமான விடயமாகும்.

நாடி சாஸ்திரம் (காண்டம்) என்பது பல தெய்வீக சக்தி உள்ள முனிவர்களால் எழுதப்பட்டவை. பல முனிவர்கள் நாடி சாஸ்திரங்களை எழுதியுள்ளனர். கௌசீக நாடி, சுகர் நாடி, சுக்கிர நாடி என்பன சில. முனிவர்கள் தங்கள் ஞானச் சிருஷ்டியாலும், சோதிட வித்தையாலும் இந்த நாடி சாஸ்திரத்தை எழுதியுள்ளனர். எம் போன்ற சாதாரண மனிதர்களுடைய முற்பிறப்பு, மறுபிறப்பு என்பவற்றைக் காட்ட முனிவர்களால் எழுதப்பட்ட இவ்வகையான நாடிச்சாஸ்த்திரங்கள் மறுபிறவியின் உண்மையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

நாம் இப்பிறவியில் பெறுகின்ற பேறுகள் ஏழு பிறவிகளுக்கும் தொடர்ந்து வரும் என்றும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்குறளில் பல அதிகாரங்களில் கூறியுள்ளார்.

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து...''

நாம் ஒரு பிறவியில் கற்ற கல்வி எமது ஏழு பிறப்புகளிலும் எம்முடன் தொடர்ந்து வரும் என்பதாகும்.

''ஏழு பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்கா
பண்புடைய மக்கட் பெறின்''.

ஒருவன் பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெற்றால் வினைப்பயனால் வரும் ஏழு பிறப்பின் கண்ணும் அவனைத் துன்பங்கள் சென்றடையா என்பதாகும்.

''ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடங்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து''.

ஒரு பிறவியில் ஒருவன் ஆமைபோல் ஐம்புலன்களையும் அடக்க வல்லான் ஆயின் அந்த வல்லமை ஏழு பிறப்பின் கண்ணும் தொடர்ந்து வரும் என்கிறார்.

அவ்வாறாயின் மனிதப்பிறவி எடுத்த நாம் பெறவேண்டிய பேறு என்ன என்பதை இந்து மதமே விளக்குகின்றது. பிறப்பு துன்பம் என்பதனை உணர்ந்து நாம் பிறவாப் பெருநெறியை அடைய வேண்டும் என்று வலியுறுத்தி அதற்கான வழியையும் காட்டுகின்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். இதனை

''வேண்டுகால் வேண்டும் பிறவாமை மற்று அது
வேண்டாமை வேண்டவரும்-''

எனச் சாற்றுவார்.

அதாவது நாம் இறைவனிடம் ஒன்றை வேண்டுவதாயின் அது பிறவாமை ஒன்றேயாகும். மீண்டும் மீண்டும் பிறந்து துன்பமான இந்தப் பிறவிப் பெருங்கடலில் என்னை அமிழ்ந்து உழல விடாதே உன் திருவடி நிழலில் ஏற்றுக் கொள் இறைவா என்று வேண்ட வேண்டும்.

நாம் பல பிறவிகளில் செய்த கர்மவினைகளாகிய நல்வினை தீவினை என்பன எம்மை நிழல்போல் தொடர்ந்து வருகின்றன. இவ்விரு வினைகளும் எம்மை பிறவிக் கடலில் வீழ்த்துகின்றன. இவ்விரு வினைகளையும் இருள் சேர் வினைகள் என்கிறார் திருவள்ளுவர். எல்லாம் அவன் செயலே என்றுணர்ந்த ஞானியை இருவினைகளும் தொடர்வதில்லை. அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதை முற்றும் உணர்ந்த ஞானி தன் செயலாக எதனையும் கருதுவதில்லை. எனவே வினைப்பயனும் ஞானியை தொடர்வதில்லை. அந்த ஞானி பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்கிறான். பந்தங்களில் இருந்து விடுபட்டு வீடு பெற்று எல்லையற்ற பரம் பொருளுடன் அத்து விதமாக்கக் கலந்து ஒன்றாகி விடுகிறான். அவனே ஜீவன் முத்தன் எனப்படுகிறான்.

அவ்வாறாயின், நாம் எப்படி அந்த எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல எல்லாம் அறிகின்ற சக்தியுடன் கலந்து கொள்ள முடியும். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள அந்த பரம்பொருள் எம்முள்ளேயும் இருக்கின்றது. அந்த சக்தியுடன் நாம் ஒன்றாகி விட முடியும். அதுவே இம்மானிடப் பிறவியின் பயன். தியானத்தில் எம்முள்ளே இறைவனைக் கண்டு அதனுடன் ஒன்றாகி விட வேண்டும். இதனையே திருமூலரும்

''நெற்றிக்கு நேரே புருவத்திடைவெளி
உற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய் பரமன் இருப்பிடம்
சிற்றம்பலம் என்று சேர்ந்து கொண்டேனே''.

-என்கிறார்.

எனது நெற்றிக்கு நேரே உள்ள அகக் கண்ணினால் உற்றுப் பார்த்து ஒளியாகிய இறைவனைக் கண்டு அவனுடன் சேர்ந்து கொண்டேன் என்கிறார். இறைவன் ஜோதி வடிவானன். ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி என்றும் , சொற்றுணை வேதியன் சோதி வாணவன் என்றும், சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி என்றும், மாமணிச் சோதியன் என்றும் தேவார திருவாசகங்களில் இறைவனை போற்றுகின்றனர்.

''இந்தப் பயங்கரமான பிறவிப் பெருங்கடலை நீந்த வழி' உண்டு. வள்ளுவப் பெருமானே வழியை காட்டுகின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்''.

இறைவன் திருவடியைச் சேர்ந்தவர் பிறவிப் பெருங்கடலை நீந்துவர் என்பதாகும். அப்படியானால் நாம் எப்படி இறைவன் திருவடிகளைச் சேர முடியும் எனப் பார்ப்போம். அடி சேர்தல் என்பதில் சேர்தல் என்றால் இடைவிடாது நினைத்தல் என்று பொருள்படும். எனவே இறைவனை இடைவிடாது நினைத்தால் பிறவி அகலும். அப்படி இடைவிடாது நினைக்க ஏதுவழி என்றால் ஜபம், தியானம் என்பவற்றை பயிற்சி செய்ய வேண்டும் என்கிறது இந்து மதம்.

நல்ல ஒரு சத்குருவை நாடி, மெய்ப்பொருளை அவரிடம் கேட்டு, அறிந்து அவர் காட்டும் பாதையில் ஜப, தியான முறைகளை இடைவிடாது செய்தல் வேண்டும். அதுவே முத்திக்கு வழி. பெறுதற்குரிய பிறவியைப் பெற்ற நாம் பெறுதற்கரிய எம்பிரானின் திருவடியைப் பெற இந்துமதம் காட்டும் சன்மார்க்க நெறியில் வாழ்ந்து பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்போமாக.

# ஆத்ம தரிசனம்

வை.நந்தகுமார் M.A. (இலங்கை), M.sc (ஜப்பான்), முதுநிலை விரிவுரையாளர், புவியியல் துறை.

இறைவன் தாமாக உண்டானவர். எவராலும் தோற்றுவிக்கப்படாதவர். அவர் ''தான் தோன்றி'' ஸ்வய ஜோதி, தாமே ஒளிர்பவர். தம் ஒளியிலேயே காட்சி தருபவர். நிரூபணம் என்னும் செய்முறைக்கே ஆதாரமாகக் கடவுள் இருப்பதால் அவருக்கு நிரூபணம் தேவையில்லை. எல்லாம் நிறைந்த பரிபூரணர் அவர். இப்பிரபஞ்சமே அவருள் அடக்கம் அவர் தாமாகவே அனைத்தையும் அறிபவர். அதனால் தான் அவரை எண்குணத்தான் என வள்ளுவர் அழைக்கின்றார்.

''கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

இறைவன் எமது கண்களுக்குப் புலப்பாடத சூக்குமமானவர். கண்களால் காண முடியவில்லை என்பதால் அவர் இல்லை எனக் கருதமுடியாது. இரவில் சூரியன் தெரிவதில்லை என்பதால் சூரியன் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? நீறு பூத்த நெருப்பு கண்களுக்குத் தெரிவதில்லை. சாம்பலை நீக்கினால் அது சுடர் விடுகின்றது. அதுபோல அகங்காரம் -ஆணவம் என்னும் அஞ்ஞானத்தை நீக்கினால் ஞானப் பிரம்மம் சுடர்விடுவதைக் காணலாம்.

கண்ணுக்குத் தெரியாத பிராணனின் இயக்கத்தினால் சரீரம் இயங்குகின்றது. ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்கிறது கந்தபுராணம். பட்டினத்தார் உண்ணச் செய்பவன், உறங்கச் செய்பவன், ஒரு பொருளுடன் மற்றப் பொருளை சேர்க்கவோ, முட்டவோ செய்விப்பவன், பாவ புண்ணியங்களான கயிற்றை வைத்து நம்மை ஆட்டுவிப்பவன் எல்லாம் ஒருவனே! இதனால் இறைவனை ''யாவும் அசைவிக்கும்' உபகாரி என்பர்.

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவேனோ''

என்கிறார் மாணிக்கவாசகர்.

மனதை மனிதனால் பார்க்க முடியாது. ஆனால் அதன் மூலமாக எண்ணுதல், தீர்மானித்தல், உணருதல். நினைவு கூர்தல் அனைத்தும் திகழ்கின்றன. வாயுவைப் பார்க்க முடியாது. ஆனால் காற்று இருக்கிறது என்பது உண்மை. அது போல இறைவனை உணர முடியுமே தவிர மற்றவருக்குக் காட்ட முடியாது. முழுமையான இதயத்தூய்மை, ஆழ்ந்த மன ஒருமைப்பாடு ஆகியவற்றின் மூலம், உள்ளுணர்வு கைவரப் பெறுமானால் மட்டுமே கடவுளை உணர முடியும்.

கண்ண பரமாத்மா பக்தர்களை நான்கு விதமாகப் பிரிக்கின்றார்- துன்புற்றோர், ஞானத்தை வேண்டுவோர், செல்வத்தை, நாடுவோர் ஞானி என்பனவே அவையாகும். இவர்களில் ஞானியைத் தவிர மற்ற மூவரும் தமக்கு ஏதோ வேண்டுமென்ற ஆசையையும் அவாவினையும் கொண்டுள்ளனர். ஞானிக்குப் பற்று இல்லை. இதனால் இறைவன் தான் ஞானியினது குறியும் நெறியும். ஞானி ஆண்டவனுக்காகவே வாழ்கின்றான். ஆண்டனிடைத்தே தன்னை அர்ப்பணித்து விடுகின்றான்.

மற்ற மூவரே பக்திக்குப் பிரயோசனமான பிரதிப் பலன்களை எதிர்பார்ப்பார்கள். ஆகையால் இங்கு ஒரு வகையான வாணிபம், வியாபாரம், பண்டமாற்று முறை நடைபெறுகின்றது. வியாபாரரீதியாக நான் இந்தக் காணிக்கை, இந்த நேர்த்திக்கடன், இந்த வேண்டுதல் செய்தால் நீ எனக்கு என்ன கொடுப்பாய் என்றால் ஆண்டவனிடம் அருளைப் பெறவே முடியாது. மேலும் யாகங்களாலும் ஓமங்களாலும் யோக சாதனப் பயிற்சிகளாலும் கடுமையான காயக்கிலேசங்களாலும் மட்டும் இறைவனைக் காணவே முடியாது.

''எண்ணாயிரத்தாண்டு யோகம் இருப்பினும்
கண்ணார் அமுதினைக் கண்டறிவாரில்லை
உண்ணாடியுள்ளே ஒளி பெற நோக்கினால்
கண்ணாடி போலக் கவர்ந்து நின்றானே.

என்று திருமூலர் பக்திக்கு இலக்கணம் வகுக்கின்றார்.

இறைவனை வழிபட வேண்டுமென்றால் பெரிய சடங்குகளைச் செய்ய வேண்டும், மந்திரங்கள் ஓதவேண்டுமென்று பலர் நினைத்து மருள்கின்றார்கள். அது தேவையில்லை. இந்துமதம் அன்பையும் அடக்கத்தையும் சாந்தத்தையும் இரக்கத்தையும் தன்னுட் கொண்டது. இந்த வழிகளை மேற்கொண்டால் இறையருள் பெறுவது எளிதாகும். அடக்கம் என்பது ஐம்புலன்களையும் அடக்குவதாகும். இதனைத் தான் திருமூலர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''பார்ப்பான் அகத்திலே பால்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெளியும் அடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே''.

பால்பசுக்களாகக் குறிப்பிடப்படுபவை ஐம்புலன்களாகும். மேய்ப்பது மனமாகும். பசுக்களைத் தன்னிச்சைப்படி செல்ல விடாமல், அவை செல்லும் வழியில் மனதையும் செல்ல விடாமல் தடுத்துக் கட்டினால் அவை ஜீவாத்மாவுடன் ஒன்றி ஆத்ம தரிசனத்தில் இலயித்துச் சிவஞான அனுபூதியென்னும் சுவையான பாலைப் பொழியும் என்கிறது திருமந்திரம்.

அடுத்ததாக அமைய வேண்டியது அன்பு. யார் உண்மையான மாசுமறுவற்ற, உயர்வு தாழ்வற்ற அன்புள்ளம் கொண்டவர்களாக இறைவனை வழிபடுகின்றனரோ அவர்களே இறைவனை அடைய முடியும்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமா வதாரும் அறிகிலார்
அன்பே சிவமா வதாருமறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந் திருந்தாரே''

என்று கூறுகிறார் திருமூலர்.

அன்பும் சிவமும் ஒன்றுதான். பாலும் சுவையும் போல, மலரும் மணமும் போல, மணியும் ஒலியும் போல ஒன்றியிருப்பது தான். அதைப் பிரிக்க முடியாது என மேலும் தெளிவுபடுத்துகிறார்.

அடக்கமும் அன்பும், கருணையும் மட்டும் இருந்தால் போதுமா? பிறவாமல் இருக்க முடியுமா? இதனால் பிறவாமை வேண்டுமானால் தன்னைத்தான் சோதித்துணரும் எண்ணமும், மனப்பாங்கும் வேண்டும். ஆகவே ஒவ்வொருவரும் ஆத்ம சோதனை செய்ய வேண்டும்.இரவு துயிலமுன் இதைச் செய்ய வேண்டும். குறைகள் இதனால் தவிர்க்கப்படும். குற்றங்கள் படிப்படியே குறைந்து வரும். முற்றும் தன்னையுணர்ந்த நிலையில் பரம்பொருளை ஆத்மதரிசனம் செய்யும் பேறும் கிட்டும். ஏனெனில் இறைவன் நமக்குள்ளேயே இருக்கின்றான்.

''உடலுக்குள் நீ நின்று உலவினதைக் காணாமல்
கடமலை தோறுந் திரிந்து கால் அறுத்தேன் பூரணமே''

என்று தம்மைத்தான் நொந்து கொள்கிறார் பட்டினத்தடிகள்.

''நீ வேறெனாதிருக்க நான் வேறெனாதிருக்க
நேராக வாழ்வதற் குன்னருறள் கூற
நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை
நீ காண் எனாவனைச் சொல்லருளாயே''

என்கிறார், அருணகிரிநாதர்.

ஆண்டவனைத் தேடி அல்லும் பகலும் அலைபவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர். தன்னையறியும் அறிவு இருந்தால் உலகத்தை மட்டுமென்ன, இறைவனையும் அறியலாம். தன்னையறியும் அறிவு என்றால், தான் யார்?

தன்னிலை என்ன? பிறவிக்கடன் என்றால் என்ன? தானும் சுற்றமும், பற்றும், பாசமும் உண்மையா? இறப்பிற்குப் பின் தன்னிலை என்ன? பிறப்புக்கு முன் தானிருந்தது எப்படி? என்றெல்லாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதற்கான விடைகளைத் தேடியறிய முயல வேண்டும்.

பிரம்ம ஞானிகளுக்குப் பிறப்பில்லை. பிரம்ம ஞானியாக விளங்க வேண்டுமானால் அடக்கம், அன்பு, கருணை, பொறுமை, ஆசையின்மை, தன்னை உணரும் ஆவல், ஆத்மா -அநாத்மா பற்றிய அறிவு என்பன வேண்டும்.

''வான் காணவேண்டின் மலையேறல் ஒக்கும் உன்னை
நான் காணப் பாவனை செய் நாட்டம் பராபரமே.

என்று கூறுகிறார் தாயுமானர்.

பிரம்ம ஞானியாக மாற முடியாவிட்டாலும் இறைவனை வழிபடும் உண்மை அடியார்களாகவாவது இருக்கலாமே. இந்நிலை முற்றினால் ஞானநிலை தான்.

''நெறியைப் படைத்தான் நெஞ்சில் படைத்தான்
நெறியின் வழுவின் நெருஞ்சில் முற்பாயும்
நெறியில் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியில் நெருஞ்சில் முள் பாயா வினவே''

-திருமூலர்.

ஒற்றடித் தடத்தைப் படைத்தவன் இறைவன். சிறு நெருஞ்சி முள்ளைப் படைத்தவனும் இறைவன் தான். மனிதன் நெறியை விடாமல் நிதானமாய் போனால் வீடு அடையலாம். நெறியை விட்டு விலகி நெருஞ்சி முள் பாய்ந்து அவதிப்பட்டானேயாகில் அதற்கு இறைவன் பழியல்ல என்று விடைபகிருகின்றது திருமந்திரம.

சிவன், சீவன் இரண்டையும் நம்பியே உயிர் வாழ்கின்றோம். சீவன் என்பது ஆன்மாவைக் குறிக்கும். ஆன்மா என்ற பதம் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் உள்ளடக்கியது. ''ஆ'' என்பது ஆணவத்தின் முதலெழுத்து. ''ன்'' என்பது கன்மத்தின் இரண்டாவது எழுத்து. ''மா'' என்பது மாயையின் முதலெழுத்து. இம்மூன்றையும் ஒன்று சேர்க்கின் ''ஆன்மா'' உண்டாகும். இம்மும்மலங்களும் ஆன்மாவோடு சேர்ந்து பிரிக்காத ஒன்றாக அமைந்திருக்கினறன. இவ்வாறே சிவனும் சீவனும் பிரிபடாத ஒன்றாயின. இறைவனாகிய சிவன் உயிர்களுடன் ஒன்றாயும் வேறாகியும் உடனாகியும் கலந்து நிற்கின்றான்.

இம்மூன்று மலங்களுக்கும் காரணகர்த்தாவாய் உள்ளது மாயை, ''மா'' என்பது ஒடுங்குதல் என்றும் ''யா'' என்பது தோன்றுதல் என்றும் பொருள்படும். உலகம் தன்னில் ஒடுங்குவதற்கும் தோன்றுதற்கும், இடமாய் நிற்பது மாயை என விளக்கலாம்.

நாம் பிறப்பது, வாழ்வது, வளர்வது, தேய்வது, மாய்வது ஆகியன எல்லாம் மாயை. முத்திக்கு முயற்சி செய்வதும் மாயையே.

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார் முதற் பூதம்''

என்கிறார், திருமூலர்.

ஆகவே இக்கொடிய மாயையில் சிக்குண்டு கிடக்காது மாயையிலிருந்து விடுபட்டு கடவுளைக் காண்பதை நோக்கமாகக் கொண்டு இறைவழிபாட்டில் ஈடுபட வேண்டும்.

# இந்துமதம் காட்டும் ஆன்மீக வழியில் அன்பு நெறி

முருகேசு ஸ்ரீவேணுகோபாலசர்மா, முதலாம் வருடம், விவசாய பீடம்.

அனாதியாகிய ஆன்மா அழியும் யாக்கை பெற்று அவனியில் தோன்றியது. ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கே. பிறப்பெடுத்த ஆன்மா மலங்களின் சேர்க்கையில் அறியாமை இருளில் மூழ்கி அல்லற்படுகிறது. வாழ்க்கை எனும் ஓடத்தில் துன்பம் எனும் சுழற்காற்றால் துவண்டு விடுகிறது. இந்நிலையில் பிறவியின் இலக்குமாறி வாழ வழி தெரியாமல், வாழும் வகை அறியாமல், திசைமாறிய பறவைகளாய் செல்லும் மனித வாழ்வை சீர்படுத்தி, வாழும் , வாழ்விற்கு ஒளி ஊட்டி, ஆன்ம ஈடேற்றம் எனும் இலக்கிற்குக் கொண்டு செல்ல, அலைகடலில் செல்லும் ஓடத்திற்கு துடுப்புப் போன்று உதவி செய்யத் தோன்றியவைகளே மதங்களாகும்.

இவ்வகையில் இந்து மதமும்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'' எனும்

வள்ளுவரின் குறளுக்கிணங்க மறுமைக்கு மட்டும் வழிகாட்டாமல் இவ் உலகிலும் இன்பமாக வாழ வழிகாட்டி ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழி நடத்திச் சென்று சிறப்புப் பெறுகிறது.

இந்து மதம் காட்டிய வழி ஆன்மீக வழியாகும். இவ் ஆன்மீக வழி அன்பு நெறியையே அடிப்படையாகக் கொண்டது. மனிதன் தனியவனாகவே பிறக்கின்றான், தாய் தந்தையரின் சாயலாகப் பிறந்தாலும் அவர்களிடமிருந்து பல இயல்புகளில் வேறுபட்டு நிற்கின்றான். இவ்வாறு இயல்புகளால் வேறுபட்ட தனியனான மனிதனால் தனியனாகவே வாழ முடியாது. அவனுடைய வாழ்க்கை ரம்மியமானதாக மகிழ்ச்சியானதாக இன்பமானதாக அமைய வேண்டுமானால் பலருடனும் தொடர்பு கொண்டு ஒற்றுமைப்பட வேண்டும். இவ் ஒற்றுமையையே ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்றும் ''யாரும் ஊரே யாவரும் கேளீர்'' என்று தமிழ் நூல்கள் போற்றுகின்றன.

முற்றிலும் வேறுபட்ட இயல்புகள் கொண்ட மனிதரிடம் இந்த ஒற்றுமை எங்ஙனம் ஏற்படலாம்? தேவைகள் அன்பு எனும் இரண்டுமே மனிதர்களை இணைக்கிறது. வாழ்வின் தேவைகளின் அடிப்படையில் ஏற்படும் மனிதத் தொடர்புகள் தேவைகள் நிறைவேற அற்றுப் போகலாம். ஆனால் அன்பின் அடிப்படையில் ஏற்படும் பிணைப்பே இறுதி வரை நிலைக்கும். எனவே அன்பு ஒன்றுதான் பிரிந்து நிற்கும் மனிதர்களைப் பிணைத்து ஒன்றிணைக்கும்.

மேலும் எல்லா உயிர்களுள்ளும் இறைவனே நிறைந்து இருக்கின்றார். இதனையே

''எங்கும் எவையும் எரியுறு நீர் போல் ஏகம்
தங்குமவன் தானே தனி''

எனும் தொடர் மூலம் உமாபதி சிவாச்சாரியாரவர்கள் விளக்குகிறார்கள்.

''தாயுந் தந்தை பல்லுயிர்க்குத்
தாமேயாய தலைவன்''...

எனும் சுந்தரரின் தொடர் மூலம் எல்லா உயிர்க்கும் இறைவனே தலைவன் என்பதும் விளக்கப்படுகிறது. இவ்வாறு இறைவனால் ஆட்சி கொள்ளப்படும் ஆன்மாக்களிடம் இறைவன் கோயில் கொண்டிருக்கும். ஜீவராசிகளிடம் அன்பு செய்தல் இறைவனை அன்பு செய்வதற்கு ஒக்கும் அல்லவா? இதை விடுத்து ஆன்மாக்களை இம்சைப் படுத்துவது இறைவனையே இம்சைப் படுத்துவதாகும். இந்நிலையில் ஆன்மாக்களுக்குத் துன்பம் விளைவித்து விட்டு இறைவனை வழிபடலால் ஏது பயன்? எதுவுமே இல்லை. எனவே தான் உயிர்களிடம் அன்பு கொண்டு அவற்றுக்குத் தொண்டு செய்யும்படி இந்து மதம் கூறுகின்றது. 'உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டான்'' என்கிறார் திருமூலர்; ஒவ்வொரு ஆன்மாவின் உடலிலும் இறைவன் இருக்கின்றான். எனவே ஆன்மாக்களே நடமாடும் தெய்வங்கள். இந்நடமாடும் தெய்வங்களான மாகேஸ்வரர்களைப் பூசிப்பதன்

மூலமே மகேஸ்வரனை அடையலாம் என இந்துமதம் எம்மை நெறிப்படுத்துகிறது.

இறைவன் அன்பு மயமானவன். எனவே தான் அவனை 'அம்மையே அப்பா' எனப்பாடுகின்றோம். ஒருநாமம் ஒருருவம் இல்லா ''ஏகன்'' இறைவனுக்கு குடும்பம் அமைத்து குழந்தை மாமன், மச்சான் என்ற உறவு அமைத்து வழிபடுகின்றோம்.

''அன்பும் சிவமும்இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''

எனப் பாடுகிறார் திருமூலர். இறைவன் ஆன்மாக்களிடம் கொண்ட பேரன்பின் காரணமாகத்தான் அவற்றுக்கு தனு, கரண, புவன போகங்கள் அளிக்கிறான். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில்களையும் செய்கின்றான். ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' எனப் பரவுவார் மணிவாசகர். குழந்தை கேட்காமலேயே ''இந்நேரம் இவனுக்குப் பசிக்கும்'' என உணர்ந்து பாலை ஊட்டிச் சீராட்டுகிறாளே அன்னை. அவளது அன்பிற்கு நிகர் இருக்க முடியுமா? இறைவனின் அன்பை அன்னையின் அன்பிலும் மிகையாகக் கூறுகிறார் மணிவாசகர். இவ்வாறு அன்பே வடிவான இறைவனை அன்பு சிறிதேனும் இன்றி நாம் அடைவது எங்ஙனம்? நீருடன் நெருப்புச் சேருமா? எனவே நிகரிலா அன்புடைய நிமலனை நாமும் அன்பின் மூலம் தான் அடைய் முடியும். எனவே தான் இந்து மதம் அன்பு நெறியையே ஆன்மீக வழியாகக் காட்டுகிறது. அனைத்து உயிர்களிடமும் அன்பு கொண்டு தொண்டு செய்யப் பணிக்கிறது.

''எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே''

என தாயுமானவரும் இறைவனிடம் அன்பையே இறைஞ்சுகின்றார். எல்லா உயிரையும் தன்னுயிர் போல் எண்ணி அன்பு செலுத்தும் போது எல்லோருக்கும் தொண்டு செய்யும் மனப்பான்மை ஏற்படுகின்றது. இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்யும் நல் மனம் தோன்றுகிறது. இதனால் மானுடநேயம் வளர்ந்து ஒற்றுமை பெருகும்.

இந்நிலையாலேயே உலகம் உய்யும் எனக் கூறவந்த இலக்கியங்கள் பிறருக்கென முயல்வார் உண்மையானே உலகம் உண்டு. என்கின்றான். ''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என அகநானூறும் இதனையே போற்றுகிறது. இதன் வெளிப்பாடுகளாகவே பசித்தோர்க்கு உணவளிக்கும் மாகேசுர பூசை எனச் சிறப்புப் பெற்ற அன்ன தானங்களும், தான தர்மங்களும் வீதிகள் தோறும் தண்ணீர்ப் பந்தல் அமைத்தலும் விளங்குகின்றன.

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னாத -நாளே''

என தமிழாகமம் கூறிச் சென்ற திருமூலரும் ஈகைச் சிறப்பினை எடுத்தியம்புவார். இந்தச் செயற்பாடுகளையே இல்லறத்தானின் கடமைகளாக இந்து மதம் வகுத்துக் காட்டுகிறது.

தமக்கென வாழும் போது எதிலும் நிறைவு ஏற்படுவதில்லை. பணம், புகழ் என்பவற்றை அடைய அடைய மேலும் ஆசை அதிகரிக்கிறது. ஆசையின் விளைவு துன்பமும் அமைதி இன்மையுமே. ஆனால் பிறருக்காக நாம் செய்யும் சிறு உபகாரம் கூட எமக்கு மன நிறைவைத் தருவதை உணரலாம். இதன் விளைவு இன்பமே. இதனையே

''அன்பர் பணிக்கென்னை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே''

என்று தாயுமானவர் கூறுகின்றார்.

அன்பு நெறியில் ஈகையையும் தொண்டையும் எடுத்துக் கூறிய இந்து மதம் கொல்லாமை எனும் கோட்பாட்டை அன்பு நெறியின் சிகரமாக அமைத்துள்ளது.

''அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று''.

என்று கொல்லாமையை வள்ளுவரும் வலியுறுத்துகிறார். எல்லா உயிர்களும் வாழ்வதற்காகவே பிறந்துள்ளன. வாழ்க்கை அழிந்தால் வாழ்வின் இலக்கை அடைய முடியாமற் போகும் அல்லவா? கொலை செய்வதன் மூலம் ஓர் உயிரின் வாழ்க்கையை அழிப்பதோடு அதற்கு துன்பத்தையும் ஏற்படுத்துகின்றோம். எனவே தான் உயிரைக் கொன்று, உடலைத் தின்று ஊன் வளர்ப்பதை எமது மதம் கண்டிக்கிறது. புலாலுண்ணலைத் தடை செய்கிறது. இதன் மூலம் அன்பு நெறியை ஓங்கச் செய்வதுடன் பல நோய்களிலிருந்தும் மனிதனைக் காக்கிறது. மேலும் இராட்சத குணம் அழிந்து சத்துவ குணம் உள்ளவனாக சாந்தமுள்ளவனாக எளிதிற் கோபப்படாத வனாக சீரிய வாழ்வு வாழ இந்து மதம் வழிகாட்டுகிறது,

இவ்வாறாக இந்துமதம் அன்பை மேலோங்கச் செய்கிறது. அன்பான இறைவனை அன்பு வழியாலேயே காணலாம்.

''என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டு
பொன்போற் தணலிற் பொரிய வறுக்கினும்
அன்போடுருகி அகங் குழைவார்க்கின்றி
என்பொன் மணியை எய்த ஒண்ணாதே''

என்று திருமூலர் கூறுகிறார். நாம் எமது என்புகளையே விறகாக்கி உடலின் தசையை அறுத்துத் தணலிலிட்டுப் பொரிய வறுத்தாலும் இறைவனைக் காண முடியாது. ஆனால்,நாம் அன்பு உள்ளனர்களாக வாழ்ந்தால் இறைவனே எம்மைத் தேடி வருவான். இறைவனைக் காட்டும் திறன் அன்புக்கு மட்டுமே உண்டு. எனவே அன்புடன் வாழ்வோம் அனைத்து உயிர்களிடமும் அன்பு செய்வோம். அன்பினால் அனைத்தும் பெறலாம்.

அன்பென்று கொட்டு முரசே! -மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்களை யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றெனக் கொண்டால்''

**-பாரதி**

*புதிதாக வேறு பாஷையைக் கற்றுக் கொள்பவன், தான் பேசும்போதெல்லாம், அப்பாஷையின் வார்த்தைகளை உபயோகித்துத் தனது விற்பத்தியை வெளியே காட்டிக் கொள்வான். அந்தப் பாஷையை நன்றாய் கற்றுக் கொண்டவனோ அதன் வார்த்தைகளை, தன்னுடைய தாய்ப் பாஷையில் சம்பாசிக்கும் போது உபயோகிப்பதில்லை. சமய வாழ்க்கையில் வெகுதூரம் முன்னேற்றமடைந்தவர்களுடைய சுபாவமும் இப்படிப்பட்டது, அவர்கள் இப்படிப்பட்டவர்களே.*

**- ஸ்ரீ ராமகிருஷ்ணர்.**

# அருள் புரிவாய்

**செல்வி ஞானாம்பிகை விஸ்வநாதன்,**
**தமிழ்ச் சிறப்புக் கலை, கலைப்பீடம்**

கருணையாளனே கந்தனே உந்தன்
அருமையை அறிந்திடாது நாளும்
துன்பத்தில் உழன்று இவ்வுலக
இன்பத்தில் மனம் லயித்திட்டோம்

எம்மிதய எண்ணங்களை மாற்றியின்றே
உன்னருள் கிடைத்திட மனங்கொள்வாய்
எழில் வதன எந்தையே முருகனே
எம்துயர் தீர்த்திட அருள் புரிவாய்

கள்ளமும் கடூரமும் மலிந்த இவ்வுலகில்
கருணையும் களிப்பும் துளியும் இல்லை
குறிஞ்சி வேலனே குமரக் கடவுளே
குற்றங்களை மறந்திட அருள் புரிவாய்

கொலையும் கொள்ளையும் எம்மிடையே
கோரத் தாண்டவம் ஆடுவதறிவாய்
அழகனே அரனின் மைந்தனே
அவலங்கள் அழிந்தொழிய அருள் புரிவாய்

பொய்மையும் போட்டியும் பலவாறிங்கே
பாவங்கள் புரிய வழிசெய்குதே
மலைமகள் மகனே மயில் வாகனனே
மெய்மையது ஓங்கியெழ அருள் புரிவாய்.

அநீதியும் அவலமும் அகலவே இல்லை
ஆனந்தம் மறந்த மனிதர்கள் ஆனோம்
ஆறுமுகனே அம்பிகை பாகன் மகனே
அவனியில் அமைதி நிலவ அருள் புரிவாய்

தமிழினந் தன்னை வாட்டும் துயரங்கள்
தரணியில் இன்னும் மறையவே இல்லை
சண்முக வேலனே திருச்செந்தூர் குமரனே
தமிழர் துயர் நீங்க மனமருள்வாய்

எண்ணிக்கையற்றோர் இழந்தனர் உயிரை
எம்மவர் மறந்தனர் இனிதான வாழ்வை
இந்நிலை வேண்டாம் ஈஸ்வரன் மகனே
எம்மினம் இனிதுவாழ அருள் புரிவாய்.

# இல்லறத்தில் ஆன்மீகம்

திருமதி. வளர்மதி சுமாதரன், அரசறிவியத்துறை (சிறப்பு), விடுகை வருடம்

''நமக்கு இந்த சரீரம் கிடைத்தது இறைவனை வழிபட்டு முக்தியின்பம் பெறும்பொருட்டேயாம்'' என்றார் ஆறுமுகநாவலர். ''அரிது அரிது மானிடம் ஆதல் அரிது'' என்றார் ஔவையார். ஆகவே நாம் பிறந்ததன் பயன் இறைவனை வழிபட்டு முத்தியின்பம் அடைதற் பொருட்டே எனில் இந்த இறைவழிபாடு என்பது என்ன? இறைவனை எவ்வாறு அன்பு செலுத்தி அவனது அருளைப் பெறலாம் என்பதை நோக்க வேண்டும். இறைவன் அன்பு வடிவானவன். மக்களுக்கு செய்யும் தொண்டே மகேசன் தொண்டு. மனிதப் பிறவியை பெற்றதன் பயன் அன்பினடியாக தெய்வநிலையை அடைதலாகும். இறைவனை அடைய இந்த வழிதான் சிறந்தது என்பதல்ல. ஒவ்வொருவரும் தமது தகுதிக்கும், இயல்புகளுக்குமேற்ப அறவழி நின்று, அன்பு கொண்டொழுகி கடமையாற்ற வேண்டும். அவ்வாறாயின் அவர்கள் தெய்வத்தன்மை அடைவது உறுதி.

வேடுவகுலத்தை சேர்ந்த கண்ணப்பநாயனார் தன் அறிவுக்கேற்ப, அன்பு கொண்டொழுகிய விதத்தை அனந்தணப் பெருமானாகிய சிவகோசாரியாருக்கு, இறைவன் திருவாய் மலர்ந்தருளும் போது

''அவனுடைய வடிவவெல்லாம் நம்பக்கம் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியன வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வாறறி நீ!'' என்றருள் செய்தார்.
''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்''- திருமூலர்

இறையுணர்வு என்பதே அன்புணர்வு தான். அன்பு சுரக்கும் இடத்தில்தான் அருள் சுரக்கும். அன்பு என்பது கடவுளிடம் மட்டும் அன்றி கடவுளால் படைக்கப்பட்ட அனைத்துயிர்களுக்கும் செய்ய வேண்டும். அருள்நெறி என்பது அன்பு நெறியின் அடியாக தோன்றுவதாகும். எனவே தான் அருள் என்னும் அன்பு ஈன் குழுவி'' என்றார் வள்ளுவர். உலக உயிர்களிடத்தில் அன்பு செலுத்தின் அது இறைவனுக்கு ஆற்றும் தொண்டிற்கு சமனாகும். உயிர்களின் இதயக் கோயிலே இறைவன் வாழும் கலைக்கோயிலாகும். அருள் நெறி நின்று உயிர்களுக்கு அன்பு செய்ய சமயவாழ்வு வாழ்கிறோம் எனில் அது சமுதாய வாழ்வுடன் இணைந்ததாக அமைய வேண்டும். இந்த வகையில் இல்லறத்தில் நின்றும் இறைவனை அடையலாம் என்பதை இந்துசமயம் எமக்கு காட்டுகிறது.

இல்லறத்தை நல்லறமாக மாற்றி வாழ வேண்டும். இல்லறமல்லது நல்லறமன்று - ஔவையார்
அறன் எனப்பட்டே இல்வாழ்க்கை - வள்ளுவர்.

இல்வாழ்க்கையின் பண்பு அன்புடமை. பயன் அறனுடையமையாகும். மனைவி மக்கள், சுற்றம் என்று விரியும் அன்பிலே வாழும் ஒருவன் உலகனைத்தின் பாலும் விரிந்த அன்பு பூணும் மனப்பக்குவம் அடைகிறான். மனைவியும் அதே அன்புசால் மனப்பக்குவம் அடைகிறாள். உலகனைத்தையும் அன்புக்கண்களிலே காணும் இந்த விரிந்த மனோபக்குவம் அடைய இல்லறம் வழிகாட்டுவதாக உள்ளது. அன்பும், அறனும் கொண்டு இல்வாழ்க்கையை பண்பும், பயனுமாக நடத்துபவன் உலகத்தில் வாழும் முறை அறிந்து வாழ்பவனாகிறான். அவ்வாறு சிறப்பாக வாழ்க்கை நடத்துபவன் உலகத்திலே தவறிப் பிறந்துவிட்ட வானவரில் ஒருவனாக மனிதத் தெய்வமாக மதிக்கப்படுவான்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''- வள்ளுவர்

இல்லறம் நடத்தியே இறைவனை அடைந்ததாகச் சொல்லப்படும் நாயன்மார்களுடைய கதைகளிலும், ஆழ்வார்கதைகளிலும் இதனை நாம் அறியலாம்.

''காடே திரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தை சுற்றி
ஓடே எடுத்தென்ன? உள்ளன்பிலாதவர் ஓங்கு செல்ல

நாடேயிடை மருதீசர்க்கு மெய்யன்பர் நாரியர் பால்
வீடேயிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவமே''
இங்கு இல்லறத்தானும் வீடுபேறு பெறமுடியுமென கூறப்படுகிறது.
இல்லறத்தை முறையாக நடத்தின் அது தானாகவே பேரின்பவீட்டிற்கு கொண்டு போய்ச் சேர்க்கும்.
மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்ததை ஒழித்துவிடின்

இதைத் தான் சமயம் கூறுகிறது. உனக்கிட்ட கடமைகளை ஒழுங்காக செய். அதுவே உன்னை உயர்நிலையை அடையும் தகுதியை வளர்த்துக் கொடுக்கும்.

இந்துக்களாலே இந்துதர்மத்தின் முக்கிய நூல்களாக போற்றப்படும், நூல்களுள் பகவத்கீதையும் ஒன்று. இந்தக்கீதையை உபதேசித்தவனும் கேட்டவனும் சந்நியாசிகள் அல்லர். குடும்பவாழ்விலிருந்தோர்; பூமியாளும் மன்னர்கள். கீதையிலே பகவான் சொல்கிறார். அர்சுனா மூன்று உலகங்களிலும் இனிச் செய்ய வேண்டிதென மிஞ்சிநிற்கும் செய்கை ஒன்றும் எனக்குக் கிடையாது. அடையத்தக்கது, ஆனால் என்னால் அடையப் படாதது என ஒரு பேறுமில்லை. எனினும் நான் தொழில் செய்து கொண்டுதான் இருக்கிறேன். நான் தொழில் செய்யாது வாளாவிருப்பின், உலகத்திலே எல்லா உயிர்களும், என் வழியையே பின்பற்றும். அதனால் இந்த உலகம் அழிவு எய்தும். அந்த அழிவுக்கு நான் காரணமாகாமல் தொழில் செய்து கொண்டிருக்கிறேன். ஓயாமல் தொழில் செய்யும் கடவுள் கர்மயோகிகளில் சிறந்தவன். அவன் ஜீவாத்மாவுக்கும் இடைவிடாத தொழிலை விதித்திருக்கிறான். சம்சாரத்தை விதித்திருக்கிறான். குடும்பத்தை விதித்திருக்கிறான். மனைவி மக்களை விதித்திருக்கிறான். சுற்றத்தாரையும், அயலவரையும் விதித்திருக்கிறான். எல்லாவற்றையும் துறந்து சென்றால் ஒருவன் முத்திக்கு தகுதியுடையவனாக மாட்டான். இது பகவான் கீதையில் சொல்கிற கருத்து எல்லாவற்றையும் துறந்து செல்கிறவன் கடவுளுடைய இயற்கை விதிகளை துறந்து செல்பவனாகிறான்.

கீர்த்தி பெற்ற வங்கக்கவியாகிய ரவீந்திர நாத்தாகூர் கடவுளை நோக்கி ஐயனே, நீயே சம்சார வலையில் அகப்பட்டிருக்கிறாயே? யான் இதினின்றும் விடுதலை வேண்டும் பேதமையென்னே? என பாடியிருக்கிறார். சம்சாரவிருத்திகள் கடவுளுடைய விருத்திகள்.

இவ்வாறு நாம் பார்க்கும் போது இல்வாழ்க்கையில் முற்று முழுதாக அமிழ்ந்து விடின் இறைவனை அடையாலாமா? என்ற கேள்வி எழும். வாழ்வில் பற்றை விலக்க வேண்டுமே ஒழிய வாழ்க்கையை விலக்க வேண்டியதில்லை. ''படகு தணணீரில் இருக்கலாம். தண்ணீர் படகினுள் இருக்கக்கூடாது என்று எவ்வளவு அருமையாக வழிகாட்டுகிறார் இராமகிருஷ்ண ப்ரமஹம்சர்.

துறவிகளுள்ளே சிறந்தவரான பட்டினத்துப்பிள்ளை என்ன சொல்கிறார்.
''அறந்தானியற்றும் அவனிலும் கோடியதிகமில்லர்
துறந்தான் அவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோர்''

இல்லறத்துறவை காட்டிலும், உள்ளத்துறவு சதகோடி மடங்கு மேலானதாகும். இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை. கற்புடைய மனைவியை காதலுற்று, அறம்பிழையாமல் வாழ்தலே இவ்வுலகத்தில் சுவர்க்க வாழ்க்கையை ஒத்ததாகும். கடவுள் அனைத்துயிர்களிலும் இருக்கிறார். இல்வாழ்க்கையில் இருந்து கொண்டு பந்துக்களுக்கும், உலகத்தாருக்கும் உபசாரம் செய்து கொண்டு அறவழியில் இன்பங்களையெல்லாம் தானும் அனுபவித்துக் கொண்டு கடவுளை நிரந்தமாக உபாசனை செய்து அதனால் மனிதத் துன்பங்களில் இருந்து விடுபட்டு ஜீவன் முத்தராய் வாழ்தல் மேலானவழியாகும்.

உயர்ந்த ஒப்பற்ற நூலாக போற்றட்டும் திருக்குறளிலே வள்ளுவப் பெருந்தகை அன்புடமை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல், விருந்தோம்பல், இனியவை கூறல் என்ற அதிகாரங்களில் கூறப்பட்டவை நமக்கு வாழ்வில் ஆன்மிக வழிகாட்டும் நெறியாகும்.

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவதெவன்''
இல்வாழ்க்கையை சரியான முறையில் நடத்துகிறவன். துறவறத்திற்கு போய் பயன் ஒன்றும் இல்லை.

''இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை''

இல்லறத்தை சரியாக நடத்துகிறவன் புலன்களை அடக்க முயல்கிற எல்லாரினும் தலை சிறந்தவன்.

''ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து''

சரியான முறையில் இல்லறம் நடத்துகிறவன். துறவறத்தானை விட பொறுப்புகளும், சகிப்புகளும் உள்ளவன். இல்லறத்தான் பிறருக்குற்ற துன்பங்களையும் தனக்கு வந்தது போல் எண்ணி அதை நோக்கும் பொறுப்புடையவனாகிறான்.

''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்ப தில்லாயின் நன்று''

மனிதனுக்கு அறம் என்று நூல்களால் தீர்மானிக்கப்பட்டதே இல்லறந்தான்.

ஆகவே இல்லறத்தை சரியாக நடாத்துகிறவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்.

ஞானத்தைப் பற்றிய ஆராய்ச்சி இல்லாமலே கர்ம ஒழுக்கங்களினால் இல்லறத்தில் நின்று வீடுபேறு அடைய முடியும். இல்லறம் பொறுப்புக்களும், சகிப்புத்தன்மையும் உடையது. இல்லறத்தை நாம் கர்மயோகமாக காணின் துறவறத்தை ஞானயோகமாக காணலாம். ஞானயோகத்தில் சமுதாயத்திற்கு பயன்படுவதை விட கர்மயோகம் சமுதாயத்துக்கு பயனுள்ளது.

பெரியபுராண வரலாறு மூலம் அடியார்கள் இல்லறத்தை நடத்தி இறைவனை அடைந்தமை பற்றி காணலாம்.

''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை''

என்பதற்கேற்ப நன் மனைவியைப் பெற்ற இளையான்குடிமாற நாயனார். இல்லறத்தில் நின்று வறுமை வந்துற்றபோதும் மகேசுரபூசை செய்து பேரின்ப பெருவாழ்வு பெற்றதை அறியலாம். காரைக்காலம்மையார் வரலாறும் இல்லறத்தில் நின்று கொண்டே ஆன்மீகத்தில் உயர்ந்து நின்றதைக் காணலாம்.

இல்லற வாழ்விலே தர்மத் தளத்தில் நின்று செய்யும் கடமைகள் ஆன்மீக உணர்விற்கு வழிவகுக்கும் என்பதை நீதிக்கு பின் பாசம் என்ற மனுநீதிகண்ட சோழன் வரலாறு மூலமும் காண்கிறோம்.

''ஆருளுர் மூழ்கியும் ஆக்கம் இழந்தும்
வாரி சுருங்கியும் வாய்மை நிறுத்தித்
தாரணி ஆள் அரிச்சந்திரன்''

என்று கச்சியப்ப சிவாசாரியாரால் வர்ணிக்கப்பட்ட அரிச்சந்திரன் வாழ்வில் எத்தனை இன்னல்கள் ஏற்பட்ட பொழுதிலும் ''கதியிழக்கினுங் கட்டுரை இழக்கிலேன்'' என்ற இலக்கணத்திற்கேற்ப வாழ்ந்தவன். ஆதலால் தான் அவன் ஓங்கிய வாள் சந்திரமதி கழுத்தில் மாலையானது.

ஆகவே ஒருவன் தனக்கிட்ட கடமைகளை இல்லறத்தில் நின்று முறையாக ஆற்றின் இறையருள் பெறலாம். சமயம் காட்டும் வாழ்வு சமுதாயப் பணிதான். நாம் ஆன்மீக வாழ்வு வாழ்கிறோம் எனில் அது மக்கள் வாழ்க்கை நலனுடன் இணைந்ததாக இருக்க வேண்டும். அவ்வாறு வாழ்வு அமைவதற்கு இல்லறம் சிறந்தவழியாகும். இந்துமத தத்துவக் கருத்துக்கள் மூலமும் அவற்றின் ஆதார நூல்கள் மூலமும் இவற்றை நாம் உய்த்துணரலாம்.

# இந்து சமயம் காட்டும் ஆன்மீக வழி

**திரு: குமாரசாமி சோமசுந்தரம், பணிப்பாளர், தமிழ்க் கல்வித்துறை,தேசிய கல்வி நிறுவகம்.**

''இந்து'' என்னும் சொல், தொடக்கத்தில் சிந்து நதி பாயும் நிலப்பகுதியையும்; பின்னர் அங்கு வாழுகின்ற மக்களையும், அவர்கள் பின்பற்றுகின்ற சமயத்தையும் குறிப்பதாக இருந்தது. இந்திய நிலப்பரப்பு முழுவதையும், அங்குள்ள மக்களையும், அவர்களின் சமயத்தையும் சுட்டுவதாக, பிற்காலத்தில் அச் சொல் பரிணமித்தது. இன்று ''இந்துக்கள்'' என்னும் சொல், இந்தியாவில் வாழ்பவர்களை மாத்திரம் குறிப்பதில்லை. இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள், அவர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும், ''இந்துக்கள்'' என அழைக்கப்படுகின்றனர். சனாதன தர்மம், இந்து சமயம் தரும் நெறி. அதுவே, இந்து சமயத்தின் பழைய பெயர். சனாதன தர்மம் என்பது என்றுமுள்ள தர்மம், எல்லோருக்கும் எக்காலத்திலும் பொருந்தக் கூடிய தர்மம். பழைமையும் புதுமையும் நிறைந்தது. தர்மம் என்பது வழி - மக்கள் செல்ல வேண்டிய நல்வழி. வையத்துள் வாழ்வாங்கு வாழ, நல்ல வண்ணம் வாழ,சனாதன தர்மம் வழியமைத்துள்ளது. அந்த வழியே ஆன்மீக வழி. அதுவே தெய்வீக வழியும் ஆகும். மனிதன், மனிதத் தன்மைகளோடு, மனிதனாக வாழ்வதற்கும் அதன் பேறாக தெய்வீக நிலையை எய்துவதற்கும் உவந்த வழி. தெய்வீக நிலை என்பது எல்லாவகைத் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற்று நீங்காத இன்பத்தில் திழைத்துக் கொண்டிருக்கும் உயர்நிலை ஆகும். இந்து சமயம் காட்டும் ஆன்மீக வழி மனிதன் இந்த உயர்நிலையை அடைவதற்கு இட்டுச் செல்கின்றது.

மக்கள் அனைவரும் தத்தம் வாழ்வு இன்பமாகவும் அமைதியாகவும் மலர்ச்சி பெற வேண்டும் என்பதையே பிரதான வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இக்குறிக்கோளை எய்துவதற்கு அறிவியல், அறவியல் ஆகிய இரண்டு துறைகள், மனிதர்களுக்குத் துணை நிற்கின்றன. ஆனால் அவையிரண்டும் வெவ்வேறு அணுகுமுறைகளைக் கையாளுகின்றன.

அறிவியல் துறை, விஞ்ஞானம், தொழினுட்பம் சார்ந்து, மக்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கி மக்களை இன்பமாக வாழச் செய்வதற்கு வழி செய்து வருகின்றது. இத்தகைய வசதிகள் உலகியல் தன்மையைக் கொண்டிருக்கின்றன. முன்னரைக் காட்டிலும் பன்மடங்கு வாழ்க்கை வசதிகள் கிடைக்கப் பெற்றும், தற்கால உலகில் அமைதி, நிம்மதி, இன்பம், சாந்தி, சமாதானம் என்னும் வாழ்க்கைக் குறிக்கோள்களை மனிதர்கள் அடைந்து விட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. அறிவியல், மக்களை இன்பமாக வாழச் செய்யும் பணியில் தோல்வி கண்டு விட்டதா?

மனித வாழ்வு இன்பமாகவும் நிம்மதி பெற்றும் நடைபெற அறவியலும் வழி காட்டுகின்றது. அந்த வழி ஆன்மீகம் சார்ந்தது. சமயம், மனிதர்களின் நிலைகளுக்கு ஏற்ற வகையில் ஆராய்ந்து, பொருத்தமான முறையில் ஆன்மீக நெறிகளைக் காட்டுகின்றது. ஒவ்வொரு மனிதனும் ஆன்மீக வளம் கொண்டவன். ஆன்மீக வழி அவனுக்கு அந்நியமானதோ, அவனால் மேற்கொள்ள முடியாததோ அன்று. மனிதனால் மேற்கொள்ள முடியாதது ஆன்மீக வழியன்று. இந்து சமயம் காட்டும் ஆன்மீக வழி, மனிதர்களால் அவரவர் இயல்புகளுக்கு ஏற்ற வகையில் மேற்கொள்வதற்கு இயலக்கூடியது. இந்து சமயத்தின் சிறப்பு இப்பண்பிலேயே தங்கியுள்ளது. இன்று, மனிதர்கள், வாழ்வில் இன்பத்தையும் அமைதியையும் காண முடியாமைக்கு அறவியல் தழுவிய ஆன்மீக வழியைப் பெரும்பாலும் புறக்கணித்தமைதான் காரணமா? இது ஆராயப்பட வேண்டியது.

உலகியல் நாட்டத்தில், தற்காலத்தில் மனிதர்கள் கூடிய ஈடுபாடு கொண்டு வருவதற்கு, இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட விஞ்ஞான, தொழினுட்ப அதிதீவிர வளர்ச்சியே காரணம் என்று சொல்லப்படுகிறது. இன்னொரு அவதானிப்பு என்னவெனில் ஆன்மிகத்தில் மனிதர்கள் நாட்டம் செலுத்துவதில் மிகவும் பின்னடைவு பெற்றிருத்தல் என்பதாகும்.

உலகியல் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது. அவ்வாறே, ஆன்மிகமும் தனிமையாகி விட்டது. உலகியலும் ஆன்மிகமும் எதிரும் புதிருமான இருவேறு வழிகள்; அவை இரண்டும் இணையமாட்டா என்ற ஒரு தவறான எண்ணம் மக்கள் மனங்களில் இடம்பிடித்துக் கொண்டமை துரதிர்ஷ்டம் ஆகும். உண்மையில் உலகியலும் ஆன்மீகமும் ஒன்றிற்கொன்று முரண்பட்டவையல்ல. அவை இணையக்கூடியன; இணைய வேண்டியன. உலகில் இன்பம், அமைதி, சமாதானம் நிரந்தரமாக ஏற்படுவதற்கு இவ்விரண்டும் இணைய வேண்டும்.

ஆன்மீக வழி தொன்மைக் காலத்திலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இடையிடையே புதர்களாலும். மணல் திட்டுக்களாலும், செடிகொடிகளாலும் மூடப்பட்டிருக்கலாம். அதனால் பேணப்படாது அந்த வழியின் சுவடு தெரியாமல் இருக்கலாம். ஆனால், ஆன்மிக வழி ஒன்று இருக்கின்றது என்பதை காலந் தாழ்த்திய நிலையிலாவது நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். குறிப்பாக இளைய தலைமுறையினர், இந்து சமயம் காட்டும் ஆன்மீக வழியை இனங்கண்டு, அதை மூடியுள்ள செடி கொடிகள், புதர்கள், கற்கள் ஆகியவற்றை அகற்றித் துப்புரவு செய்து, செப்பனிட்டுப் பண்படுத்த வேண்டும். உலகியல் வாழ்வு வேறு; ஆன்மிகம் வேறு என்று பிரித்து நோக்காது இரண்டையும் இணைக்க வேண்டும்; ஒன்றாக நோக்க வேண்டும். ஆன்மீக அடித்தளத்தில் உலகியல் வாழ்வு கட்டியெழுப்பப்படும் போதுதான், அவ்வாழ்வு வளம் பெறும்; வாழ்வாங்கு வாழும் வாழ்வாக அமையும்; அதன் பயனாக உலகில் இன்பமும் அமைதியும் தழைத்து ஓங்கும்.

இன்று நமக்குத் தேவைப்படுவது ஆன்மீக மறுமலர்சசி. அவ்வாறாயின், விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சியினால் ஏற்பட்ட அனைத்து உலக நன்மைகளையும், அவை இழுக்கென்றும், அழுக்கு என்றும் தள்ளிவிடுதல் என்ற முடிவிற்கு வந்துவிடக்கூடாது. உலகத்தை வெறுத்தொதுக்குவதில் அல்லது முற்றிலாகத் துறப்பதில் தான் ஆன்மீக வளர்ச்சி தங்கியுள்ளது என்ற எண்ணம் எப்படியோ மக்களின் மனதில் புகுந்து விட்டது. அதனாலேயே ''ஆன்மீகம்'' என்றதும் மக்களில் பலர், அது பெரியவார்த்தை, அதற்கும் தமக்கும் வெகுதூரம் என்று கூறி ஒதுங்கிக் கொள்கிறார்கள். இந்து சமயம் இதற்கு உடன்பாடு இல்லை.

இன்றைய பொதுவான நிலைப்பாடு என்னவெனில் ''ஆன்மீகம்'' என்பதற்குப் பல்வேறு பொருள் கொண்டு, அதனைச் சரியாக விளங்கிக் கொள்ளாமையேயாகும். ஆன்மீகம் என்பது மறுமை, மறு உலக வாழ்வு, மோட்சம், உயிர், கடவுள், பாசம், ஞானம் போன்ற அதீத பௌதிகவியல் சிந்தனைகளோடு தான் பெரும்பாலும் இணைத்துப் பேசப்பட்டு வருகின்றது. ''அதீத பௌதீகம்'' என்பதால் பொதுவாகக் கருதப்படுவது, நாம் வாழுகின்ற பௌதிக உலகிற்கு வேறுபட்டது என்பதாகும். ஆன்மிகம் என்பது 'ஆன்மா' அல்லது ''ஆத்மா''வுடன் தொடர்புடையது. 'ஆன்மா' பௌதிகத் தன்மைக்கு அப்பாற்பட்டது என்பதால் ஆன்மீகமும் அவ்வாறே என்று கருதப்படுகிறது. குழப்பதற்குக் காரணம் தரப்பட்ட பல்வேறு விளக்கங்களே.

''ஆன்மீகம்'' மனிதர்களிடம் ஆழ்ந்து கிடக்கின்றது. ஒவ்வொரு மனிதனிடம் ஆன்மீகம் உண்டு. ஆனால் ஆன்மீகம் மனிதனுள் உறங்கிக் கிடக்கும் வரை, ஒரு பயனும் இல்லை.ஆன்மிகம் வெளிக் கொணரப்படுதல் வேண்டும். மனிதனின் சிந்தனையில், பேச்சில், செயல்களில், செய்காரியங்களில், நடத்தையில் ஆன்மீகம் வெளிப்பாடாக வேண்டும். ஆன்மீகம் மனித ஒழுக்கமாக மாற்றப்படுதல் அவசியம். ஆன்மீகம் மனித ஒழுக்க செயற்பாடாகும் போது உலகியல் சார்ந்த விஞ்ஞான, தொழிநுட்ப வளர்ச்சியினால் ஏற்பட்ட பயன்கள், விளைவுகள், பெறுபேறுகள் அனைத்தும் ஆக்க பூர்வமானவையாகவும், நன்முறைப் பாங்கானவையாகவும் அமையும் என்பது உறுதி. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஆக்கத்திற்கும் அழிவைத் தடுப்பதற்கும் பயன்படும் போது நல்ல பெயரையும் சுவீகரித்துக் கொள்ளும் நிலை உண்டாகும். ஆன்மீக மறுமலர்ச்சியினால் உலகியல் விஞ்ஞானமும் நன்மை பெறுமே தவிர, அவற்றின் வளர்ச்சி தடைப்பட்டு விடாது.

ஆன்மீகம் மறுமலர்ச்சி எய்தும் போது மனிதப் பண்புகள், மனிதத் தன்மைகள், மானுடம் என்பன பேணப்படுகின்றன. இவை அனைத்தும் மனித இயல்புகள். மனிதனுக்கு எவை எவை இயல்புகளாக உள்ளனவோ, அவை தான் மனித உரிமைகள். ஆன்மிக மறுமலர்ச்சியின் மூலமே மனித உரிமைகள் நிலை நாட்டப்பட முடியும். மனிதன் மனிதத் தன்மைகளைப் பேணவும், மனித உரிமைகளை நிலைநாட்டவும் அவற்றின் பயனாக இன்பமும் அமைதியும் நிலையாகப் பெற்றுக் கொள்ளவும் துணையாவது ஆன்மீகம் என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து கொள்ளுதல் இன்றியமையாதது. உலகில் ஆன்மீகம் மலர்ச்சி பெறும் போதுதான் உலக சமாதானமும் எய்தப்படும்.

உண்மை, அன்பு, அருள், நீதி, நேர்மை, நடு நிலைமை, அஹிம்சை, சாந்தி, பொறுமை, அழகுணர்வு, ஒழுங்கு, தீமைக்கு அஞ்சுதல், நல்ல பழக்கவழக்கங்கள், சுதந்திரம், சேவை, தன்னலமறுப்பு முதலிய சிறந்த மனிதப்பண்புகள், ஆன்மிகம் வெளிப்பாடாகும் போது, மனித வாழ்வு பரிணமிக்கின்றது, அதுவரை மனிதனைப் பீடித்திருந்த அழுக்காறு, பொறாமை, ஆசை, அவா, கோபம், தன்னலம், கர்வம், அகந்தை, தீங்கிழைத்தல் என்பன ஆன்மிக வெளிப்பில் அகன்று விடும்.

ஆன்மீகம் மனிதனைத் தூய்மைப்படுத்தி அவனின் உலகியல் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகிறது. அதனால் சமுதாயம் முழுவதுமே இன்பமும் அமைதியும் பெற்றுத் திகழ்கின்றது.

மனிதனுள் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மீகத்தை வெளிப்படுத்துவது சமயம். சமயம் இந்த வகையில் மனிதனுக்கும், மனித சமுதாயத்திற்கும் பேருதவி புரிகின்றது. தனியாள் (ஆளுமை) விருத்தி, சமூக விருத்தி ஆகிய இரண்டும் ஏற்படச் சமயம் துணையாக உள்ளது. சமயம் இரண்டு நோக்கங்களைக் கொண்டிருத்தல் அவசியம் - ஒன்று சமய நோக்கு, மற்றையது சமூக நோக்கு. இந்து சமயம் இவ்விரண்டு நோக்கங்களையும் கொண்டுள்ளது. இந்து சமயம் காட்டும் ஆன்மீகம் இவ்விரண்டு நிலையிலும் வெளிப்பாடாகின்றது.

இந்து சமயம் மனிதரின் உலகியல் வாழ்க்கையைப் புறக்கணிக்கவில்லை. உலகியல் வாழ்க்கையைச் சீர்படுத்தவும், தூய்மைப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் இந்து சமயம் வழிகாட்டுகின்றது.

வாழ்க்கையோடு கலக்காத சமயங்கள்; ஆன்மீக வழியில் செல்லாத வாழ்க்கை முறைகள் நின்று நிலைக்க முடியாமல் போன வரலாறுகள் உண்டு.

இந்து சமயம், தொன்று தொட்டு இன்றுவரை வாழும் சமயமாக, மக்களிடையே ஆதரவைப் பெற்று உயிர்ப்புடன் விளங்கி வருகின்றது. காரணம், அது ஒரு வாழ்க்கை நெறியாகி விட்டமையே ஆகும். வாழ்க்கை என்பது வாழும் நெறி அறிந்து, வாழும் முறை உணர்ந்து, வாழ்தலையே குறிக்கின்றது. அதனையே ஆன்மிக வாழ்வு என்கிறோம்.

ஆன்மிக வழியில் நின்று வாழும் வாழ்வே ஒழுங்கான வாழ்வு. ஒழுங்கான வாழ்வை வாழ்வதாலேயே உண்மையை அறிந்து உணரவும்; பரம்பொருளைத் தெரிந்து அடையவும்; உய்வு பெறவும் முடியும் என்பது இந்து சமயம் கூறும் உண்மை. ஆன்மீகத்தை வாழ்க்கையோடு இணைத்து, வாழ்க்கையினூடாகவே மனிதர்களைப் பக்குவப்படுத்தி, அவர்களை மனிதர்களாக்கி, தெய்வீக நிலைக்கு உயர்த்தும் மேலான பணியை இந்து சமயம் பன்னெடுங்காலமாகச் செய்து வருகின்றது. இந்து சமயம் காட்டும் ஆன்மிக வழி, மானுடத்தைப் பாதுகாப்பதற்கும்; பேணுவதற்குமான சிறந்த வழி. சுருங்கக் கூறின், ஆன்மீகம் மனித உலகியல் வாழ்க்கையோடு செறியும் போது, மனிதர்களுக்கு எல்லாவித பாதுகாப்பும் கிட்டுகின்றது. ஆன்மிகம் செறியாத வாழ்க்கை பாதுகாப்பு அற்றது என்பதும் உணர்தற்பாலது. ஆன்மிகத்தைப் புறக்கணித்தவர்கள் வாழ மறுத்தவர்கள் ஆகின்றனர்.

இன்று, அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம் ஆகிய துறைகளின் சீர் கேட்டிற்கும் சீரழிவிற்கும் அவற்றுடன் ஆன்மிகம் கலக்கப்படாமையே காரணம் என்பது உணரப்பட்டு வருகின்றது. உலக நாடுகளில் காணப்படுகின்ற அமைதியின்மை, வன் செயல்கள் , போர்கள், குழப்பங்கள் என்பவற்றிற்கும் ஆன்மிகம் மக்கள் வாழ்க்கையில் நின்றும் விலகிக் கொண்டமையே பிரதான காரணம் எனலாம். குடும்பங்களிலும் சரி, நாடுகளிலும் சரி, உலக அரங்கிலும் சரி, அமைதியையும் சமாதானத்தையும் மீண்டும் ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள், ஆற்றப்படும் கருமங்கள், நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள், செய்யப்படும் ஒப்பந்தங்கள் யாவும் ஆன்மிகக் கடப்பாட்டுடன் நிகழ்த்தப்படாமையினாலேயே முடிவில் தோல்வியைத் தழுவுகின்றன. ஆன்மிகக் கடப்பாடின் பிரதான அம்சம் சம்பந்தப்பட்டவர்களிடையே காணப்பட வேண்டிய மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயல் (மெய்) தூய்மை ஆகும். ஆன்மிகம் அற்ற இடத்தில் வன்மிகம் புகுந்து விடுதல் இயற்கையே.

இந்து சமயம் காட்டும் ஆன்மிக வழி சார்ந்ததாகவும், உணர்வு சார்ந்ததாகவும் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அறிவை மாத்திரம் நம்பி, அத்துறையில் ஈடுபாடு கொள்பவர்கள் தத்துவவாதிகள் ஆவர். எனினும், மிகக் குறைந்த அளவு மனிதர்களே அறிவு சார்ந்த வழியில் செல்லக் கூடியவர்கள். உணர்வு சார்ந்த வழி அன்பினை

அடித்தளமாகக் கொண்டது. அன்பு நெறி என்பர். எல்லோருக்கும் இந்த வழியால் செல்ல இயலும்.

''அறிவினான் ஆகுது உண்டோ -பிறிதின் நோய்
தந் நோய் போல் போற்றாக் கடை'' என்கிறது திருக்குறள். இவ்வுலகில் வாழும் ஏனைய உயிர்கள் படும் துன்பங்களைப் பற்றியோ அவற்றின் கடைத்தேற்றம் பற்றியோ அறிவு வழிச் செல்பவர்கள் கவலைப்படுவதில்லை. தத்துவ விசாரணையும், தனிமனித மேம்பாடும், அறிவு மார்க்கத்தின் இலட்சணம்.

அன்பு வழியில் செல்பவர்கள், பிறரின் துன்பங்கள் துயரங்களைத் தமக்குரியவை போன்று எண்ணி அவற்றைத் துடைப்பதற்கு எல்லாவிதத் தியாகங்களையும் செய்யத் தயங்கமாட்டார்கள். இதற்கு யாது காரணம் என்றால் இவ்வுலகம் முழுவதையும் ஒன்றாகவே காணும் நிலையைப் பெற்றிருத்தல் ஆகும். எந்த இறைவனிடம் தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்களோ, அந்த இறைவனையே உலகம் எங்கணும் காண்கிறார்கள். அதனால் ஒருமையுணர்வு ஏற்படுகின்றது. வேற்றுமையுணர்வுகள் நீக்கம் பெற்று விடுகின்றன. பிற உயிர்களுக்குச் செய்யும் சேவை; அவைகளில் காட்டும் கரிசனை; அவற்றின் நல்வாழ்வினையே விரும்பும் பண்பு யாவும் இறைவனுக்கு செய்வதாகவே எண்ணிச் செயல்படுகின்றார்கள்.

அறிவு வழி முற்றிலாகத் தள்ளி வைக்கக் கூடியதுமன்று. உணர்வுகள் பண்படுத்தப்படுவதற்கு அறிவின் துணை வேண்டும். அறிவின் துணையைப் பெற்றுக் கொள்ளாத உணர்ச்சிகள் வெறித் தன்மையைக் கொண்டு விடும் சந்தர்ப்பங்களும் உண்டு. சமயத்தின் பேரால் நடந்த, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போர்கள், போராட்டங்கள், வன்செயல்கள் ஆகியவற்றை அறிவோம்.

அறிவு வழி, அன்பு வழி ஆகிய இரண்டிற்கு மிடையே இணக்கம் தேவை. அறிவின் பெருக்கமும், உணர்வின் பெருக்கமும் தூய்மையின்றி ஏற்படுமாகில் மனித குலத்திற்கு நன்மையை ஏற்படுத்தாது. அந்த நிலையில் ஆன்மீக வழியாகவும் அமைய மாட்டா. எனவே, அறிவு, உணர்வு, செயல் என்ற மூன்றும் தம்முள் அளவொத்து ஒருங்கிணைந்து தூய்மையெனும் அடித்தளத்தில் அமைவதே சிறப்புடைய ஆன்மிக வழி. அத்தகைய ஒரு சிறந்த வழியை அமைத்துத் தந்துள்ளது இந்து சமயம். இந்து சமயம் காட்டும் ஆன்மீக வழி அனைத்து மக்களுக்கும் பொதுவானதும் உரித்தானதும் ஆகும்.

*ஐந்து விரல்களும் வெவ்வேறு மாதிரி இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் சேர்ந்து இயங்குவதால் தான் அந்தக் கையால் வேலைசெய்ய முடிகிறது. அதைப்போலத்தான் சமூகமும், ஒவ்வொரு பிரிவினரும் தமது கர்மாவைச் சீராகச் செய்வதால் தான் வண்டி ஓடுகிறது. அதனால் ஒவ்வொரு நபரும் முக்கியமானவர்; அன்புக்குரியவர்; மரியாதைக்குரியவர் என்ற உணர்வு ஏற்பட்டாலொழிய உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற எண்ணங்கள் ஒழியாது.*

***- ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.***

*நாம் செய்யும் பாவத்துக்கு மூலம் கெட்ட்காரியம். கெட்ட காரியத்துக்கு மூலம் ஆசை. ஆகையால் நம் கஷ்டம் அனைத்துக்கும் மூலகாரணமாகிய ஆசையை நிவிர்த்தி செய்தால்தான் நிரந்தரமான துக்க நிவிர்த்தியுண்டாகும்.*

***- ஜகத்குரு காஞ்சி காமகோடி பரமாச்சரியார்.***

# இந்துமதம் காட்டும் ஆன்மீகப் பாதை

சாயிசங்கல்பன், முதலாம் வருடம், மிருக வைத்திய பீடம்.

உ
''வக்ரதுண்ட மஹாகாய
சூர்யகோடி சமப் ப்ரபா
நிர் விக்னம் குர்மே தேவ
சர்வ கா யேசு சர் வதா''

உயிர் வாழுகின்ற ஜீவராசிகளினுள் தன்னுடைய அறிவாற்றலினால் மற்றைய உயிரினங்களைத் தன் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பவன் மனிதன். மற்றைய விலங்குகளில் இருந்து மனிதன் வேறுபட்டுக் காணப்படுவதற்குரிய அடிப்படைக் காரணி மனம். மனதையுடையவன் மனிதன் என்று எம் ஆன்றோர்கள் எடுத்துரைத்திருக்கின்றனர். எனினும் ''மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்'' என்று எம்மை ஆன்றோர் வாக்கு நெறிப்படுத்தி இருப்பதனையும் நாம் காண்கின்றோம்.

மனம் என்றால் என்ன?

எண்ணங்களின் திரட்சி மனம்.

மனம் எப்படிப்பட்டது?

காற்றிலும் வேகம் கூடியது

எண்ணம் நிலையற்றது; காற்று எல்லையற்றது; எனவே மனம் எல்லையற்றதும்; நிலையற்றதும் ஆகும். இதனாலேயே மனதை முன்னோர்கள் இப்படியெல்லாம் கூறுகின்றார்கள்.

''மனம் ஒரு குரங்கு''

மனம் கொண்டது மாளிகை''

''நீ தப்பு செய்தாலும் உன் உள்ளிருப்பவனிடம் இருந்து (மனசாட்சி) தப்ப முடியாது.''

எனவே நாம் மனதை நெறிப்படுத்தி எம்வழியில் நடத்திச் செல்ல வேண்டுமே தவிர எம்மை மனம் அதன் வழியில் நடத்திச் செல்ல அனுமதிக்கலாகாது''

அவ்வாறெனில்;

மனதை நன் நெறிப்படுத்த வழி என்ன?

சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி வாழ்வது.

சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றாதவன் மனிதன் இல்லையா?

அவன் உருவவியல் மனிதன் தான்.

அப்படியாயின்;

சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி நடப்பவன் போல் நடிப்பவர்களும் இவ் உலகில் உண்டு தானே?

இல்லை என்று நான் சொல்லவில்லை. அவர்கள் அசல் வித்துகள் அல்ல. நடிப்பு என்றதும் அங்கே உண்மை அழிந்து விட்டது அல்லவா?

**சமயக் கோட்பாடுகள் என்றால் என்ன?**

இதற்கு நான் விடையளிப்பது எனின் வானத்தையும் கடலையும் கைகளினால் அளவிடுவது போல் ஆன காரியம் ஆகும். எனினும் கண்ணிற்குக் கண்மணிபோல் ஆன கருத்தொன்றைத் தெரிவிக்கலாம். அது-எவன் ஒருவன் தனது மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாது நடப்பவனோ அன்னவன் சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி நடப்பவனுக்குச் சமன். அத்தோடு நாகரீகம் தலைவிரித்துத் தாண்டவமாடும் இவ்வேளையிலே சமயம் காட்டும் வழியில் நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் மறந்து விடலாகாது.

ஆன்மீகம் என்றால் என்ன?

பிரமாண்டமான சர்க்கரை மலையில் இருந்து ஒரு எறும்பு எவ்வளவு சர்க்கரையை எடுத்துக் கொள்ள முடியுமோ அது போலவே நாம் ஆன்மீகத்தைக் குறிப்பிட முடியும் எனினும் ''ஆன்மாவை உணர்தல்'' என்று சுருக்கமாகக் கூறலாம்.

ஆன்மாவை எப்படி உணரலாம்?

நான் யார்?

நான் எங்கிருந்து வந்தேன்?

நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்?

நான் எங்கே போகப் போகின்றேன்? போன்ற கேள்விகளை எமக்குள்ளே கேட்டு விடை காண்பதன் மூலம் ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

இன்றைய இளைய தலைமுறையினர் இவ்வினர்க்களை வித்தியாசமான முறையில் நோக்கலாம்.

இவ்விடத்தில் ஒரு பொருத்தமான உதாரணம் கூறலாம். எனது கண்; எனது கால்; எனது புத்தகம் என்று நாம் கூறுகின்றோமல்லவா? இதிலிருந்து நாமொன்றைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அது நான் வேறு எனது கண், கால், புத்தகம் என்பன வேறு என்பதை, ஆம் அதுதான் உண்மை நம் ஆத்மா வேறு நம் உடம்பு வேறு. ஆத்மா அழிவற்றது. நம்முடம்போ அழியக் கூடியது.

''நீரில் நீர்க்குமிழி தோன்றி மறைவது போலத்தான் நம் வாழ்நாள் தங்கியிருக்கின்றது'' இத்தகைய குறுகிய வாழ்நாளில் நாம் சாதிக்கக் கூடியதுதான் என்ன? படித்துப் பண்டிதனாவதா? அல்லது பட்டம் வாங்குவதா? அல்லது பணத்தில் கோடீஸ்வரனாவதா? இவையனைத்தும் தனியொரு மனிதனினால்.

தெய்வத்தால் ஆகாதது எனினும் -முயற்சி
தன் மெய் வருத்தக் கூலி தரும்.

எனும் குறளிற்கு ஏற்ப சாதிக்கலாம் . ஆனால் சமூகத்தில் இருந்து அவன் ஒரு நேர்மையான நடத்தையுடைய நல்லவன் என்னும் பட்டத்தைப் பெறுவதுதான் கடினம். அப்படிப் பெறப்பட்ட பட்டத்தை பேணுவதோ அதனிலும் கடினம். நாம் நினைத்த மறுகணமே தீஞ்செயல்கள் செய்து கெட்டவன் என்னும் பெயரைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இதன் மறுதலையைச் சிந்தித்துப் பாருங்கள் மிகக் கடினம் அல்லவா?

ஆகவே நம் வாழ்விற்கு சமயக் கோட்பாடுகளும் ஆன்மீக வழிகாட்டலும் அவசியம் என்பதனை நாம் மறுக்க முடியாது.

உலகில் இன்று பல்வேறுபட்ட சமயங்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் போதிப்பது அன்பைத்தான் அதை முற்று முழுதாகப் புரிந்து கொள்ளாமல் மதத்தில் மதம் பிடித்தலையும் கூட்டமும் எம் மத்தியிலுள்ளது. பெற்ற தாயையும் பிறந்த திருநாட்டையும் மறக்கலாகாது என்பது போலத்தான் நாம் பிறந்த சமயக் கோட்பாடுகளை அனுசரித்து நடப்பதும் அவசியமானதாகும்.

இன்று உலகில் உள்ள சமயங்களில், மூத்ததும் முதன்மையானதும் உடையது இந்து சமயம் என்றால் அதனை யாரும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. இத்தகைய இந்து சமயத்தில் பிறந்த நாம் எமது சமயம் காட்டும் வழிகாட்டலை அறியாது அலைவதும் ஆத்மீகத்தை உணராது தடுமாறுவதும் கவலைக்குரியதாகும்.

இந்து சமயத்தின் மறுபெயர் சனாதன தர்மம் என்பதாகும். தொன்று தொட்டு மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு தர்மநெறிகளை நேர்மையாகவும்; கூர்மையாகவும் எடுத்துரைக்கின்றது இந்துமதம். பெரும்பாலும் இந்துக்களிடம் காணப்படும் கருத்தொன்று ஆன்மீகம் ஐம்பது வயதின் பின்னரே சரிவரும் என்பதாகும். இது மிகமிகக் கவலைக்குரியது. இளைஞனாக இருக்கும் போது பின்பற்ற முடியாத ஆன்மீகத்தை முதியவரானதும் பின்பற்றவே இயலாது. ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா'' என்னும் முதுமொழியை நாம் அறிவோம் அல்லவா? பிரகலாதன் எப்போது ஆன்மீக வழிகாட்டலைக் கற்றுக் கொண்டான். கருவுற்றிருக்கும் போதல்லவா அதனாலேயே இரணியனின் கொடூரமான செயல்களினால் அஞ்சாது நாராயணனே தஞ்சம் என்று சரணடைந்து ஈற்றில் அதர்மம் அழிந்து தர்மம் தலைதூக்க வழிவகுத்தான். இதனாலேயே கருவுற்றிருக்கும் பெண்கள் புராதன, இதிகாச நூல்களைப் படிக்க வேண்டும் அல்லது பிரணவம் (கேட்டல்) செய்யவேண்டும் என்று எமது இந்துமதம் வழிகாட்டுகின்றது.

எமது இந்து சமய இதிகாசங்களில் தலையானவை மஹாபாரதம், இராமாயணம் என்பனவாகும். எம்மவர்களில் எத்தனைபேருக்குத் தெரியும் இவ்விதிகாச வரலாறுகள் காட்டும் தர்மநெறி. இதற்குப் பலர் கூறும் பதில் என்னவெனில்; இந்நூல்களைப் படிப்பதனால் பயன் ஒன்றும் இந்நவீன உலகில் கிடைப்பதற்கில்லை என்பதாகும். ஒரு மனிதன் பிறப்பது எதற்காக என்கின்ற கருத்தை உணராத காரணத்தினாலேயே இத்தகைய முரண்பாடுகள் எழுகின்றன.

அப்படியாயின் ஒவ்வொரு இந்துவும் சமய இதிகாச புராணங்களைப் படித்துப் பாண்டித்தியம் பெற்றால், இந்த நவீன உலகில் உயிர்வாழ்வது எங்ஙனம் என்று நீங்கள் கேட்பது புரிகின்றது.

நான் பாண்டித்தியம் பெற வேண்டும் என்பதனைக் குறிப்பிடவில்லை. அவற்றை அறிந்து அதன்வழி நடக்க வேண்டும் என்பதனையே கூறுகின்றேன்.

இந்த நவீன உலகில் அவற்றை அறிந்து கொள்வதற்கும் போதியளவு நேரம் கிடைப்பதில்லையே என்று நீங்கள் கூறுவதெல்லாம் வெறும் நொண்டிச் சாட்டாகும்.

நேரம் இல்லை அதனால் நான் எனது இந்துதர்ம கோட்பாடுகளை அறியாமல் இருக்கிறேன் என்பதற்கு இடமேயில்லை.

நாம் ஒரு நாளில் எவ்வளவோ நேரத்தை வீண்விரயம் செய்கின்றோம். அத்தகைய நேரத்தின் ஒருபகுதியையாவது இவற்றுக்குப் பயன்படுத்தலாம்.

வெறும் பூசை, சடங்குகளுடன் எமது இந்துமதம் நின்றுவிடவில்லை. அவைதான் வழிபாடு என்றிருப்பவர்களும் எம்மில் அனேகர்.

எமது புராண இதிகாசங்கள் வெறும் கற்பனைக்கதைகள் அல்ல. அவை நிகழ்தவை என்பதற்கான ஆதாரங்கள் இன்றும் உள்ளன.

எமது சிற்றறிவிற்கு எட்டவில்லை என்பதற்காக அவற்றை ஒதுக்குதல் வானத்து நிலாவை மேகம் மறைத்தால் வானத்தில் நிலாவே இல்லை என்பது போன்ற அறிவீனமாகும். எமது பரம்பரையிலேயே எமது முப்பாட்டனின் பெயரைக் கூடத்தெரியாத எம்மால் 5000 வருடங்கள் அல்ல, பல நூற்றாண்டுகளிற்கு முற்பட்ட அவற்றை எவ்வாறு விமர்சிப்பது.

விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட பல நிகழ்சிகள் இன்றும் பல மகான்களினால் நிகழ்த்தப்படுகின்றன. விஞ்ஞானம் வியக்கத்தக்க விந்தைகள் பலவற்றை எமது சமயம் காட்டுகின்றது.

ஆணவம் அழியும்; அகந்தை ஒழியும், அன்பு வளரும், தர்மம் தழைக்கும் என்பதை அறநெறிக் காவியங்களாக இறைவனே வழிகாட்டலை காட்டியிருப்பது வேறு எம் மதத்திற்கும் இல்லாத தனிச் சறப்பாகும்.

இராமர், ஒரு இந்துமகன் எவ்வாறு சனாதன தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதனை வாழ்ந்து காட்டிய அவதாரமாகும்.

எப்படி ஒரு தந்தை தாய்க்கு மகனாக, மனைவிக்கு கணவனாக, தம்பிக்கு அண்ணனாக, நாட்டு மக்களிற்கு தலைவனாக, குழந்தைகளிற்கு தந்தையாக என்று பல்வேறு கோணங்களில் வாழ்ந்து காட்டியிருக்கின்றனர். இவற்றை ஒவ்வொரு மனிதனும் பின்பற்றுவான் எனின் இன்று உலகில் காணப்படும் கொடூரச் செயல்களிற்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம். ஆனால் இன்று சனாதன தர்மம் என்றால் என்ன என்பதனைப் புரியாத இந்துகளே பாதை மாறிப் பயணம் செய்கின்றார்கள். எனலாம்.

ஒரு மனிதனின் வாழ்க்கை ஆன்மீகப் பாதையில் அமைய வேண்டும் என்பதை இந்து மதம் வலியுறுத்துகின்றது. அதற்கான வழிமுறைகளையும் வகுத்துத் தந்துள்ளது. அவையாவன.

மாணவம்
இல்லறம்
வானப்பிரஸ்தம்

சன்னியாசம் என்பனவாகும்.

இந்நிலைகளை உணர்ந்து ஒவ்வொரு இந்துவும் வாழ்வானாகில் அவன் பிறவிப் பெருங்கடலைத் தாண்டி விடுவான் அல்லது இறக்கும் போதும் பிள்ளை, குட்டி, பணம், சொத்து என்று ஏங்குபவர்களே வள்ளுவன் கூறும் பிறவிப் பெருங்கடலில் நீந்துபவர்கள்.

புனிதவதி அம்மையார் அவர்கள் இறைவனை காண்பதற்குப் பேய் உருவம் பெற்றுச் சென்றதனை நாம் அறிவோம். அப்போது இறைவன் ''என்வரம் உமக்கு வேண்டும்?'' என்று புனிதவதி அம்மையார் அவர்களை வினவியபோது அவர்,

''ஸ்வாமி எனக்குப் பிறவாமை வேண்டும்
பிறந்தால் உன்னை மறவாமை வேண்டும்
அஃதுள் உன்னை வணங்குதல் வழுவாமை வேண்டும்?''

என்றுரைத்தார். ஆனால் நம்மவர்களில் எத்தனை பேர் இறைவனிடம் இவ்வாறு கேட்போம் என்பதை உணர்ந்துபாருங்கள். குரங்குக் குட்டி தன் தாயை பற்றிப்பிடித்திருப்பது போல் நாம் இறைவனைப் பற்றிப் பிடித்திருந்தால் ஆபத்து ஏதும் அணுகாது என்பது உண்மை அல்லவா?

மரணத்தை வென்றவன் இறைமைத்துவம் பெறுவான் என்று எமது இந்து தர்மம் வலியுறுத்துவது சாதாரண உடல் அழிவதை அல்ல. ஆத்மாவானது பிறப்பெடுக்காத நிலையையே ஆகும். நாம் செய்யும் தர்மத்திற்கு ஏற்ப எமது ஆத்மாவும் புதுப்புது உடல்களைப் பெற்று ஆத்மாவிற்குரிய பலாபலன்களை அனுபவித்தே வருகின்றது.

நாம் ஒரு புகைப்படக்கருவியால் எத்தகைய காட்சிகளைப் படம் பிடிக்கின்றோமோ அத்தகைய காட்சிக்குரிய பிரதிகளே பெறப்படுகின்றன. அதுபோலவே எமது மனதை உலகியல் பக்கம் செலுத்தின் அது அதற்குரிய கர்மாவால் நிரம்புகின்றது. ஆன்மீகப் பக்கம் செலுத்தின் அதற்குரிய பலன் கிடைக்கின்றது.

ஒரு பிரசவ விடுதியிலே ஒரே நேரத்தில் பிறக்கின்ற இரு குழந்தைகளில் ஒன்று கோடீஸ்வரனிற்கும் மற்றையது ஏழைக்கும் மகனாகப் பிறக்கின்றது. இந்த நடைமுறை ஒன்றே கர்மாக் கோட்பாட்டிற்குப் போதும் எனலாம். எனவே கொடுமைகளினால் நிரம்பிய இந்தக் கலியுகத்தில் வாழ்க்கைப் பயணம் செல்லும் நாம் எமது இந்து மத வழிகாட்டலையும் அதன் ஆன்மீக நெறிமுறைகளையும் கடைப்பிடித்தே தீரவேண்டும்.

பார்ப்பதும் நல்லதாய் இருக்க வேண்டும்
கேட்பதும் நல்லதாய் கேட்க வேண்டும்
சொல்வதும் நல்லதாய் சொல்ல வேண்டும்
செய்வதும் நல்லதாய் செய்ய வேண்டும் .

இதையே இந்து தர்மம் வலியுறுத்துகின்றது. இறைவன் எங்கும் உள்ளார். எல்லாம் அறிவார். ஆனால் மனிதனோ ஒன்றுமே தெரியாது எல்லாம் அறிந்தவன் போல் நடிப்பவன்.

எமது இந்துமதம் காட்டாத வழிகள் இல்லை கூறாத நீதிதான் இல்லை எனலாம். எனவே நாம் ஒவ்வொருவரும் எமக்கேயுரிய ஆன்மீகப்பாதைகளில் பயணம் செய்வோம். ஆண்டவனின் அருளைப் பெறுவோம்.

# கீதையின் பார்வையில் ஆன்மீகம்

இரா. இரவிசங்கர், 2ம் வருடம், விவசாய பீடம்.

ஆன்மீகம் என்பது சட்டங்களோ, சம்பிரதாயங்களோ, கிரியைகளோ, நம்பிக்கைகளோ அல்ல. உண்மையான நம்பிக்கையின் அடிப்படையில் சில கொள்கைகளை மனதளவில் ஏற்றுக் கொண்டு அந்த வழியில் நியதியோடு வாழ்வதுதான் ஆன்மீகம் ஆகும். ஆன்மீக வழிகாட்டிகளாக புராண, இதிகாச நூல்களும் வேத உபநிடதங்களும் இருக்கின்றன. இவற்றை நாம் உற்று நோக்குவோமாயின், தீய வழியினின்று விலகி நல்வழியைக் காட்டுவதிலேயே இந்துமதம் முன்னிற்கிறது என்றால் அது மிகையாகாது. அத்துடன், இவற்றின் மூலம் இந்துமதம், ஆன்மாவின் இலட்சியமான மலங்களிலிருந்து விடுபட்டு முத்தி அடைதலை தெளிவுபடுத்துகிறது என்பதும் உண்மை. எனவே, பல்வேறு கொள்கைகளைச் சமுதாயத்திற்குச் சமர்ப்பித்து, அதனை ஏற்றுக் கொள்ள வைத்து, அதன்மூலம் தனிமனித முன்னேற்றத்தை வழிநடத்திச் சென்று ஆன்மாவின் இலட்சியத்தை நிறைவேற்றுவதில் இந்துமதம் முன்னிற்கிறது எனச் சுருங்கக் கூறலாம்.

இவ்வாறு, மனித தெளிவிற்கு, உயர்விற்கு, வளர்ச்சிக்கு வழி காட்டும் இந்து மதத்தின் தத்துவங்களை பல நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. அவற்றுள், 'பிரஸ்தான த்ரயம்' எனப்படும் இந்துமத தத்துவ வளர்ச்சிக்கு உதவும் நூல்களில் உபநிடதங்கள், பகவத்கீதை, பிரம்ம சூத்திரம் ஆகிய மூன்றும் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றுள் பகவத்கீதையானது, குருசேஷ்த்திரப் போர்க்களத்துட் புகுந்த அர்ச்சுனன் தன்னோடு போர் புரிய வந்துள்ள தனது மதிப்பிற்குரிய ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் பார்த்து செயலிழந்து தயங்கி நின்ற போது, அவனின் மயக்கத்தை போக்கும் முகமாக கண்ணனால் போதிக்கப்பட்டது. அதாவது அந்த ஒரு நிகழ்வின் மூலம் வேதத்தின் கொள்கைகளை விளக்கும் முகமாக பகவத்கீதை ஆக்கப்பட்டது என்றால் அது மிகையாகாது. கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம் என்பவற்றைக் கூறும் பகவத்கீதை எங்ஙனம் ஒரு தனி மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது என்பதை இனிப்பார்க்கலாம்.

ஒருவன் எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது என்பதில் மிகவும் தெளிவுடையவனாக இருத்தல் வேண்டும் . பிரார்த்தனை, பக்தி, தியானம், தொண்டு முதலியன எதுவுமின்றி உலக இன்பதுன்பங்களால் அல்லல்பட்டு ஒரு இலட்சியமின்றி வாழ்வது உண்மையான ஒரு இந்துவுக்குரிய வாழ்வு ஆகாது. எனவேதான், எப்படியும் வாழ்ந்தால் போதும் என்றிருக்காமல் இப்படி வாழ்ந்து பார் நீ என்னை அடைவாய் என்று கண்ணன் தனக்குப் பிடித்தமானவர்களின் குணநலங்களை பின்வருமாறு கூறுகிறார். ''எவ்வுயிர்க்கும் வகையின்றி நட்புடையனாய், கருணை உளத்தனாய், நான் எனது அற்றவனாய், இன்ப துன்பத்தை ஒரு நிலையாய்க் கொள்பவனாய், பொறுமையும் என்றும் உவகையும் உள்ளவனாய், யோக நாடியாய், அடங்கிய உளத்தனாய், திட உறுதியனாய், என்னில் மனம் புத்தி ஒப்பித்தவனாய், என் பக்தன் எவன் உளன் அவன் எனக்குப் பிரியன் '' (12:13-14) . அவர் மேலும் கூறுகிறார், ''எவனால் உலகு துன்புறுவதில்லை, உலகால் எவன் துன்புறுவதில்லை, எவன் அச்சம் சினம் உவகை மனக்கிளர்வுகளினின்றும் விடுபட்டவனோ, அவன் எனக்குப் பிரியன் (12:15). எனவே மேற்கூறிய குணநலன்களோடு நடப்பது பற்றி ஒவ்வொரு இந்துவும் கருத்திற் கொள்ள வேண்டும்.

இன்ப துன்பங்களில் இலயித்து, ஆசை மோகம் கொண்டு, போட்டி பொறாமையும் மேலும் அகங்காரம் கோபம் எல்லாம் கொண்டு, சிந்தனையற்று, தெய்வம் உண்டு என்பதை மறக்கும் ஒரு நிலை அசுர குணம் ஆட்சிபெறும் நிலையில் உருவாகும். இதைத்தான் பகவத்கீதை பின்வருமாறு தெய்வ இயற்கைக்குப் பிறந்தவன் கொண்டுள்ள குணங்கள், அசுர இயற்கைக்குப் பிறந்தவன் கொண்டுள்ள குணங்கள் என்று வேறுபடுத்திக் காட்டுகிறது. ''அஞ்சாமை, அகத்தூய்மை, ஞான யோகங்களில் ஊன்றல், ஈகை, புலனடக்கம், வேள்வி, கல்வியறிவு, தவம், நேர்மை, இன்னாசெய்யாமை, வாய்மை, சினமின்மை, துறவு, பிறர் தீமை கருதாமை, உயிர்த்தயை, பிறன்பொருள்

விழையாமை, மென்மை, நாணம், மனவுறுதி, துணிவு, பொறை, உறுதி, தூய்மை, வஞ்சகம் இன்மை, செருக்கின்மை எல்லாம் தெய்வ இயற்கைக்குப் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன.'' (16:1-3) என்று கீதை சொல்கின்றது. மேலும் கண்ணன் அசுர குணத்தவர் பற்றி குறிப்பிடும் பொழுது, ''பகட்டு, செருக்கு, அகங்காரம், சினம், கொடுமை, அறியாமை, தூய்மையேனும் ஒழுக்கமேனும் வாய்மையேனும் காணப்படாமை எல்லாம் அசுர இயற்கைக்கு பிறந்தவனுக்கு இயல்பாகின்றன.''(16:4-7) என்று குறிப்பிடுகிறார். எனவே மனிதன் சிறந்த ஒழுக்க நெறியிலும் தன்னடத்தையிலும் குணநலத்திலும் திளைக்கவேண்டும் என்பது புலப்படுகிறது.

அசுர குணம் ஆட்சி பெறுவதற்குரிய முக்கிய காரணமாக 'பற்று' என்ற நடத்தையை குறிப்பிடலாம். ஒன்றின்மீது தீவிர பற்று கொள்ளும்போது அது ஒரு தீய முடிவையே கொடுக்கும் என்பதை கண்ணன் பின்வருமாறு சொல்கின்றான். '' பொருட்களில் மனம் ஊன்றுபவனுக்கு அவற்றில் பற்று உண்டாகும். பற்று ஆசை தரும். ஆசை குரோதம் தோற்றுவிக்கும். குரோதம் பெரு மயக்கம் தரும். பெருமயக்கம் நினைவழிக்கும். நினைவழிவால் புத்தி நாசமுறும். புத்தி நாசத்தால் ஆள் அழிவான் (2:62-63) மேலும் , ''ஆன்மாவை அழித்து நரகத்திற்கு வழிகாட்டும் வாயில்கள் மூன்றுள - காமம், குரோதம், உலோபம். ஆதலால் இம்மூன்றையும் விடுக''(16:21) என்று கீதையில் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு, இறைவன் விரும்புகிறவர்களின் குணநலன்களையும், அசுர குணநலன்களையும், அதனால் ஏற்படும் தீமைகளையும் காட்டி நிற்கும் கீதை அவ்வசுர குணங்களில் இருந்து எவ்வாறு விடுபடுவது என்பதையும் குறிப்பிடத்தவறவில்லை.

''ஆமை தன் அவயவங்களை இழுத்துக் கொள்வதைப் போல் எப்புறத்தும் விஷய பதார்த்தங்களினின்று புலன்களை ஒருவன் மீட்க வல்லவனாயின் அவனறிவே நிலை கொண்டது'' (2:58) என்று கீதை விளக்குகிறது. இதையே பின்வருமாறு தெளிவாகக் கூறுகின்றார் பகவான். ''எங்கெங்கு மனம் சஞ்சலமாய் உறுதியின்றி உழலுகிறதோ அங்கங்கே அதை கட்டுப்படுத்தி ஆன்மாவிற்கு வசமாக்கிக் கொள்க'' (6:26) . அதாவது உலகில் மனிதன் அல்லல்படுவதற்கு முக்கிய காரணம் அவனது மனமாகும். எனவே அதை அடக்கிவிட்டால் அசுரகுணங்கள் அண்டாது என்கிறது கீதை. அதாவது, இந்துமதம் காட்டும் நன்னெறியில் நின்று வாழ்க்கையில் வெற்றியடைய உனக்குள் இருந்து உழலும் உன்னை சிறைப்படுத்திக்கொள் என்று கீதை கூறுகிறது. இதன்மூலம், முத்தியின்பம் பெறுவதே மனித வாழ்வின் இலட்சியம் என்பது நிறைவேறக்கூடியதாக இருக்கும்.

இக்கலிகாலத்தில், உலகில் யுத்தங்களால் ஏற்படும் அழிவுகளையும், இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் அழிவுகளையும், பட்டினிச்சாவுகளையும், புதிதாய் உதிக்கும் நோய்களையும் பார்க்குமிடத்து பகவான் கீதையில் கூறியதொன்றை சிந்திக்க வேண்டியதாக உள்ளது. அதாவது, ''எவ்வெப்போது அறங்குன்றி மறம்பொன்றுமோ அவ்வப்போது நான் என்னை படைத்துக்கொள்வேன்'' (4:7) என்றும் ''அறவோரை காக்கவும், தீயோரை மாய்க்கவும், அறத்தை நிலைநாட்டவும் ஊழிதோறும் நான் தோன்றுவேன்'' (4:8) என்றும் பகவான் கூறியுள்ளார். இவ்வாறு சிந்திக்கும் நிலைக்கு மனிதகுலம் மாறியுள்ளமை கவலைக்கிடமானதே. எனவே இந்தக் கலிகாலத்தில் இந்துக்கள் செய்ய வேண்டிய கடமை என்ன என்பது ஒரு கேள்விக்குறி ஆகின்றது.

வழிகாட்டும் கீதையே இதற்குரிய பதிலையும் தருகின்றது. ''நன்று செய்தவன் எவனும் தீய நிலை அடையான்'' (6:40). அதுபோல் ''எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணுவரே என்னை வந்தடைவர்'' (12:4) என்கிறார் பகவான். எனவே கீதையின் வழி நின்று ஒரு உண்மையான இந்துவாக வாழ்வது கடமையாகின்றது. அத்துடன் ''செய்கையின் பயனை கருதாதே, தொழில் செய்யாமலுமிராதே'' (2:47) என்ற கீதையின் வார்த்தைக்கிணங்க நேர்வழியில் முன்னின்று கீதை காட்டும் ஆன்மீக வழியை பின்தொடர்ந்தால் வாழ்வில் உச்சம் பெறலாம் என்பது உண்மை.

# பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஆத்மீக வாழ்வும்
# இராமகிருஷ்ண மிஷனின் பணிகளும்

சி. மகேஸ்வரன், இரண்டாம் வருடம், வணிகவியல் (சிறப்பு).

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற தெய்வீக புருஷர் பகவான் இராமகிருஷ்ணராவார். இந்நூற்றாண்டில் தோன்றிய சீர்திருத்த இயக்கங்களில் இந்துக்களை ஆன்மீகவழியில் ஈடுபடச் செய்த வகையில் இராமகிருஷ்ண மிஷனுக்கும் முக்கிய பங்குண்டு. இராமகிருஷ்ண மிஷனின் தாபகர், இராமகிருஷ்ணரின் முதல் சீடரான சுவாமி விவேகானந்தராவார். இராமகிருஷ்ண பரமஹம்சருடைய வாழ்க்கை வரலாறு பரம்பொருளை நேராகக் காண்பதற்குரிய பயிற்சியின் வரலாறு. அவருடைய வாழ்க்கை எங்களை கடவுளை நேருக்கு நேர் காணத் தூண்டுகிறது. இவருடைய உபதேசங்கள் வெறும் தத்துவ ஞானங்களைப் படித்தவர்களின் உபதேசங்களைப் போன்றவையல்ல. அவை அனுபவமென்னும் புத்தகத்தின் பிரதிகள் அல்லது சொந்த வாழ்க்கையின் அனுபவங்களாகும். எதையும் சந்தேகத்துடன் பார்க்கும் இந்தக் காலத்தில் இவர் ஒளிமயமான உயிரோட்டம் ததும்பும் கடவுள் நம்பிக்கைக்கு உதாரணமாக விளங்குகின்றார்.

சுதிராம் என்பவருக்கும் சந்திரா தேவியாருக்கும் இறைவனின் திருவருளினால் 1836ம் ஆண்டு பெப்ரவரி 17ம் திகதி இந்தியாவில் கல்கத்தா என்ற இடத்திற்கு அண்மையில் உள்ள கிராமமொன்றில் அவதரித்த இவர் இளமையிலேயே பள்ளிப்படிப்பை விட்டு விட்டு தன் ஆற்றல் முழுவதையும் புராண இதிகாசங்களைக் கற்பதிலும் இறை உருவங்களை ஓவியமாக வரைவதிலும் ஈடுபடும் போது பல மணி நேரம் உலகையே மறந்து ஆழ்ந்த தியானத்தில் மூழ்கிவிடுவார். இவர் பெரியவராக வளர வளர தெய்வீக உணர்வுகள் மனதில் பொங்க தொடங்கின. இவர் வாழ்ந்த காலத்தில் இந்துக்களிடையே வர்ணப்பாகுபாடு அதிகமாக காணப்பட்டது. இதனை இவர் வன்மையாக வெறுத்தார். இவர் பிராமணராதலால் தனது பூணூல் விழாவின் போது பூணூல் அணிந்து முடிந்த பிறகு சாஸ்திர விதிப்படி அந்தண சிறுவன் முதலில் தங்கள் உறவினரிடமோ அல்லது அந்தண குலத்தினரிடமோ இருந்து உணவு எடுத்து சாப்பிட வேண்டும். ஆனால், இவரோ சூத்திரர் ஒருவரிடம் உணவு உண்டு 'யாவரும் சமம்' என்ற கொள்கையை வலியுறுத்தினார். இதனாலேயே இவர் வாழ்வு சமூக சீர்திருத்த வாழ்வாக காணப்பட்டது. இவரது இளமைப்பெயர் கதாதரர் ஆகும். கதாதரர் இளமையிலேயே அன்பு, அருள் சாந்தம், சீலம் முதலிய நற்பண்புகளை தன்னகத்தே கொண்டவராக விளங்கியதோடு மட்டுமல்லாது புராண இதிகாசகங்களை நாடகங்களாக நடித்தும் வந்திருக்கின்றார். இவர் இளமையிலேயே உலகப்பற்றற்றிருந்தார். சன்னியாசிகளைக் கண்டால் அவருக்கு பரம சந்தோசம் அவர்களோடு பேசுவதும் அவர்களுக்கு பணிவிடை செய்வதும் உவப்பான காரியங்களாகும். இவ்வாறாக இவரது இளமைக்காலங்கள் ஆத்மீக சிந்தனைகளாலும் இறை உணர்வினாலும் நகர்ந்தன. கல்கத்தாவுக்கு வடக்கே தக்ணேஸ்வரம் என்னுமிடத்தில் ராணிராசமணி அம்மையாரால் கட்டப்பட்ட காளி கோயிலுக்கு அர்ச்சகராக பணிபுரியும் பெரும் பொறுப்பு இவரது சகோதரருக்குப் பின் இவருக்குக் கிடைத்தது. காளிதேவியை ஆராதனை செய்வதில் இவர் காட்டிய பக்திக்கு அளவேயில்லை. அந்த ஜகன்மாதாவைத் தமது தாய் எனவே நம்பினார். தாயைப்பபாத்துக் குழந்தையொன்று கெஞ்சுவதைப் போன்று தேவியுடன் பேசுவார். பின் தோத்திரங்கள் செய்வார். ஆடுவார், பாடுவார், தேவி தனக்கு காட்சியளிக்காததைக் கண்டு மனங்கசிந்து அழுவார். சில வேளைகளில் பக்தி பரவசத்தால் தேவிக்கு அர்ச்சிக்க வேண்டிய புஷ்பங்களைத் தன் தலையிலேயே போட்டுக் கொள்வார். ஆரத்தியெடுக்கும் காலம் கழிந்தும் கூட ஆரத்தியை காட்டிக் கொண்டிருப்பார். இவ்வாறாக தனது எல்லையற்ற பக்தி பரவசத்தை 'காளி பூசையின் போது வெளிப்படுத்தினார், சாரதாதேவி என்ற ஐந்து வயதுப் பெண்ணை விவாகம் செய்த இவர் மீண்டும் தக்ணேஸ்வரத்தில் காளி பூசையை தொடர்ந்து செய்து வந்தார். இவர் தேவியை நோக்கி, '' தாயே அடியேனுக்கு பிரசன்னமாவது எப்போது'' என கதறித் துன்புறுத்துவார். இவ்வாறாக அன்பும் பக்தியும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகையில் ஒரு நாள் தேவி தனக்கு காட்சியளிக்காததற்காக கதாதரர் மிகவும் வருந்தி தம்முயிரை மாய்த்துக் கொள்ள விரும்பினார். இவருடைய துயரத்தைப் பொறுக்காத தேவி இவருக்குக் காட்சி கொடுத்தாள். பிறகு நிர்வி கல்ப சமாதியை அடைவதற்காக இவர் பன்னிரண்டு வருடம் தவம்

புரிந்திருக்கின்றார். இவை இவர் கடவுளில் கொண்டிருந்த எல்லையற்ற நம்பிக்கையை காட்டுகிறது.

இவர் செல்வத்தை ஒரு போதும் மதித்ததில்லை. ஒருகையில் மண்ணையும் மறுகையில் பணத்தையும் வைத்துக் கொண்டு ''பணம் மண், மண் பணம்'' என கூறிக் கொண்டு இரண்டையும் கங்கையில் எறிந்ததை இவரின் வரலாற்றின் மூலமாக அறிகின்றோம். இவர் நிர்வி கல்ப சமாதியடைவதற்காக பல தவங்கள் செய்திருக்கின்றார். இதனால் பல தடவைகள் நோய் வாய்ப்படவும் நேர்ந்திருக்கின்றது. பின்னர் இவர் வைணவ சித்தாந்தத்தை அனுசரித்து பக்தியோகத்தில் கிருஷ்ணரை ஆராதிக்க தொடங்கினார். இதேபோலவே நாட்டில் உள்ள முகமதியமதம் முதலான இதர தர்மங்களையும் சிறிது காலம் அனுசரித்து அவைகளின் மூலமாகவும் இஷ்டசித்தியை வெகு சீக்கிரத்தில் பெற்றார். அப்பால் கிறிஸ்தவ மதத்தையும் அனுசரித்து ஞான நிஷ்டையில் யேசு கிறிஸ்துவைக் கண்டு வாழ்த்தித் திருப்தியடைந்தார். இப்படிப் பல்வேறு சமயங்களின் கோட்பாடுகளை நடைமுறையில் அனுசரித்து அவைகளின் படி பக்தி செய்து, தரிசனம் கண்ட பிறகு, எல்லாமதங்களும் உண்மையே என்றும், சச்சிதானந்தப் பரம்பொருள் ஒன்றே என்றும் அதனையே வெவ்வேறுபட்ட மதங்களும் இறைவனை அடைவதற்கான பல்வேறு வழிகள் என்றும் குறிப்பிடுகின்றார். பிரம்மச்சரிய நிலையில் வேதங்களையும் புராணங்களையும் கற்ற இவர் தமது இல்லற வாழ்வில் சாரதாதேவியாரை இணைத்துக் கொண்டாலும் அவரது உள்ளம் உலகியலை நாடவில்லை. மாறாக ஆன்மீக உணர்வுகளுடனேயே வாழ்க்கையை நடத்தினார். ஒரு நாள் கதாகரர் தனது மனைவி சாரதாதேவியாரிடம் '' உன்னிடம் ஜகன் மாதாவாகிய காளிதேவியின் உருவத்தை தவிர வேறொன்றையும் காணவில்லை'' என்று சொன்னார். இதேபோன்று சாரதாதேவியாரை ஜகன்மாதாவைப் போன்று பாவனை செய்து பூசைகளும் செய்திருக்கின்றார். இவரது வாழ்க்கை ''தூய்மையே தெய்வீகம்'' என்ற கொள்கையை உடையதாகவும், 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற உயர்ந்த பண்பு கொண்டவராகவும், எல்லாமதத்தவரையும் ஒன்றாக நேசிக்கும் பண்பு கொண்ட இவருக்கு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது தாரக மந்திரமாகவும் அமைந்தது. இதனாலேயே இவரது வாழ்க்கை ஆன்மீக வாழ்க்கையாக பிரகாசித்தது.

இராமகிருஷ்ண பரமஹம்சர் பிரமச்சரிய, கிருகஷ்த நிலைகளைக் கடந்து சன்னியாச நிலையினை அடைந்து பல அரிய பெரிய சமயத் தொண்டுகளை செய்தார். இவரது வாழ்க்கை ஆன்மீக சிந்தனை நிறைந்ததாகவும், ஆச்சிரம தர்ம கோட்பாட்டுக்கு உட்பட்டதாகவும் நல்லொழுக்கம் என்பனவும் இணைந்து காணப்பட்டது. பரமஹம்சர் தம்மைப் பார்க்க வருபவர்களுடன் நாள்தோறும் உதயம் முதல் அஸ்தமனம் வரையில் அரிய பல வேத உபநிடத சிந்தனைகளை அவர்களுடைய பக்குவ நிலைக்கேற்ற படி உபதேசம் செய்து வந்தார். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதே இவரது கொள்கையாதலால் தம் சரீர சுகத்தை கொஞ்சமேனும் பொருட்படுத்தாது பிறருக்கு உபதேசம் செய்வதையே பிரதானமானதாக கொண்டிருந்தார். இவரது இறுதிக் காலங்களில் யாரேனும் இவரது நோயுற்ற உடல் நிலையைக் கவனித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டால், அவர் ''எனது முயற்சியினால் ஓர் ஆன்மாவேனும் பந்த பாசங்களில் விடுபட்டு மோட்சத்தை அடையுமானால் அதற்காக என் சரீர வருத்தங்கள் இன்னும் ஆயிரம் மடங்கு அதிகரிக்குமானாலும் ஏற்றுக் கொள்வேன்'' என்பார். எனவே இவர் தனக்கென வாழாப் பிறருக்குரியாளன் ஆவார்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச மொழிகளைப் பார்க்கும் போது அவை மனிதனும் உலகமும், மனிதனுடைய எழுச்சி, ஆன்ம வாழ்க்கைக்கு அவசியமான நெறிகள், மனிதனுக்கும் தெய்வத்துக்குமுள்ள உறவு, ஞானம், பக்தி, கர்மம் போன்றவைகளோடு தொடர்புடையனவாக காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். மனிதன் பந்த பாசங்களில் கட்டுண்டு கிடப்பதனால் அவனால் இறைவனை காணமுடியாது என்பதை குருதேவர் பின்வருமாறு ஒரு உதாரண மூலம் தெளிவுபடுத்துகின்றார். ''இராத்திரியில் ஆகாயத்தில் அனேக நட்சத்திரங்களைக் காண்கின்றாய் ஆனால் சூரியோதயமானதும் அவை தென்படுவதில்லை. ஆதலால் பகற்பொழுதில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லலாமா? ''மனிதனே! உனது அறியாமையினால் நீ இறைவனை காணமுடியாதலால், ஈசுவரனே இல்லையென்று சாதிக்காதே''. இதேபோன்று உலகியல் சுபபோகங்களை அனுபவிப்பவர்களது வழிகளைப் பற்றி இவர் குறிப்பிடும் போது '' ஒட்டகங்களுக்கு முட்செடிகளில் ஆசை அதிகம். அவைகளைத் தின்னத்தின்ன ஒட்டகங்களின் வாயில் இருந்து இரத்தம் அதிகமாக பெருகும் என்றாலும் அவைகள் முட்செடிகளைத் தின்பதை விடுவதில்லை. இதுபோலவே லௌகிகர்களுக்கு கொடிய துன்ப துயரங்களை மிகுதியாக அனுபவித்தாலும் அவர்களுக்கு நற்புத்தி உண்டாவதில்லை''. இவ்வாறாக

இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச மொழிகள் பல்லாயிரக்கணக்கில் உள்ளன.

பரமஹம்சர் பல அரிய யோக சித்திகளை பெற்றிருந்தும் அவற்றை வெளிப்படுத்திப் புகழ்பெற வேண்டும் என்று ஒருபோதும் கருதவில்லை. தாம் செய்கின்ற உபதேசங்களில், சித்திகளை பிறருக்குக்காட்டி அவர்களது புகழை நாட வேண்டாம் என்றும், ''யோகப்பியாசம் செய்வது பிரமத்தோடு இரண்டறக்கலப்பதற்கேயன்றி பாமர ஜனங்களுக்கு விநோதம் உண்டாக்குவதற்கன்றென்றும் அடிக்கடி போதித்திருக்கின்றார். இது இவரது ஆழ்ந்த தெய்வீக உணர்வை வெளிப்படுத்தும் செய்கையாகும்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதற்கிணங்க, வேத உபநிடத சித்தாந்த தத்துவங்களை, ஆன்மீக சிந்தனைகளை சமுதாயத்துக்கு வெளிப்படுத்த சீட பரம்பரை ஒன்றை உருவாக்கினார். அவருள் பிரதானமானவராக சுவாமி விவேகானந்தர் காணப்படுகின்றார். சிவானந்தர், பிரேமானந்தர், பிரம்மானந்தர், அத்தைதானந்தர் என்போரும் இவருடைய சீடர்களில் ஒரு சிலராவர். இவர்களின் மூலமாக பரமஹம்சரின் ஆத்மீக சிந்தனைகளை பிற்காலத்தில் உலக நாடுகளுக்கு பரப்பப்பட்டது. இந்நாட்டவருக்கு, இச்சமயத்தார்க்கு, இம் மொழி பேசும் மக்களுக்கு என்றில்லாமல் மனித இனம் முழுவதற்கும் ஏற்றதாக விளங்கும் பெருமை இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களுக்கு உண்டு. இவ்வாறு நடமாடும் கோயிலாக இவ்வுலகில் வாழ்ந்த இராமகிருஷ்ண தேவர் 1886 ஆகஸ்ட் 16ம் திகதியில் பிரவேசித்து பரப்பிரம்மத்தில் இரண்டறக் கலந்தார்.

19ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற நவீன சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாக இராமகிருஷ்ண மிசன் காணப்படுகின்றது. இது இராமகிருஷ்ணரின் கொள்கைகளைப் போதிக்கவும், அதனை நடைமுறைப்படுத்தவும், இந்துக்களுக்கு தேவையான கல்வி, மருத்துவம் என்பவற்றை வழங்கவும் உருவாக்கப்பட்டது. அத்தோடு இவை அனாதை இல்லமாகவும் சேவையாற்றுகின்றது. எனவே இராமக்கிருஷ்ணரின் செயற்பாடுகளே இராமக்கிருஷ்ண மிஷனின் பணியாக மலர்ந்தது என கூறலாம். சுவாமி விவேகானந்தரால் தோற்றுவிக்கப்பட்ட இப்பணிகளானது இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை தென்கிழக்காசிய நாடுகள் என 100 க்கு மேற்பட்ட நாடுகளில் பரமஹம்சரின் சீடர்கள் மூலமாக பரப்பப்பட்டுக் காணப்படுகின்றது. இதன் தலைமை நிறுவனம் இந்தியாவில் பேலூர் என்ற இடத்தில் காணப்படுகின்றது.

மனிதகுலத்தின் நீண்ட வரலாற்றில் சமய நோக்கும் தத்துவ நோக்கும் இடையறாது செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. மானிட நேயத்தையும் விவேகத்தையும் மறைக்கும் அளவுக்கு சமய தத்துவ பார்வைகள் பழுதடையும் பொழுது சமுதாய வளர்ச்சி தேவைப்படுகின்றது. இந்தக் கால கட்டங்களில் புத்தெளிச்சியையும் புதிய நோக்கையும் தரவல்ல நிறுவனங்கள் தோன்றி ஆன்மீக நெறியின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு வழிவகுத்ததை வரலாறு காண்கின்றது. இப்படியாக தோற்றம் பெற்ற ஒரு ஆத்மீக நிறுவனமே இராமகிருஷ்ண மிஷன் என கொள்ளலாம்.

மனிதநேய ஒருமைப்பாட்டை வளர்க்கும் நன்முயற்சியில் இராமகிருஷ்ண மிஷன் அரும் பங்காற்றி வருகின்றது. அதாவது உலக சமயங்கள் புறத்தே வெவ்வேறு கோணங்களில் காணப்பட்டாலும் அவை அனைத்தும் அகத்தே ஒத்த நோக்கினையே கொண்டுள்ளது என்றும் அவற்றின் முடிவான நோக்கம் மனித நேயத்தை வளர்ப்பதில் தான் அமைந்துள்ளது என தெளிவுபடுத்துகிறது. இதுவே இந் நிறுவனம் உலகுக்கு அளித்த மகத்தான பெரும் பங்களிப்பாக யாவராலும் கருதப்படுகின்றது. அத்தோடு சுவாமி விவேகானந்தரின் 'சிக்காகோ சொற்பொழிவுகள்' ஆன்மீக வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். இந்த சொற்பொழிவுகளின் பின்னரே மேலைத்தேய நாடுகளில் இந்நிறுவனத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன எனலாம். மேலைத்தேயத்தவர் இந்து மதத் தத்துவங்களை உணரவும் அவர்கள் அதனை நம்பவும் பின்பற்றவும் செய்த ஒரே ஒரு நிறுவனம் என்றால் அது இராமகிருஷ்ண மிஷனையே சாரும். சிக்காகோ சொற்பொழிவுகள் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகவும், பல்வேறு காரணங்களால் பிளவுண்டு கிடக்கும் இன்றைய மனித சமுதாயத்துக்கு இச் செய்தி மிகவும் தேவையாகவும் உள்ளது.

புத்த பெருமான் வாழ்ந்த காலத்துக்கு முன்பே இந்து மதத்தில் சன்னியாசம் என்பது நிச்சயமாக இருந்திருக்கின்றது. 'சன்னியாச யோகம்' என்ற சொல் உபநிஷத காலத்திலேயே வழக்கில் இருந்திருக்கிறது. ஆனால் இந்து மதத்தில் சன்னியாசிகள் ஒரு சங்கமாக இருந்து ஒரு அணியின் கீழ் செயற்பட்டதில்லை. இந்தப் பணியை இந்து மதத்தின் வரலாற்றிலேயே முதன் முதலாக சுவாமி விவேகானந்தர் தான் இராமகிருஷ்ண மிஷன் வாயிலாக ஆரம்பித்து வைத்தார். எனவே சன்னியாசிகளின் ஆன்மீக சேவைகள் மூலம் இந்து சமய வளர்ச்சிக்கு உதவிய

நிறுவனம் இராமகிருஷ்ண மிஷன் என கூறின் அது மிகையாகாது.

இராமகிருஷ்ண சங்கம் வேதாந்த பிரச்சாரத்துக்காக பல சமய பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றது. உதாரணமாக பிரபுத்த பாரதம், இராமகிருஷ்ண விஜயம் போன்ற இதழ்களை குறிப்பிடலாம். இவைகளின் மூலமாக இந்து மதத்தின் ஆழ்ந்த தத்துவ ஞானத்தினை மக்களுக்கு தெளிவுபடுத்துகின்றனர். அத்தோடு சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும், ஆத்மீகப் புரட்சிக் கருத்துக்களையும் இவ் வெளியீடுகள் மூலம் காணலாம். இவற்றை விட ஸ்ரீமத் பகவத்கீதை, தேவார திருவாசகங்களுக்கு மிக தெளிவாக உரை எழுதி வெளியிட்டுள்ளது. இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா தேவியார், போன்றோரின் வாழ்க்கையும் அவர்களுடைய உபதேசங்களையும் பல்வேறு விதங்களில் மக்களுக்கு உணர்த்த கூடியவகையில் நூல்களை வெளியிட்டு வருகின்றது.

இராமகிருஷ்ண மிஷன் அடியார்களின் குருபூஜை, சிவராத்திரி, நவராத்திரி, சமய பண்டிகைகள் முதலான சமய விழாக்களை வருடம் தோறும் நடாத்தி, இதன் மூலம் அவ்விழாக்களில் பொதிந்துள்ள தத்துவக்கருத்துக்களை மக்களுக்கு பல சமய சொற்பொழிவுகள் வாயிலாக தெளிவுபடுத்துகின்றது. இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களை பொருத்தமான இடங்களில் சொற்பொழிவுகள் மூலம் சமுதாயத்துக்கு உணரவைப்பது இராமகிருஷ்ண மிஷனின் பிரதான பணியாகும். இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகள், சமய வகுப்புக்கள், அனாதை இல்லங்கள் மூலமாக இந்துக்களின் குருகுல கல்வி மரபை பேணி வருகின்றது. உதாரணமாக இந்து மாணவர்கள் சமண, பௌத்த, கிறிஸ்தவ மதங்களைத் தழுவாமல் தேவையான இடங்களில் குருகுலங்களை அமைத்து புராண இதிகாச கல்விமுறைகளைப் போதித்து வ்ருகின்றது. இதற்கு மடத்துறவிகள் உதவிபுரிவதை நாம் காணலாம். இதில் குறிப்பாக அனாதை மாணவர்கள் தமது வறுமை காரணமாக வேறு வழிகளில் செல்லாமல் அவர்களை தகுந்த முறையில் பாதுகாத்து அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, கல்வி என்பவற்றை தமது செலவிலேயே செய்யும் மகத்தான சேவை தற்கால இந்து மத்த்தின் வளர்ச்சிக்கு அவசியமாகும். இதன் மூலம் இராமகிருஷ்ண மிஷன் சமூக சமத்துவம் சமூக சமரசத்தை பேணிக்காத்து வருகின்றது. உதாரணமாக, இலங்கையில் மட்டக்களப்பில் கல்லடி-உப்போடை என்னுமிடத்தில் உள்ள கிளை நிறுவனத்தின் பணிகளை குறிப்பிடலாம். கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை போன்ற இந்துக்களின் நல்லொழுக்கங்களை வளர்க்கவும் இந் நிறுவனம் தவறவில்லை. அத்தோடு இந்துக்களின் வழிபாட்டு மரபு, இறைவனை அடைவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், சமய அனுஷ்டானங்கள் என்பவற்றையும் இந் நிறுவனம் இந்து சமுதாயத்துக்கு அவ்வப்போது உணர்த்தி வருகின்றது. இலங்கையில் இதன் தலைமை நிறுவனம் 1930 ம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கிளைகள் கிழக்கு மாகாணத்தில் கல்லடி-உப்போடை, காரைதீவு என்னுமிடங்களில் உள்ளன.

இந் நிறுவனம் ஆற்றுகின்ற மகத்தான பணி என்னவென்றால் சமயங்களிடையே பூசல்களைத் தவிர்த்து அவற்றிற்கிடையே ஒற்றுமையை பேணுவதும், அத்தோடு வாழ்க்கையின் அனைத்து செயல்களின் மேம்பாட்டுக்கெல்லாம் சமய உணர்வே ஆதாரம் என்பதனை உறுதியாகப் பற்றி உபதேசம் செய்து வருவதுமாகும்.

எனவே இந்தியாவில் தோன்றிய ஆன்மீகத் தலைவர்களில் இராமகிருஷ்ணருடைய ஆத்மீக வாழ்வும் அவரது உபதேசங்களும் சமகால இந்துக்களுக்கு மிகவும் அத்தியாவசியமானதும் இந்து தர்மம் எதிர்காலத்தில் ஒரு சிறந்த இடத்தை அடைய தேவையானதுமாகும். ''இவர் உலகுக்கு அளித்த ஞான பொக்கிஷத்தை முழுமையாகக் கூறுவதென்றால் எவராலும் இயலாத காரியமாகும். அவர்கள் தெரிந்து கொண்டதை பேசுகின்றார்கள்'' என சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். இராமகிருஷ்ண மிஷனின் பணிகள் பெரும்பாலும் இராமகிருஷ்ணரின் உபதேசங்களை அடிப்படையாக கொண்டவையாகும். இதன் சேவை தற்கால இந்துமதம் சீரழிந்து போகாமல் காப்பதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறது எனக் குறிப்பிடலாம்.

**வாழ்க! வளர்க! இராமகிருஷ்ண இயக்கம்.**

# மனிதவாழ்க்கையும் இந்துமதமும்

இளையதம்பி சாந்தசொரூபன், பொறியியற் பீடம்

இந்துமதம் மிகவும் தொன்மை வாய்ந்தது. சிந்து வெளியில் கி.மு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என புதைபொருள் ஆராய்ச்சிகள் இன்று முடிவு செய்துள்ளன. இம்மதம் இன்றும் வளர்ச்சி நிலையில் குன்றாதிருப்பதற்குக் காரணம் மனித வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்திருப்பதேயாகும். பல தெய்வ வணக்கங்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. மனித சிந்தனையின் கடவுட் கோட்பாடுகளுக்கு இடமளித்த நிலையே பல தெய்வ வணக்கத்திற்கு அடிகோலியது எனலாம். இந்துமதம் அவைதீக மதங்கள் போன்று வெறும் தத்துவ நெறியாக அமைந்ததன்று. தத்துவமும் மனித வாழ்க்கையும் இணைந்த நிலையில் ஆத்மீக விடுதலையை கோரி நிற்பது.

சமயங்கள் யாவும் ஆத்மீக விடுதலையை இலட்சியமாக கொண்ட போதும் மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியாத தத்துவங்களை எடுத்துக்காட்டினால் அச்சமயங்கள் குறித்த இலட்சியங்களை அடைய மாட்டா. இக்காரணத்தினாலேயே இந்துமதம் கட்புலனுக்குப் புலப்படாத உண்மைப் பொருளாகிய இறையை காட்சிப் பொருள், கருத்துப்பொருள், சான்றுரை எனும் மூன்று வழியில் விளக்கம் கூற முனைந்தமை மனித வாழ்வோடு இணைந்தமையை எடுத்துக் காட்டுகிறது.

இந்துமதம் மனித சிந்தனைக்கு வழிகோலியுள்ளது என்பதை முன்னர் அறிந்தோம். ஆதலினால் கண்ணால் காணப்படும் இவ்வுலகமே சிந்தனைக்கு முதற்படியாகும். நாம் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்ற இந்த உலகமானது இறைவனாற் தரப்பட்டது என்பதை இந்து மக்கள் கருத்திற் கொண்டுள்ளார்கள். உலகம் இறைவனால் தரப்பட்டாலும் எல்லா உயிர்களினதும் இன்ப துன்பங்கள் ஒரே மாதிரி அமைவதில்லை. இதற்குக் காரணம் அவரவர் செய்த கன்ம வினை எனவும் அதுவும் இறையால் அளந்து தரப்படுகிறது எனவும் கொள்கின்ற காரணத்தினால் மதம் மனித வாழ்க்கையில் முக்கியமான ஓர் இடத்தை வகிக்கின்றது. ஏனெனில் இன்பதுன்பங்கள் அவரவர் செய்த வினையால் ஏற்படுகின்றதென்ற கருத்து மக்களிடையே நிலவுவதனால் அவர்களை நற்செயல் புரியத்தூண்டுகிறது. இதனால் மனிதன் பஞ்சமாபாதகங்களையும் இம்சையையும் நீக்கி வாழுகின்றான். இந்துமத வாழ்க்கைநெறி மனிதவாழ்வின் ஒவ்வோர் கூறிலும் இணைந்து இருப்பதைக் காண முடிகின்றது. கர்மம் (அல்லது வினை) பற்றிய கொள்கை எப்போது 'செயல்' பற்றிய கருத்துத் தோன்றியதோ அன்றே அதுவும் தோற்றம் பெற்றது. வேதகாலத்தில் கிரியையெனும் செயல்முறையில் ஈடுபட்ட மக்களிடத்தில் ''ரிதம்'' என்றும் கன்மக் கோட்பாட்டுக் கடவுள் பற்றிய சிந்தனையும் உருவெடுத்தது. இந்தியாவில் தோன்றிய எல்லா மதங்களிலும் இக்கொள்கை நுளைந்தது எனலாம். வேதத்தின் மேலான உரிமையை ஏற்றுக் கொள்ளாத சமணம், பௌத்தம் ஆகிய மதங்களும் கன்மக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்துமதத்தின் பிரிவுகள் முழுமையாக கன்மக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்ட பொழுதிலும் உபநிடத சிந்தனைகளின் வளர்ச்சி களினால் கன்மத்தை தீர்க்கும் வழிகளை வெவ்வேறு மார்க்கங்களில் காட்டியுள்ளன. எனவே இந்துமதம் மனித வாழ்வினை அடிப்படையாகக் கொண்டு செயல்முறைகளையும் தியான முறைகளையும் கன்ம விலகலுக்கு வழிகளாகக் கைக் கொண்டது.

இந்து மதத்தில் தோன்றிய அருள் வெளிப்பாடுகள் மனிதனின் ஆத்மீக விடுதலைக்கு வித்து இடும் சான்றுரைகளாகும். இவ்வகையில் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள் என்பவற்றைக் கூறலாம். சான்றுரைகள் இந்துமதத்தின் உன்னத நிலையை எடுத்துக்காட்டும் சின்னங்களாகும். இங்கு கூறப்பட்ட சான்றுரைகளை (அருள் வெளிப்பாடுகள்) எடுத்து நோக்கும் போது மனித வாழ்வின் நெறிப்பாடுகள் அங்கு புலப்படுகின்றன. தனிமனிதனதும், சமூகத்தினதும் நெறிப்பாடுகள் ஒவ்வொரு துறையிலும் தெற்றெனப் புலப்படுகின்றன. அவற்றுட் புராணங்கள் இதிகாசங்கள் நெறியல்லா நெறியில் வாழ்ந்தோருக்கு ஏற்பட்ட அல்லல்களும் நெறி பிறழ்ந்து வாழ்ந்தோருக்கேற்பட்ட நல்லவைகளும் வரலாறு போல உணர்த்தப்பட்டன. இந்துமதம் தனக்கு (பிரமண) பிரமாணமாகக் கொண்ட நூல்கள் யாவற்றிலும் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டு தம் கருத்தை புலப்படுத்துவதால் இந்துமதம் ஒரு வாழ்க்கை நெறியேயாகும்.

வேதங்கள் ஆகமங்கள் வடமொழியைச் சார்ந்தன. வடமொழியைச் சார்ந்தனவாக இருந்தபோதிலும் இந்து மத நோக்கில் அவை சிறந்த பிரமாண நூல்களே. வேதங்கள் எனினும் ஆகமங்கள் எனினும் அதன் உட்பிரிவுகளை வகுக்கும் போது வாழும் மனித வளர்ச்சிப் படிமுறைக்கு அமைவாகவே வகுத்துள்ளன. இவ்வகையில் பிரமச்சாரியம், கிருகஷ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற வளர்ச்சிப்படிமுறை ஆத்மீக விடுதலைக்கு (முத்திக்கு) வழி காட்டியதால் அவ்வளர்ச்சிப் படிமுறைக்கு ஏற்ற கடமைகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவையே ஆச்சிரம தர்மங்கள் என அழைக்கப்பட்டன. ஆகம நெறியில் வர்ணங்கள் தொடர்புபடுத்தப்படாத நிலையில் சரிகையாளன், கிரிகையாளர், யோகிகள், ஞானிகள் என வளர்ச்சிப் படிமுறைகள் நால்வகைப்படுத்தின. இவ்வாறு ஆச்சிரமங்களில் ஒழுக்கங்கள் வரைவுபடுத்தப்பட்டது போல் ஆகமங்களிலும் சரியை முதலான நெறியாளர்களுக்கு ஒழுக்கங்கள் வரைவு படுத்தப்பட்டன. இந்து மதத்தின் ஒவ்வோர் நோக்கும் மனித வாழ்வை உன்னதப்படுத்துவதேயாகும்.

இந்துமதம் நெகிழ்ச்சி உடைய ஓர் மதமாகும். காலத்திற்குக் காலம் புதிய வரவுகளை தன்னகத்தே ஏற்றுக் கொள்ளும் சிறப்பு வாய்ந்தது. கி.மு. தோற்றம் பெற்ற இச்சமயம் கி.பி. இருபதாம் நூற்றாண்டு வரையில் வாழ்ந்து கொண்டு இருப்பது மட்டுமன்றி எத்தனையோ அருளாளர்களையும் தோற்றுவித்து தர்மசாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள், சீர்திருத்த இயக்கங்கள், இந்து மாமன்றங்கள் ஆகியன காலத்திற்குக் காலம் தோன்றி மனித சேவையை மகேசன் சேவையாக்க முனைந்து கொண்டே இருப்பதனால் இந்துமதம் மனித வாழ்வை என்றும் விட்டு விலக முடியாது.

ஐரோப்பியரது வரவினால் நல்ல சில அம்சங்களை பெற்றுக் கொள்ள இந்துமதம் விரும்பியது. இச் சமயத்திற்குத் தேவையான சீர்திருத்தங்களை பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணமிஷன் போன்ற இயக்கங்களும் மகாத்மா காந்தி, விவேகானந்தர் முதலிய வழிகாட்டிகளும் நடைமுறைப்படுத்தியதோடு வாழ்ந்தும் காட்டினார்கள். இவையாவும் இந்துமதம் மனிதவாழ்வுக்காக எங்ஙனம் நெகிழ்ந்தது எனக் காட்டுகின்றது.

இந்து மதத்தில் தோன்றிய அருளாளர்கள் மதம் மக்களுக்காகவே அன்றி வெறும் கோட்பாடுகளுக்காக அல்ல என்பதை தமது வாழ்வின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளனர். இவர்களில் முன்னணியில் சிறந்து நிற்போர் நால்வர் . அவர்கள் வாழ்ந்த காலத்தில் சமணம் பௌத்தம் போன்ற மதங்கள் வாழ்வு நெறியை விட்டு விலகி சமயம் கூறும் நெறி துறவென அறிவுறுத்தி அழைத்துச் சென்றன. இந்த வேளையில் மக்கள் வாழ்வும் இறையும் இணைந்த வாழ்க்கையும் சமய உண்மைகள் நிறைந்தவை என்பதை எடுத்துக் காட்டும் நோக்குடனேயே மக்கள் துயர் கண்ட வேளையில் அற்புதங்கள் ஆற்றி இந்து மதத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டினர். பாம்பு கடித்து இறந்த வணிகனையும், பாம்பு கடித்து இறந்த மூத்த திருநாவுக்கரசரையும் உயிர் பெற்று எழ சம்பந்தரும் அப்பரும் அற்புதம் செய்ததோடு திருவீழிமிழலையில் மக்களின் பஞ்சம் தீர்க்கப் படிக்காசும் பெற்றனர். சுந்தரப் பெருமான் முதல் வாய்ப்பிள்ளையை மீட்டு மக்கள் பணியை மேற்கொண்டனர். மதமும் மதத்தலைவர்களும் செய்த சேவைகள் மனித வாழ்வை நலம் பெற மதம் எவ்வளவிற்கு உதவி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர்.

காலத்திற்குக் காலம் பல்வேறு சிந்தனைகள் ஏற்பட இடம் கொடுத்த இந்து மதம் கிரியை முறைகளினால் மக்கள் வாழ்க்கையில் நெருங்கிய தொடர்பை பெற்றிருந்தது. இக்கிரியை முறைகளில் ஆலயங்களும் தனிமனித வாழ்வும் இணைந்தமை கண்கூடு. இன்றுவரையில் இந்துமதத்தின் உயிர்நாடியாக கிரியைகள் விளங்குகின்றன. ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் பரார்த்த கிரியைகள் என்றும், தனிமனித வாழ்வை தொடர்புபடுத்துபவை ஆன்மார்த்த கிரியைகள் என்றும், பெயர் பெறுகின்றன. ஆன்மார்த்தக் கிரியைகள், பிறப்புத் தொடக்கம் இறக்கும் வரை உள்ளவை பூர்வக் கிரியைகள் என்றும், இறப்பின் பின்பும் ஆத்மாவிற்கோர் நிலை உண்டு என்னும் நோக்கில் நடைபெறுவன அபரக்கிரியைகள் என்றும் (மரணக்கிரியை, அந்தியேட்டி, பிதிர் அர்ப்பணம் முதலிய) பெயர் பெறுகின்றன. இவ்வாறு கிரியைகள் இடம் பெற்றது மட்டுமன்றி ஒவ்வோர் மனிதனதும் அன்றாட ஒழுக்காற்று நடவடிக்கைகள் கிரியை முறையாகவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு காட்டப்பட்டுள்ள கிரியைகள் புற உடல் நலம் பேணுவதற்குரியனவும் ஆத்மீகம் வளர்ப்பதற்கு உரியனவுமாக இணைந்துள்ளன. சுருங்கக்கூறின் இவற்றில் சமயக்கருத்துக்கள் மட்டுமன்றி அவற்றை எத்துணையும் ஏற்புடையது என நிறுவ விஞ்ஞானக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

கிரியைகள் அழகுக் கோலங்களை எடுத்துக் காட்டி முருகியல் உணர்வை வளர்ச்சி பெறச் செய்து ஆத்மீகத்திற்கு உரம் ஊட்டுகின்றன. கிரியைகள் கணிதம், இரசாயனம், பௌதீகம் போன்ற விஞ்ஞானக் கூறுகள் கிரியைகளில் இடம்பெறும் அமைப்புக்களிலும், திரவியங்களிலும், செயல்முறைகளிலும் விரிந்து கிடக்கின்றன. பசுவிலிருந்து பெறப்படும் பஞ்ச கௌவியங்களும் மந்திரமுறைப்படி ஒன்று சேர்க்கப்படும் பொழுது இரசாயன மாற்றத்தின் மூலம்

சிறந்த விளைவு ஏற்படுகின்றது. தானியங்களின் உயிர் வளர்ச்சியை சூரிய ஒளியிலும் நிழலிலும் பகுத்துக் காண்பதை அஸ்குரார்ப்பணமெனும் கிரியை துலாம்பரப்படுத்துகின்றது. தானியங்களின் உயிர்ச்சத்துக்கள் இருப்பதென்பதை விஞ்ஞானம் எடுத்துக் காட்டுவதை ஆத்மீகப்பலம் அத்துணை என்பதை ஆஸ்கனம் காட்டுகின்றது. மலர்கள் பச்சிலைகள் பௌதீக உலகில் சூரிய ஒளி வர்ணங்களோடு தொடர்புபடுவது போல தெய்வீக ஒளி மலர்கள், பச்சிலைகளோடு தொடர்புடையதாகின்றது. பௌதீக ஒலி தெய்வத்தின் குரலோடு தொடர்புபடுவது மட்டுமன்றி ஆன்ம இலக்குப் பொருளை அடைகின்றது. விஞ்ஞானம் இவற்றை அதிர்வு எண்களால் புலப்படுத்தும். இந்துமதச் சின்னங்களெனக் குறிப்பிடப்படும் வீபூதி, உருத்திராக்கம், காவியுடை முதலியன விஞ்ஞானக் கருத்துக்களுக்கு ஏதுவாக அமைந்து புறத்தையும் அகத்தையும் தூய்மையாக்குகின்றன. வீபூதி உடற்கூறுகளைத் தாக்கும் எதிரணுக்களை விலக்குவதுடன் அணிவாரிடத்து அருட்செய்வதைக் குவியச் செய்கின்றது. இங்ஙனம் உருத்திராக்கம் காவி வஷ்திரம் போன்றவை பல்வேறு வழிகளிலும் மனிதவாழ்வை அகமும் புறமும் தூய்மைப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன.

இல்லறக் கிரிகைகளில் இடம் பெறும் ஜாதகர்மம் முதலிய பதினாறு கிரியைகளும் மேற்கூறியவாறு உடல்நலம் பேணுபனவாகவும் உளநலம் பேணுபனவாகவும் அமைந்துள்ளதை தனித்து நோக்கின் புலப்படும்.

இந்துமதத்திற்குச் சிறப்பான அம்சங்களில் விக்கிர வணக்கம், ஆலய வழிபாடு மிக முக்கியமானவை. விக்கிர வழிபாடு மனித பாவனைகளை வளர்ச்சி பெறச் செய்யும் சாதனமாகும். விக்கிரகங்கள் உலோகங்களினாலும், கல்லினாலும், மரத்தினாலும் நிர்மாணிக்கப்படுகின்றன. இம்மூலப் பொருட்கள் விஞ்ஞான கருத்திற்கேற்ற முறையில் அமையப் பெற்றவையே. உலோகங்களின் அதிர்வுகளும், கற்களில் ஐம்பூதங்களும், மரங்களால் பிரதிபலிப்புக்களும் தெய்வீக சம்பந்தப்பாட்டால் மனித வாழ்விற்குப் பயன் அளிக்கின்றது என விஞ்ஞானம் காலத்திற்கு காலம் கண்டு கொண்டது வியப்பன்று. ஆலயங்கள் யாவும் கலைக்கூடங்களாக விளங்கியுள்ளன. இக்கலைகள் யாவும் நுண்கலைகள் என அழைக்கப்படுகின்றன. அவை கட்டடம் சிற்பம் ஓவியம் வர்ணம் என்பன ஆகும். நடனக்கலையில் 108 தாண்டவங்களையும் நடராசப் பெருமானே நிகழ்த்தியுள்ளார். வீணா தெட்சணாமூர்த்தியாக அமர்ந்து வேதம் மீட்டியுள்ளார். இதனால் கலைகள் யாவும் தெய்வீகக் கலைகளாக மிளிர்கின்றன. இவை மிளிருமிடங்கள் மனித இயல்பூக்கங்ளிலேயே பிண்ணிப்பிணைந்திருக்கின்றன. இசைக்கு மயங்காதவர் உலகில் இல்லை. இதன் பரிமாணங்கள் மனிதவாழ்வில் பரிபூரணமாகச் சிவனிலுள்ளது. ஆலயங்கள் மனித வாழ்க்கையின் ஆனந்த ஆத்மவயப்பாட்டு நிலையங்கள் ஆகின்றன. மதம் ஆலயத்தை ஊடகமாகக் கொண்டு தனிமனித சமூக வாழ்வில் பிரதிபலிக்கின்றன.

இந்து மதத்தின் கடவுட் கொள்கையும், நம்பிக்கைகளையும் வழிப்படுத்தும் முறைகளையும் நன்கு ஆராயுமிடத்து அவை மனித வாழ்விற்கு இன்றியமையாத கருவூலங்களாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற இந்துமத கோட்பாடும், அன்புதான் இன்ப ஊற்று, அன்பே சிவம், பிறரிடத்து அன்பாக இரு, ஒருவரை ஒருவர் புரிந்து புரிந்துணர்வுடன் இருக்க வேண்டும் என்ற கருத்துக்கள் இன்று மேலோங்கி வருகின்றன. உலகில் சமாதானமும், அமைதியும் வேண்டும் என்று உலகெங்கும் மக்கள் பல்கூரால் கொடுத்தவண்ணமிருக்கிறார்கள். இதை அன்றே இந்துமதம் சொன்னது ஐம்பொறிகளாகிய மெய், வாய், மூக்கு, கண், காது என்பவற்றை அடக்கி, பஞ்சமா பாதங்களாகிய கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், குருநிந்தை என்பவற்றை தவிர்த்து வாழவும், முப்பொறிகளாகிய மனம், வாக்கு காயம் எவ்பவற்றால் எவர்க்கும் தீங்கு செய்யாமலிருக்கவும் உன்னைவிட பிறரை நேசிக்கவும் ஒருவனால் பழகிக் கொள்ள முடியுமானால் அவன் இந்துமதத்தின் தலைவன் ஆகிவிடுகிறான். உலகில் மக்களுக்கு ஆன்மீக விடுதலையை பெற்றுக் கொடுத்து அமைதியையும், சமாதானத்தையும் நிலைபெறச் செய்யும் வல்லவனாக வளர்ந்து விடுகிறான். இந்த பழக்க வழக்கங்கள் மூட நம்பிக்கைகள் என்று சிலரால் காணப்படுவது அவர்களின் காரணமறியாத தன்மையேயாகும். உதாரணமாக காவடி எடுத்தல் தீமிதித்தல், துடக்குக் காத்தல் போன்றவற்றைக் கூறுவர். ஆனால், எச்சமயத்திலும் இப்படியான காரணம் கண்டு கொள்ள முடியாத பழக்கவழக்கங்கள் உண்டு. இவற்றிற்கு நாளடைவில் விஞ்ஞான உலகம் காரணம் கண்டு கொள்ளும் பொழுது யாவரும் இதன் உண்மைகளை உணர்வர். இதுவரையில் இந்துமதம் பல்வேறு வகையிலும் வாழ்க்கையோடு இணைந்துள்ளதென்பதை விஞ்ஞானமே கண்டு வியப்படைகிறது. காயத்திரி மந்திரத்தின் பெருமையை உணர்ந்து விஞ்ஞான கூட்டங்களில் புலக்காட்சிக்குப் பொருள்படுத்தி உள்ளதால் புரிந்து கொள்ளலாம். விஞ்ஞானம் எவ்வளவுக்கு மனித வாழ்க்கையோடு இணைந்துள்ளதோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்துமதமும் மெய்ஞ்ஞானமாக இணைந்துள்ளது.

# உன்னைப் பிரிகையிலே முருகா ........

மு. தாரகன்
விஞ்ஞானபீடம்(இறுதி வருடம்)

கல்வி கற்றிடவே பலமைல் தாண்டி
நாமிங்கு வந்தோம் - ஆனால்
அறிவோடு ஆன்மீகத்தையும் அன்பையும்
அல்லவா கற்றுக் கொண்டோம் குறிஞ்சிக்குமரா
உன் மூலமாக

குறிஞ்சித் தென்றல் மெதுவாய் உடல் வருடிச்செல்ல
பின்னால் வெகு அருகில் மஞ்சள் சூரியன்
மலைகளிடையே புதைய - உன் வாசலில்
மணம் கமிழும் தீபாராதனையில்
மனமுருகி வணங்கி நின்ற நாட்கள்
இன்று மனம் முழுக்க நிரம்பி நிற்கிறது

கடலில் விழுந்த மழைத்துளியாய்
தொலைந்திருப்போம் - புற்றரையில்
அதிகாலையில் பரவிய பனித்துளிகளாய்
கரைந்திருப்போம் - கந்தா
உன் தாழ் பணியாதிருந்தால்

வாலிப வயதில் நாகரீகம் என
நாத்திகம் பேசிய எமை - நாத்திகனாய்
நின்று ஆத்திகனாக்கியவனே - முருகா
உமை நாம் எப்படி மறவோமப்பா

எம்மிடையே நீ மதப்பற்றை மட்டுமா
வளர்த்தாய் - கூடவே மனிதத்தையும்
அல்லவா விதைத்து விட்டாய் - நாளை
நீ விதைத்த மனிதம் விருட்சமாய்
நிச்சயம் நிழல் பரப்பும்

மலை ஏறி உன்னிடம் வந்து உன்னை
மட்டுமா நேசிக்கக் கற்றுக் கொண்டோம்
வரும் வழியில் புத்தரையும், யேசுவையும்
அல்லாவையும் அல்லவா நேசிக்க
கற்றுக் கொண்டோம்

சொந்த வாழ்க்கையின் சோகங்களை
எல்லாம் மூட்டைகளாக முடிந்து
உன்னிடம் தந்துவிட்டு பட்டாம் பூச்சிகளாக
கவலையின்றி சிறகடித்தோம் இன்றுவரை
நாளை மீண்டும் புதிய வாழ்க்கை
புதிய மனிதர், புதிய சோகங்கள் - என்றாலும்
துணிவுடன் எதிர்கொள்வோம் - நீ
துணையிருப்பாய் வேல்முருகா

நாளை மீண்டும் எங்கோ ஏதோ
ஒரு தேசத்தில் ஒருவரையொருவர்
சந்திக்கும் கணம் - இந்த மலையின்
அழகு, மண்ணின் வாசனை - கூடவே
இக்கோயிலின் மணியோசை - பசுமையான
நினைவுகளாய் நெஞ்சை நிறைக்கும்
சோகம் மௌனத்தை சொந்தமாக்கும்.

பிரிவுகள் ஒன்றும் எமக்கு புதிதில்லையே - இன்று
உன்னை பிரிந்து, இந்த கல்விச்சாலையை விட்டு
ஒட்டி உறவாடிய இனிய உள்ளங்களிடம்
விடைபெற்று இனிய நினைவுகளுடன்
பிரிகிறோம் - எங்கிருந்தாலும் எமக்கு
உறுதுணையாய் உன்னருள் நிலைக்கும்
என்ற நம்பிக்கையில்.

நன்றி சொல்லவே எமக்கு வார்த்தை
இல்லையே ஞானக்குமரா - ஆனால்
தாய் தன்பிள்ளையிடம் சுரக்கும் அன்பிற்கு
நன்றி எதிர்பார்ப்பதில்லையே.

*With Best Compliments From*

**VIJEYA ENTERPRISE**

44-B, 4th Cross Street,
COLOMBO-11.
T.PHONE: 437990, 338116.

*With Best Compliments From*

**Silver Krown Hardware**

**Importers General Hardware Merchants and Government Corporation Suppliers**

23, Abdul Jabbar Mawatha
Colombo-12. Sri Lanka.
T'Phone: 431419, 23712.

*With Best Compliments From*

**Popular Hardware (Pte) Ltd**

**Importers & General Hardware Merchants**

17, ABDUL JABBAR MAWATHA,
COLOMBO-12,
SRI LANKA.
TEL: 431152, 432504, 432506
ATTN: POPULAR

*With Best Compliments From*

**JANATHA STEELS**

**IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS**

NO: 20, QUARRY ROAD,
COLOMBO-12
Tel: 421412, 325807

*With Best Compliments From*

**AUM**

## K. S. K. BROTHERS

## JEWELLERS

*86, COLOMBO STREET,*
*KANDY.*
*PHONE : 22548.*

*With Best Compliments From*

**ஓம்**

**இந்து தருமம்**
**நல்லபடி வெளிவர**
**பிரார்த்திக்கின்றோம்**

**A. அரியரத்தினம்,**
**215, கொழும்பு வீதி,**
**கண்டி.**

*With Best Compliments From*

## METRO METALS

**IMPORTERS**
**GENERAL HARDWARE**
**MERCHANTS CORPORATION**
**&**
**CONSTRUCTION SUPPLIERS**

*37,QUARRY ROAD,*
*COLOMBO-12,*
*SRI LANKA.*

*TEL: 440956, 440954*
*TELEX: 21583 TELECO CE ATT: METRO*

*With Best Compliments From*

## TORRINO STEELS

**Importers & General Hardware**
**Merchants**

*39, Quarry Road,*
*Colomb- 12,*
*Sri Lanka.*
*Telephone: 440955, 324698, 423711.*

*With Best Compliments From*

**WOODLANDS COMPANY**

**GENERAL MERCHANTS**
**&**
**COMMISSION AGENTS**

*192,4th Cross Street,*
*COLOMBO 11.*
*T'Phone: 422426, 327451.*

*With Best Compliments From*

**Central Agencies (Pte) Ltd.**

**IMPORTERS-CONTRACTORS-SUPPLIERS**
**WHOLESALE DEALERS IN ELECTRICAL GOODS**

*111, Kotugodella Vidiya*
*Kandy.*
*Phone: 32290, 24203.*
*Fax: 32290.*

*With Best Compliments From*

**V.MANICKAM & BROTHER**

**IMPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**
**SUGAR RICE**

34 4th CROSS STREET,
COLOMBO-11.

T.P.NO: 323408,
323986, 432347
FAX: 421972
TELEGRAMS: THAVAYOGA

*With Best Compliments From*

**LANKA PRODUCTS TRADES**

**Dealers in Groceries, Dryfish & Commission Agents**

*21, St. john's Road,*
*COLOMBO-11.*

*phone: 326740*

*With Best Compliments From*

JAYANTHY S

*DEALERS IN TEXTILE*

**106, COLOMBO ST,**
**KANDY.**
**DIAL : 22464**

*With Best Compliments From*

**Eagle Electricals**

*CONTRACTORS & DEALERS IN ELECTRICAL GOODS*

T.P. 22913
34573

5, KUMARA VEEDIYA
KANDY.

*With Best Compliments From*

*FOR 22KT. FINE & MOD JEWELLERY*

**SRI LEKAH**
**JEWELLERS**

***NO. 55, YATINUWARA VEEDIYA,***
***KANDY.***
***DIAL. 32430***

*With Best Compliments From*

**SRI HARAN HARDWARE**

*Dealers in General Hardware*
*Paint P.V.C. Pipes & Power Tools*
*Agents for Permoglaze Paints & Anton Products*

182, Colombo Street,
KANDY.

T Phone: 23750
32371

*With Best Compliments From*

# GATEWAY METALS

**GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS**

*335, OLD MOOR STREET,*
*COLOMBO- 12.*
*TEL: 337554, 438624.*

*With Best Compliments From*

# MEDO STEELS

**Importers & General Hardware Merchants**

*139 A, Mahavidiyalaya Mawatha,*
*(Barber Street)*
*Colombo- 13.* *Phone : 431399*

*With Best Compliments From*

# SEVANA STEEL

**Importers, General Hardware Merchants**

*5-A, Abdul Jabbar Mawatha,*
*Colombo - 12.*
*T'Phone: 449337.*

*With Best Compliments From*

# REGAL

# HARDWARE STORES

*3, ABDUL JABBAR MAWATHA,*
*COLOMBO -12,*
*T.PHONE: 434115, 435312.*

*With Best Compliments From*

# SILICON STEEL

## merchant

**M.S. Round Iron, Rip Steel,Tor Steel, M.S. Flats G.I. Pipes.**
**M.S. Angle Iron, G.I. Wires.**

*310, OLD MOOR STREET,*
*COLOMBO-12.*
*Phone: 446482, 435065.*

*With Best Compliments From*

# NAGALINGAMS

## JEWELLERS

22 KT. SOVEREIGN GOLD QUALITY JEWELLERY

*101, COLOMBO STREET,*
*KANDY.*
*T'PHONE: 08-32545*

*With Best Compliments From*

**TRIOS ELECTRICALS**

(Auto Shiners)

Contractors & Dealers in Electrical Goods

74, Yatinuwara Veediya,
KANDY.
T.P. 08-32519

*With Best Compliments From*

**RAJAH & SONS**

109, COLOMBO STREET,
KANDY.

*With Best Compliments From*

SOVEREIGN GOLD JEWELLERS &
DEALERS IN EVERSILVERWARE

**Aradhanas**

103, Colombo Street,
KANDY.

Dial: 22781
34020

*With Best Compliments From*

**COMMERCIAL HARDWARE STORES**

65 & 67, Colombo Street,
Kandy.
T.P. 34323, 23565

*With Best Compliments From*

***LEADING OIL MERCHANTS IN KANDY.***

# VIGNESWARAN STORES

*173, Colombo Street,*
*KANDY.*
*T.P. 08-23014*

*With Best Compliments From*

# KARUNANITHY & CO.

122, Colombo Street,
Kandy.

T'Phone: 08-22537

*With Best Compliments From*

**CHANDRA STORES**

IMPORTERS EXPORTERS, GENERAL
MERCHANTS & WHOLESALE DEALERS

207, Colombo Street,
KANDY.
Tel: 08-34332 / 32756

Branch
60, New, Moor Street,
COLOMBO - 12
Tel: 01-448420, Fax: 01-436108

*With Best Compliments From*

**SRI MUTHUMARI STORES**

150, COLOMBO STREET,
KANDY.
T.P. 34205

*With Best Compliments From*

**CENTRAL MEDICALS**

No: 92, Dalada Veediya, Kandy.
T.P. 23677

*With Best Compliments From*

**LATHA**
**JEWELLERS**
(AIR CONDITIONED)

27, KOTUGODELLA VIDIYA
KANDY
DIAL: 32027

*With Best Compliments From*

# Sugunas

**"Dealers in: School Books, Oilments, Fancy Goods and Silver Items.**

*No. 313 B, Main Street*
*Dickoya*

*With Best Compliments From*

# SAMMI CLEARING AGENCY

**Customs Clearing and Forwarding of General Cargo and Vehicles**
**(M. SHANMUGAM)**

*18-1/6A, Mudalige Mawatha,*
*Colombo - 1.*
*T'Phone: 435814*

*With Best Compliments From*

# VISAKA Supplies (Pvt) Ltd.

Importers & General Hardware Merchants

*430 C, Old Moor Street,*
*Colombo - 12.*

*Phone: 437310*
*423316*

*With Best Compliments From*

# VIGNAS VIDEO VISION & GROCERIES

*NO. 22 DARAWELLA BAZAAR*
*DICKOYA.*

# பகுதி -II

## வரலாறு

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

*With Best Complement from*

# V.K.M. Nagalingam & Sons

***JEWELLERS, RADIO, TV. DEALERS***
***97, COLOMBO STREET, KANDY. T EL: 23108***

*Famous over 90 years for Quality Jewellery*
*WHERE TRUST IS TRADITION*

# குறிஞ்சியிலே ஒரு அழகன்

**இராகம்:- இரஞ்சனி** **தாளம்:- ஆதி**

**பல்லவி**

ஆடிடும் மயிலின் கலையழகு
அருள் முருகன் கை வேலழகு
கூடிடும் அடியார்கள் உளம் அழகு - குறிஞ்சி
குமரன் திருவருளே பேரழகு
(ஆடிடும்)

**அநுபல்லவி**

முகிலினம் மருவிடும் கோபுரங்கள்
முருகா உன்னருள் ஆலயங்கள்
அருவிகள் பாடிடும் இசை ஒலிகள் - முருகா
அங்கே தெரியுதுந்தன் அருள் முகங்கள்
(ஆடிடும்)

**சரணம்**

சரவணபவ எனும் அருள் மந்திரம் அதை
சந்ததமும் நினைத்தால் துயர் விலகும்
வரமருள் தந்திடுவாய் வேலவனே - நல்
வாழ்வளித்தே எமை ஆள் குகனே
(ஆடிடும்)

***க. பாலகிருஷ்ண ஐயர்***
***உதவி விரிவுரையாளர்,***
***பொறியியற் பீடம்.***

# தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்கள்

கலாநிதி ந.வேல்முருகு, முதுநிலை விரிவுரையாளர், புவியியற்துறை.

தஞ்சாவூரிலுள்ள பிருகதீசுவரர் கோவில் மத்திய காலச் சோழ ஓவியக்கலையின் மெய்யான, செழுமையான கருவூலமாக திகழ்கின்றது. சைவப்பற்று மிக்கவனும் '' சிவபாத சேகரன்'', ''நித்திய வினோதன்'' முதலிய பட்டப்பெயர்களை பெற்றவனுமான முதலாவது இராஜராஜனின் (கி.பி.985-1014) 19வது ஆட்சியாண்டில் (கி.பி.1004) இக்கோவில் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அண்ணளவாக ஏழாண்டுகளுக்குப் பின் கி.பி.1010ஆம் ஆண்டில் திருப்பணிகள் முழுநிறைவடைந்து பூரணவடிவைப் பெற்றிருக்க வேண்டும். நாளடைவில் தஞ்சை இராஜ ராஜேசுரக் கோவில் என்றும், தஞ்சைப் பெருவுடையார் கோவில் என்றும், தஞ்சைப் பெரிய கோவில் என்றும், பிருகதீஸ்வரர் அல்லது பிரகதீஸ்வரர் ஆலயம் எனவும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படலாயிற்று.

செய்குன்றுகள் போன்ற உயர்ந்த மேடை அல்லது நிலப்பரப்பின் மீது பல நிலை மாடங்களைக் கொண்டு கட்டப்படும் ஆலயங்களை மாடக் கோவில் அல்லது பெருங் கோவில் என்றும் அழைப்பது வழக்கமாகும். இவ்வாலயம் கிழக்கு மேற்காக 241.5 மீற்றர் (793 அடி) நீளமும் வடக்குத் தெற்காக 125.2 மீற்றர் (397 அடி) குறுக்களவும் கொண்டது. கருவறை, இடைக்கழியோடு கூடிய அர்த்தமண்டபம், இருபக்கங்களில் தூண்களும் வெளிவாயிலுமுள்ள பெருமண்டபம் (மகா மண்படம்), தியாகேசர் திருவறைக்கு முன்னுள்ள தாபன மண்டபம், அதையடுத்த நர்த்தன மண்டபம், வாச்சிய மண்டபம் என்பன உள்ள இவ்வாலயத்தின் கருவறையின் (திருவுண்ணாழிகை) மீது பிரமிட் போன்ற அமைப்புடன் 13 மாடிகளைக் கொண்ட சதுரவடிவான விமானம் 66 மீற்றர் (216 அடி) உயரத்துடன் மிகவும் கம்பீரமாகத் தோற்றம் அளிக்கின்றது.

இவ்வாலயம் பல்வேறு விதங்களிலும் அதிசிறப்பு வாய்ந்துள்ளது. அவையாவன:

1. தட்சணமேரு என அழைக்கப்படும் விமானத்தின் உச்சியில் நிறுவப்பட்டுள்ள கருங்கல் 7.7மீற்றர் சதுரமும் 80 தொன் நிறையுமுடைய ஒரே கல்லாகும். இவ்விமானக் கலசத்தின் நிழல் திருச்சுற்றில் விழாதவாறு அமைக்கப்பட்டுள்ளது.

2. விமானம், மண்டபம் என்பனவற்றில் பேரழகுடைய கண்கவர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சுற்றாலையின் சுவர்பகுதியில் எண்பத்தாறிற்கும் மேற்பட்ட சிற்பங்களும், பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள நூற்றெட்டு கரணங்களில் எண்பத்தொரு கரணங்களைச் சிவபெருமானே அபிநயத்துக் காட்டுவதை போன்ற சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. விமானத்திலும் பல அரிய சிற்ப வேலைப்பாடுகளைக் காணலாம்.

3. மூடு மண்டபத்தில் இரண்டு அடுக்குகளைக் கொண்ட வரிசையாக அமைந்த முப்பத்தாறு சிறு கோவில்களும். பரிவார தெய்வங்களின் கோவில்களும் அமைக்கப்பட்டுள்ளன.

4. வழிபாட்டிற்கும், திருவிழாவிற்குமென நூற்றுக்கணக்கான தெய்வத் திருமேனிகளும் நாயன்மார்களுடைய படிமங்களும், பிற வார்ப்புக்களும் உள்ளன.

5.பல அணிகலன்களும் திருவிளக்குகளும் திருப்பரிகலன்களும் (பாத்திரங்கள்) பாவனைக்குள்ளன.

6. முதலாம் இராஜ ராஜன் காலம் தொடக்கம் பல்வேறு அரசர்களும் பொறிப்பித்த கல்வெட்டுக்களும், சாசனங்களும் இக்கோவிலின் தொடர்ச்சியான வரலாற்றினை நன்கு அறிய உதவுகின்றன. முதலாம் ராஜ ராஜன் காலத்திய அறுபத்திநான்கு கல்வெட்டுக்களும், முதலாம் இராஜேந்திர சோழன் காலத்திய (கி,பி.1012- 1044) இருபத்தி ஒன்பது கல்வெட்டுக்களும், முதலாம் குலோத்துங்கனின் (கி.பி.1070-1120) கல்வெட்டுடொன்றும், விக்கிரம சோழனது (கி.பி.1118-1135) ஒரு கல்வெட்டும், வேறு சில அரசர்களது கல்வெட்டுக்களும் நாயக்க,

மராட்டிய மன்னர்களது கல்வெட்டுக்களும் இக்கோவிலில் காணப்படுகின்றன.

7. இராஜ ராஜனின் குருவாகக் கருதப்படும் சிவயோகி கருவூர்த் தேவர் இராஜேச்சுரத்து இறைவனைப் போற்றப் பாடியுள்ளார். அப்பாடல்கள் சைவத் திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் தொகுப்பில் திருவிசைப்பா என்ற பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

8.பிருகதீசுவரர் கோவில் ஓவியங்கள் சோழ கால ஓவியக் கலையின் உயரிய நிலையினை நன்கு புலப்படுத்தும் சான்றாக திழ்கின்றன. சித்தன்ன வாசல், பனைமலை, காஞ்சிபுரம் ஆகிய நிலையங்களில் வீறுடன் வளர்ச்சி பெற்ற செழுமையான இந்திய ஓவியக்கலை மரபின் தொடர்ச்சியாகவே இவ்வோவியங்கள் கருதப்படுகின்றன.

தஞ்சைப் பெரிய கோவிலின் சற்சதுர வடிவான கற்பக்கிரத்தினைச் சுற்றி மிகவும் ஒடுக்கமான (1.88.மீற்றர்அகலமுடைய) சற்சதுர வடிவான சுற்றாலை (பிரகாரம்) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சுற்றாலை ஒவ்வொன்றும் 17.7 மீற்றர் (56 அடி) நீளமானவை. கிழக்குப் பார்த்துள்ள இக்கோவிலின் பிரதான வாயிலினூடாக இவ்வாலயத்தின் சுற்றாலையினை இடப்புறம் இருந்து சுற்றிவரும் போது பிரதான வாயில் தவிர்த்து பதினைந்து அரங்கங்களை (Chambers) காணக்கூடியதாக விருக்கும். வசதி கருதி இவ்வரங்களுக்கு ஒன்றிலிருந்து பதினைந்து வரை எண்கள் இட்டு விளக்குவது இலகுவாக அமையும். இவ்வரங்குகள் ஒவ்வொன்றும் 0.46 மீற்றர் (1 அடி 6 அங்குலம்) தடிப்புள்ள வாயில் நிலைகளினால் (Door - Sills)பிரிக்கப்பட்டுள்ள போதும் அவற்றுக்கிடையே கதவுகள் அமைக்கப்படாதுள்ளன. இச்சுற்றாலையின் பிரதான வாசல் கிழக்கு நோக்கி அமைந்துள்ளதோடு நான்காவது அரங்கானது தெற்கு நோக்கிய வாசலுடையதாகவும், எட்டாவது அரங்கானது மேற்கு நோக்கிய வாசல் உடையதாகவும் பன்னிரண்டாவது அரங்கானது வடக்கு நோக்கிய வாசல் கொண்டும் அமைந்துள்ளதோடு கிழக்கு நோக்கிய அரங்கினை தவிர்த்து ஏனைய மூன்று வாசல்களும் உடைய அரங்குகளில் கருப்பக்கிரக சுவரினை அடுத்து மூன்று தெய்வச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தெய்வச் சிற்பங்கள் உள்ள அரங்குகள் தவிர்த்து தெற்கிலுள்ள ஐந்தாம் அரங்கிலும் மேற்கிலுள்ள ஏழாம், ஒன்பதாம் அரங்குகளிலும், வடமேற்காக உள்ள பத்தாம் அரங்கிலும் வடக்கில் உள்ள பதினொராம் அரங்கிலும் சோழர் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்கள் உள்ளன.

ஆலயச் சுற்றாலையின்-இருபுறத்திலுமுள்ள சுவர்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சுவர்களின் மேல் மேற்பரப்பில் காணப்படும் ஓவியங்கள் சுமார் கி.பி.1600ம் ஆண்டளவில் தஞ்சையை ஆட்சி புரிந்த நாயக்கர் காலத்தவை. சுண்ணாம்புக்கரை உதிர்ந்து போன இடங்களில் மேற்பரப்பின் கீழ் சோழர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன எனக் கண்டறிந்து வெளிப்படுத்திய பெருமை அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளராக இருந்த ச.க.கோவிந்தபிள்ளையைச் சாரும். அவர் 1933ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழ மும்மாத வெளியீட்டுச் சஞ்சிகையில்(Journal of the Annamalai University, Vol.11, 1933) இவ்வோவியங்களைப் பற்றி எழுதிய கட்டுரையில் இவை இக்கோவில் கட்டி முடிக்கப்பட்ட கி.பி.1010 ஆம் ஆண்டளவில் தீட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும், பிற்காலத்தில் தஞ்சையில் அரசு புரிந்த நாயக்கர்கள் இக்கோவிலைச் செப்பனிடும் போது இவற்றின் மீது புதிதாக சுண்ணாம்பு பூசித் தாங்களும் வேறு ஓவியங்களை வரைந்தனர் என எடுத்துக் காட்டியுள்ளார்.

தஞ்சைப் பெரிய கோவிலில் தீட்டப்பட்டுள்ள ஓவியமுறைக்கும் அஜந்தா, பாக், எல்லோரா ஆகிய இடங்களில் தீட்டப்பட்ட ஓவிய முறைக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. அஜந்தாவிலும், எல்லோராவிலும் உலர் சாந்துமீது ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இம்முறை (Fresco Secco)என அழைக்கப்படுகின்றது. இம்முறையில் ஓவியங்கள் தீட்டப்படும் முன் ஓவியங்கள் வரையப்படவுள்ள சுவரின் மேல் களிமண் அல்லது வண்டல் மண் பூசப்பட்ட பின்னர் அரைத்த சாந்துடன் இணைக்கும் ஊடு பொருளாகப் பயன்படுத்துவதற்கு சிறிது சாணமும் உமியும் சேர்த்துப் பூசப்பட்டன. பின்னர் அவற்றின் மேல் அரைத்த சாந்து பூசப்பட்டதும், சுண்ணாம்பினால் தேய்க்கப்பட்டு பசை அல்லது வச்சிரப் பசை கலந்து ஒரு நிலைத்த நிலை அடையப்படும். தேய்த்த சுண்ணாம்பு உலர்ந்த பின்னர் ஓவியத்தைத் தீட்டலாம்.

தஞ்சைப் பெரிய கோவில் சுவர்களின் அடியிற் பூசப்பட்ட கரடுமுரடான அரைசாந்து ஈரமாயிருக்கும் போதே அதற்கு மேல் மென்மையான அரைசாந்து பூசப்பட்டிருக்க வேண்டும். சுவர் ஈரத்தோய்வுடனிருக்கும் போதே

சுவர் ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கலாம். இத்தகைய (Buon Fresco) முறையில் நிறப்பொருட்கள் சாந்தினுள் உள்ளிறங்கி நீண்ட காலத்திற்கு சிதிலமடையாமல் பேணப்படுகின்றன. தஞ்சாவூரில் கறுப்பு, மஞ்சள், சிகப்பு, பச்சை, நீலம், கபிலம், இளம் பச்சை, மென்நீலம்,ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் கறுப்புத் தவிர ஏனைய நிறங்களில் உலோகச் சத்துக்கள் கலந்துள. இயலுமானளவு சுண்ணாம்புடன் கலந்ததும் நிறம் மாற்றமடையாததுமான பொருட்களே பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதிக இராசாயன மாற்றங்கள் ஏற்படாதவையாகவும் அவை இருந்தன. வண்ண மென்பூச்சு எல்லா இடங்களிலும் சுவரோடு நன்கு ஒட்டி இறுகாத இடங்களில் சுண்ணாம்பின் மீதே நிறங்களைப் பூசி ஓவியங்களைத் தீட்டியிருக்கலாம்.

பெரும்பாலான ஓவியங்களும் சுவர் ஓவியங்களாக தொடக்கப்பட்டு பின்னர் சுண்ணாம்பினால் விளக்கப்பட்டிருக்கலாம். இத்தகைய ஓவியப் பணி வெற்றிகரமாக அமைவதற்கு வேலையின் மிக்க விரைவும், திட்ப நுட்பமும் இன்றியமையாதன. அத்துடன், நிறங்களையும் நிற ஒளி நயத்தையும் கலை நயத்துடன் ஒன்றாக இணைத்தல் அவசியமாகும். தஞ்சைப் பெரிய கோவில் சுவர் ஓவியங்களில் இவ்விணைப்புகள் மிகக் கச்சிதமாகப் பொருந்தியுள்ளன. தஞ்சாவூர் ஓவியர்கள் எவ்வளவு விரைவுடன் ஓவியங்களைத் தீட்டி இருப்பார்களெனவோ, ஒரு நாளில் எவ்வளவு பரப்பளவில் ஓவியம் தீட்டி இருப்பார்களெனவோ திடமாய் கூறமுடியாதுள்ளது. அரைத்த சாந்தின் சாயத் தோய்வு மிக மெல்லியதாய் இருப்பதால் அதனை நீர் நயப்பில் சில மணித்தியாலங்களுக்கு மேல் வைத்திருக்க முடியாது. ஓவியங்கள் அமைந்துள்ள இணைப்புத் தெரியாமலிருக்க வேண்டுமாயின் ஒரு சவரின் ஓவியப் பணியை ஒரே நாளில் முடித்திருக்க வேண்டும். இதற்கு சாதகமான முறையில் சுவர்கள் பல அரங்கங்களாகப் பிரிக்கப் பெற்று வண்ணங்கள் தீட்டப்பட்டிருப்பதால், ஒவ்வோர் அரங்கமும் தனித் தனியே ஓவியந் தீட்டுவதற்கேற்ற வசதியாயமைந்திருந்தது எனக் கொள்ளல் வேண்டும்.

இக்காரணங்களால், ஒவ்வோர் அரங்கமும் ஒவ்வொரு தனி ஓவியராலோ அன்றிப் பல ஓவியர்களாலோ தீட்டப்பட்டிருக்கலாம். ஒவ்வொரு அரங்கமும் இருபத்திநான்கு சதுர அடி முதல் அறுபது சதுர அடிவரையும் காணப்படுகின்றது. அரங்கங்களின் இணைப்புக்கள் தெரியா வண்ணம் நிறங்களால் மறைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் மிகுந்த செய் நேர்த்தியுடன் ஆற்றப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

ஐந்தாவது அரங்கின் வடக்குச் சுவரில் யோக தட்சணாமூர்த்தியின் உருவம் வரையப்பட்டுள்ளது. சிவபெருமான் இரண்டு தேவமாதர்களின் நடனத்தை புலித்தோலின் மீது காலை மடித்து அர்த்த யோகப் பட்டத்துடன் யோகாசனத்தில் அமர்ந்தவாறு அவதானிக்கும் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. இவ்வோவியத்தில் விஷ்ணுவும் குள்ள கணமும் மத்தளம் அடிக்கின்றன. தேவர்கள் வானத்தில் பறந்தவாறு மத்தளம், கைமத்தளம், கைத்தாளம் என்பனவற்றை இசைக்கின்றனர். வேறு சிலர் அமர்ந்தவாறு இக்காட்சிகளைப் பார்க்கின்றனர். சிவனின் புற உருவம் மிகத் தெளிவான கபில நிறக் கோடுகளாலும் உடம்பு செந்நிற மஞ்சள் நிறத்திலும், ஆபரணங்கள் சிவப்பு, நீலம் மற்றும் வெள்ளை நிறங்களிலும் காட்டப்பட்டுள்ளன. பின்புலமானது பச்சை வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது. ஓவியத்தின் கீழ்ப்புற இடது மூலையில் முதலாம் இராஜ ராஜனும் அவரின் குருவான கருவூர்த் தேவரும் வரையப்பட்டுள்ளனர்.

சுந்தர மூர்த்தி நாயனாரின் வாழ்வில் நடைபெற்ற முக்கியமான சம்பவங்கள் பலவும் பல்வேறு இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள ஏழாவது அரங்கின் கீழ்ப்பகுதியில் நம்பியாரூரரின் திருமணத்தினைச் சிவன் தடுத்தாற் கொண்ட வரலாறும், நடுப்பகுதியில் சுந்தரரும் சேரமான் பெருமாள் நாயனாரும், கைலாயம் செல்லும் காட்சியும், மேல் பகுதியில் கைலாசக் காட்சியும் தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சுந்தரரின் திருமணத்தினை சிவன் தடுத்தாட் கொண்ட வரலாற்றினைச் சித்தரிக்கும் பகுதியில் பல தூண்களைக் கொண்ட பெரிய மண்டபம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. அம்மண்டபத்தில் பார்ப்பனர்கள் காணப்படுகின்றனர். அவ்வந்தணர்களுக்கு நடுவே ஒரு கரத்தில் ஓலையால் செய்யப்பட்ட குடையொன்றினைப் பிடித்துக் கொண்டும், மறுகரத்தில் ஒரு ஓலைச் சுவடியை அவையோருக்குக் காட்டியவாறு ஒரு முதியவரும், அவருக்கு நேராகப் பணிவுடன் நிற்கும் ஓர் இளைஞனும் வரையப்பட்டுள்ளனர். இவ்வோவியத்தின் வலது புறத்தில் கோவில் விமானம் ஒன்றும், அக்கோவிலினுள் நுழைந்து செல்லும் அந்தணர்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வோவியக் காட்சி சுந்தரரின் திருமணத்தன்று, சிவன் தமது உரிமையைக் காட்டி தனது பிராமண அடிமையை ஆட்கொண்டு, திருமண நாளன்றே அவரைத் தம் இருப்பிடமான திருவெண்ணை நல்லூருக்கு அழைத்துச் செல்லத் தாடியுடன் கிழவேதியனின் வேடத்தில் ஆணவத்துடன் வந்தார் என்ற கதை விளக்கப்பட்டுள்ளது. கீழ்ப்பகுதியில் சில பெண்கள் சமயலில் ஈடுபட்டிருக்கும் காட்சி மூலம் திருமண ஏற்பாடுகள் யாவும் மிகவும் தத்ரூபமாக விளக்கப்பட்டுள்ளன.

ஏழாவது அரங்கின் நடுப்பகுதியில் சுந்தரரும் அவரின் நண்பர் சேரமான் பெருமாள் நாயனாரும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இருவரும் சிவபெருமானின் அழைப்பின் பேரில் கைலாயம் செல்லும் காட்சி வரையப்பட்டுள்ளது. சிவபெருமான் அனுப்பி வைத்த யானையின் மேல் சுந்தரர் விரைவாகச் செல்கின்றார். சேரமான் தம் குதிரையின் காதில் பஞ்சாட்சரத்தை உச்சரித்துச் செல்வதால் சேரமானின் குதிரை சுந்தரரின் வெள்ளை யானைக்கு முன்னதாகச் செல்வதாகக் காட்டப்பட்டுள்ளதோடு வெள்ளைக் குதிரையின் மேலிருக்கும் சேரமான் திரும்பிப் பார்த்தவாறு சுந்தரரை தம்முடன் விரைவாக வருமாறு சைகை செய்வதும் விளக்கப்பட்டுள்ளன. நீண்ட மீசையுடனும் குறுகிய தாடியுடனும் சித்தரிக்கப்பட்டுள்ள சேரமான் இடையில் வேட்டி மட்டுமே கட்டியுள்ளார். சேரமானின் கழுத்தில் கழுத்தணியும் அதனைச் சுற்றி உருத்திராட்ச மாலை கட்டிய ஒரு கயிறும் தொங்குகின்றன. சுந்தரர், சேரமான் ஆகியோரின் உருவங்களுக்கு வலப்புறமும் இடப்புறமும் விண்ணவர்கள் வரையப்பட்டுள்ளதோடு, வலது புறத்தில் ''அப்ஸரஸ்'' களும் கந்தர்வர்களும் மலர்களைத் தூவிக் கொண்டும், இசைபாடிக் கொண்டும், தோற்றமளிக்க இடதுபுறத்தில் ரிஷிகள் உள்ளன. சேரமானின் வெண்பரிக்கு முன்பாக நாட்டிய மாடியவாறு நெளிந்து பின் திரும்பிப் பார்த்தும் அழகிய அப்ஸரஸ் பெண் தனது வலது கரத்தினை முன் நீட்டியவாறும், இடது கரத்தை அபய லட்சணமாகக் காட்டியவாறும் வரையப்பட்டுள்ளதோடு அப்பெண்ணின் வனப்பு மிகு உடையும். நுட்பமாகச் செய்யப்பட்ட தலைமுடிக் கொண்டையும், கால்களில் அணிந்துள்ள சிலம்புகளும் அழகுக்கு மேலும் அழகூட்டுவதாகக் காட்டப்பட்டுள்ளன.

மேற்கூறிய காட்சிகளுக்கு மேல் புறமாக கைலாயத்தில் சிவன், பார்வதி சமேதராக இரண்டு அப்ஸரஸ் பெண்களின் நாட்டியத்தினை நந்தி தேவருக்கும் கணங்களுக்கும் முன்பாகக் கண்டு களிக்கும் காட்சி விளக்கப்பட்டுள்ளது.

ஒன்பதாவது அரங்கில் தில்லைப் பொன்னம்பலத்தைப் போன்றதோர் ஆலயமும் அம்பலவாணரின் திருவுருவத்தின் ஒரு பகுதியும், அங்கே அரச கோலத்துடன் மன்னனும் மூன்று அரசிகளும் உணர்ச்சிக் கனிவுடன் பக்திமயமாகவும் கைகளைக் கூப்பியவாறு வணங்குவதும், அவர்களைச் சூழ மன்னனுடைய பரிவாரங்களும், கோவில் குருக்களும் , பக்தர்களும் வணங்கும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் யாவரும் பூவேலைப்பாடுடைய கரைகளையுடைய ஆடைகளையும், பல்வேறு அணிகலன்களையும் அணிந்துள்ளனர். இவ்வோவியத்தில் அம்பலவாணரை வணங்கும் அரசன் முதலாம் இராச ராச சோழனாகவும், மூன்று அரசிகளும் இராஜ ராஜனின் மனைவியராகவும் இருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அரச வம்சத்தினரின் தோற்றமும், பண்பாடும் செய்நேர்த்தியாகவும், பெண்களின் உருவங்கள் மிகவும் விளக்கமான நுட்பங்களுடைய னவாகவும் காட்டப்பட்டுள்ளன.

பத்தாவது அரங்கில், சோழ மன்னன் இராஜ ராஜனும் மன்னனின் குழுவாகவிருந்த கருவூர்த் தேவரும் வரையப்பட்டுள்ளனர். இவ்வோவியத்தில் அரசனும் அரச குருவும் மிக்க பெருமிதத் தோற்றமுடையவர்களாகவும் ஆன்மிக ஆளுமை மிக்கவர்களாகவும் விளங்குவதையும், மிகவும் கலை நயத்துடன் அரசனும் துறவியும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம்.

பதினோராவது அரங்கில் திரிபுரந்தகரின் உருவமும் அதற்கு எதிர்ப்புறமுள்ள சுவரில் இராவணன் கைலாய மலையைப் பெயர்க்க முனையும் காட்சியும் மிகவும் நளினமாகக் கலை நுட்பங்களுடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. சுவர் முழுவதும் சிவபெருமான் திரிபுரத்து அசுரர்களை எதிர்த்துப் போரிடுவதற்குக் கொண்ட போர்க்கோலம் பெரிய அளவில் தீட்டப்பட்டுள்ளது. சிவன் தனது மகாரதமொன்றின் மேல், ஆளித நிலையில் (யாளியைப் போன்ற கோபாவேச நிலையில்) புருவங்களை வில்போல் வளைத்தும், நெற்றிக் கண் பிதுங்கியவாறும், நாசித் துவாரங்கள் அகன்று திறந்தும், இதழ்களிலும் கண்களிலும் ஏளனப் புன்னகை ததும்பியும் நிற்க, அவரது இடதுகால் வளைந்த

நிலையில் உள்ளதால், அவரது உடற்பாரம் முழுவதும் முன்பக்கமாக வைக்கப்பட்டுள்ள வலக் காலில் தாங்கப்பட்டுள்ளது. விரிசடைச் சிவனின் எட்டுக் கரங்களும் பற்பல படைக்கலங்களைக் கொண்டுள்ளன. முன்னுள்ள கரமொன்றில் வில் காணப்படுகின்றது. இத்தகைய சிவனின் உருவம் 3.66 மீற்றர் உயரமும். 3.35 மீற்றர் அகலமும் உடையது.

நான்மறைகளாகிய பரிகள் பூட்டப்பட்ட தேரினை நான்கு தலையுள்ள பிரம்மா செலுத்துகின்றார். பிரம்மா தனது கையில் குதிரையின் கடிவாளத்தையும் சாட்டையையும் வைத்திருக்கின்றார். விநாயகர், கொற்றவை, முருகன் ஆகியோரும் சிவனுடன் சேர்ந்து இப்போரில் ஈடுபடுகின்றனர். மயிலியின் மீது கார்த்திகேயனும் எலியின் மீது விநாயகரும், சிங்கத்தின் மீது வெற்றித் தெய்வமான காளியும் செல்கின்றனர். இவ்வாறு செல்லும் சிவனையும் ஏனையோரையும் திரிபுராசுரர்களும் அவர்களுடைய படைப் பரிவாரங்களும் மலைப்புடன் பார்த்தவாறுள்ளனர். இரு சாராரும் படைக் கலங்களுடன் போர் புரிகின்றனர். துர்க்கை தன் சிங்க வாகனத்தின் மேலிருந்தவாறு அசுரனின் மீது தனது ஈட்டியால் குத்த துர்க்கையின் சிங்கம் அசுரனொருவனின் கழுத்தைப் பிடித்துக் குதறுகின்றது. அசுரர்கள் தம் மனைவியின் சொற்கேளாமல் உருண்டு திரண்ட தசை நார்களும், கனல் கக்கும் விழிகளும் மீசையுமுடையோராய் மனிதர்களைப் போன்ற தோற்றத்துடன் போர் புரிகின்றனர். அசுர மகளிர் சிலர் தங்கள் கணவரின் கழுத்தைக் கட்டிப் பிடித்தவாறு புலம்பி அழுகின்றனர். அவ்வசுரப் பெண்களும், மானிட மகளிர் போன்றே மென்மை வாய்ந்த மெல்லியலாராகவும் அழகிய முகத் தோற்றத்தையுடையவராகவும் தீட்டப்பட்டுள்ளனர்.

எதிரிலுள்ள சுவரில் சுண்ணாம்புப் பூச்சுக்கு அடியில் பலவித அரிய நவரத்திங்கள் பதிக்கப்பட்ட கிரீடங்கள் தரித்த நான்கு விண்ணவரின் முகங்கள் தெரிகின்றன. காதளவு நீண்டு பிரகாசிக்கும் கண்களும் வளைந்த புருவங்களும், காதிலும் கழுத்திலும் மிளிரும் பலவித ஆபரணங்களும் இம் முகங்களுக்கு அழகூட்டுகின்றன. இரண்டு முகங்கள் வெள்ளை நிறத்தாலும். மூன்றாவது இளஞ் சிவப்பு வர்ணத்தாலும், நான்காவது மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்தாலும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

திரிபுராந்தகரின் ஓவியத்திற்கு எதிராக உள்ள சுவரில் இராவணன் கைலாய மலையைப் பெயர்ப்பதற்கெனக் குனியும் காட்சி ஓவியமாக்கப்பட்டுள்ளது. பத்துத் தலை இராவணனின் உருவம் மென் பச்சை நிறத்தில் தீட்டப்பட்டுள்ளது. அச்சமுற்ற பார்வதி சிவனைக் கட்டிப்பிடிப்பதையும், தேவர்கள் பயமுற்ற நிலையில் இருப்பதையும் காட்சியாக்கியுள்ளனர். இவ் ஓவியம் பற்றி ஆய்வாளர்கள் ஆராயின் மேலும் பல உண்மைகளை அறியக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர் காலத்தில் தஞ்சைப் பெரிய கோவிலில் வரையப்பட்ட நாயக்கர் கால ஓவியங்கள் கலாவிற்பன்னர்களின் கவனத்தைக் கவராத காரணத்தால் அவை பற்றிய விளக்கங்கள் இக் கட்டுரையில் தவிர்க்கப்பட்டுள்ளன.

சோழர் கால ஓவியங்கள் பல்வேறு உண்மைகளை புலப்படுத்தும் வரலாற்றுச் சான்றுகளாகவும் ஆவணங்களாகவும் திகழ்கின்றன. சோழர் காலத்து ஓவியர்கள் பெற்றிருந்த தேர்ச்சியைப் புல்ப்படுத்துவதோடு, இந்து மதத்தின் மீது மன்னர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினையும் பக்தியையும் இவை புலப்படுத்துகின்றன.

இவ் ஓவியங்கள் நுட்பமான உறுதியான புறக்கோடுகள் முதலில் துகிலிகையால் மிகவும் லாவகமாக வரையப்பட்ட பின்னரே நிறங்கள் தீட்டப்பட்டுள்ளன. மானிடர்களைப் புலப்படுத்த வெள்ளை, மஞ்சள், பச்சை, இளங்கபில நிறங்கள் பயன்படுத்தப்பட்டன. மானிட உடலின் உறுப்புக்கள், ஆடைகள், அணிகலன்கள், விலங்குகள், பறவைகள் யாவும் நுட்பமாகவும் தத்ரூபமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளதோடு, மன்னருடைய யானையும் குதிரையும் நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஆண் உருவங்கள் ஆண்மையுடனும், அதே வேளை மென்மையுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான ஆண்கள் தாடியுடனும் மீசையுடனும், குடுமியுடனும், அசுரர்கள் பெரிய மீசையுடனும் வரையப்பட்டுள்ளனர். ஓவியங்களில் சித்திரிக்கப்பட்டுள்ள பெண்கள் கயல் விழியினராய், வளைந்த புருவங்களுடன் கனிந்த இதழ்களும், மின்னலையொத்த இடையுடையோராயும், உடல் வனப்புடையோராயும் கணுக்கால் வரை மென் துகிலைச் செலையாக உடுத்தோராகவும் விளங்குகின்றனர். மகளிரின் பூவேலைப்பாடுடைய சேலைகள் பல்வேறு நிறங்களில் வரையப்பட்டுள்ளன. பெரும்பாலான பெண்கள் உடலின்

மேல் பகுதியை சேலையால் மூடி மறைக்காது இடத் தோளிலிருந்து வலக் கையின் கீழ் சென்று மார்பகங்களை மூடும் வகையில் ஒரு சிறு துண்டினைப் போர்த்தி இழுத்து உடலின் பின்புறத்திலோ அன்றிப் பக்க வாட்டிலோ முடிந்திருப்பதை அவதானிக்கலாம்.

சோழப் பெரு மன்னர்களின் போர் விருப்பினையும், போர்க் காட்சிகளையும், இலட்சியங்களையும் சிறப்பாக முதலாம் இராஜ ராஜனின் போர் வெற்றிகளையும் உள்ளார்த்தமாக உருவகப்படுத்திக் காட்டும் ஓவியமாக திரிபுராந்தகரின் போர்க் காட்சி விளங்குவதாக கலாவிமர்சகர் சிவராமமூர்த்தி கருதுகின்றார்.

இவ் ஓவியங்களில் நவரசங்களும் சித்திரக்கப்பட்டுள்ளன எனச் சிவராம மூர்த்தி எடுத்துக் காட்டியுள்ளார், திரிபுராந்தகரின் முகத்திலும் உருவத்திலும் வீரச்சுவையையும் நம்பிக்கையிழந்த அரக்கப் பெண்களின் முகத்தில் கருணையையும் கோபச் சாயலையும் சாந்த நிலையில் உருப்பளிங்காய் வீற்றிருக்கும் தட்சணாமூர்த்தியின் முகத்தில் அமைதியையும், நடனமாதின் கரங்கள் அற்புதத்தையும், மத்தளமடித்து தாளமிடும் குள்ள கணங்கள் நகைச் சுவையையும் எடுத்துக் காட்டும் வகையில் விளக்குகின்றன.

பிருகதீசுவரர் கோவில் ஓவியங்கள் அக்கால மக்களின் வாழ்க்கை மேம்பாட்டையும் பண்பாட்டையும் எடுத்துக் காட்டும் சான்றுகளாகவுள்ளன. இவ்வோவியங்கள் வடிவத்தால் வாழ்க்கையையும், பொருளால் நோக்கத்தையும். குறிப்பால் கருத்தையும் விளக்கி நிற்கின்றன.


உசாவியவை:

1. S.R.Balasubrahmaniyam, 1975; Middle chola Temples, Thomas Press (India) Ltd. Faridabad.
2. C.Sivaramamurti, 1968; South Indian Paintings National museum, New Delhi.
3. க.சிவராமமூர்த்தி, 1974; இந்திய ஓவியம், நெஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி,
4. க.த.திருநாவுக்கரசு, 1975. முதலாம் இராஜ ராஜ சோழன் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை
5. பி.கோதண்டராமன், 1956: இந்திய ஓவியக் கலை (வரலாறு), தேவி நூற்பதிப்பகம், திருவண்ணாமலை.
6. கே.கே.பிள்ளை, 1977: சோழர் வரலாறு. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.


குடும்பம் ஒரு தருவைப் போன்றது. அதற்கு வேர் மனைவி;
அடிமரம் கணவன்; கிளைகள் மக்கள் ;
இலைகள் அன்பு; மலர்கள் கருணை; பழங்கள் தருமம் .
பல பல பறவைகட்கும் மனிதர்கட்கும் நிழல்தந்து தரு உறைவிடமாக
உதவுவது போல், இல்லறத்தான் எப்போதும் பிறருக்கு உதவியாக இருக்க
வேண்டும். மனத்தாலும் வாக்காலும் உடம்பினாலும் பிறர்க்கு நன்மை செய்.
- திருமுருக கிருபானந்தவாரியார்.

# பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய சைவ சமய இயக்கங்கள் : (1854-1870)

இரா. வை.கனகரத்தினம், முதுநிலை விரிவுரையாளர் (இந்துப் பண்பாடு), தமிழ்த்துறை.

ஈழத்துத் தமிழ் மக்களுக்குக் குறிப்பாகச் சைவ மக்களுக்குத் தமிழ்நாடு தாய் நாடாகும். ஈழத்துச் சைவர்கள் தமது பக்திக்கும் முத்திக்கும் உரிய தலமாகச் சிதம்பரத்தைப் போற்றி வருபவர்கள். சிதம்பரதரிசனம் கோடி புண்ணியம், சிதம்பரத்தைத் தரிசித்தால் முத்தி, என்பன போன்ற முதுமொழிகள் சிதம்பர மகிமையை விளக்கி நிற்பன. சிதம்பரம் ஈழத்துக்கப்பால் அமைந்திருந்தாலும் ஈழத்துச் சைவர்களின் சமய வழிபாட்டு நெறியில் முதன்மையான இடத்தைப் பெற்று விளங்குவது சிதம்பரமாகும். கரைநகர் ஈழத்துச் சிதம்பரமும், பருத்தித்துறை பகவதீசுவரர் ஆலயமும் சிதம்பரத்தின் மேல் ஈழத்துச் சைவர் கொண்ட ஈடுபாட்டைப் புலப்படுத்தி நிற்கும்.

நாவலரவர்கள் பல முறை தமிழ்நாட்டிற்குச் சென்று சிதம்பர தரிசனம் செய்து வந்த பொழுதும், சிதம்பர சபாநாயகத்தை மையமாகக் கொண்டு தமது பணிகளை நடத்திச் செல்ல வேண்டும் என்னும் பெருவிருப்பம் காரணமாக நாவலரவர்கள் 1858ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிற்குப் பயணமானார். மீண்டும் 1869ஆம் ஆண்டு ஈழநாடு திரும்பினார். சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேல் தமிழகத்தில் இருந்த நாவலரவர்கள் அங்கு புதிய சைவசமய வளர்ச்சியின் பொருட்டு உழைத்தார். தமிழகத்தில் நாவலரவர்களின் இயக்கம் உத்வேகம் பெற்றதால் தமிழ்மொழிக் கல்வி புதிய துறைகளில் வளர்ச்சி கண்டது. சைவத்தின் மகத்துவம் உணரப்பட்டு, அதன் நிலை பேற்றுக்காக சைவசமயிகள் உழைக்க முனைந்தனர். இக்காலப் பகுதியில் நாவலரவர்கள் ஈழநாட்டிற்கு வந்தமை பற்றி அறியுமாறில்லை.

நாவலரவர்கள் தமிழகம் சென்றதும் ஈழநாட்டில் வடபகுதியில் மீண்டும் மிஷனர்மார்கள் தங்கள் பிரசார வேகத்தை அதிகரித்ததோடு, சமூக சமய ஊழியம் என்னும் போர்வையில் மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சுதேசிய சைவர்களிடத்தில் பல மாற்றங்கள் காணப்பட்டன. சுதேசிய சைவர்களிற் சிலர் வைணவமத ஈடுபாடு கொண்டவர்களாய், தம் நம்பிக்கையை வெளிப்படுத்தும் பொருட்டு சைவத்துக்கு எதிராகக் கண்டனங்களைத் தொடுத்தனர். சைவகுருமார்களுள் பார்ப்பனர், தமக்குள்ள கௌரவத்தை போலியாக நிலைநாட்ட முனைந்தனர். இந்நிலையில் சுதேசிய சைவர்களையும் சைவசமயத்தையும் காப்பாற்ற வேண்டிய தேவை சைவசமயப் பற்றுமிக்க சைவர்களுக்கு ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் வெஸ்லியன் மிஷன் , அமெரிக்க மிஷன், சேர்ச் மிஷன் முதலான கிறிஸ்தவ மிஷனரிமார்கள் திட்டமிட்டு தமது பிரசார வேலைகளை மேற்கொண்டனர். இவ்வியக்கத்தினர் கிறிஸ்து போதசாரம் (1864) பூர்வபாதை (1863), பத்திமஞ்சரி (1867), சங்கீதப் புத்தகம், (1867) வியாகுல மாதாவின் பேரில் தேவாரம், கூடாரமும் தேவாலயமும் (1868) பிரசங்க குறிப்பு (1867) முதலான கிறிஸ்தவ நூல்களை தமிழ் நாட்டில் இருந்து வருவித்தும் ஈழத்தில் பதிப்பித்தும் வெளிப்படுத்தினர்.

வெஸ்லிமிஷன், அமெரிக்க மிஷன் முதலான மிஷனரிமார் சுதேசிய சைவர்களை வென்றெடுக்கும் பொருட்டும் தங்கள் சமயத்தை நிலை நிறுத்தும் பொருட்டும் தமது பிரசார நடவடிக்கைகளை நிறுவன ரீதியாக வழிப்படுத்த முனைந்தனர். இக்கால கட்டத்தில் இரண்டு விதமான சமயப் பிரசார நிறுவனங்களை அமைத்துச் செயல்பட்டனர்.

1.இந்து கிறிஸ்தவ சமய வாத சங்கம் (1843) **(Hindu Christian discussion Society)**
2.சனோபசார சங்கம்

## 1.இந்து கிறிஸ்தவ சமய வாத சங்கம்

1863 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ஆம் திகதி இச்சங்கம் வண்ணார்பண்ணை வெஸ்லியன் பாடசாலையில் Wesley Chapal School) ஜோன் கில்னர் John Kilner) தலைமையில் கூட்டப்பட்டது. நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

1. தலைவர் :பாதிரியார் ஜோன் கில்னர்
2. உபதலைவர் :C. Wகதிரைப்பிள்ளை
3. செயலாளர் :A. லைமன் (Lyman)

மேலும் நிர்வாகக் குழுவில் இரண்டு இந்துக்கள் அங்கத்துவம் பெற வேண்டும் என்றும் கூட்டத் தொடர்கள் வண்ணை நிசப்பல் பாடசாலையிலே நடைபெற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. வின்கிலோ பஸ்னல் (Bushnell) மைக் ஆதர் (Mc Arthor) முதலான பாதிரிமார்கள் இச்சபையின் கிறிஸ்தவப் பிரசாரர்களாக விளங்கினர். மயில்வாகனம் என்னுமொருவரே இச்சபையின் சைவசமயப் பிரசாரகராக இருந்து வந்தார். இவர் காலப் போக்கில் இச்சபையில் இருந்து விலகிக் கொண்டார். இச்சபை 1865ஆம் ஆண்டுவரையும் இயங்கி வந்ததாக அறிய முடிகிறது. இச்சங்கத்தின் பேரில் கிறிஸ்தவ பாதிரிமார்கள் பேதங்கள் அற்று ஒவ்வொரு மிஷனரியிலும் இருந்து வந்து பிரசங்கம் செய்து சென்றனர். இச்சங்கத்தின் செயற்பாடுகள் சைவர்களுக்கு உதவியது என்பதைக் காட்டிலும் கிறிஸ்தவர்களுக்கே பெரிதும் பயன்பட்டது எனலாம்.

## 2.சனோபசார சங்கம்

இச்சங்கம் 1865ஆம் ஆண்டு ஜோன் கில்னரால் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் இந்து கிறிஸ்தவ விவாத சங்கங்கள் கொள்கைகளினின்று முற்றிலும் வேறுபட்டது. கிறிஸ்தவ சமய விருத்தியின் பொருட்டும் சைவ சமயத்தைக் கண்டிக்கும் பொருட்டும் ஏற்படுத்தப்பட்டதாகும். இச்சங்கம் பற்றி இலங்காபிமாணி (1865) கருத்து தெரிவிக்கையில்,

''சில காலமாகக் கண்டறிந்தளவில் நாம் வண்ணார் பண்ணையிலும் அதன் அயற் கிராமங்கள் சிலவற்றிலும் இந்நாட்டகளில் சமய விசாரணை அதிகமாக இருக்கக் காண்பது நமக்கு நிரம்பிய சந்தோஷம். கிறிஸ்தவ சமயத்தை விருத்தியாக்கும் பொருட்டும் சைவ சமயத்தைக் கண்டித்தற் பொருட்டும் கில்னர் ஐயரவர்கள் வண்ணார் பண்ணையிலே தாபித்த சனோபசார சங்கமே இதற்குத் தூண்டு காரணமாக இருந்தது. உலகத்தின் எந்த விசயத்திலும் ஆத்மார்த்த விஷயமே முக்கியமென்பதும் அதனால் சகல விசயங்களிலும் ஆத்மார்த்தத்தை அறியும் நோக்கமான விசாரணையே அதிக முக்கியத்துவம் என்பதும் நாம் சொல்ல வேண்டியதில்லை''

எனக் குறிப்பிடுவது மேற்காட்டியவற்றுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கதாகும்.

வெஸ்லியன் மிஷனரிமார்களைப் போன்று அமெரிக்கன் மிஷனரிமார்களும் வடபகுதியில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் பொருட்டு ஜேம்ஸ் குவிக், ஏ. ஜேற்ஸ், வில்லியம் டீறிமர் முதலான பாதிரிமார்கள் சமய வளர்ச்சியின் பொருட்டு சிறப்பாக ஊழியம் புரிந்தனர். எஸ். ஏரோமியாப் புலவர்களின் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டு பாடப்பட்டது. எடுப்பாகவும் ஆற்றொழுக்காகவும் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. அச்சியந்திரசாலை மூலம் பல நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. உதயதாரகை என்னும் பத்திரிகை தனது எசமான்களின் இலட்சியங்களை நிறைவேற்றி வைப்பதில் தீவிரம் காட்டியது. இம்மிஷனின் உயர்கல்வி ஆங்கி மொழியிலே பயிற்றப்பட்டது. வர்க்கப் பாகுபாடோ சாதிமுறைமையோ இங்கு பேணப்படவில்லை. ஆங்கிலக் கல்வி மனித வேறுபாடின்றி உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் தன்மையுடையதென்ற மாயை இக்கால மக்களிடத்தில் சிறப்பாக குடிகொண்டிருந்தது. ஆங்கிலம் கல்வி பற்றி E. L. Kelps என்பவர் கூறுகையில் ''ஒரு பொதுவிதியாக, எங்கும் போல் இங்கும் பெற்றோர் எவ்வளவுக்குச் சாதி குறைநதவராகவும் அறியாமை மிக்கவராகவும் இருக்கின்றாரோ அவ்வளவிற்குத் தாங்கள் பிள்ளைகள் ஆங்கிலம் கற்க வேண்டுமென்ற ஆர்வம் மிக்கவராக இருக்கின்றனர்'' என்ற கூற்று இங்கு மனங் கொளத் தக்கதாகும். இக்காலப் பகுதியில் ஆங்கிலம்

ஒரு வணிக மொழியாக அமைந்ததோடு நில்லாது மதமாற்றத்திற்கு ஒரு சாதனமாகவும் அமைந்திருந்தது.

இச்சூழ்நிலையில் நாவலரவர்கள் விட்டுச் சென்ற பணிகளையும் நாவலரவர்கள் ஆரம்பித்து நடத்திய சைவப்பிரசார சமாசீயத்துக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. அதற்கோர் ஆளுமை மிகுந்த தலைமைத்துவம் தேவைப்பட்டது. இந்நிலையில் நாவலரவர்களின் இயக்கத்தில் நாவலரவர்களோடு தோழோடு தோழ் நின்று உழைத்த நீர்வேலி சங்கர பண்டிதரைத் தலையாகக் கொண்டு நாவலரவர்களின் இயக்கத்தை நடத்த நாவலரவர்களின் மாணவ பரம்பரையும் சுதேசிய சைவரும் முனைந்தனர். இதன் பொருட்டு வண்ணை சைவப்பிரசார வித்தியாசாலையிலே ஒரு சபையைக் கூட்டினர். அச்சபையின் நோக்கமாக நாவலரவர்கள் விட்டுச் சென்ற பணிகளை நாவலரவர்கள் தலைமைதாங்கி நடத்திய இயக்கத்தின் மூலம் முன்னெடுத்துச் செல்வதென்பதாகும். 1864 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட இச்சபை அதன் தலைவராக நீர்வேலி சங்கர பண்டிதரைத் தெரிவு செய்ததோடு செயலாளராக தில்லைநாத உபாத்தியாயரையும் தெரிவு செய்ததோடு சம்பந்தப்புலவர், சுப்பரமணிய உபாத்தியாயர்கள் நிர்வாகத்தின் பொருட்டு நியமித்தனர். ஸ்ரீவேதாகமோத்த சித்தாந்த சைவப்பிரகாச சமாசீயம் மீண்டும் புணரமைக்கப்பட்ட பொழுது அதன் செயற்பாடுகள் பின் வருமாறு அமைந்திருந்தது.

நோக்கம்: பரமதகண்டனம் செய்து சுயமத தாபனம் செய்தல்

செயற்பாடு 1. பரமதகண்டனம் செய்தல்

(அ) ஆதிவாரந்தோறும் கிறிஸ்தவ கண்டனம் செய்தல்

(ஆ) வைணவ சமய கண்டனம் செய்தல்

(இ) இவை தவிர்ந்த மதக் கோட்பாடுகளையும் வேண்டும் பொழுது சாடல்

இவற்றின் பொருட்டு பிரசங்கம் செய்தல், துண்டுப் பிரசுரங்களை வெளியிடல், வாதங்களில் கலந்து கொள்ளல், நூல்களை வெளியிடல் முதலான பணிகளில் ஈடுபடல்.

செயற்பாடு 2. சுயமத தாபனஞ் செய்தல்

(அ) சுதேசிய சமய வாதிகளின் நடவடிக்கைகளைக் கண்டித்தல்

(ஆ) பார்ப்பனர் கோயில் முதலாளிமார் முதலானோர்களின் செயற்பாடுகளாகக் கண்டித்தல்

(இ) சுதேசிய சைவர் மத்தியில் சமய நம்பிகிகையை ஏற்படுத்தல்.

இவற்றின் பொருட்டு ; பிரசங்கம் செய்தல், துண்டுப் பிரசுரங்களை வெளியிடல், நூல்களை வெளியிடல் புராண படனஞ் செய்தல், திருமுறைகளை ஓதுவித்தல், ஆலய புணருத்தாரண பணிகளில் ஈடுபடச் செய்வித்தல் முதலான செயற்பாடுகளைத் தூண்டுதல்.

நாவலரவர்களின் மாணவ பரம்பரையினர் நாவலரவர்கள் இல்லாதவிடத்து நாவலரவர்களின் இலட்சியங்களையும் சமாசீயத்தையும் நடத்திச் செல்லும் தகுதி சங்கர பண்டிதருக்கே உண்டு எனத் தீர்மானித்தற்குக் காரணங்கள் இல்லாமலில்லை. சங்கர பண்டிதர் சுன்னாகத்தில் சிவகுருநாதருக்கு மகனாகப் பிறந்த போதும் நீண்டகாலம் நீர்வேலியில் வாழ்ந்தமையால் நீர்வேலி-சங்கர பண்டிதர் என்று அழைக்கப்பட்டார். இவர் கந்தரோடை அப்பாப்பிள்ளை உபாத்தியாயரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் வேதாரணியம் சுவாமிநாத தேசிகரிடத்து சங்கதமொழி நூல்களையும் கற்றுத் தேறினார். ஈழநாட்டில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் சங்கத மொழிக் கல்விக்கு ஊத்வேகத்தையும் ஒரு பாரம்பரியத்தையும் ஏற்படுத்தியவர் சங்கர பண்டிதரே. இந்த நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சங்கர மொழிப் புலவர்களுள் தலைசிறந்தவராக விளங்கியவர் பண்டிதரவர்களேயாகும். நாவலரவர்களுக்கென ஒரு மரபு இருப்பது போல இவ்வகையில் சங்கர பண்டிதருக்கும் சங்கத மொழி பாரம்பரிய மரபொன்று உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

நாவலரவருக்கும் சங்கத பண்டிதருக்கும் உள்ள உறவு மிகவும் நெருக்கமானதும் அந்நியோன்னியமானதும் ஆகும். நாவலரவர்கள் சைவப்பிரகாச சமாசீயத்தை ஆரம்பித்த பொழுது அதன் பிரசாரகர்களுள் ஒருவராக விளங்கியவர் . நாவலரவர்கள் எழுதிய பெரிய புராண வசனத்திற்கு (1854) சிறப்புப்பாயிரம் அளித்தவர்களுள் பண்டிதரும் ஒருவர். சைவ தூஷண பரிகாரத்தை நாவலரவர்கள் எழுதிய பொழுது அதன் உபோற்காதத்தை எழுதியவர் பண்டிதரே என்பர். இவ்வகையில் நாவலரவர்கள் பண்டிதரின் புலமையை நன்கு மதித்தவர். பண்டிதரும் நாவலரவர்களின் இலட்சியங்களை மனங் கொண்டு செயற்பட்டதால் நாவலர் பாரம்பரியத்தில் ஒருவராகவே

பண்டிதர் கணிக்கப் பெறுகின்றார்.

ஆய்வாளர் ஒருவர் 1864 ஆம் ஆண்டு சங்கர பண்டிதர் ''பரமத கண்டனம் சுயமத ஸ்தாபன சங்கம் '' என்னும் ஒரு சங்கத்தை பலருடன் சேர்த்து அமைத்து , ஒரு வாரம் பரமத கண்டனமும் அடுத்த வாரம் சுயமத ஸ்தாபனமும் செய்யப்பட்டன'' என்பார். உண்மையில் சங்கர பண்டிதர் தாமாக ஒரு சங்கத்தை தாபிக்கவில்லை. மேற்படி ஆசிரியர் தமது கூற்றுக்குச் சார்பாக இலங்காபிமானிப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியைக் குறிப்பிடுவார்.

சென்ற மாதத்திய வாரமொன்றில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சைவர்களுட் கற்றோரும், மற்றோரும் கூடிப் பரமத கண்டனஞ் சுயமத ஸ்தாபனம் என்னும் அபிப்பிராயம் கொண்டு, சிற்சில கூட்ட நிருபஞ் செய்தார்கள். ஒரு வாரம் பரமத கண்டனமும், அடுத்த வாரம் சுயமத ஸ்தாபனமுஞ் செய்தார்கள், இச்சங்கத்திற்கு அக்கிராசனபதி சங்கர பண்டிதர், லிகிதர் தில்லைநாத உபாதியாயர் சம்பந்தப்புலவர் சுப்பிரமணியர்...

மேற்படி கூற்றில் கூட்டம் கூட்டப்பட்ட இடம் சைவப்பிரகாச வித்தியாசாலை என்பதும் இதன் நோக்கம் பரமத கண்டனமும் சுயமத தாபனம் செய்வது என்பதும் இதன் தலைவராகப் பண்டிதர் தெரிவு செய்யப்பட்டார்.என்பதும் பெறப்படும். இக்கூட்டத்தின் பிரதான இலட்சியம் பரமத கண்டனமும் சுயமத தாபனமும் செய்வதே ஒழிய அதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு சபையை நிறுவுவதென்பதல்ல. சங்கர பண்டிதர் பிரிதோர் விஞ்ஞாபனத்தில் தன்னை அறிமுகப்படுத்துகையில் (நீர்வேலி) ''சைவப்பிரகாச சமாசீயருளொருவராகிய சிவ-சங்கர பண்டிதர்'' எனக் குறிப்பிட்டிருப்பதும் அவதானிக்கத்தக்கதாகும். நீர்வேலி -சங்கர பண்டடிதர் என்று அவரை அழைப்பது பொது வழமை. எனவே சங்கர பண்டிதர் 1864 ஆம் ஆண்டு 'பரமத கண்டன சுயமத ஸ்தாபவ சங்கம்' எனக் கூறல் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை.

சங்கர பண்டிதர் தலைமையில் நடத்திச் செல்லப்பட்ட சைவப்பிரகாச சமாசீயத்தின் பிரசாரர்களாக நாவலவர்களின் மாணாக்கர்களான தில்லைநாதபிள்ளை, தினராண சம்பந்தப்பிள்ளை, சுப்பிரமணியபிள்ளை, செந்திநாதையர், ந. ச. பொன்னம்பலபிள்ளை முதலானோர்களும், நாவலரவர்களின் ஆசிரியரான சம்பந்தப் புலவர் ஆகியோரும் சுன்னாகம் முருகீசக பண்டிதர், அம்பலவாணபிள்ளை, த. நாகநாத பண்டிதர், கீரிமலை- சபாதிக் குருக்கள் முதலான சங்கர பண்டிதரின் மாணாக்கர்களும் வைமன்கதிரைவேற்பிள்ளை. எஸ். மயில்வாகனம் முதலான பிறரும் இச் சமாசீயத்தின் பிரசாரர்களாக விளங்கீனர்.

சை. பி. சமா சீயத்தின் செயற்பாடுகள் :

1. பரமத கண்டனம்

(அ) கிறிஸ்தவ மத கண்டனம்

இந்து கிறிஸ்தவம் விவாத சங்கம் அமைத்து சமயப் பொதுமையை வளர்க்க முயன்றவர் ஜோன் கில்னர். ஆனாலும் அச் சங்க செயற்பாட்டில் சைவர்கள் நம்பிக்கைகள் வைக்க முடியவில்லை. அச்சங்கத்தின் செயற்பாடுகள் பலவும் கில்னர் பாடசாலையிலும் கிறிஸ்தவ பாதிரிமார்களாலுமே வழிநடத்தப்பட்டன. பாதிமார்களே தலைப்பிசாரர்களாக விளங்கினர். இத்தகைய நடவடிக்கைகளினால் சைவர்கள் இச்சங்கத்தின் செயற்பாடுகள் உள்நோக்கம் கொண்டது என உணர்ந்து அதன் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டனர். இச்சங்கத்தில் சைவர்களின் பிரதிநிதிகளாக இருந்த எஸ். மயில்வாகனம் காலப் போக்கில் விலக்கிக் கொள்ள, வைமன் கதிரைவேற்பிள்ளை மெல்ல மெல்ல ஒதுங்கிக் கொண்டார். இச்சங்கம் போதிய வெற்றியளிக்க முடியாத நிலையில் கில்னர் பாதிரியார் 1864ஆம் ஆண்டு சனோபசார சங்கம் ' என்னும் பெயருடன் ஒரு சங்கத்தை தெருவிலுள்ள கப்பல் பாடசாலையில் நிறுவினார். இச்சங்கத்தின் நோக்கத்தை விளக்கி ஒரு வித்தியாபனத்தை வெளிபயிட்டார். அதில்,

''வண்ணார் பண்ணையில் வசிக்குஞ் சைவருக்கும் பிறருக்கும் இதைக் கொண்டு இதனடியிற் கையொப்பம் வைத்திருக்கின்றவர் தெரியப்படுத்துவது என்னவெனில், மேற்படி சைவராவது, கிறிஸ்துமத அனுசாரிகளல்லாத பிறராவது கிறிஸ்துமத மார்க்கத்திற்கு அல்லது விவிலிய ஆகமத்திற்கு விரோதமாய் கொண்டுவரும் நியாயமான

ஆட்சேபங்களைக் கேட்டு விடை கொடுக்கும்''

எனக் குறிப்பிட்டிருப்பது அவதானிக்கத்தக்கது.

இச்சங்கத்தின் பிரதான நோக்கம் சைவமத கண்டனஞ் செய்து கிறிஸ்தவ மத தாபனம் செய்தல் ஆகும். வைதீகத்தில் நம்பிக்கையும் சைவப்பற்றும் கொண்ட ஈழத்துச் சைவ மக்களைச் சமயப் பயிற்சியும் அறிவும் வல்லமையும், பொருள் வளமும் படைத்த பாதிரிமார்களால், சைவமக்கள் கொண்டிருந்த சமய நம்பிக்கைகளைப் பெரிதும் வென்றெடுக்க முடியவில்லை. ஆயினும் மிஷனரிரார்கள் தமது பிரயத்தனங்களை விட்டு விடவில்லை. கில்னரால் நடத்தப்பட்ட சைவசமயக் கண்டனப் பிரசாரங்கள் பலதடவை குழப்பத்தில் முடிவடைந்தன. 'வண்ணார் பண்ணையில் சைவர்கள் செய்யும் கூத்துக்களைப் பார்த்தால் வெகு வேடிக்கையாகத்தான் இருக்கின்றது' என்ற இலங்காபிமானியின் கூற்று இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும். கில்னர், உஷட், பொஸ்வெல் போன்ற பாதிரிமார்கள் சைவர்களை விவாதத்திற்கு அழைத்தனர். அவர்கள் இலங்காபிமானி, Ceylon Patrot, Jaffna Freeman முதலான பத்திரிகை வாயிலாக தமது கருத்துக்களை வெளியிட்டனர். இப்பாதிரிமார்களின் அழைப்பை சைவப்பிரகாச சமாசீயம் ஏற்றுக் கொண்டது. அதன் தலைவராகிய சங்கரப் பண்டிதர் இலங்காபிமானிப் பத்திரிகையில் தங்கள் கருத்தை பின்வருமாறு தெரிவித்தார்.

''வண்ணார் பண்ணை மதவாத சபையின் அக்கிராசனபதியாகிய கில்னர் பாதிரியாரவர்கட்கு விக்கியாபரும் நுங்கள் மதவாத சபையின் இங்கிலீசுக் கடிதத்தை.... மொழிபெயர்த்து அறிந்து கொண்டோம். நுங்கள் சமாகியருளொருவராகிய உவுட் என்பவர் இங்கிலீசிலே தம்மோடு சமயவாதம் செய்யும் பொருட்டு இங்கிலீசுணர்ச்சியில்லாத பிராமணர்கள் சைவர்களை இலங்காபிமானி வாயிலாயறை கூவி யழைத்தாலும், ஆறுமுக நாவலர், சங்கர பண்டிதர் என்பவர்கள் குறித்த மதவாத சபையில் வாதஞ் செய்தற்கு அஞ்சுகின்றனர். என்று இலங்காபிமானியிற் பிரகடனஞ் செய்ததும் யாது கருதியோ அறியோம். நீரிவையெல்லாம் முற்று நோக்கியா மீண்டு யோதீசுரர் செய்த வாதவிதி என்னும் நூற் கருத்தை அனுசரித்து விவரிக்கும் வாதவிதிகட்குடன் பட்டுக் கிரமமாகச் சமயவாதஞ் செய்யும் கருத்துரையீராயின் யாம் வாதஞ் செய்தற்குச் சிறிதும் தடையின்று''

இக் கருத்துக்களோடு வாதஞ் செய்தற்குரிய பதினான்கு விதிமுறைகளையும் சுட்டிக் காட்டியிருந்தமையையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம். எஸ்.டி. பொய்வெல் பாதிரியாரும் சைவப் பிரகாச சமாசீயத்தாரோடு வாதஞ் செய்ய விருப்பம் கொண்டிருந்தார் என அறிய முடிகின்றது. ஆனால், சமாசீயத்தாரும் பாதிரிமாரும் ஒரே மேடையில் ஏறி சமயவாதங்களில் பங்கு பற்றினரா என்பதை அறியுமாறு இல்லை.

பண்டிதர் சைவ சமய வளர்ச்சியின் பொருட்டு பத்திரிகைகளில் மாத்திரம் சமயவாதங்களை நடத்தியதோடு அமையாது, கிறிஸ்து வதத்துக் கெதிராகக் கண்டன நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டார். கிறிஸ்து மத கண்டனம், மிலேச்ச மத விகற்பம் என்னும் நூல்கள் அத்தகையனவேயாகும். கிறிஸ்து மத கண்டனம் என்னும் நூல் முழுமையான கிறிஸ்து மத கண்டன நூலாக அமைய மிலேச்ச மத விகற்பம் யூத மதம், இசுலாம் மதம் ஆகிய மதங்களுடன் கிறிஸ்து மதமும் ஒரு பகுதியாகக் கண்டிக்கப்படுகிறது. கிறிஸ்து மத கண்டனம் ஒரு பாரிய கண்டன நூலாகும். இந்நூல் தர்க்க சாத்திர விதிகளுக்கு அமைந்து அளவைப் பிரமாணங்களை மனங் கொண்டு தெளிந்த வசன நடையில் பாமர மக்களும் படித்துணரும் வண்ணம் சிறப்பான முறையில் எழுதப் பட்டுள்ளது. அதன் உபோற்காதம் 'பரசிவ விஜயதே' என்னும் வசனத்தை முதல் வணக்கமாகக் கொண்டு, 'நாமார்க்குங் குடியல்லோ நமனையஞ்சோம்' என்ற அப்பர் தேவாரத்தை மனங் கொண்டு அந்நூலை எழுத ஆரம்பித்துள்ளார்.

நாவலரவர்கள் தனது விக்கியாபனம் ஒன்றில் ''சிவதூஷனம் முதலியவற்றைப் பரிகரிக்குங் கால முத்தி பெறுவேமென்பது சாத்திரமே. அமெனில், முத்தியாகிய சாத்தியம் சித்தித்த வழி இச் சரீரமாகிய சாதனம் இருந்தென்! ஒழிந்தென்' எனக் குறித்த சொற்றொடரையும் நாவலர்களது மனோ வைராக்கியத்தையும் இங்கு பண்டிதர் எடுத்தாளும் தேவாரத்தோடும் அவரின் மன வைராக்கியத்தையும் ஒப்ப நோக்கத்தக்கதாகும்.

''சைவ சமயிகளாகிய நாமெல்லாஞ் சிவபெருமானையே மெய்யன்போடு வணங்குவோம். அவரே எல்லா உயிர்களுக்கும் போகமோஷங்களைக் கொடுத்தருள் செய்வார்.

அசற் சமயிகளாகிய கிறிஸ்தவர்கள் இக் காலத்திலே நமது சைவ சமயிகளைத் தம் மதத்திற் புகுவிக்க

என நூலின் உள்ளடக்கத்தினையும் அதன் வெற்றியில் தனக்குள்ள நம்பிக்கையையும் வெளிப்படச் சுட்டிக் காட்டியுள்ளார். இந்நூலின் மூலம் விவிலிய நூலில் அவருக்கிருந்த பரந்த அறிவினையும் ஆற்றலையும் மட்டிட முடிகின்றது.

இந்நூலின் சூசனத்தில் சைவசமயங்களை நோக்கிப் பண்டிதர்:

சைவ சமயிகளே!

''இப்படித்தகத்தைச் சித்தமாதானத்தோடு முதல் தொடங்கி முடியும் வரையும் முழுவதும் வாசித்து உணர்ந்து கொள்ளக் கடவீர்கள். இதிலே காட்டப்பட்ட நியாயங்களினாலே கிறிஸ்தவர்கள் கொள்ளுகின்ற விவிலிய மார்க்கங்கள் கண்டிக்கப்பட்டதோ அன்றோ என்று சிந்திக்கக் கடவீர்கள்.

அவர்கள் தும்பைத் தம்மதத்திற் புகுவிக்க முயன்று வருங்காலங்களிலே அவர்களைப் பிரபல நியாயங்களினாலேயேகண்டித்து விடக் கடவீர்கள்.

அவர்களுடைய துர்போதனையில் அகப்படாது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானையே வணங்கி நற்கதி பெற்றுய்ய முயலக்கடவீர்கள்.''என வேண்டுகோள் விடுப்பார். இது திட்டமிட்ட நிர்வனரித்யாக அமைந்த இயக்கத்தின் வெளியீடாக வெளிவந்தமையால் மேல் கிளர்ந்த வேண்டுகோள்கள் விரும்பியோ விரும்பாமலோ இடம் பெறுவது வழக்கம். சைவர்கள் மிஷனரிமார்களின் எடுப்பான பிரசங்கத்தில் மயங்கிவிடாது தமது சமயத்தைக் காப்பாற்றுவதில் தீவிர அக்கறையோடு இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவார்.

கிறிஸ்தவப் பாதிரிமார்கள் சைவத்தின் மேல் கண்டனங்களையும் பிரதி கண்டனங்களையும் தொடுத்த பொழுது, இவற்றைக் திறம்படச் செய்தற்குப் பொதுசனத் தொடர்புச் சாதனங்களையும் பயன்படுத்திக் கொண்டனர். இக் கண்டனங்களில் சமய தத்துவங்கள் பெரிதும் கண்டிக்கப்பட்ட பொழுதும் கண்டனங்களை எழுதியோரின் தனிமனித ஆளுமையும் கௌரவத்தையும் பெரிதும் பேணினர். குறிப்பாக நாவலரவர்கள் சைவப்பிரகாச சமாசீயத்தை நடத்திச் சென்ற காலத்தில் செய்நன்றி மறவாமை என்னும் உத்தியை கிறிஸ்தவப் பாதிரிமார்களோ சுதேசிய கிறிஸ்தவர்களோ பெரிதும் பயன்படுத்தவில்லை. ஆனால் இக்காலப் பகுதியில் ''செய்நன்றி மறவாமை'' என்பது தமிழ் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அதியுன்னதமான அறக் கோட்பாடாக கிறிஸ்தவர்கள் பொதுமக்களுக்குப் புகட்ட முற்பட்டனர். இது பற்றி பத்திரிகைகளில் கடிதங்கள் மூலமாகவும் சிறு கட்டுரை என்ற வகையிலும் எழுதி வந்தனர். இக்காலச் சூழ்நிலையே இவ்வுத்தியை கிறிஸ்தவர்கள் மேற்கொள்வதற்குக் காரணமாக இந்ததெனலாம்.

வடபகுதியில் இருந்த கிறிஸ்தவப் பாடசாலைகளில் கல்வி கற்று பல சைவர்கள் வெளியேறி, சிறந்த கல்வி உடையோராகவும் , பொதுமக்கள் மத்தியில் நன்கு மதிக்கப்பட்டவராகவும் இருந்தனர். மிஷனரிப் பாடசாலைகளில் கல்வி கற்றோர் விவிலிய நூலை நன்கு கற்றும் , கிறிஸ்தவ மதம் மிஷனரிமார்களின் சமய நடவடிக்கைகள் முதலானவை பற்றியும் நன்றிந்திருந்தனர். மிஷனரிப் பாடசாலையில் கல்வி கற்றோர் பின்னர் மிகுந்த சைவப் பற்றுடையோராய் சைவப் பிரசாரர்களாக மாறிக் கிறிஸ்துமதகண்டனஞ் செய்ய முயன்றமை பாதிரிமார்களுக்கு மிகுந்த கோபத்தைஎம் எரிச்சலையும் கொடுத்தது. அத்துடன் விவிலிய நூலையும் கிறிஸ்து மதத்தையும் நன்கு கற்றும் புரிந்தும் இருந்தமையால் கிறிஸ்துமதம் பற்றிய அவர்கள் கண்டனங்களை ஏனையோரைக் காட்டிலும் சிறப்பான முறையில் அமைந்திருந்தது. அவர்களின் பிரசங்கத்தையும் கண்டனங்களையும் இணையாகப் பாதிரிமார்களால் பிரதி கண்டனங்கள் செய்ய முடியவில்லை. இதனாலே கிறிஸ்தவவர்கள் நாவலரவர்கள் முதல் முருகேசு பண்டிதர் வரை (1832-1865) பாதிரிமார் பள்ளியில் கல்வி கற்று கிறிஸ்து மதத்துக்கு விரோதமாக பிரசாரம் செய்வோரை செய் நன்றி மறந்தவர்கள் என்ற நிலையில் வைத்து தனிமனித கண்டனங்களைச் செய்ய முற்பட்டனர். இதன்மூலம் அவர்களின் மனச்சாட்சியைக் கிளரவிட்டு அவர்களின் பிரசார வேகத்தைத் தளர்த்த அல்லது ஈடுபாடு கொள்ளாதிருக்கச் செய்ய முயன்றனர். அத்துடன் நில்லாது உளவியல் அடிப்படையில் அச்சத்தை ஏற்படுத்தவும் நினைத்தனர். இவ்வழிமுறை பிரசாரர்களின் பிரச்சார வேகத்தை பின்தள்ளுவதோடு, அவர்களுக்குப் பொதுமக்கள் மத்தியில் இருந்து வந்த நல்லெண்ணத்தையும் மாற்றியமைத்தது. பிரச்சார வேகத்தைப் பின்தள்ளும் எனவும் நம்பினர். இதனாலேயே உள் நோக்கம் கொண்ட இத்தகைய உத்தி முறையை கிறிஸ்தவர்கள் மேற்கொண்டனர் போலும். ''எந்நன்றி

கொண்டார்க்கும் முய்வுண்டாம் முய்வில்லை செய்நன்றி கொண்ட மகற்கு'' என்பது முதலிய நோக்காது தங்கள் பூருச நிலையையும் மறந்து முதன் மலத்தாற்றுள்ளி மிதிக்குஞ் சிலருக்கு சுத்த விவேகம் தலைப்படும் படி இக்கடிதத்தைப் பிரசுரம் செய்ய வேண்டுகிறேன்.

வேம்படிப் பாதிரியாருக்குப் பணிவிடை செய்து வயிறு வளர்த்து, அப்பாதிரியாற் கல்வி தேற்றம் அடைந்து நாவலரெனப் பெயர் படைத்தவர் சில நாளாகப் பிராமணத்தூஷணையும், கிறிஸ்தவ மதத்தூஷணணையும் செய்து திரிந்து ஆற்றாது பரதேசம் போயினார். பாதிரிமாரிடத்திற் படித்து வேதாரணியக் குருக்களாற் பிறந்த விவேகமும் கொண்டு சில சமஸ்கிருத வார்த்தைகளைக் கற்றுக் கொண்டு கனதரிக்காய் மெஷட்டும் விக்கிறது என்றாற் போல் வடமொழிப் பாசுரங்களை முக்கி விக்கிக் கக்கிக் கொண்டு நிலைபருத்துக் கிணங்க, சங்கர பண்டிதர் என்று பெயர் பூண்டு தாமே ...... பண்டிதர் போல் , மேற்கூறிய நாவலர் விட்ட குறைகளை தொடங்கி நின்று வைக்கிறார். இவர் பரமார்த்த குருவைப்போல் அக்குருவிடம் சீடர் போல் சுன்னாகம் பூதர் முருகேசன் முதலியோரும் உடன் ஒத்து வடபுலமொருவித் தென்புலமருவி நின்று சமய சாஸ்திர சாரமறியாத சிலசைவப் பிராணிகள் முன்னின்று வாரந்தோறும் பிதற்றுகின்றனர். இதுநிற்க, மேற்கூறிய பூதர் முருகேசர் கோப்பாயிற் பாதிரியாரிடம் தருமச்சோறு வாங்கியுண்டு, அவரிடஞ் சிறிது கற்றும் மதிமயக்கம் கொண்டார். இவன் நாதை உடுவிற் பாதிரியாரிடம் பணிவிடை செய்து மரணம் வரைக்கும் சீவனம் பண்ணினார். தமயன் இன்றைக்கும் பாதிரி பணிவிடை செய்து சீவனம் பண்ணுகின்றான். பூசனன் என்னும் அம்பலவாணப்பிள்ளை என்பவர் வட்டுக்கோட்டை பாதிரியாரிடத்து கருகச் சோறு வாங்கி உண்டு, அவரிடம் சில கற்றும், அவர்களுக்கு மாறாக எழுந்தனர். இவ்வாறு பாதிரிமாரால் மேம்படைந்தவர்களில் திண்ட சோற்றிற்கு இரண்டகமாய் இம்முயற்சியில் இறங்கினர். இவ்வகையோர் முன்னந் தொடங்கி தேவ தண்டணையை அடைந்தனரென பிரத்தியம்சமாயிருக்கின்றது. மாதகல் வித்துவான் ஒருவரும் தெல்லிப்பழையில் ஒருவரும் இவ்வாறு செய்து பாரிசவாதம் முதலிய கொடிய நோய்களுக்குள்ளாகி அழிந்து போயினர். மாட்டின் என்ற வைத்தியருக்கும் அறியப்படாத நோய்க்குள்ளாகி பயங்கர மரணமடைந்தவர். வித்தியாம்பிள்ளை என்பவர் கிறிஸ்து தூஷணை எழுதிய கையும் அழுகி எவரும் அஞ்சத்தக்க கொடிய மரணமடைந்தார். இவைகளை அறிந்திருந்தும் விளக்குச் சுடரில் பட்டிறக்கும் விட்டில் பூச்சி போலவே மெய்த்தேவனைப் பூசிக்க முயன்ற முயற்சிகளைக் கைவிட்டு உத்தமரானால் உய்வுண்டு. ஆகாவிட்டால் உய்வில்லை என அறிந்து நல்லோராவதும் பெரும் சந்தோஷமாம் என இல்ஙகாபிமானிகள் (1865) கிறிஸ்தவர் ஒருவர் வெளியிட்ட விஞ்ஞாபனம் மேற்காட்டியவற்றின் உண்மையைப் புலப்படுத்தி நிற்கும்.

(ஆ) வைணவ சமயக் கண்டனஞ் செய்தல்

நாவலரவர்கள் வைதீக சமயங்கள் மேல் நல்லெண்ணம் கொண்டிருந்தார். ஆயினும் மாயா வாதத்தை அங்கங்கே சாடியுள்ளார். நாவலரவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்திலும் சமயப் பொறியினைக் கடைப்பிடித்து வந்தார். நாவலரவர்கள் பால பாடத்தில் (4) தமிழ்ப் புலமை எனும் பகுதியில் ''வைணவ சமயிகள் மேற்கூறப்பட்ட சமய நூல்களொழித்து ஒழிந்தனவற்றையும் தங்கள் சமய சித்தாந்தங்களையும் கற்றறிந்து அவைகளின் விதிப்படி ஒழுகுக'' எனப் பரிந்துரை செய்துள்ளமை நாவலர் அவர்களின் சமயக் பொதுநோக்கைக் காட்டிநிற்கும் ஆனால இக்காலகட்டத்தில் நாவலரவர்கள் இயக்கத்தை வழிநடத்திச் சென்றோரால் அத்தகைய சமரச நோக்கினை கடைப்பிடிக்க முடியாதிருந்தமை ஆச்சரியப்படத்தக்கதே. வைணவர்கள் இல்லை என்று கூறுமளவிற்கு சைவர்கள் நிறைந்து வாழும் நாடு ஈழமாகும். ஆயினும் சைவ-வைணவ சமயப் போராட்டங்கள் பிறர் அதிசயிக்கும் வகையில் நடைபெற்றன. பண்டிதர் தமது சிவதூஷணைக் கண்டனம் என்னும் பிரசுரத்தில் பதி விசேஷ நிருபணம் எனும் பகுதியில் விஷ்ணுவின் பரத்துவத்தை விமர்சனத்திற்குட்படுத்தியதோடு , பிரசங்க வாயிலாகவும் கண்டனம் செய்து வந்தார். இவறை விட சை. பி. சாமாசியதாதாரும் வைணவ சமயக் கண்டனத்தில் ஈடுபட்டு வந்தார். பண்டிதர் பதி விசேஷ நிருபணம் கூறும் பொழுது 'சிவ்பெருமானுடைய ஆஞ்சையினாலே தொழிலியற்றுகிற பிரம்மா விஷ்ணு உருத்திரன் எனும் மூவரும் குணமூர்த்திகள் எனப்படுவர். சிவரூபமோ குணமூர்த்திகளைக் கடந்தாம்''. எனக் குறிப்பிடுவதன் மூலம் விஷ்ணுவின் சிறப்பைக் காட்டிலும் சிவத்தின் பரத்துவம் மேலானது எனக் குறிப்பிடுவார்.

சைவ சமயிகளின் வைணவக் கண்டனங்களுக்குப் பிரதிக் கண்டனம் செய்யும் வகையில் வைணவம் சார்ந்தோரும் இலங்காபிமானி பல கடித வடிவம் வாயிலாக சிறு கட்டுரைகளை எழுதினர். 1865ஆம் ஆண்டு ''சைவ முழக்கம் பேதமை விளக்கம்'' பதிநிர்ணயம் எனுந் தலைப்புக்களில் பல சிறு கட்டுரைகள் மேற்படிப் பத்திரிகையில்

வெளிவந்துள்ளன. அத்துடன் வைணவத்தின் சிறப்பும் விஷ்ணு, நாராயணன் பரத்துவம் முதலான விடயங்களில் சிறு கட்டுரைகள் பிரதி கண்டனங்களாக வெளிவந்தன.

''சைவப் பிரசார சங்கத்தால் விஷ்ணுவை சிவனடியார் என்றும் பற்பல சாஸ்திரப் பிரமாணம் கொண்டு சாதித்ததே அன்றி வைணவர் தங்கட்கு ஆதாரமானதெனக் கொண்டு வழங்கும் பஞ்சராத்திரம் முதலிய அபத்த நூல்களாலன்று '' அந்நூல்களினாற் தானே பல பிரமாணங்கள் காட்டிக் கேட்பார் மனம் மகிழும் பொருட்டு பிரசங்கித்துத் சகித்து இருக்க 'பொறாமையுடையோர் பொருளுண்மை தேறார்' என்றபடி அவற்றை தேறாண்மையாற் தானே பிறவாற்றானே அறியேம் . சிலர் அவ்வாறு பிரசங்கித்தோரை மான அவமான யவுணரென்றன் முதலியன பற்பல விழிபுளரகனானிதித்துத் தாமேதோ அறிந்தவர் போல அதிகப் பிரசங்கம் பண்ணினார். அவைகளை மீண்டும் காட்டில் யாமும்பயனில் சொற் கூறினாகி மக்கட் பதடியென்றிகழப்படுவோமாதலாற் சிலவற்றை மட்டும் காட்டுகிறோம்.

படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் பிரம்மன் முதலிய ஐவரும் செய்வார் என்றும், இவ்வைவரும் முறையே ஒருவரின்று ஒருவர் உயர்ந்தோர் என்றும் சிவனொருவரே இவ்வாறு நின்று செய்விப்பார் என்றும் சைவ சாஸ்திரங்கள் முழங்க இவற்றைச் சிறிது முரணானது ஐந்தொழிலில் உருத்திரனுக்குரிய சங்காரத்தை இட்டு ஆனந்தமென்று நூதனமான ஒன்றைச் சேர்த்ததுமன்றிச் , இவற்றைச் செய்யும் ஐவரையும் ஓரினம் என்றும் , அவருள் ஒருவர் பதியாதல் கூடாது ஒன்றில் அவரும் பதியாதல் வேண்டும் அல்லது பசுவாதல் வேண்டும் என்று தமக்கிசைந்த யுத்தியும் எடுத்துக் கூறிய பின் அவ்வுத்திக்கும் விரோதமாக அவ்வைவருள் ஒருவராகிய விஷ்ணுவை தெய்வமென்று சாதிக்கப் புகுந்தமையால் சைவ சாஸ்திரத்தில் சற்றும் பயிற்சியில்லாதவர் என்பதைக் காட்டினர். '' இங்ஙனமாகவே இவர் கூறிய மற்றைய தருமங்கள் அபத்தம் என்பது யாவருக்கும் விளங்கும். '' எனச் சைவ முழக்கமும் பேதமை விளக்கமும் எனும் கண்டனத்தின் மூலம் சிவ விஷ்ணு பரத்துவத்தில் பேதமின்மையை சைவர்களுக்கு விளக்க முற்படுவர் இவ்வாறு சைவர்கள் தொடுக்கும் வைணவக் கண்டனங்களுக்கு வைணவம் சார்ந்தோர் பிரதி கண்டனமாக, சமாதானம் சொல்லும் முயற்சியை இக்காலப் பகுதியில் அதிகமாகக் காணலாம்.

(இ) இவை தவிர்ந்த மதக் கோட்பாடுகளை வேண்டும் பொழுது சாடல்:

மேற்கூறிய கிறிஸ்தவம், வைணவம் ஆகிய மதங்களை மிகவும் தீவிரமாக எதிர்த்துக் கண்டனம் செய்த சாமாஸியத்தார் அவ்வப்போது யூத மதம் இஸ்லாம் மதம் ஆகியவற்றின் சமயக் கருத்துக்களையும் மீமாஞ்சம் பாஞ்சராத்திரம், மாயாவாதம் முதலானவற்றின் கோட்பாடுகளையும் கண்டனம் செய்தனர்.

ஈழநாட்டின் சைவ சமய வரலாற்றில் கி.பி. 1864-1870 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால வரலாறு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். நாவலரவர்கள் 1848-1854 ஆம் ஆண்டு வரையும் உள்ள காலப்பகுதியில் தன்னை சைவ சமய வளர்ச்சியின் பொருட்டு அர்ப்பணித்து உருவாக்கிய இயக்கம் இதுவாகும். இவ்வியக்கத்தின் விளைவுகளை நோக்குவதற்கு தக்கதோர் காலமாக அமைவதுடன் இவ்வியக்கம் நாவலரவர்கள் காட்டிய வழிமுறைகளை பின்பற்றி சுயமதக் தாபனங்களையும் கிறிஸ்தவ மத கண்டனங்களையும் செய்து வந்தனர். இவற்றிற்கு மேலாக இவ்வியக்கத்தினர் வைதீக மதங்களுள்ளே வைணவம், மாயாவாதம், மீமாஞ்சை, பஞ்சராத்திரம் முதலான மதங்களின் கோட்பாடுகளையும் யூத மதம் இஸ்லாம் மதம் ஆகியவற்றையும் எதிர்கொண்டு கண்டனங்கள் செய்ய முற்பட்டமை சைவ சமய வரலாற்றில் புதிய அத்தியாயமாகும். எனவே இக்கால இயக்கத்தில் இயல்பூக்கமும் நாவலர் இயக்கத்தின் வலுவான அறுவடை என்பதோடு சைவ சமய வரலாற்றில் காத்திரமான பங்களிப்பைச் செய்து, அடுத்த இயலுக்கான புத்தெழுச்சி இயக்கத்தை தோற்றுவித்தது எனலாம்.

# சுவாமி விவேகானந்தரும் பெண்களும்

கலாநிதி துரை. மனோகரன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்படத் தொடங்கிய இந்துமத மறுமலர்ச்சி, ஒரு மாபெரும் மகானையும், அவரது ஓர் உன்னத சீடரையும் உலகுக்கு அளித்தது. இராமகிருஷ்ண பரமஹம்ஸரும், சுவாமி விவேகானந்தருமே அவ்விருவருமாவர். எந்தவித மாயாஜால மந்திர வித்தைக்காரராகவும் இராமகிருஷ்ணர் விளங்கியதில்லை. அதேபோன்று உலகத்துறவிகளுள் தனித்துவம் வாய்ந்தவராகச் சுவாமி விவேகானந்தர் விளங்கினார். கல்வியறிவிலும், உலக ஞானத்திலும், மெய்யுணர்விலும் சிறந்து விளங்கிய அவர், பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும், கருத்துக்களை வழங்கியவர். இவ்வகையில் பெண்கள் தொடர்பாகவும் தமது கருத்து நிலைப்பாட்டினை எவ்வித ஒளிவு மறைவுமின்றிச் சுவாமி விவேகானந்தர் புலப்படுத்தியுள்ளார்.

பொதுவாகவே துறவிகளுக்கும், பெண்களுக்கும் இடையே ஒருவகை முரண் நிலையே எப்போதும் காணப்படுவதை உணரலாம். பெரும்பாலான துறவிகள், பெண்களை மாயப் பிசாசுகளென்றும், தமது துறவு வாழ்க்கைக்கு அவர்களே பெரிய இடையூறுகளாக விளங்குகின்றனர் எனவும், மெய்ஞ்ஞானம் பெறுவதற்குப் பெரிதும் தடையாக அவர்கள் விளங்குகின்றனர் என்றும் கூறி, பெண்களின் இயல்பையும், உடலழகையும் இழித்தும், பழித்தும் மொழிந்து தமது இயலாமைக்கு நியாயம் கற்பிக்க முனைவர். அதே போன்று, பெண்களும் துறவிகளை விரும்புவதில்லை. இத்தகைய எதிர்நிலை முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டவராகச் சுவாமி விவேகானந்தர் விளங்கினார். பெண்கள் பற்றிய ஓர் உன்னத நோக்கு அவரிடத்து இயல்பாகவே இருந்தது.

சுவாமி விவேகானந்தர் பெண்கள் பற்றிய தமது நோக்கிற்கு இந்தியப் பெண்களையே அடிப்படையாகக் கொண்டார். அவளது உயர்ச்சியே அவரது ஒரே குறிக்கோளாக இருந்தது. இந்தியப் பெண் பற்றிய தமது கருத்து நிலைப்பாட்டினை , அவர் பாரதத்தின் பழம் பண்பாட்டிலிருந்தும், நவீன தேவைகளிலிருந்தும் உருவாக்கிக் கொண்டார் எனக் கருதலாம். பழைய பாரத பண்பாட்டை நேசிப்பவராகவும், நவீன சமூக வளர்ச்சிகளைக் கருத்திற் கொண்டவராகவும் விளங்கிய சுவாமி விவேகானந்தர், தமது அதே நிலைப்பாட்டினையே பெண்கள் தொடர்பாகவும் கொண்டிருந்தார்.

இந்தியப் பெண்களின் இலட்சியப் பாத்திரங்களாகச் சுவாமி விவேகானந்தர் கருதியது, சீதையையும், சாவித்திரியையும் ஆகும். தூய்மை கொண்டவளாகவும், தீயாக வாழ்வு வாழ்ந்தவளாகவும் துன்பங்களைச் சகித்தவளாகவும் விளங்கியவள், சீதை இராமர்கள் பலர் தோன்றலாம், ஆனால், இன்னொரு சீதை தோன்றமுடியாது என்பது சுவாமியின் கருத்து. தனது மனவுறுதியைக் காட்டி வெற்றி பெற்ற சாவித்திரியும் விவேகானந்தரைத் கவர்ந்த இன்னோரு இலட்சியப் பாத்திரமாவாள்.

வேத உபநிடத காலங்களில் மைத்ரேயி, கார்க்கி முதலான பெண்கள் ஆத்ம ஞானம் பற்றி விவாதிக்கும் திறமை பெற்றிருந்தனர். ஆனால், இடைக்காலத்திற் பெண்கள் அடக்கியொடுக்கப்பட்டனர். மீண்டும் பழைய நிலை ஏற்பட வேண்டும் என்பதையே பெரிதும் விரும்பியவராகச் சுவாமி விவேகானந்தர் விளங்கினார். இடைக்காலத்தில் ஏற்பட்ட சமுதாயத் தீமைகளுக்கு ஆண்களே காரணம் என்பதுஅவரது கருத்தாக இருந்தது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் மேல்நாட்டுப் பெண்களோடு இந்தியப் பெண்களை ஒப்பிட்டு, தமது கருத்துக்களை விவேகானந்தர் வெளிப்படுத்தியுள்ளார். மேல்நாட்டுப் பெண்களைப் பார்க்கும் போது, பல வேளைகளில் அவர்கள் ஆண்களின் நகல் போன்றே விளக்குகின்றனர். ஆனால், கண்களுக்கு இதந்தரும் பெண்மையை இந்தியப் பெண்களிடமே காணவியலும் என்பதே அவரது கருத்து. அத்தகைய அற்புதமான குணங்களையுடைய பெண்களை முன்னேற்ற இந்தியாவில் ஆண்களால் முடியவில்லை என அவர் ஆண்களைச் சாடியுள்ளார். மேலைநாட்டுப் பெண்களின் அறிவுக் கூர்மையைப் பாராட்டிய விவேகானந்தர், அதேவேளையில்

இந்தியப் பெண்களின் தூய்மையை விதந்தோதியுள்ளார்.

இந்தியாவில் பெண்மையின் இலட்சியம் தாய்மையிலேயே பரிணமிக்கின்றது என்பதைப் பலவிடங்களிலும் விவேகானந்தர் வற்புறுத்தியுள்ளார். மேலைநாட்டு வீடுகளில் மனைவி ஆட்சி புரிகிறாள் என்றும் இந்திய இல்லங்களில் அன்னை ஆட்சி புரிகிறாள் எனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பெண்ணை மகள் என்ற நிலையில் வைத்து நோக்கிய விவேகானந்தர், இந்தியக் குடும்பத்தில் பெரும் தொல்லையாக விளங்குபவள் மகளே எனக் குறிப்பிடுகின்றார். மகளும், சாதியமைப்பும் சேர்ந்து, ஏழை இந்துவை அழித்து விடுகின்றன எனக் குறிப்பிடும் அவர், மகளை மணம் பேசிக் கொடுப்பதற்கு தந்தை பிச்சைக்காரனாகிவிடுகிறான் என்றும் சுவையோடு தமது கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

பெண்களின் வளர்ச்சி குறித்து அதிக அக்கறை செலுத்திய சுவாமி, அவர்கள் வளர்ச்சிடைவதற்கு வேண்டிய முதல் நிலை சுதந்திரமே எனத் தெரிவித்துள்ளார். அவ்வகையில், மேனாட்டுப் பெண்களின் சுதந்திரத்தை மிகவும் போற்றுகிறார். இந்திய நாட்டுப் பெண்களுக்கு அத்தகைய சுதந்திரம் இல்லையே என்ற வேதனை அவர் உள்ளத்தில் எப்போதும் விஞ்சி நின்றது.

பெண்கள் சுதந்திரமும் வளர்ச்சியும் பெறுவதற்கு அடிப்படையானது கல்வியே என்பதைச் சுவாமி விவேகானந்தர் சந்தர்ப்பம் வாய்க்கும் தோறும் எடுத்தியம்பியுள்ளார். பெண்களுக்கு முதலில் கல்வியளித்து, அவர்கள் வழியில் விட வேண்டும் எனவும், அதன்பின் தங்களுக்கு என்னென்ன சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்பதை அவர்கள் தெரிவிப்பர் என்றும் ஆணித்தரமாகத் தமது கருத்துக்களை அவர் முன்வைத்தார்.

பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கல்வி பற்றியும் விவேகானந்தர் கருத்துகளைத் தெரிவித்துள்ளார். வெறும் புத்தகப் படிப்பால் பயனில்லை எனவும், சிறந்த குணத்தை உருவாக்கக் கூடிய, மன வலிமையை வளர்க்கத்தக்க, அறிவை விரியச் செய்யக்கூடிய, ஒருவரைத் தமது சொந்தக் கால்களில் நிற்கவைக்கத்தக்க கல்வியே தேவை என அவர் மொழிந்துள்ளார்.

கல்வியின் மூலமாகப் பெண்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். உதவியற்ற நிலை அடிமைகள் போன்று பிறரைச் சார்ந்திருக்கும் நிலை என்பவற்றிலேயே பெண்கள் நீண்ட காலமாகப் பழக்கப்பட்டுள்ளனர். சிறிது துன்பமோ, துயரமோ ஏற்பட்டு விட்டால், அவர்களுக்குத் தெரிந்த விடயம் அழுவது மட்டுமே. அந்நிலையை நீக்கி, மற்ற விடயங்களுடன் வீரத்தையும், தைரியத்தையும் தற்காப்பு முறைகளையும் அவர்களுக்கு ஊட்ட வேண்டும் என்பது விவேகானந்தரின் முக்கிய நோக்கமாகும்.

பெண்களது கல்வி தொடர்பாகச் சுவாமிகள் ஆண்களைக் கடுமையாகச் சாடியுள்ளார். அறிவு ஒளியைப் பெண்களிற் பாய்ச்சுவதற்கு ஆண்கள் முயல்வதில்லை எனவும், சரியான கல்வி அளிக்கப்படுமாயின், இந்தியப் பெண்கள் உலகத்திலேயே மிகச் சிறந்த இலட்சியப் பெண்களாக உருவாகுவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பெண்களுக்குச் சமயம், கலைகள், விஞ்ஞானம், குடும்ப கடமைகள், சமையல், தையல், சுகாதாரம் போன்ற எளிமையான பாடங்களைக் கற்பிக்க வேண்டுமெனச் சுவாமி விவேகானந்தர் கருதினார். படிப்பு வாசனையற்றிருந்த பெண்களுக்கு இவ்வாறு எளிமையான கல்வியை ஆரம்பத்தில் அளிப்பதுதான் நன்மை பயக்கும் என அவர் கருதியிருக்கலாம். நாவல்களையோ, கற்பனைக் கதைகளையோ அவர்கள் வாசிக்க அனுமதிப்பது நல்லதல்ல என்ற கருத்தைச் சுவாமிகள் கொண்டிருந்தார். இவ்விடயத்தில் அவர் முற்போக்காகச் சிந்திக்கவில்லை என்றே கூற வேண்டும்.

பெண்கள் கல்வியிலும், ஆத்ம ஞானத்திலும் பயிற்சிகளைப் பெறுவதற்காகத் தனியான மடம் ஒன்றையும் நிறுவுவதற்கு விவேகானந்தர் விரும்பியிருந்தார். ஒவ்வொரு கிராமத்திலும் பெண்களின் முன்னேற்றம் கருதிப் பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தை அவர் கொண்டிருந்தார். பெண்கள் உயர்த்தப்பட்டால், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் மகத்தானவர்களாக வளர்வர். அவர்கள் மகத்தானவர்களாக வளர்ந்தால், அவர்களின் மேன்மையான செயல்களினால் இந்தியநாடு பண்பாடு, ஞானம், ஆற்றல், பக்தி ஆகியவற்றில் எழுச்சி பெறும் என்பது சுவாமிகளின் உள்ளக்கிடக்கைகளாகும்.

பெண்களின் திருமணம் குறித்தும் சுவாமி விவேகானந்தர் தமது சொற்பொழிவுகளிலும், உரையாடல்களிலும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார். தமது காலத்தில் இந்தியாவிற் காணப்பட்ட பால்ய விவாகத்தைக் கடுமையாக அவர் கண்டித்துள்ளார். மேனாடுகளில் தகுந்த வயது வந்த பின்னரே பெண்கள் திருமணம் செய்கின்றனர். ஆனால், இந்தியாவில் பெண்கள் நெறிதவறக்கூடாது என்ற நோக்கில் பால்ய விவாகத்தை நிர்ப்பந்தித்தனர். சுவாமி விவேகானந்தர் பெண்களின் திருமண வயது உயர்த்தப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். அக்காலத்தில் அது முற்போக்கான கருத்தாகும் . பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த பெண்களைத் திருமணம் செய்வதைத் தடை செய்யும் திருமண வயது நிர்ணயச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது, இந்து மதவாதிகள் மதம் அழிந்து விட்டதென ஓலமிட்டனர். அப்போது ''பன்னிரண்டு பதின்மூன்று வயதிலேயே பெண்ணைத் தயாக்குவதில்தான் உங்கள் மதமே உள்ளது போலும்'' என்று விவேகானந்தர் அவர்களைக் கிண்டல் செய்து கண்டித்தார்.

பெண்கள் தொடர்பான பல்வேறு விடயங்களில் முற்போக்கான கொள்கைகளைக் கொண்டிருந்த விவேகானந்தர், விதவா விவாகம் பற்றி மாறான கருத்துகளையே பிரதிபலித்தார். விதவைகள் பிரச்சினையை அவர் முக்கியமானதாகக் கருதவில்லை. திருமணமாகாத பெண்களின் பிரச்சினைகளுக்கே அவர் முக்கியத்துவம் அளித்தார். அதற்கு அவர் தெரிவிக்கும் காரணம் பின்வருமாறு அமைகிறது. விதவைகளுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தாகிவிட்டது. அவர்களுக்குத் திருமணமாகியது. அவர்கள் அந்த வாய்ப்பை இழந்திருக்கலாம். ஆனால், வாய்ப்பு என்னவோ அவர்களுக்குக் கிடைக்கத்தான் செய்தது. ஆனால், திருமணமாகாமல் இருக்கும் பெண்களின் கதியை நோக்க வேண்டும். திருமணம் செய்து கொள்ள அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கூடக் கிடைக்கவில்லை. விவேகானந்தரின் இந்த வாதம், தர்க்க ரீதியாகப் பொருந்துமாயினும், மனிதாபிமான ரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இவ்விடயத்தில் ஆண்களுக்குள்ள சலுகைகள் குறித்துச் சுவாமியவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை. விதவைகள் அதிகமாக இருப்பதற்குக் காரணம், பால்யத் திருமணம் தான் என்று குறிப்பிடும் அவர் பால்யத் திருமணங்கள் குறைந்தால் விதவைகளின் எண்ணிக்கையும் நாட்டிற் குறைந்துவிடும் எனக் கருதினார்.

பல்வேறு முறைகளில் பெண்களின் முன்னேற்றம் பற்றி அக்கறை செலுத்திய விவேகானந்தர், சந்தர்ப்பம் வாய்க்குந்தோறும் ஆண்களைக் கடுமையாகச் சாடவும் தவறவில்லை. ''நீங்கள் எப்போதும் பெண்களையே குறை கூறுகிறீர்கள் ஆனால் அவர்களுடைய நன்மைக்காக ஏதாவது செய்திருக்கிறீர்களா? அவர்களுக்கு எதிராகச் சாஸ்திரங்களில் எழுதிக் கொண்டும் கடுமையான சட்டங்களின் மூலம் அவர்களை அடக்கி வைத்துக் கொண்டும் அவர்களை வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவே ஆக்கிவிட்டீர்கள்'' என ஆண்களைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

சுவாமி விவேகானந்தர் இந்தியாவிற் காணப்படும் இரு பெருந் தீமைகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

1. பெண்ணை அடிமைப்படுத்தல்
2. சாதிவேற்றுமை மூலம் ஏழைகளைக் கசக்கிப் பிழிதல்.

இவ்விரு தீமைகளுக்கும் எதிராக அவர் தமது முழுச்சக்தியையும் பிரயோகித்தார். இந்தியப் பெண்கள் பற்றிய உறுதியான கருத்து அவரிடத்து எப்போதும் காணப்பட்டது. ''திடீரென்று புகுந்த ஐரோப்பிய எண்ணங்களாலும், அதனால் நம்மிடையே விழைந்த வேறுபாட்டு உணர்ச்சியாலும் நம் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்னும் கருத்திற்கு நாம் எளிதில் இசைந்து விடக்கூடாது'' என்ற கருத்தை அவர் வலியுறுத்தி வந்துள்ளார்.

துறவியாக விளங்கிபோதும், உலகை மறந்து கண்களை மூடி, சமுதாயப் பிரச்சினைகளை வசதியாக மறந்து, வெறும் உபதேசியாக மட்டும் வாழாமல், தம்மைச் சுற்றியுள்ள சமுதாயப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அவற்றைத் தீர்ப்பதற்கு மார்க்கம் தேடிய சமுதாயக் காவலராகவும் சுவாமி விவேகானந்தர் விளங்கினார். பெண்கள் பற்றிய பிரச்சினைகளையும் சமூக அக்கறை உணர்வுடவேயே அவர் நோக்கியுள்ளார்.

# சைவசமயத்தின் வளர்ச்சியில் சோழப் பெருமன்னர்கள்

கலாநிதி அம்பலவாணர் சிவராஜா. சிரேஸ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 1.அறிமுகம்

இந்துமதத்தின் ஒரு பிரிவான சைவசமயம் தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டிலும் தமிழர்களோடும் அடையாளம் காணப்படும் ஒரு மதமாகவுள்ளது. தமிழ் நாட்டுக்கு வெளியில் இலங்கை, மலேசியா, மொறீசியஸ் போன்ற நாடுகளிலும் பெரும் எண்ணிக்கையான சைவர்கள் வாழ்கின்றார்கள். இவர்களை விட உலகின் பல்வேறு நாடுகளிலும் சைவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மதமும் மனிதர்கள் முத்தியடைவதற்கான மார்க்கத்தையே வலியுறுத்துகிறது. அம்மார்க்கம் சரியை, கிரியை யோகம், ஞானம் என நான்கு வகையாக பிரிக்கப்படுகிறது.

இந்திய மதங்களின் வரலாற்றில் கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில், மற்றைய எல்லா இந்து சமயப் பிரிவுகளையும் விட சைவசமயம் பல கோடிக்கணக்கானவர்களின் மனங்கள், வாழ்வு என்பன மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளது. பல்வேறு உருவங்களாக வெளிப்பட்ட சைவம் இக்காலப்பகுதியிலேயே அதன் உச்சநிலையை அடைந்தது. இத்தகைய சிறப்புப் பெற்ற சைவ சமயத்தின் தோற்றத்தினையும் வளர்ச்சியினையும் நோக்குதல் சிறப்பானதாகும். சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு சோழப் பெருமன்னர்கள் வகித்த பங்கினையும் இங்கு நோக்குவோம்.

## 2. தோற்றம்:

சைவ சிந்தாந்தம் மிகவும் அபிவிருத்தியடைந்த பிற்கால சைவ குழுவாக இருந்த போதிலும் மற்ற எல்லா பிரிவுகளையும் விட மிகவும் முன்னேறியதொன்றாகவும், முன்னைய குழுக்களையும் பிரிவுகளையும் விட நம்பிக்கைகள் வழக்கங்களைப் பொறுத்து ஒப்பீட்டளவில் மிதமானதாகவும் உள்ளது.

சிவபெருமானின் இருபத்தியெட்டு அவதாரங்களில் ஒன்றான குகைவாசியனை சைவ சித்தாந்தின் தோற்றுனராக ஏற்றுக் கொள்வதனால் மற்றைய பிரிவுகள் தொடர்பாக சைவம் பழமை வாய்ந்தது என்பதையும் இது காட்டுகிறது. தத்துவார்த்தரீதியில் சைவசித்தாந்தம் கிட்டத்தட்ட எல்லா சைவப் பிரிவுகளையும் அதாவது எல்லா அடிப்படையான எண்ணக்கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது. காஸ்மீரில் இருந்து வந்த சில சித்தாந்த ஆசிரியர்கள் (உதாரணம் இராமகாந்தா 1) மத்திய இந்தியாவில் சைவ சிந்தாந்தத்தை ஸ்பானரீதியாக ஆக்கியவரும் வேதங்கள் உபநிடதங்கள் சைவ ஆகமங்கள் என்பனவற்றையும் சைவ தத்துவ முறை பற்றியும் ஆழ்ந்த அறிவுடையவராக இருந்தார்.

மரபுரீதியாக சைவசித்தாந்தின் முதலாவது இறைதூதர் கடம்பை குகை வாசி அல்லது தருவாணர் அல்லது குகைவாசியாவார். அவர் ஒரு சித்தர் என்பதோடு சிவனின் அவதாரமும் ஆவார். இக்குகை வாசிகளைத் தொடர்ந்து சங்க மடாதிபதி என்பவர் முதலிடம் பெறுகின்றார். இவரின் பெயரில் சித்தாந்த நடவடிக்கைகளுக்கென ஒரு மடம் இருந்தது என்பதைக் காட்டுகிறது. இவரைத் தொடர்ந்து தெரம்பிபாலர், உருத்திர சம்பு என்போரும் முதன்மை பெற்றனர்.

மேற்சொன்ன மடாலயங்களின் ஒழுங்கமைப்பு பற்றிய தகவல்கள் அதிகம் இல்லை உருத்திரசம்புவுக்கு முன்பு சங்கரே இந்து மடாலயங்களை ஒழுங்கு படுத்தியவர் என நம்பப்படுகின்றது. உருத்திரசம்பு காலத்தில் இருந்து (கி.பி.775) சைவசித்தாந்தத்திற்கென மூன்று மடாலயபீடங்கள் இருந்தன. சித்தாந்த வழக்கங்களின் படி இம்மூன்றும் அவை தோன்றிய இடங்களின் பெயர்களாலேயே அழைக்கப்பட்டன. அவைமுறையே அமர்தகா, (உஜ்ஜாஜினி) மத்தமயூறா, மதுமற்றேயா என்பனவாகும்.

அமிர்தகா என்ற பீடம் உருத்திரசம்புவினால் உருவாக்கப்பட்டதாகும். இப்பீடம் துருவாச முனிவரின் பெயரோடும் சம்பந்தப் படுத்தப்படுகிறது. மத்தமயூரா பீடம் புரந்தரா என்பவரால் ஆரம்பிக்கப்பட்டதாகும். மத்தமயூறாபீடம் பவன சிவ என்பவரால் உருவாக்கப்பட்டதாகும். தென் இந்தியாவிலும் பக்கங்களிலுமுள்ள இராசதானிகளிலும் தமது சமய சிந்தனைகளைப் பரப்புவதில் தத்தமது அரச பாதுகாவலர்களின் செல்வாக்கினை பயன்படுத்தினர். சாளுக்கியரின் பழம் பெரும் தலை நகரமான மத்த மயூராவிலிருந்து மகாராஸ்திரா, தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா, கேரளம் போன்ற இடங்களில் மடாலயங்களை உருவாக்கினர். சைவசிந்தாந்தம் அது பரவிய இடங்களிலெல்லாம் சிறப்பாக வளர்ச்சியடைந்தது ஆனால் மொகலாய படையெடுப்புகளால் சில இடங்களில் அழிந்து விட்டது. ஆனால் தமிழ் நாட்டில் மாத்திரம் அது நின்று நிலைத்தது.

## 3. வளர்ச்சி

பின்வரும் மூன்று முக்கிய காரணங்களாலேயே சைவசிந்தாந்தம் வளர்ச்சியடைந்தது.

1. அரசியற் செல்வாக்கு.

2. தனிப்பட்டவர்களின் புனிதப்பணிகள்.

3. மதப்படிப்பினைகள்.

தகல மண்டலத்தின் அரச பரம்பரையான கலாசூரி பரம்பரையினர் மத்திய இந்தியாவின் சில பகுதிகளை அரசாண்ட சாளுக்கிய மன்னர்களும் சூந்திரா அல்லது தெலுங்கு நாட்டின் அரச பரம்பரையான காகட்டியர்களும் மேற்கிந்திய மன்னர்களான லம்பகர்ணர்களும் சைவ சிந்தாந்தம் வளர்வதற்குப் பலவழிகளிலும் தொண்டாற்றியுள்ள போதிலும் சோழ மன்னர்கள் ஆற்றிய பங்களிப்பே தனித்துவமானதாகும்.

கி.பி.985க்கும் 1014க்கு மிடையில் ஆட்சி செய்த சோழ மன்னனான முதலாம் இராஜராயன், தென் இந்தியாவில் திருவேந்திரம், மதுரை போன்ற பிரதேசங்களையும் இலங்கையின் பல பிரதேசங்களையும் ஆட்சி செய்தான். இம்மன்னன் பல சிவ ஆலயங்களையும் கற்கோவில்களையும் கட்டுவித்தான். 1010ம் ஆண்டில் தஞ்சைப் பெருங் கோவில் அல்லது இராஜேஸ்வர கோவிலைக் கட்டுவித்ததோடு அதன் பராமரிப்புக்காக பல கிராமங்களையும், பணங்களையும் வழங்கினான். சிவன் மீது இம் மன்னன் கொண்ட ஆழ்ந்த பக்தி காரணமாக இவன் சிவபத சேகரன் எனவும் அழைக்கப்பட்டான். இராஜராயனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த முதலாம் இராஜேந்திரன் (1012 -44) இலங்கை முழுவதையும் கைப்பற்றியதோடு கிழக்கு இந்தியா, மேற்கு வங்காளம் என்பவற்றையும் வெற்றி கண்டு தனது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். இம்மன்னனுக்கு சைவசமயத்தின் மீதிருந்த பக்தியும் அதற்கு வழங்கிய உதவிகளையும் ''சிந்தாந்த சரவழி'' என்பது பின்வருமாறு கூறுகிறது.

கங்கையில் நீராட வந்த
இராஜேந்திர சோழன்
வட இந்தியாவிலுள்ள சைவர்களின்
சிறப்புக்களைக் கண்டான் அதனால்
அவற்றை தனது சொந்த நாடான
காஞ்சியிலும் சோழமண்டலத்தின்
மற்றைய பகுதிகளிலும் நிலையுறச் செய்
வதற்காக எடுத்துச் சென்றான்.

விக்கிரம சோழன் (1118-35) என்ற மற்றொரு சோழ மன்னன் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவிலுக்கு பல நன்கொடைகளை வழங்கினான். ஒட்டக்கூத்தன், சேக்கிழார், கம்பன் போன்ற தமிழ் இலக்கிய மேதைகளை ஆதரித்த மன்னனான இரண்டாம் குலோத்துங்கன் தமிழ் இலக்கியத்தில் மாத்திரமல்லாது சமயத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவனாக இருந்தான்.

சைவ சிந்தாந்தத்துக்கு தனிப்பட்டவர்கள் வழங்கிய புனிதப்பணிகளை பல கல்வெட்டுக்கள் சான்று கூறுகின்றன. இவற்றுள் குர்க்கிக் கல்வெட்டுக்கள் சைவ சித்தாந்தத்தினைப் பின் பற்றிய முனிவர்கள் எவ்வாறு ஆசார

முறைகளைப் பின்பற்றினார்கள் என்றும் வேண்டுதல்களை எவ்வாறு நிறைவேற்றினார்கள், எவ்வாறு சிவனின் தாராண்மைக் கோட்பாடுகளை விளக்கினார்கள் என்றும் எடுத்துக் கூறுகின்றது. பிரபோத சிவ என்பவர் துறவறம், தியானம், ஆசாரங்கள் பழங்களை மட்டுமே உண்ணுதல் என்பவற்றினூடாக கடவுளின் அனுக்கிரகத்தை எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பதையும் விளக்குகின்றது.

சைவ சித்தாந்தத்தினைப் பரப்பியோர் மிகவும் ஆர்வமிக்க ஆசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும் இருந்தனர் என நாம் அறிகின்றோம். இப்போது எஞ்சியுள்ள சித்தாந்த எழுத்துக்களைக் கொண்டு பார்க்கும் போது பெருமளவு நூல்கள் அழிந்து விட்டன என அறிகிறோம். அழிந்து விட்ட இந் நூல்களைப் பற்றிக் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. சக்கரவர்த்தி இராஜேந்திர சோழனின் பெயரோடு சம்பந்தப்படும் ஈசான சிவனின் சீடர்களின் நூல்களும் உள்வைரேகனா, சோமசம்பு போன்றோரின் நூல்களான பிரசித்த தர்பாண, சேமசம்பு பந்தாதி என்பன பற்றியும் அறிகின்றோம்.

சைவ சமய இலக்கியங்களுள் முன்னிடம் வகிப்பது, அருள்பா இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் தேவாரம் பிரதான இடத்தை வகிக்கின்றது . தேவாரத்துக்கு அடுத்ததாக திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. சைவ இலக்கியங்களின் பன்னிரண்டு பகுதிகளுள் எட்டாவது மாணிக்கவாசகரின் திருக்கோவையும் திருவாசகமுமாகும். ஒன்பதாவது பகுதி சேந்தனாரின் திருப்பல்லாண்டு உட்பட வேறு ஒன்பது பேர்களது ஆக்கங்களைக் கொண்டதாகும். பத்தாவது பகுதி திருமூலரின் திரு மந்திரத்தைக் கொண்டுள்ளது. பதினோராவது பகுதி பட்டினத்தாரின் ஆக்கங்கள், நம்பியாண்டார் நம்பியின் ஆக்கங்கள் என்பவற்றோடும் மற்றும் பல்வேறு ஆக்கங்களையும் கொண்டதாகும். இப் பதினொரு பகுதிகளையும் சைவர்கள் திருமுறைகள் என கொள்வதோடு இவ்வடியார்களின் வரலாற்றினை உள்ளடக்கிய சேக்கிழாரின் பெரிய புராணம். பன்னிரண்டாம் இடத்தைப் பெறுகிறது. மேற் சொன்ன ஆக்கங்கள் சைவ இலக்கியத்தின் முழுமையான தொகுப்புக்களாக இருந்த போதும் பதின் மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மெய் கண்டதேவர் ஆக்கிய சிவஞானபோதம் வெளிவந்த பின்பே தமது ஆதிகால மெய்யியலின் மிகவுயர்ந்த சிறப்பினைத் தமிழர் அறியத் தொடங்கினர்.

விழுப்பத்தைத் தருகின்ற ஒழுக்கத்தை விருத்திசெய்யுங் கல்வியே கல்வி;
ஏனைய கல்வி கல்வியெனப்படமாட்டாது. ஒழுக்கம் நூற்கல்வியால் மாத்திரம்
எய்தப்படுவதொன்றல்ல. நல்லாசிரியரும் நன்மாணாக்கரும் ஒன்றுசேர்ந்து
உடனுறையுங் குருகுல வாசங்களில் நித்திய கர்மானுஷ்டானம் பிரம்மச்சரியம் முதலிய
ஏற்பாடுகளினால் நல்லொழுக்கம் வளர்ச்சியெய்துகின்றது அத்தகைய
குருகுலவாசங்களே உண்மைக் கல்வி நிலையங்களாகக் கருதப்படத்தக்கன.

**- சுவாமி விபுலானந்தர்**

இளையவர், மூத்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் இளையவர் கற்பதற்கு
ஆர்வமாகவும், மூத்தவர் கற்பிப்பதற்கு ஆர்வமாகவும்
இருக்கும் போது அறிவு வெளிப்படுகிறது.

**- டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன்.**

# இறைவனின் திருவடிவங்கள்

M.தாரகன், விஞ்ஞான பீடம், இறுதி வருடம்.

**'ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி'**

மெய்ப்பொருள் ஒன்று சான்றோர் அதனை பல்வேறு பெயர் கொண்டு அழைக்கின்றனர் என்கிறது இந்துமதத்தின் முதன்மையான, பழமையான நூலான வேதம். நிர்க்குண பிரம்மமாகவும் சகுண பிரம்மமாகவும் பிரபஞ்சம் முழுதும் வியாபித்திருக்கும் இம் மெய்ப்பொருளை பல்வேறு மதத்தவர் பல்வேறு பெயர் கொண்டு வணங்குகின்றனர். விஞ்ஞானத்தினால் கூட அணுக முடியாத இப்பெரும் சக்தியை பரப்பிரம்மம் என்கிறது வேதாந்தம். அல்லா என்கிறது இஸ்லாமியம். பரமமண்டலத்திலிருக்கும் பரிசுத்த பிதா என்கிறது கிறிஸ்தவ மதம். டோ என்று சீன தேசத்து மதம் இயம்புகிறது. எவ்வாறாயினும், பல்வேறு கிளைநதிகள் வெவ்வேறு திசையில் உற்பத்தியாயினும் இறுதியில் கடலில் சங்கமமாவது போல் இம்மதங்கள் யாவும் ஆதியும் அந்தமுமற்ற ஒரு மெய்ப் பொருளையே சார்ந்து நிற்கிறது. சிந்து நதித் தீரத்திலே தோன்றிய பழம்பெரும் மதமான இந்துமதமும் பரப்பிரம்மமாகிய மெய்ப்பொருளை ஆறு வெவ்வேறு வடிவங்களில், ஆறு சமயப் பிரிவுகளின் வாயிலாக வழிபடுகிறது. சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் ஆகிய இந்து மதத்தின் ஆறு பெரும் பிரிவுகளும் முறையே சிவபெருமான், விஷ்ணு, சக்தி, வினாயகர், முருகன், சூரியன் ஆகியோரை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடுகின்றன. இதற்கேற்ப பரம்பொருளின் வடிவம், பெயர், வழிபடும் முறைகள் என்பன வேறுபடுகின்றன. எவ்வாறாயினும் தான் வணங்கும் தெய்வமே வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு பெயர்களில் வணங்கப்படுகின்றன என்பதை சமரசம் உடைய எந்த ஒரு சாதகனும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

## சிவபெருமான்

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

எல்லா நாட்டவராலும் கடவுள் என போற்றப்படுபவரை சிவன் என போற்றி துதிக்கிறது இந்துமதத்தின் முக்கிய பிரிவான சைவசமயம். குணமும் குறியும் கடந்த இறைவன் எமக்கு அருள் செய்வதற்கும் நற்கருத்துக்களை வழங்கவும் பல அருள் மூர்த்தங்கள் தாங்கி வருகிறான். ஆலயங்களில் சிவவழிபாட்டிற்குரிய சின்னமாய் கருதப்படுவது அருவுருவ வடிவில் சிவன் எழுந்தருளியுள்ள சிவலிங்கமே. ஆவுடையாள் எனும் கீழ்ப்பகுதி சக்தியின் சின்னம். அதிலுள்ள லிங்கம் சிவத்தின் சின்னம். சிவசக்தியின் ஐக்கியத்தால் சராசரங்கள் யாவும் தோன்றியுள்ளன என்பதை இச்சின்னம் குறிக்கிறது. இயற்கையின் அமைப்பும், அதில் கடைப்பிடிக்கும் இல்லறம் எனும் நல்லறமும் சேர்ந்து உறுதிப்பாட்டை தரும் என்பதை பார்வதி சமேதரராய் முருகன் பிள்ளையாரோடு வீற்றிருக்கும் பரமசிவனின் வடிவம் உணர்த்துகிறது. உயிர் தத்துவம் சிவம். உடல் தத்துவம் சக்தி. உடல் இல்லாது உயிர் இல்லை.

''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''. என்கிறது திருவருட்பயன். சக்தியே உயிர்களை சிவத்தோடு சேர்க்க உதவுகிறது. சிவதத்துவத்திற்கும் சக்தி தத்துவத்திற்கும் புறம்பாக இயற்கையில் ஒன்றுமில்லை. இவற்றை தனது அர்த்த நாரீசுவர வடிவில் உணர்த்துகிறார்.

காமம் அகன்று சிவஞானத்தோடு கூடிய பக்தி உண்டாக ஞானக் கண்ணோடு கூடிய முக்கண்ணராக மாந்தர் ஆகவேண்டும் எனும் கருத்தை முக்கண்ணன் வடிவத்திலிருந்து சிவபெருமான் விளக்குகிறார். உருத்திரன் எனும் உக்கிர சொரூபம் மூலம் பயத்தையும், அஞ்ஞான இருளையும் மரணத்தை பற்றிய அச்சத்தையும் போக்குகிறார். உலக

இன்பங்களை பங்கிட்டுக் கொள்ளும் மானிடர் அதனிடத்து இருந்துவரும் மரணத்தை மட்டுமே ஏற்க அஞ்சுகின்றனர். மரணத்திற்கு தப்ப இறைவனிடம் தஞ்சமடைதல் வேண்டும். இதுவே தேவர் - அசுரர் பாற்கடல் கடைந்த கதையின் உட்பொருள். கேடுகளை தான் ஏற்றுக் கொண்டு நலன்களை உலக மக்களுக்கு அளிப்பதை நீலகண்டன் வடிவிலிருந்து உணர்த்துகிறார். இறைவனுடைய நடராஜ வடிவமானது இறைவனின் ஐந்தொழில்களையும் மக்களுக்கு உணர்த்துகிறது. உடுக்கை ஏந்திய கையானது படைத்தல் தொழிலையும், அபயகரமானது காத்தல் தொழிலையும் அக்கினி ஏந்திய கை அழித்தலையும், முயலகன் மீது ஊன்றிய திருப்பாதம் மறைத்தலையும், தூக்கிய திருப்பாதம் அருளலையும் குறிக்கிறது. அடிமுடி தேடிய கதையானது இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதி என்பதை மட்டுமல்லாது பரம்பொருள் உருவம் உடையதாகவும் உருவத்தை கடந்த நிலையிலும் உள்ளதென்பதை விளக்குகிறது.

சிவனுக்கான வழிபாட்டு முறைகளில், சிவனை நினைத்து விரதமிருக்கும் முக்கிய விரத நாட்களாவன பிரதோஷம், மகாசிவராத்திரி, மார்கழித் திருவாதிரை என்பவனாகும். பிரதோஷம் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறையும், சிவராத்திரி மாசி மாதத்திலும், திருவாதிரை மார்கழி மாதத்திலும் வருபவை. சிவவழிபாடானது ஆதிகாலந்தொட்டே நிகழ்ந்து வருவதை, சிந்துவெளி நாகரீக அகழ்வாராய்ச்சிகள், மகாபாரதம், இராமயணம் போன்ற புராணகால இதிகாசங்கள் சங்கம் மருவிய கால நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, என்பன சான்று பகர்கின்றன. ஆகவே அழகில் சோதியன் அம்பலத்தாடுவானை வாழ்த்தி வணங்கி பிறவிப்பயனை அடைவோமாக.

## சக்தி

சக்தியை முழுமுதற் கடவுளாகக் வழிபடும் சமயம் சாக்தமாகும். இந்து சமயத்தில் இறைவனைத் தந்தையாக, தலைவனாக, தோழனாக தனயனாக என்று பல வழிகளில் அடியார்கள் அன்பு பாராட்டினாலும் இவற்றில் தலைசிறந்ததும் அந்நியோன்யமானதுமான அன்புமுறை தாய்-பிள்ளையாகும். இறைவனைத் தாயாகக் காணும் வழிபாடு சக்தி வழிபாடாகும். பிள்ளையானவன் நன்றே செய்திடினும், தீதே செய்திடினும் மாறாத தாய் அன்புக்கு ஒப்பானது தெய்வத்தின் அன்பு. கூடவே தாயின் தன்மையுடைய தெய்வத்தை வழிபடுவது யாவருக்கும் எளிதாகிறது. சக்தி என்பது யாது? சக்திக்கும் சிவத்துக்கும் இடையே என்ன தொடர்பு? இவ் வினாக்களுக்கும் விடை பகர்கிறது இந்து மதம். சிவம் என்பது மெய்ப்பொருள், பிரியாது இதனிடத்தில் நிலைத்துள்ள சம்பத்திக்கு சக்தியென்று பெயர். பாலின் வெண்மை போன்றது, கடலின் உவர்ப்புப் போன்றது சிவத்தினுடைய சக்தி. சிவத்தினின்று சக்தியைப் பிரிக்க முடியாது. உலகம் யாவும் சிவசக்திமயமானது. சிவம் என்பது சேதனம், அறிவுப் பொருள்; சக்தி என்பது அசேதனம், ஜடப்பொருள் என்றும் சிவம் சக்தி தொடர்பை விளக்கலாம். சக்தி பல்வேறு தொழில்களைப் புரியவும் பல்வேறு தத்துவங்களை விளக்கவும் பல்வேறு வடிவங்களை எடுக்கிறாள். முத்தொழில்களை செய்யுமிடத்து பிரம்மாணி, வைஷ்ணவி, உருத்ராணி என்று அவள் பெயர் பெறுகிறாள். சகுண பிரம்மம் அல்லது ஈஸ்வரனுக்கு ஒப்பிடும் போது துர்க்கை என்றும் கால சொரூபிணியாகக் கருதப்படும் போது காளியுமாகிறாள். வித்தையின் வடிவெடுக்கும் போது சரஸ்வதி என்றும், தனதானிய வடிவெடுக்கும் போது லக்ஷ்மி எனவும் பெயர் பெறுகிறாள். மண்ணுலக வாழ்வு சிறப்புடன் விளங்க வாழ்க்கையில் என்னென்ன பகுதிகள் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதை துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, பிள்ளையார், முருகன் ஆகிய கடவுளரின் சேர்ந்த வடிவம் விளக்குகிறது. வாழ்வு சிறப்புற ஆட்சியானது சிறப்புற்றிருக்க வேண்டும் என்பதை துர்க்கையும், செல்வத்தை வழங்க திருமகளும், கலை ஞானங்களைப் பெற சரஸ்வதியும், ஞானத்துக்கும் நல்லறிவிற்கும் அறிகுறியாக விநாயகரும், வாழ்வை ஆற்றல் படைத்ததாக்க முருகனும் விளங்குகின்றனர். மானிடர்கள் மட்டுமன்றி பூலோகத்தில் அவதாரபுருஷர்களாகத் தோன்றியவர்கள் கூட சக்தியை வணங்கி வந்தனர். ராமபிரான் இலங்கை போகு முன்பு துர்க்கை பூஜை செய்ததாகவும், கண்ணன் காத்யாயினி பூஜை செய்ததாகவும், சங்கராச்சாரியார் சாரதா பூஜை செய்ததாகவும், அண்மைக் காலத்தில் தோன்றிய ராமகிருஷ்ணர் காளியை வணங்கியதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய வல்லமை பொருந்திய சக்தியை அடியார்கள் பல்வேறு பெயர் கொண்டு அன்புடன் வழிபடுகின்றனர். ஜகதம்பா (உலகிற்கு அன்னை) அன்ன பூரணா (உணவு அளிப்பவள்) ராஜராஜேஸ்வரி (அனைத்துக்கும் அரசி) பவானி (இயற்கையின் உயிரை உண்டு பண்ணுபவள்) மகாசக்தி (பேராற்றல் மிக்கவல்) என பல பெயர் கொண்டு அழைக்கப்படுகிறாள். வீரம், செல்வம், கல்வி அருள் வேண்டி சக்தியை நோக்கி நோற்கப்படும் நவராத்திரி விழாவானது இந்து மதத்தவரால் உலகெங்கும் பயபக்தியுடன் கொண்டாடப்படுகின்றது. இதுவே சக்தியின் சிறப்பை உலகெங்கும் பறை சாற்றுகிறது. அது

மட்டுமன்றி கௌரி விரதம், வரலக்ஷுமி விரதம் போன்றனவும் சக்தியை நோக்கி நோற்கப்படும் விரதங்களாகும். சக்தி வழிபாட்டைக் கருதினால், இது ஆதி காலந்தொட்டே மக்களிடையே நிலவி வந்ததாக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. சிவ வழிபாட்டைப் போன்று சிந்துவெளி நாகரீக மக்களின் சமய வாழ்வில் சக்தி வழிபாடும் சிறப்பிடம் பெற்றிருந்தது. மேலும் தொல்காப்பியத்தில் சக்தி பாலை நிலத் தெய்வமாகப் போற்றப்பட்டாள். இன்று சக்தி வழிபாடானது தனியே சாக்தத்திற்கு மட்டுமல்லாது இந்து சமயம் முழுவதற்கும் பொதுவாக உள்ளது.

**''மாதாபராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய் ஆதாரம் உன்னையல்லால் யாரெமக்குப் பாரினிலே''.**

## விஷ்ணு.

விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் வைஷ்ணவமாகும். இந்து மதத்தவரில் பெரும்பாண்மையோரால் பின்பற்றப்படும் சமயமும் இதுவாகும். சைவரை எவ்வாறு நெற்றியில் மிளிரும் திருநீறு அடையாளம் காட்டுகிறதோ அவ்வாறே வைஷ்ணவரை திருநாமம் உணர்த்துகிறது. விஷ்ணுவை முத்தொழில்களுள் காத்தல் தொழிலைப் புரியும் தெய்வம் எனக் குறிப்பிடுவதுண்டு. விஷ்ணு எனும் பதத்திற்குப் பொருள் எங்கும் வியாபகமானவன் என்பதாகும். ஆகவே கடல், வானம் என்று உலகெங்கும் வியாபித்துள்ள நீலநிறத்தை அவனுடைய நிறமாகக் கருதுவது சாலப் பொருத்தமானது. இதன் பொருட்டே கார்மேக வண்ணன் என வர்ணிக்கப்படுகிறான். பாற்கடலின் நடுவே ஆதிசேஷன் மீது யோகநித்திரையில் ஆழ்ந்திருந்தவாறே திருமால் நமக்கு பல்வேறு தத்துவ விளக்கங்களை அருள்கிறார். ஊழிக்கால முடிவினிலே அண்டங்களெல்லாம் ஒடுங்கி அவ்யுக்த நிலைக்கு வருவதை பாற்கடல் விளக்குகிறது. அப்போது அண்டங்கள் அனைத்திற்கும் சேஷமாயிருப்பது ஆதிசக்தியெனும் திருமாலே. ஆதிசேஷன் எனும் பாம்பு ஐந்து தலையையுடையவனாகவும், ஆயிரம் தலையையுடையவனாகவும் கருதப்படுகிறது. பஞ்ச பூதங்களை ஐந்து தலைகளும், உலகிலுள்ள எண்ணற்ற உயிர்களை ஆயிரம் தலைகளும் குறிக்கின்றன. திருமாலின் யோகநித்திரையானது அறிதுயில் என்றும் தூங்காத்துயில் என்றும் பொருள் உணர்த்தப்படுகிறது. அந்நிலையிலிருந்தவாறே உலகனைத்தையும் காத்துக் கொண்டிருக்கிறான். திருமாலின் நாபிக்கமலத்தினின்று உருவானவர் நான்முகன் பிரம்மா. பஞ்சபூதங்கள், உயிர்கள், இயற்கை அனைத்தினதும் தோற்றப்பாடாய் அமைந்துள்ளது பிரம்மாவின் தோற்றம். திருமாலின் நான்கு திருக்கரங்களுள் சங்கை ஏந்தியகை, இறைவன் பிரணவப் பொருள் என்பதை உணர்த்துகிறது. மற்றக்கையிலுள்ள தர்ம சக்கரம் அல்லது அறிவாழியைக் கொண்டு உலகனைத்தையும் காத்து வருகிறார் திருமால். அறம் செய்கின்றவர்களை காப்பாற்றியும் கேடு செய்கின்றவர்களைத் தண்டித்தும் வருகின்றது. இவ்வறவாழி திருமாலே காலச்சொரூபம் என்பதை உணர்த்த ஆழியை காலச்சக்கரம் எனப் பகர்வதும் உண்டு. மற்றிரண்டு கைகளிலுமுள்ள கதையும், கமலமும் அறிவின் தோற்றங்களாகிய வல்லியல்பு, மெல்லியல்பை உணர்த்துகின்றன. துன்பம் வழங்கும் வல்லியல்பானது முன்னேற்றத்தை வழங்குகிறது. இதை உணர்த்த கதையும், இனிமையின் வடிவினைத் தரும் மெல்லியல்பை உணர்த்த கமலமும், திருமாலின் கையில் விளங்குகின்றன. இவ்வாறு உலகெங்கும் நீக்கமற வீற்றிருக்கும் விஷ்ணுவை பற்பல பெயர் கொண்டு அழைக்கின்றனர். நாராயணன் (தன்னிடத்தினின்று தோன்றி வந்த உலகில் வீற்றிருப்பவன்) கோவிந்தன் (ஜீவன்களின் நிலையை அறிபவன்) பரமாத்மன் (பிரபஞ்சத்துக்கு அப்பால் உள்ளவன்) கேசவன் (மும்மூர்த்தி வடிவினன்) என பல்வேறு பெயர்கள் அவருக்கு வழங்கப்படுவதுண்டு.

விஷ்ணு வழிபாடானது ஆதிகாலந் தொட்டே இருந்து வந்ததாயினும் இதிகாச புராண காலத்தின் (கி.மு 600-கி.பி. 200) போது வளர்ச்சி பெற்றது. இக்காலத்தில் தோன்றிய இதிகாசங்களான மகாபாரதம், இராமாயணம் என்பன. விஷ்ணுவையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு எழுதப்பட்டன. மேலும் விஷ்ணுவை நோக்கி நோற்கப்படும் விரதங்களில் ஏகாதசியும், கிருஷ்ண ஜயந்தியும் முக்கியமானவை. இன்றும் இவை உலகெங்கும் பெருவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. சைவத்தில் நாயன்மார் போன்று வைஷ்ணவத்தில் பொய்கை ஆழ்வார், பூதத்து ஆழ்வார் முதலிய பன்னிரு ஆழ்வார்கள் இறைவனை வணங்கி பேறு பெற்றனர். பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்ணனை நாமும் போற்றி பேறுபெறுவோமாக.

## விநாயகர்:

விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் காணபத்யம். ஆனால் இந்துமதம் முழுவதற்கும்

பொதுவாய் எழுந்தருளியிருக்கும் தெய்வம் விநாயகர். எந்த ஒரு நற்காரியத்தைத் தொடங்குமுன்னும் விநாயகர் வணக்கத்துடன் தொடங்கும் போது காரியம் சித்தியடையும் என்பது நம்பிக்கை. அத்துடன் விநாயகர் வழிபாட்டில் விநாயகரை உருவத்தில் கொண்டு வருவதும் எளிது. மண்ணினால், சாணத்தினால், அரிசிமாவினால் அல்லது மஞ்சளினால் பிள்ளையாரை எளிதில் உருவாக்கிவிடலாம். வேறுசின்னம் ஒன்றும் அகப்படாதவிடத்து அறுகம்புல் அவருக்கு அறிகுறியாக வந்து நிற்கும். இயற்கையின் முறைமையைக் காக்க சிவசக்தியின் அருட்பிரசாதமாக ஆனைமுகன் உருவெடுத்தான் என்பது ஐதீகம். மும்முறை தலைகுட்டி தோப்புக்கரணம் போடுவது, தேங்காய் உடைத்தல், விதவிதமான உணவுப்பொருள் படைத்தல், போன்ற விசேட வழிபாட்டு முறைகளும் இவருக்கே உரியன. ஆண், பெண் என்ற பேதத்திற்கு அப்பாற்பட்டவனாகையால் மற்ற தெய்வங்களைப் போன்று அவருக்கு சக்திசொரூபம் இல்லை. சித்தி, புத்தி என இரண்டு சக்திகளை அவரோடு இணைத்து சொல்வது உண்மையாய் அவர் மகிமையை விளக்குவதற்கேயாகும். உடலின் அளவிற்கும் ஆன்மாக்களின் அளவிற்கும் தொடர்பில்லை என்பதை உணர்த்த சிறிய உருவமான எலி பிள்ளையாரின் வாகனமாகிறது. அத்துடன் விநாயகரின் உருவமானது பல்வேறு தத்துவங்களை எமக்குப் புகட்டுகிறது. விநாயகர் ஓம்கார மூர்த்தியானவர் என்பதை விளக்க ஆனைமுகத்தானாக அவர் உருவெடுத்துள்ளார். அண்டங்கள் யாவும் அவனிடத்து அடங்கியுள்ளன என்பதை விளக்க அவரது பேழை வயிறும், தன்னிடத்து தங்கியிருக்கும் சராசரங்கள் யாவையும் தனது சக்தியால் தாங்கிக் கொண்டிருக்கிறான் என்பதை வயிற்றைச் சுற்றியிருக்கும் சர்ப்பமும் உணர்த்துகிறது. ஆற்றலிலே மானுடரை விட மிக்கவர் என்பதைக் காட்ட தும்பிக்கையுட்பட்ட ஐந்து கைகளைக் கொண்டுள்ளார். மக்களை நல்வழியில் நடத்துதலை உணர்த்த அங்குசமும், துன்பத்திலிருந்து காக்கப் பாசமும், சிந்தனாசக்தியை வளர்ப்பது அவசியம் என்பதைக் காட்ட ஜபமாலையும், கல்வியை உணர்த்த தந்தமும், அவரது கைகளில் இருக்கின்றன. மேலும் தும்பிக்கை எப்பக்கம் வளைந்து உள்ளதோ அதன்படி வலம்புரி விநாயகன், இடம்புரி விநாயகன் என இயம்பப்படுகிறான். தியாகத்தின் உயர்வைக் காட்ட தனது தந்தங்களில் ஒன்றை இழந்து ஏகதந்தன் எனப் பெறுகிறார். விநாயகருக்கு இன்னும் பல பெயர்கள் அடியார்களால் வழங்கப்படுகின்றன. மூஷிகவாகனன், (பெருச்சாளி வாகனன்) வித்யராஜன், (கல்விக்கு அரசன்) ஓங்காரரூபன், (ஓம் எனும் மந்திர வடிவினன்) ஞானகணபதி (ஞானியர் கூட்டத்திற்குத் தலைவன்).

விநாயகர் வழிபாடு யாவருக்கும் எளிதானதாகவும், விநாயகர் வணக்கத்துடன் தொடங்கும் எக்காரியமும் சித்திபெறும் என்பதாலும் இந்துசமய சகல மக்களிடமும் ஆதிகாலந்தொட்டு நிலவிவருகிறது. விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி, போன்ற விரத தினங்கள் விநாயகரை நினைந்து அனுட்டிக்கப்படுகின்றன. வெவ்வினையை வேரறுக்க வல்லானை, விண்ணிற்கும், மண்ணிற்கும் ஆன நாதனை மனமுருக நினைந்து எமது விக்கினங்களைத் தீர்ப்போமாக.

## முருகன்:

முருகனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயம் கௌமாரமாகும். தமிழரின் முழுமுதற் கடவுள் எனவும் முருகனைப் பகர்வதுண்டு. எம்மனிதனும் மிக உயர்ந்த தெய்வ சொரூபம் ஆகலாம் என்பதன் தெய்வக்காட்சியே முருகனின் வடிவமாகும். சூரபத்மனை அழித்து உலகை உய்விக்கும் பொருட்டு உருவானவன் முருகன். சிவனது ஐம்பொறிகளினின்று உருவான ஐந்து ஒளிப்பிளம்பு, மனத்தினின்று உருவான மற்றோர் ஒளிப்பிளம்பு இவை ஆறினாலுமான ஒளித்திரள் சரவணப் பொய்கையில் பிரவேசித்து ஆறுமுகன் உருவானான் என்பது விளக்கம். சிவசொரூபம் சக்திசொரூபம் ஆகிய இரண்டும் அமையப் பெற்றவன் முருகன். மூலாதாரம், சுவாதிஷ்டானம் முதலிய உடலிலுள்ள 6 ஆதாரங்களுக்கு ஒப்பானது முருகனது அறுபடை வீடுகள். ஆறுமுகப் பெருமானது சொரூப விளக்கமானது பல்வேறு தத்துவங்களை எமக்குப் புகட்டுகிறது. ஐம்புலன்களையறியும் ஐம்பொறிகளும், எண்ண உதவும் நல்ல மனதும், முருகனது. ஆறுமுகங்களுக்கு ஒப்பானவை. முருகன் பன்னிரு கைகளைக் கொண்டுள்ளமை மக்களுக்கு அவரின் ஆற்றலை ஞாபகப்படுத்துவதன் பொருட்டேயாகும். முயற்சியுடையவன் பலகைகளையுடையவன் என்பது கோட்பாடு.

முருக வழிபாட்டில் குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகன் போற்றப்படுகிறான். இயற்கையின் வண்ணமெல்லாம் கொண்ட குன்றுதோறும் விளையாடுகிறான், பாலமுருகன், மாதந்தோறும் வரும் கார்த்திகைத் திருநாள் முருகப்பெருமானுக்கு உகந்த தினமாகும். மேலும் ஐப்பசி மாத சுக்கிலபட்ச பிரதமையன்று வரும் கந்தசஷ்டி

நோன்பானது முருகப்பெருமானுடைய சிறப்பான நோன்பாகும். இவ் ஆறு நாட்களின் போது மக்களின் மனதிலுள்ள காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை எனும் ஆறுபகைகள் அழிக்கப்படுகின்றன. உருவாய் அருவாய் உளதாய் இலதாய் வீற்றிருக்கும் முருகனை வணங்கி அவன் அருள் பெறுவோமாக.

## சூரியன் :

சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு போற்றப்படும் சமயம் சௌரமதமாகும். இன்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே எமது முன்னோர் இயற்கையை அன்புடன் வணங்கினர் என்கிறது பழம்பெரும் நூலான ரிக்வேதம். இயற்கையுடன் நல்லிணக்கம் வைப்பதே அவர்களது சமய அனுஷ்டானம் ஆயிற்று. ஆக இந்துமதத்தின் சகல பிரிவினரும் சூரியனை வணங்கிவருதல் கண்கூடு. இயற்கைப் பொருள்களுள் சூரியனே முதன்மையானதென்பதால் சூரியனை வழிபடும் முறை பண்டைக்காலந் தொட்டே நடைமுறையில் இருந்து வருகிறது. இயற்கையோடு கொண்டுள்ள தெய்வீக இணக்கமானது இயற்கைக்கு அப்பால் இறைவனைக் காண வழிவகுக்கின்றது. கண்கூடாக சூரிய பகவானை வானில் தெரிவதால் சூரிய வழிபாட்டில் விக்கிரகங்களோ, கோயில்களோ அவசியமற்றதாகிறது. இதனால் சூரியபகவானைக் கண்கண்ட தெய்வம் எனக் கூறுவதும் பொருத்தமானது. சூரியபகவானை ஆதித்யம் (தேவர்க்கெல்லாம் தலைவன்) திவாகரன் (பகல் செய்பவன்), பாஸ்கரன் (ஒளியை உண்டு பண்ணுபவன்) சூரிய நாராயணன் (செயலில் தூண்டும் கடவுள்) என பல்வேறு பெயர்களில் அடியார்கள் பூஜிக்கின்றார்கள். சூரியபகவானுக்குரிய மந்திரம் இவற்றுள் முதன்மை பெற்றது. சூரிய காயத்ரீ ஆகிய காயத்ரீயின் மூலப்பொருளானது ''யார் நம் அறிவை தூண்டுகிறாரோ அந்த சுடர்க்கடவுளின் மேலான ஒளியை தியானிப்போமாக''. பிரபஞ்சம் முழுதும் பரம்பொருளில் தோன்றி மீண்டும் அதனிடமே ஒடுங்குவது போல் இப்பிரபஞ்சத்தின் கண்ணுள்ள அழியாப் பொருள் சூரியனிடமிருந்து பூவுலகும், பூவுலகில் வாழும் உயிர்களும் தோன்றி மீண்டும் அதனிடமே ஒடுங்கும் என்பது கோட்பாடு. சூரியபகவானை விஷ்வரூபமாக விராட புருஷருடைய கண்களினின்று கிளம்பி வந்தவன் என்று பகர்வதுண்டு. சூரிய பகவானுடைய சொரூப இலட்சணமானது, பல்வேறு கருத்துக்களை எமக்கு விளக்குகிறது. ஒற்றை சக்கரமுடைய ரதத்தை ஏழு பச்சைக் குதிரைகளை இழுத்துச் செல்ல இடுப்புக்குக் கீழ் உடலற்ற பூஷன் எனும் சாரதி ஓட்டுகிறான். ஒற்றை சக்கரமானது விண்ணில் சூரியனைக் காணும் பருதிவடிவத்தையும், ஏழு குதிரைகளையும் ஒளியின் ஏழு நிறங்களையும், ஆன்மாவின் ஏழு பிறப்புகளையும் ஏழு ஞான பூமிகளையும் குறிக்கின்றன. ரதத்தினுள் எழுந்தருளியிருக்கும் சூரிய பகவான் சங்கு சக்கரத்தையும் ஏந்தியுள்ளார். சங்கு சக்கரங்கள் பிரபஞ்சம் யாவும் அவனிடமிருந்து வந்தவை என்பதையும் சக்கரமானது பிரபஞ்சமானது அவன் ஆணையால் ஒழுங்குபாட்டுடன் இயங்குகிறது என்பதையும் குறிக்கிறது. (அவன் இன்றி அணுவும் அசையாது) ஆக இன்று சௌரமதத்தவர் உலகில் எண்ணிக்கையில் குறைந்திருப்பினும், சூரியபகவானை இந்துக்கள் மட்டுமன்றி உலகம் முழுவதுமே ஆராதிக்கும் பண்பாடு பெருகி வருகிறது.

ஆக மொத்தத்தில் இறைவனின் திருவடிவங்களும், வழிபாட்டு முறைகளும் அவரவர் விருப்பத்திற்கும் வசதிக்கும் ஏற்றவகையில் மாறுபடுகின்றன. ஆகவே எந்த ஒரு மதமும், மதப்பிரிவும் இறைவனை அடைவதற்கான ஒரு மார்க்கமே என்பது வெளிப்படை உண்மை. எம்மதமும், மதப்பிரிவும் இறுதியில் யாவற்றையும் கடந்து நிற்கிற பரம்பொருளிடமே எம்மை அழைத்துச் செல்கிறது. இதையே எம்முடைய இந்துமதமும் அதன் பிரிவுகளும் உணர்த்துகிறது. எனவே தன்மதத்தை போன்று மற்றைய மத்ததையும் மதிக்கத் தெரிந்தவனே உண்மையான இந்துமதத்தவனாகிறான்.


சான்றாதாரம்

1. கடவுளரின் வடிவங்கள்.
2. ஞானபூமி - மாத இதழ்கள்.

# எங்கே போகிறது இந்து மதம்?

இ. ஸ்ரீதர் பொறியியற் பீடம், 3ம் வருடம்.

உலகில் மிகத் தொன்மையான இந்து மதம்; காலாதி காலமாக எமது மூதாதையர்களால் கட்டிக் காக்கப்பட்டு வந்த இந்து மதம்: இன்று மனிதனின் விஞ்ஞானத்தின் ஆரம்பத்திற்கு, அன்றே அடித்தளம் வகுத்த இந்து மதம்: எம் மதமும் சம்மதம் என்ற உயரிய கோட்பாட்டுடன் கடவுள் ஒருவனே என்று உலகுக்கு இடித்துரைத்த இந்து மதம்; மனிதனை மனிதப் பண்புகளுடன் வாழ வழிகாட்டிய இந்து மதம்; இன்று எங்கே போய்க் கொண்டிருக்கிறது?... நாம் வளர்ச்சி கண்டு கொண்டிருக்கிறோமா? அல்லது வீழ்ச்சியின் ஆரம்பத்திற்கு அடித்தளம் வகுத்துக் கொண்டிருக்கிறோமா?

நாம் பாடப் புத்தகங்களினூடாக படித்து தெரிந்த சமய உண்மைகள், எமது தாய் வழியாக செவி வழி புகுந்த சமயக் கோட்பாடுகள் எந்த அளவு எம்மால் கடைப்பிடிக்கப்படுகின்றன? கோட்பாட்டுரீதியாக இருந்த கொள்கைகள் நடைமுறையாக எவ்வளவுக்கு முரண்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நிதர்சனமாக கண்கூடாக கண்டு கொண்டிருக்கிறோம். இதன் பாதிப்புக்களையும், அதற்கு நாம் எவ்வாறு துணைபுரிகின்றோம் என்பதையும், இதை நிவர்த்திக்கும் வழிவகைகளையும் ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

எம்நாட்டை பொறுத்தவரை கோவில்களில் சமய வழிபாட்டு முறைகள், காலாதிகாலமாக கடைப்பிடித்து வந்த பல பாரம்பரிய முறைகளிலிருந்து விலக ஆரம்பிப்பதை அவதானிக்க முடிகிறது. வடக்கு கிழக்கு பகுதிகளில் எமது பாரம்பரிய மண்ணில் நாம் கண்ட வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையுமா நாம் இந்நாட்டின் ஏனைய பகுதிகளில் கண்டு கொண்டிருக்கிறோம்? பல அடிப்படை பண்பாட்டு, கலாச்சார நெறிகள் கண்கூடாக மீறப்படுவதை உங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடிகிறதா? இல்லை மனதை ஒரு முகப்படுத்தி வணங்கத்தான் முடிகிறதா?

மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி உண்டு என்பதை எல்லா மதங்களை சார்ந்தவர்களும் ஏற்றுக்கொண்டு தான் இருக்கின்றார்கள். அதைத்தான் கடவுள் என்கிறோம். மனிதனை நல்வழிப்படுத்தி இந்த மானிட வாழ்வை பயனுள்ளதாக்குவதற்கு வழிகாட்டியாக, ஊடகமாக அமைந்தவை தான் சமயங்கள். இந்தவகையில் நாம் எத்தனை பேர் சமய ஒழுக்கங்களுடன் வாழ்கிறோம் என்று ஆராய்வதை விட இளம் சந்ததியினருக்கு மார்க்க போதனைகளை வழங்கி நல்வழிப்படுத்த இந்த சமூகம் அதாவது இந்து மதத்தை முன்னெடுப்பதாக கூறிக்கொள்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை ஆராய்வதே சிறந்ததெனலாம்.

இன்று எம்நாட்டில் காணப்படும் சில பிரசித்தி பெற்ற கோவில்கள் தொடக்கம் ஏனைய கோவில்கள் வரை எவ்வாறு எம் பாரம்பரிய செயற்பாடுகளிலிருந்து விலகிச் செல்கின்றது என்பதை காண முடிகிறது. உதாரணமாக மனதை இறைவன் பால் ஈர்க்க வைக்கும் மங்கள இசையில் முக்கியமானது நாதஸ்வர மேளங்களே இறைவனே இசைக்கு அடிமையானவன் தான். அவ்வகையில் அமைந்த இசைக்கருவிகளின் பங்களிப்பு இன்று எந்தளவுக்கு இருக்கிறது? இறைவனின் இசைபாட வேண்டிய இவைகள் இன்று சினிமா பாடல்களை கோவில்களில் பரப்பி, மனதை அலை பாய விட தூண்டு கருவிகளாகவே இருக்கின்றன. நாம் ஒன்றும் ஞானிகளோ சித்தர்களோ அல்ல. இந்த ஒலிகளை பொருட்படுத்தாமல் வணங்கிக் கொண்டிருப்பதற்கு. இந்த சந்தர்ப்பங்களில் இளவட்டங்கள் வணக்க ஸ்தலங்களிலிருந்து மனதை திரைப்பட பாடல்கள் காட்சிகளுக்கு செலுத்துவது தவிர்க்க முடியாததாகிறது. தேவாரம் பாடிக் கொண்டிருந்த சிறுவன் ''ஒட்டகத்தை கட்டிக்கோ'' என்று முணுமுணுப்பது தவிர்க்க முடியாததாகிறது. ஏன் எம்மால் எம் ஆளுகைக்குட்பட்ட இச்செயல்களை தடுக்க முடியாது? சம்பந்தப்பட்ட நிர்வாகங்களினால் இதை சீர் செய்ய முடியாதா?

எமது நாட்டில் சில பிரசித்தி பெற்ற நகரங்களில் இடம்பெறும் தேர்விழாக்கள், மற்றும் ஏனைய சமய விழாக்களிலும் இந்துமத ஒழுக்கநெறி மீறப்பட்டு கேலிக்கூத்தாகும் செயலை காண முடிகிறது. அதாவது பெயருக்கு ஒன்றிரண்டு நாதஸ்வர மேளங்களை தவிர மற்றும் படி துள்ளிசையை உருவாக்கும் இசைகளுடன் தம்மை மறந்து துள்ளுகின்றது ஒரு இளைஞர் கூட்டம்'. ''அரோகரா'' என்ற ஓர் புனிதமான சொல் அங்கே எத்தனை மெட்டுக்களுடன்

தடம் புரண்டு கொண்டிருக்கிறது. பாரம்பரியம், பண்பாடு என்று பெருமை பேசும் எமக்கு இது தேவைதானா?

இன்னொரு முக்கிய விடயம் என்னவெனில், பல பிரசித்தி பெற்ற முன்னேஸ்வரம், கதிர்காமம் போன்ற கோயில்களில் கூட மற்றைய மதத்தவர்களின் வழிபாட்டு முறைகளின் செல்வாக்கு அதிகமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. மற்றைய மதத்தவர் எமது சமயத்தில் நம்பிக்கை வைப்பது வரவேற்க வேண்டியதுதான். ஆனால், அதற்காக எமது பாரம்பரிய வழிபாட்டு முறைகள் தடம் புரள்வதை அனுமதிக்கலாமா?

வேறு சில மதத் தலங்களுக்கு வேற்று மதத்தவர்கள் கூட செல்ல முடியாத நிலை. ஆனால் எம் சமயத்தலங்கள் பல உல்லாச பிரயாணிகளின் காட்சிக் கூடங்களாக மாறி வருவதை அவதானிக்க முடிகின்றது.பூஜை நடக்கிறதோ இல்லையோ, அந்த அரைகுறை ஆடைகளுடன் நிற்கும் உல்லாசப் பிரயாணிகளுடன் நாம் கும்பிட வேண்டிய நிலை! வேற்று மொழியொன்றின் கொள்கை விளக்கத்திற்கு மத்தியில் நாம் தேவார, திருவாசகங்களை பாட வேண்டிய நிலை! எமது மதம் கட்டுப்பாடில்லாத மதம்தான். யாரும் வரலாம், போகலாம். அதற்காக எமது சுய கட்டுப்பாட்டை மீற வைக்கும் இந்த கலாசாரச் சீரழிவுகளை அனுமதிக்கலாமா? ஓர் அமைதியான சூழலில் தம் குறைகளை இறைவனிடம் முறையிட வந்த பக்தர்களுக்கு பங்கம் விளைவிக்கலாமா?

இன்னொரு விடயம், அன்று எம் சமய குரவர்களாலும், ஞானிகளாலும், சித்தர்களாலும் மட்டுமன்றி சாதாரண சமயத் தலைவர்களினாலும் உலகலாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இந்து மதத்திற்கு இன்றைய சமயத் தலைவர்களினதும், ஆலய குருக்களினதும் பங்களிப்பு எவ்வாறு இருக்கிறது? அன்று சிக்காக்கோ நகரில் இந்து மதத்தின் பெருமைகளை மிக இலகுவான வழியில் எடுத்துரைத்து, முதல் தடவையாக மற்றைய மதத்தவர்களின் மனங்களில் ஓர் நிலையான இடத்தை பிடித்துக் கொண்ட விவேகானந்தரின் திறமை இன்று எந்த இந்துமதவாதியிடம் இருக்கிறது?

மற்றைய மதங்களில் சமயத் தலைவர்களுக்கு கொடுக்கப்படும் கௌரவம் எமது சமயத்தில், சமூகத்தால் வழங்கப்படுகிறதா? இல்லை என்றே கூறலாம். இதற்கு எம் சமூகத்தில் மட்டும் குறை சொல்லிப் பயனில்லை. ஏனெனில் தற்காலத்தில் எமது ஆலயக் குருக்கள் சிலர் வெளிப்படையாக செய்யும் செயல்களும் இதற்கு ஓர் காரணமாக இருக்கலாம். கோயில் அர்ச்சனை தொடக்கம் வீடுகளில் நடக்கும் சமயச் சடங்குகள் வரை ஓர் வியாபாரமாக மாறி வருவதைத்தான் காண முடிகிறது. இன்று எத்தனை குருக்கள் மனதார இந்து மதத்தின் வளர்ச்சிக்கு துணை போகிறார்கள்? நாட்டில் இருக்கும் சர்வமத அமைப்புகளில் மற்றைய சமயத் தலைவர்களின் சமாதானம். மானுட வாழ்வு, அதற்கு இறைவன் காட்டிய வழி போன்ற கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கும் போது, என்றைக்காவது எம்மவர் ஒருவரின் குரல் ஒலித்ததுண்டா? ஏன் இவர்களால் அவர்களைப் போல் பங்களிப்பு செய்ய முடியவில்லை?

இன்று எத்தனை பேர் எம்சமயத்திலிருந்து விலகி வேற்று மதங்களுக்கு மாறிக் கொண்டிருக்கிறார்கள்.காதல் திருமணங்கள் பல மத மாற்றங்களுடன், பெயர் மாற்றம் உட்பட நடைபெறுவதை வெளிப்படையாக காண்கின்றோம். அவர்களால் ஏன் எமது சமயத்தை தழுவ முடியவில்லை. ஏனெனில் அவர்கள் மதத்தில் ஏதோ ஒரு வகையில் கட்டுப்பாடு உண்டு. அந்தக் கட்டுப்பாட்டை உடைக்க முடியாதவர்களாய் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். பார்த்தீர்களா? எமது மதம் கட்டுப்பாடில்லாமல் இருப்பதன் ஓர் பாதிப்பை! நாம் அப்படி எம் மதத்தால் வளர்க்கப்படவில்லை. கடவுள் இல்லை என்று கூறும் நாஸ்திகர்கள் பலர் மற்றைய மதங்களை விட இந்து மதத்தில் தான் அதிகம் உருவாகுகிறார்கள். இதற்கு எமது சமூகத்தில் புரையோடிப் போயுள்ள சாதி வெறியும் ஓர் காரணமெனலாம். தன் உள்ளக் குமுறல்களை இறைவனிடம் நேரடியாக கோவில்களில் முறையிட அனுமதிக்கப்படாதவனே ஈற்றில் இறைவனையே வெறுக்க ஆரம்பிக்கிறான். இனியாவது எம் மதத்திலிருந்து விலகிச் செல்லுவோரின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்காமல் விடலாமா?

மேலே முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் சாதாரண வாழ்வில், நடைமுறையில் எம் கண்களுக்கு அப்பட்டமாக தெரிபவை. இவை மிகச் சுருக்கமான வகையில் தான் இங்கு ஆராயப் பட்டிருக்கிறது. இவை வெறும் வார்த்தைகளால் சோடிக்கப்பட்டு பக்கங்களை நிரப்புவதற்காக எழுதப்பட்டது அல்ல. உங்கள் உணர்வுகளை தட்டி விடுங்கள்! நீங்கள் தட்டிக் கேட்க தயங்கும் பாரம்பரிய பண்பாட்டு படுகொலையாளர்களின் கருத்துக்களை வெட்டிப் பேச முன்வாருங்கள்! நீங்கள் தான் நாளைய ஆலய நிர்வாகிகள், நீங்கள் தான் வருங்கால ஆலயக் குருக்கள்! நீங்கள் தான் அகன்று கிளை பரப்பிக் கொண்டிருக்கும் 'இந்து மதம்' என்னும் பெரு விருட்சத்தைத் தாங்கப் போகும் விழுதுகள்! எனவே எதிர்கால சமுதாயம் இதே கேள்விகளை உங்களிடம் கேட்க வேண்டிய நிலையை உருவாக்காதீர்கள்! நாம் ஆரம்பத்திலேயே

களையத் தவறும் சிறு தவறுகள் கூட நாளை நீக்க முடியாத வடுக்களாக மாறலாம். எனவே இக்கால கட்டத்திலேயே நாம் சில சீர்திருத்தங்களை முன்வைத்து அதை நடைமுறைப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

இனி எந்தவொரு கோயில்களிலும் உல்லாசப் பிரயாணிகள் அனுமதிக்கப்படக் கூடாது. கோயிலில் உல்லாசப் பிரயாணிகளின் பிரவேசத்தை அனுமதிப்பதற்கு கூறப்படும் ஓர் காரணம் நிர்வாகத்திற்கு கிடைக்கும் மேலதிக வருமானம். இந்த ஒரு செயலே எத்தனையோ பேரை ஆலயத்துக்கு வராமல் விரட்டுகிறது என்பதை நாம் மறக்கலாமா?

இந்து மதம் என்பது வெறும் கட்டடங்களாலும், வர்ணப் பூச்சுகளாலும் கட்டப்பட வேண்டியது அல்ல. மக்களின் மனங்களில் தான் கட்டியெழுப்பப்பட வேண்டியவை. கோபுரம் எவ்வளவு உயரம் என்பது பிரச்சினையல்ல, எம் உள்ளங்களில் இறை வழிபாடு, நம்பிக்கை எவ்வளவு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியம். இவற்றை ஆலய நிர்வாகங்கள் மனதில் கொண்டு செயற்பட வேண்டும்.

ஆலய வளவுக்குள் நாதஸ்வரம், மேளம் போன்ற எமது பாரம்பரிய இசைக் கருவிகள் தவிர வேறு எந்த வாத்தியங்களும் இசைக்க அனுமதிக்கப்படக் கூடாது. சினிமாப் பாடல்களை இசைப்பது தடை செய்யப்பட வேண்டும். இறைவன் தேரில் எழுந்தருளி வருவது மக்களை ஆசீர்வதித்து அருள்பாலிப்பதற்காகவே அன்றி, தேர்களின் பின்னால் நாகரீக உடையில் நடக்கும் ''டப்பாங் கூத்தை'' ரசிப்பதற்கு அல்ல!

எவ்வளவோ தூரத்திலிருந்து கால்நடையாக கோவில்களுக்கு வந்து சேரும் பஜனைக் குழுவினருக்கு, இந்த தடம்புரண்டு துள்ளும் கூத்தாடிகளுக்கு வழங்கப்படும் இடம்கூட கொடுக்கப்படுவதில்லை. அவர்களின் தெய்வீக மணம் கமழும் பாடல்கள் இவர்களின் உரத்த கும்மாளத்துக்குள் அடங்கிப் போய் விடுகின்றன. எனவே திருவிழாக் காலங்களில் பஜனைக் குழுக்களுக்கு உரிய இடம் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வேற்று மதத்தவரின் சில செயற்பாடுகளும் எம்மை பாதிக்கத்தான் செய்கிறது. காலாதிகாலமாக பல மரங்களின் கீழ் இருந்து வந்த எம் குல தெய்வங்களின் விக்கிரகங்கள் இரவோடிரவாக அகற்றப்பட்டு வேறு சிலைகள் வைக்கப்படுகின்றன. இலங்கையில் உலகப் பிரசித்தி பெற்ற திருத்தலங்களின் அருகேயே அல்லது அந்த ஆலய வளவுக்குள்ளேயே புதிதாக வேற்று மத கோவில்கள் முளைப்பதை அவதானிக்க முடிகின்றது. புதிய ஆலயம் அமைப்பது அவர்களின் சுதந்திரம் தான். அதனால் அவர்களின் மத வழிபாடுகள் ஒலிபெருக்கி மூலம் ஒலிக்கும் போது, எமது சிந்தனைகள் தடம் புரள்வது தவிர்க்க முடியாததாகிறது. இந்த பாரம்பரியமாக கட்டிக் காக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை முன்னேஸ்வரம், கதிர்காமம் போன்ற இடங்களில் அப்பட்டமாகவே அவதானிக்கலாம். குறுகிய கால இடைவெளியில் கதிர்காமத்தில் ஏற்பட்ட மாற்றங்களே இதற்கு சான்று பகர்கிறது. இவற்றிற்கு மதங்களில் அரசியல் செல்வாக்கே பிரதான காரணமெனலாம். இப்படிப்பட்ட செயற்பாடுகளுக்கு இங்கே எம்மவர்களும் துணை போகிறார்கள் என்பதுதான் வெட்கப்பட வேண்டிய விடயம்.

மேலெழுந்த வாரியாக ஆராயப்பட்ட இந்த பிரச்சினைகளை தீர்க்க வேண்டியதன் பங்களிப்பு உங்களின் கைகளில்! வெறும் எழுத்துருவில் கொள்கைகளாக இருப்பவை நடைமுறையில் தடம்புரள்வதை தடுப்பது உங்கள் தலைகளில்! இந்து மதத்தின் வீழ்ச்சியின் ஆரம்பத்திற்கே முற்றுப் புள்ளி வைக்க வேண்டியது திண்ணம், உங்கள் மனங்களில்! எங்கே! ஓர் நல் மாற்றத்திற்காய், ஓர் நல்ல சமுதாயத்தை படைப்பதற்காய், கறைபடியாத மானுடனாய், புதிய வேகத்துடன், ஒருங்கமைக்கப்பட்ட தெளிவான கொள்கைகளுடன் உங்கள் சிந்தனைக் குதிரைகளை தட்டி விடுங்கள்!

# ஆகமங்கள் கூறும் வழிபாடுகள்

வ. சிவலோகதாசன், வணிகவியல் சிறப்பு (2ம் வருடம்), கலைப்பீடம்.

இந்து சமயத்தில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அவற்றுள் சைவம், சாக்தம் , வைஷ்ணவம், காணபத்தியம் , கௌமாரம், சௌரம் என்ற ஆறையும் பிரதான சமயங்களாகக் கொள்வர். இவை முறையே சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, முருகன், சூரியன் ஆகிய தெய்வங்களை முழுமுதற் கடவுளாக கொண்டுள்ளன. வேதங்களைப் பிரமாண நூல்களாக கொண்டுள்ளதால் வைதீக சமயம் என அழைக்கப்பட்டது. இந்து சமயத்தினை சன்மதங்கள் என ஸ்ரீ சங்கரர் நிறுவியுள்ளார். இதனை அறுசமய நெறி எனவும் அழைப்பர். நமது ஈழநாட்டைப் பொறுத்தவரை சைவசமயமே வழக்கிலுள்ளது. சக்தி ஆலயம், விஷ்ணு ஆலயங்களில் கூட பெரும்பாலும் சிவபரமாகவே வழிபாடுகள் நடக்கின்றன. சைவத்திற்கு வைதீக சைவம், சிந்தாந்த சைவம், வேதாகம சைவம், அத்தாத் வேதம், சன்மார்க்கம், சைவநெறி என பல பெயர்கள் உண்டு.

உயிர்கள் சிவத்தை அறிந்து உணர்ந்து அதனோடு இரண்டறக் கலந்து பேரானந்த வாழ்வை அடைவதற்கு இறைவனால் வகுக்கப்பட்ட வழிதான் சைவ சமயம். சைவம் சிந்தாந்த சைவம், காஷ்மீர சைவம், வீரசைவம் என உள்ளன. சைவத்திற்குப் பிரமாண நூல்களாக வட மொழியில் வேதங்களும், ஆகமங்களும், தமிழ் மொழியில் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சிந்தாந்த சாத்திரங்களும் அமைந்துள்ளன. இப்பிரமாண நூல்களை ஒட்டி பிற்காலத்தில் சிறந்த நூல்கள் பல உண்டாயிற்று. வீடுபேற்றை அடைவதற்கான சாதனங்களில் சைவ நாற்பாதங்களும், சிவ சின்னங்களும், திருவைந்தெழுத்தும், திருக்கோயில் வழிபாடும், திருவுருவ வழிபாடும், குருலிங்க சங்கம வழிபாடும் மிக இன்றியமையாதவையாகும். புராணங்களும் இதிகாசங்களும் சைவத்தின் பண்பாட்டுத் தன்மைகளையும் , முழுமுதற் கடவுளரின் சிறப்பியல்புகளையும் அக்கடவுளை அடைவதற்கான வழிவகைகளையும் கூறி உள்ளன. சைவ சமயத்தினர் தீட்சை பெற்று, நித்திய வழிபாடும், வீட்டில் குருவழிபாடும் செய்து வாழ்கின்றனர். அவர்கள் தாங்கள் கடைப்பிடிக்கும் சாதனைகளுக்குக்கேற்ப சாலோக, சாமிப, சாரூப, சாயுச்சிய முத்தியைப் பெறுவர் என சைவ நூல்கள் கூறுகின்றன.

சைவத்தின் முதனூலாகவும், சிறப்பு நூலாகவும் ஆகமம் அமைந்துள்ளது. ஆகமம் என்னும் சொல்லுக்கு ஒன்றிலிருந்து வந்தது'' என்று பொருள் அதாவது இறைவனிடமிருந்து வந்தது எனப் பொருள்படும். 'ஆ' என்பது சிவஞானம் எனவும், 'க' என்பது மோட்சம் எனவும் 'ம' என்பது மலநாசம் எனவும் பொருள். அதாவது சித்தமலம் அறுவித்து சிவஞானத்தைத் தோற்றுவித்து மோட்சத்தைக் கொடுத்தல் ஆகமம் எனக் கொள்வர். அதுமட்டுமன்றி 'ஆ' என்பது பாசம், 'க' என்பது பசு 'ம' என்பது பதி, எனப் பொருள் கொண்டு ஆகமம் என்பதற்கு முப்பொருளையும் உணர்த்தும் நூல் எனவும் கூறுவர். சாக்த ஆகமங்களை தந்திரங்கள் என்றும் வைணவ ஆகமங்களை சங்கிதைகள் என்றும் சைவ ஆகமங்களையே ஆகமங்கள் எனவும் அழைத்தல் மரபாயிற்று. சிவனால் தோற்றுவிக்கப்பட்டதால் சைவ ஆகமங்கள் சிவாகமம் எனப்படுகின்றன. இவை மூலாகமங்கள் உபாகமங்கள் என இருவகையாகும். சிவாகமங்கள் கூறும் வழிபாடுகளைப் பற்றி பார்ப்போமானால் திருக்கோயில் வழிபாடு, திருவுருவ வழிபாடு, குருலிங்க சங்கம வழிபாடு, திருவிளக்கு வழிபாடு என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

## திருக்கோயில் வழிபாடு:

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' போன்ற ன கோயில்களின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றன. உலக இன்ப போக வாழ்க்கையில் சிக்குண்ட மக்களை ஒரு நெறிப்படுத்தி பேரின்ப வாழ்வைப் பெற வழிவகுக்கவே கோயில்களும் கோயில் வழிபாடுகளும் தோற்றம் பெற்றன. கடவுள் பக்தியை ஊட்டவல்லது கோயில் வழிபாடே. இவ்வழிபாட்டால் உண்மை அன்பு, அமைதி உண்டாகின்றன. பாவங்கள் ஒழிக்கப்படுகின்றது. சித்த மலம்

அறுக்கப்படுகின்றது. சிந்தையில் செம்மை ஏற்படுகிறது எல்லா மகிழ்ச்சியும் தோன்றுகிறது. அனைவரும் வழிபாடு செய்வதால் அனைவருடைய சிந்தையும் செம்மையுறுகிறது. இதனால் சமுதாயம் உயர்வடைகின்றது. சமுதாயத்திற்கு அருள் வழங்கும் இடங்களே கோயில்கள் அதற்காகவே கோயில்களில் பூசைகள் நடத்துகிறார்கள். இவை அச்சமுதாயத்தை ஆன்மிக வழிக்கு இட்டுச் செல்கின்றன.

கன்ம மறுபிறப்புப் பற்றி இந்துமதம் வலியுறுத்துகிறது. உயிர்களுக்கு ஒரு பிறவி மட்டுமல்ல. இது எமது சமய உண்மை. எனவே முற்பிறவியில் செய்த பாவங்களை நீக்கி இப்பிறவியிலும் பாவங்களைப் புரியாது பேரின்ப வாழ்வைப் பெற வேண்டும். இப் பேரின்ப வாழ்வைப் பெறுவதற்கு பல்வேறு வழிகளை இந்துமதம் காட்டுகின்றது. இவைகளில் எல்லோருக்கும் இசைவானதும், மிக சிறந்ததும் கோயில் வழிபாடே. கோயில்கள் ஆரம்பகாலத்தில் செழித்து வளர்ந்த மரங்களின் கீழ் பலிபீடத்தை அமைத்து அதன் மீது கடவுளின் உருவத்தை எழுதி, நாளடைவில் பலிபீடத்துக்குப் பதிலாக உருவத்தை செய்தார்கள். பின் இவ்வுருவங்கள் மழை, வெயில், முதலியவற்றில் தாக்கமடையா வண்ணம் ஆக்கப்பட்டவையே கட்டடங்கள். இக் கட்டடங்களே பின்னர் ஆலயங்கள், கோயில்கள் என வழங்களாயிற்று.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன கோயில்களில் இன்றியமையாத உறுப்புக்களாகும். ஆலயத்திற்கு செல்லும்போது தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, பூசனைப் பொருட்களை தட்டில் வைத்து மார்புக்கு மேலாக தூக்கிய வண்ணம் இறை சிந்தனையோடு செல்லுதல் வேண்டும். கால்களைக் கழுவியபின்பே உட் செல்லுதல் வேண்டும். ஆலய வழிபாட்டுக்கு கொல்லாமை, புலால் உண்ணாமை, சிவத்திரவியம் தவறாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறன் மனைவியை நோக்காமை, விலைமாதரை விரும்பாமை, இரக்கம், வாய்மை, பொறுமை, அடக்கம், கொடை, தாய்தந்தை குரு முதலியோரை வழிபடுதல் முதலியன அங்கங்களாகும். ஆலய வழிபாடு அங்கியாகும் என எமது சமய நூல்கள் கூறுகின்றன. எனவே மேற்போன்ற தன்மைகள் இல்லாது செய்யும் வழிபாடு பயனற்றதாகும் என்பர்.

'தூலலிங்கம்' எனப்படும் இராஜகோபுரத்தை வணங்கிப் பின்பே ஆலயத்தினுள் சென்று இறைவனை வழிபட வேண்டும் என்பது விதி. இதனால் பாவம் நீக்கப்படுகிறது. அத்துடன் பலிபீடத்தை வணங்குவதனால் ஆசைகள் பலி கொடுக்கப்படுகின்றன. ஆன்மா புனித நிலையை அடைகின்றது. இந்த அந்தரான்மா நிலையில் கொடி மரத்தை வணங்குவதன் மூலம் தத்துவாத்மா நிலை கிடைக்கப் பெறுகிறது. நந்தியை வழிபட்டு உத்தரவு பெற்ற பின்பே கருவறை மூர்த்தியை தரிசனம் செய்தல் வேண்டும். கருவறை மூர்த்தி 'பதி' யையும், நந்தி 'பசு' வையும் கொடிமரம் 'பாச'த்தையும் குறிப்பதாக சைவ நூல்கள் கூறுகின்றன.

வணங்குதல் வடமொழியில் நமஸ்காரம் என்பர். கொடிமரத்தின் முன் வணங்கும் ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். அத்துடன் திருக்கோயிலுள்ள பிரகாரங்களை நியதிகளின்படி வலம் வருதல் வேண்டும். இறை நாமங்களையும், திருவைந்தெழுத்தையும் உச்சரித்துக் கொண்டு வலம் வந்து பின் துவார பாலகர், திருநந்தி தேவரை வணங்கி பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போய் கணபதி, அங்குள்ள மூர்த்தங்கள், பரிவார தெய்வங்களை வணங்கி இறுதியாக சண்டேஸ்வரரை வழிபாடு செய்து, வலப்பக்கமாக வந்து சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து, பலிபீடத்துக்கு இப்பால் மும்முறை வழிபாடு செய்து எழுந்து அமைதியாய் ஓரிடத்தில் இருந்து பஞ்சாட்சரத்தை செபித்துக் கொண்டு இறை சிந்தனையோடு அமைதியுடன் வீடு செல்ல வேண்டும். இவ்வாறு திருக்கோயில் வழிபாட்டை சுருக்கமாக கூறி முடிக்கலாம்.

திருக்கோயில் வழிபாடு உணர்த்தும் தத்துவம் மகத்தானவை ஒரு மனிதனுடைய உடம்பைக் கொண்டதாக கோயில்கள் அமைந்துள்ளன. குண்டலினி சக்தி உறங்கிக் கிடக்கும் மூலாதாரம் கொடி மரமாகவும், கொடிமரத்திலுள்ள 32 வளையங்களும் முள்ளந்தண்டிலுள்ள 32 எலும்புகளையும், கொடிமரக் கயிறுகள் இடைகலை, பிங்கலை என்னும் நாடிகளையும் குறிக்கின்றன. இவற்றின் வழியே யோகம் பயிலும் போது ஆன்மா பேரானந்தத்தை எய்துகிறது. எண்ணங்களின் பிறப்பிடமாக விளங்கும் 'தொப்புள்' என்னும் ஸ்தானத்தில் நந்தியை பிரதிஷ்டை செய்யும் போது எண்ணங்கள் அடங்கி மனதினைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. அறுவகை உட்பகையும் இதயத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதை பலிபீடம் உணர்த்துகிறது. ஆன்ம ஒளி உண்டாகும் என்பதை லிங்கப் பிரதிஷ்டை உணர்த்துகிறது. கர்ப்பக்கிரகத்தின் மேலே அமைந்திருக்கும் விமானம் பரவொளித்தத்துவமாகிய நந்தனத்தை உணர்த்துகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

திருவுருவ வழிபாடு:

ஒவ்வொரு ஆலயங்களிலும் வந்து வழிபடுவோர் அங்குள்ள உருவங்களை நோக்கி அவற்றுக்குச் சர்வ வியாபக முதலாகக் கடவுளுக்குள்ள எல்லா குணங்களையும் ஏற்றி வழிபாடு இயற்றுவதை இன்னும் காணலாம். உடல் ஆலயம், உள்ளிருக்கும் உயிரே இறைவன் அறிவின்மையை நீக்கி ''அவனே நான்'' எனும் அறிவைப் பெற வேண்டும். இந்நிலை பெறாதவர்கள் உருவத்தில் இறைவனை வழிபடவே உருவ வழிபாடு தோற்றம் பெற்றது எனலாம்.. காணவும், கருதவும் அரிதாகவுள்ள முழுமுதற் கடவுளைக் காணவும், கருதவும் எளிதாகிய உருவத்திருமேனியிற் கொண்டு வழிபடுதலே திருவுருவ வழிபாடாகும். இவ்வழிபாடு செய்கிறவர்களுக்கு தாம் அன்பு முதிர்ச்சியை அடைந்து இறைவனோடொன்றி ஒன்றறக் கலக்கும் பேறு கிடைக்கப் பெறுகிறது.

சிவனின் அறுபத்தி நான்கு மூர்த்தி பேதங்களுள் லிங்கம், இலிங்கோற்பவம், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், வைரவர், வீரபத்திரர், பிச்சாடனர், தட்சணாமூர்த்தி என்பன பெரும்பாலான கோயில்களில் காணக்கூடியதாக உள்ளது. சிவலிங்கத்தை வழிபட்டு கண்ணப்ப நாயனார் தொடக்கம் சோழ நாயனார் வரை முப்பது நாயன்மார்கள் முத்தி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிவனின் அறுபத்தி நான்கு மூர்த்தி பேதங்களுக்கும் சிறந்த தத்துவ விளக்கங்கள் உண்டு. அவ்வகையில் நடராஜ மூர்த்தி வடிவமானது இறைவனின் ஐந் தொழில்களையும் உணர்த்தி நிற்கின்றது. அத்துடன் திருவைந்து வடிவம், திருவாச பிரணவ வடிவம் என்பன பிரணவமில்லாது திருவைந்தெழுத்தை செபிக்கக்கூடாது என உணர்த்துகிறது.

நடராஜ மூர்த்தி திருவுருவமானது பாசத்தால் கட்டுண்டு கிடக்கும் உயிர்களுக்கு இறைவன் திருவடி 'ந'கரமாகிய திரோதான சக்தியாக இருந்து உயிர்களை தன்னிடத்தே காட்டி மாயத்தை பார்த்தாயா என்று வயிற்றிலே 'ம'கரத்தைக் காட்டி பரம்பொருளாகிய சிவமே எங்கும் நீக்கமற குறைந்து நிற்பதை உணருமாறு தோள்களாகிய 'சி'கரத்தால் உணர்த்தி உபதேசம் வழங்கும் முகமாக 'வ'கரத்தை காட்டி இங்ஙனம் அனுபவம் முதிரப் பெற்ற ஆன்மா முடியாக விளங்கும் என்பதையே நடராஜ வடிவம் உணர்த்துகீறது. இவ்வாறே உடுக்கை, அபயம், தீயகல், கஜஹஸ்தம், தூக்கிய திருவடி, ஊன்றிய திருவடி, முயலகன், கபாலமாலை, பாம்பணி, தோடும் குழையும், சிலம்பும் கழலும், முக்கண், திருச்செவி, சடைமுடி, குமிண் சிரிப்பு, பிறை, கங்கை, கோவணம், தூய வெண்ணீறு என்பன தூய தத்துவத்தை விளக்குகின்றன.

நாற்புறமும் பரிவாரங்களமைந்து தத்தம் கடமைகளைச் செய்ய மத்தியில் இறைவன் இருந்து ஆன்மாக்களுக்கு பேரருள் பாலிக்கின்றான். பரிவார தெய்வங்களாக பரமேஸ்வரி, சாமுண்டி, காளிதேவி, பிள்ளையார், முருகன், துர்க்கை, மகமாரி, கௌரி, விஷ்ணு, நந்தி, வைரவர், சூரிய சந்திரர், நவக்கிரகங்கள், திருக்குப்பாலகர்கள், சண்டேசுவரர், முதலிய தெய்வங்களும், நாயன்மார்களும் உள்ளனர். இவைகளில் பல தெய்வங்கள் பெருந்தெய்வங்களாக இடம் பெற்று அவைகளுக்கும் தனித்தனி கோயில்கள் விளங்குகின்றன. சிறப்பாக மகமாயி, விஷ்ணு, விநாயகர், முருகக்கடவுள், சூரியன் போன்ற தெய்வங்களுக்கு பெருங்கோயில்கள் உள்ளன. அம்மை நோய், கண்ட காலங்களில் எச்சமயத்தவரும் மகமாயை சிறப்புடன் வணங்கும் முறை குறிப்பிடத்தக்கது. தர்மம் அழிந்து அதர்மம் வளர முனைகின்ற போது அவதாரம் எடுத்து அறத்தை நிலை நாட்டுபவராக விஷ்ணு விளங்குகின்றார். இதனால் இவரை அவதார தெய்வமாக கருதுவர்.

''சகோதரர்களே மூச்சுவிடாமல் உயிர் வாழ்தல் கூடாது. அது போலவே மனஞ்சார்ந்த உருவங்களில்லாமல் எதனையும் பற்றி நினைத்தல் கூடாது'' சம்யோக விதியினாலேயே சடப்பொருள் உருவமானது மனஞ்சார்ந்த உருவத்தைப் பற்றி நிற்கின்றது. ஆகையினாலேதான் இந்து, வழிபாடு செய்யும் பொழுது புறத்தேயுள்ள உருவத்தை பயன்படுத்துகின்றான். புனிதத்தன்மை, தூய்மை, உண்மை எங்கும் நிறைந்த தன்மை போன்ற எண்ணங்களுடன் வேறுவேறாகிய உருவ பேதங்களை ஒன்றுபடுத்தி அவ்வழிபாட்டின் மூலம் வாழ்க்கைக்கு வேண்டிய ஒருபடியை அவன் காண்கின்றான். இதன் மூலம் அவன் தனக்கு உரிமையாகிய தெய்வத்தன்மையை அடைகின்றான் என திருவுருவழிபாட்டின் ஆன்மீக மகிமையை சர்வமத மாநாட்டு மேடையில் சுவாமி விவேகானந்தர் தெளிவுற விளக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## குருலிங்க சங்கம வழிபாடு:

குரு என்னும் சொல்லுக்கு பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பவர் என்பது பொருள். பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு குரு தீட்சை மூலம் முத்தி கொடுக்கிறார். இறைவனும் இவ்வாறு குருவாக, ஞான குருவாக வருவதனாலும் நாம் குருவை இறைவனாக மதித்தே வழிபாடு செய்ய வேண்டும். இறைவன் தட்சணா மூர்த்தி வடிவங் கொண்டதும் குருவாம்ச தன்மையாலே. திருக்கைலாய ஞான பரம்பரைக்கு இறைவனே ஆரம்ப குருவாக

இருந்திருக்கிறார். நாயன்மார் வரலாறுகள் இறைவன் ஞான குருவாக வந்த தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. சரியாகுரு, கிரியாகுரு, யோககுரு, ஞானகுரு என குரு நால்வகைப்படுவர். சொரூப சிவம், தடத்த-சிவம், பரஞானமுத்தையுடைய யாரும் குருமூர்த்தமே. ஏனைய தாவரமூர்த்தமும் குருமூர்த்தமே. நாயன்மார் முதலிய சிவ அடியார் பொருட்டாக காலந்தோறும் வெளிப்பட்டருளி மறையும் மூர்த்தமும் குரு மூர்த்தமே எனத் தேறி அருள் குருவை வழிபடல் வேண்டும். குரு உபதேசப்படி ஒழுகுதலும் சிவசொரூபமாக குருவை மதித்து நடத்தலுமே குருவழிபாடுகளில் சிறந்ததாகும். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தொடக்கம் சந்தான குரவர் வரை பலர் குரு வழிபாட்டினாலேயே உயிர் பதம் எய்தியவர்களாவர்.

லிங்க வழிபாடும் முக்கியமானது. சைவ நாற்பாதத்திலுள்ளவர்கள் தங்கள் தங்கள் பக்குவத்திற்கேற்ற முறையில் லிங்க வழிபாடு புரிவர். மூவகை தீட்சையும், ஆசார அபிடேகமும் பெற்றவர்களே திருக்கோயிலில் நிலையாக ஸ்தாபிக்கப்பட்ட பரார்த்த லிங்கத்திற்கு பூசை செய்தற்குரியோராவர். விசேட தீட்சை பெற்றவர்கள் தமது விசேட தீட்சா குருவிடமிருந்து பெற்ற ஆன்மார்த்த லிங்கத்தை குருவின் உபதேசப்படி பூசித்து வழிபடுவர். சண்டேஸ்வர நாயனார், குங்கிலியக் கலய நாயனார் போன்றோர், லிங்க வழிபாட்டின் மூலம் முத்தி எய்தியவர்களாவர்.

சங்கம வழிபாடும் ஆன்மீகத்துக்கு வழிவகுப்பனவாகும். சிவ பிரானிடம் மெய்யன்பு கொண்டு ஒழுகுவோரே சிவனடியார். சிவனடியார் கூட்டமே சங்கமம் எனக் கூறப்படும். சங்கம வழிபாட்டின் உயர்வை சுந்தரரின் ''அடியார்க்கு அடியேன்'' எனக் கூறும் போக்கு வெளிக்காட்டுகின்றது. சிவனடியார்களுக்குச் செய்யும் வழிபாடு சிவ வழிபாடாகக் கொள்ளப்படுகின்றது. சிவனடியார்களுக்கு உணவு கொடுத்தல், மகேசுவர பூசை என வழக்கப்படுத்துவதிலிருந்து இதனை உணரலாம். சங்கம வழிபாட்டால் உள்ளம் தூய்மை பெற்று பக்தி நெறி வளர்க்கப்படுகிறது. இயற்பகை நாயனார், மெய்ப்பொருள் நாயனார், சக்தி நாயனார் போன்றோர் சிவனடியாரை வழிபட்டு முத்தி பெற்றோராவர்.

## <u>திருவிளக்கு வழிபாடு:</u>

இல்லறப் பெண்கள் மக்களோடும், சுற்றத்தாரோடும், கூடி தினமும் செய்ய வேண்டிய வழிபாடாக திருவிளக்கு வழிபாடு காணப்படுகின்றது. நாள்தோறும் வீடுகளில் செய்வதுபோல் மாதம் ஒரு முறையேனும் ஊரவர்கள் எல்லோரும் ஒன்றாக திருக்கோயில், ஆல் போன்ற அகன்ற மரத்தடி போன்ற பொது இடங்களில் கூடி வழிபடுதல் வேண்டும். இல்லக இருளைப் போக்குவது திருவிளக்கு. குளிர் நீரால் திருமுழுக்குச் செய்த திருவிளக்கை மெல்லிய வெண்துணியால் துடைத்து மெழுகி, கோலமிட்ட புனித இடத்தில் ஏற்றி, பொட்டு, சரம், மாலை முதலியவற்றை சூட்டி பேரொளிப் பிழம்பாயுள்ள முழுமுதற் பெம்மானை விளக்கின் கண் எழுந்தருள வேண்டி நைவேத்தியங்களைப் படைத்து, பத்திர புஷ்பங்களால் அர்ச்சனை புரிந்து ஐவகை ஒலி முதல்களால் ஓசைகளை எழுப்பி நறும் புகை தீபமும் காட்டி, திருப்பாடல்களால் தோத்திரம் செய்து வழிபடல் வேண்டும். இதனால் மழைவளமும், விளைவுச் செழிப்பும், கல்வி, ஆட்சி சிறப்பு முதலியனவும் ஓங்கி நாடு முன்னேறி அனைவருடனும் ஒற்றுமையுடன் வாழும் நிலையும் ஆன்மீக திருப்தியும் ஏற்படும் எனக் கூறுவர்.

மனிதனுடைய ஆன்மா நித்தியமானது, அமிர்தத்துவமுடையது, பூரணமானது, எல்லையற்றது, மரணமென்பது ஓருடலிலிருந்து மற்றோருடலுக்கு இடம் பெயரும் நிகழ்ச்சியேயாம். இதனையுணர்த்துமுகமாகவே வழிபடுதல் தோற்றம் பெற்றன எனலாம். வழிபாடுகளே ஒரு சமுதாயத்தை ஆன்மீக வழியில் ஈடுபாடு கொள்ள தூண்டு கோலாக உள்ளது என்பது பொறுத்தமுடையதாகும்.

# இந்து சமயத்துக்குப் புதிய விளக்கம் வேண்டுமா?

## ஒரு கண்ணோட்டம்.......

வே.இராஜகோபால சிங்கம், 3ம் வருடம், பொறியியற் பீடம்.

சமயங்களை இரண்டாக வகுக்கலாம். வளர்ச்சியடைந்த சமயங்கள் வளர்ச்சியடையாத சமயங்கள் என்பனவேஅவை. வளர்ச்சி அடைந்த சமயத்தைச் சேர்ந்தவர் பலர் அவ்வச் சமயத்தைப் பற்றிய விளக்கத்தைக் கொடுக்கக் கூடிய நிலையிலுள்ளனர். இந்து சமயத்தைப் பற்றி அவ்வாறு கூற இயலாது. காரணம் அது பரந்த தத்துவ முத்துக்களை தன்னகத்தை கொண்டுள்ளது என்று மட்டும் கூறி சமாளித்து விட முடியாது. இந்து சமயத்தை பிற சமயங்களோடு ஒப்பிடும் போது இந்துக்கள் என்போர் யார் என்பதை வரையறுத்துக் கூறுவதிலே கூட வில்லங்கம் காணப்படுகின்றது என்பது எம்மில் பலருக்குத் தெரியாது. வேதத்தை முதல் நூலாக ஏற்போரே இந்துக்கள் என்றால் வீர சைவசமயத்தை இந்து சமயத்தின் உட்பிரிவாகக் கொள்ள முடியாது. இந்து சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று தனிப்பட்டவர் எவரையும் கூறமுடியாது. இந்து சமயத்தின் தத்துவத்தை விளக்கும் நூல் எதுவென்று வினவினாலும் அதற்கு வெவ்வேறு தத்துவங்களை விளக்கும் வெவ்வேறு நூல்களையேகூற வேண்டி இருக்கும். இந்து சமூகத்தில் சாதி சமூக வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் மலிந்து காணப்படுகின்றன. இவற்றை நீக்குவதற்கு முயன்ற சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் இன்றுவரை வெற்றி பெறவில்லை. பிற சமயத்தவர் இந்து சமயத்தாற் கவரப்பட்டு மதம் மாறினால் இந்து சமூகத்தில் எச்சாதியைச் சேர்ந்தவராகக் கொள்ள வேண்டும் என்ற பிரச்சினை தோன்றுகின்றது. சமயம் மாறுபவர் தம்முடைய சமயத்திலே தமக்கிருந்த நிலையை இழந்து இந்து சமயத்திலும் நிலை கொள்ளாவிட்டால் அவருடைய நிலை பரிதாபத்துக்குரிய தன்றோ? ஆனால் மதம் மாறுபவர் துறவியாக இருந்தால் இந்தப் பிரச்சினை இல்லை. ஆனால் மதம் மாறுபவர் எல்லோரும் துறவியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. இந்துக்களின் எதிர்காலச் சந்ததிகள் சமய நம்பிக்கையோடு கருத்து மோதல்களை எதிர்த்து நிற்பார்கள் என்று நிச்சயமாகக் கூறமுடியாது. அறிவியல் நோக்கில் செல்வாக்கு வளர்ந்து செல்லுமாற்றை நோக்கும் போது சமய நம்பிக்கை தகர்ந்து விடக்கூடும் போல் பலருக்குத் தோன்றுகின்றது. இன்றுள்ள நெருக்கடிகளுக்கு காரணத்தை சுருக்கமாகக் கூறுவதானால் அறிவியல் நோக்கிலே சமயக் கருத்துக்களை நோக்குவதேயாகும். சமய நம்பிக்கையுடையோருள் ஒரு சாரார் சமயக் கருத்துக்களை அறிவியல் நோக்கிலே காண்பதை எதிர்க்கின்றனர். சமயம் வேறு அறிவியல் வேறு என அவர்கள் வாதிப்பர். அறிவியலையும் சமயத்தையும் வேறுவேறாக வைத்திருக்க வேண்டுமென்றவாதம் ஏற்கக் கூடியதாக இல்லை. அறிவியலும் சமயமும் உண்மையை அறிவதற்கு வெவ்வேறு வழிகள் என்று கொண்டால் அறிவியலுக்கும் சமயத்திற்கும் முரண்பாடு இருப்பதாகக் கூறமுடியாது. அறிவியலுக்கும் சமயத்திற்கும் அமைதி காண்பதே காலத்துக்கேற்ற மாற்றமாகும்.

இவ்வாறு அமைதி காண வேண்டுமானால் அறிவியல் இந்து சமயத்தில் எத்தகைய் பாதிப்பை ஏற்படுத்துகின்றதென முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இந்து சமயத்தின் சில உட்பிரிவுகளிலே இதிகாசப் புராணக் கதைகள் இறைவனுடைய பெருமையை உணர்த்துவனவாக முக்கியத்துவம் பெறுகின்றன. இதிகாசப் புராணங்கள் பொது மக்களைக் கவர்வதற்காகவே பயன்படுத்தப்பட்டன. இறைவனும் சமயப் பெரியார்களும் செய்த அற்புதங்கள் சமயப் பெரியாரின் அமானுஷ்யத் தன்மைகள் என்பன இந்து சமயத்தில் மட்டுமன்றி எல்லாச் சமயங்களிலும் இடம் பெறுகின்றன. இவையெல்லாம் பொதுமக்களை சமய ஈடுபாடு கொள்ளச் செய்வதற்காக கூறப்பட்டு வருவனவாம். பொதுமக்கள் சமய ஈடுபாடு கொள்ளச் செய்வதற்காக வேறு வழிகளைக் கையாள்வது பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

சமயக் கருத்துக்களென நம்பப்படுபவை சில மூட நம்பிக்கைகளெனப் புலனாகின்றன. இந்து சமயம் நம்பிக்கையை (ஐதீகம்) அடிப்படையாகக் கொண்டது. முந்திய கால சமய நம்பிக்கைகளில் ஓர் பகுதி மூட நம்பிக்கைகளென்று ஏற்றால் சமயமே பொய்ச் சமயம் என்ற நிலை தோன்றி விடுமென்று அச்சம் சமய நம்பிக்கையுடையோரிடையே காணப்படுவது தவிர்க்க முடியாது. சமயக் கருத்துக்கள் இறைவனருளாலே

தோன்றியவை என்ற கருத்தைவிட்டு பொருளியல், சமூகவியல், உளவியல் காரணங்களினாலே தோன்றின என்ற கருத்தை ஏற்றால், சமயக் கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொதுவான உண்மை என்ற நிலையும் முத்தியடைய ஒரே மார்க்கத்தைக் காட்டுவன வென்ற நிலையும் ஆட்டம் காணத் தொடங்கிவிடும் என்ற அச்சம் காணப்படுகின்றது.

சமயம் வாழ்க்கைக்கு அவசியமானது என்று கூறும் போதும் சமயம் என்ற பெயரில் வழங்கிவரும் எல்லாம் வாழ்க்கைக்கு என்று கூறிவிட முடியாது. ஆனால் தனிமனித வாழ்க்கையை மேம்படச் செய்யும் சமய உணர்ச்சியே சமயத்தின் அத்திவார அம்சமாகும். சமய உணர்ச்சியை தோற்றுவிப்பதற்கும் காப்பாற்றுவதற்காகவே சமயத்தின் ஏனைய அம்சங்கள் போற்றப்படுகின்றன. எனவே சமய உணர்ச்சியை விட்டுக் கொடுக்கக்கூடாது. அதைப் பாதிக்காத முறையில் சமயத்தின் ஏனைய அம்சங்களிலே சில மாற்றங்களைப் புகுத்துவதனாலே தீமை ஒன்றும் ஏற்படாது. இந்துசமயம் பண்டைக் கால இடைக்கால சமூக அமைப்புகளோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

இந்து சமயம் தவிர்ந்த ஏனைய முக்கிய சமயங்கள் ஒவ்வோர் பெரியாரைத் தமது ஆரம்ப கர்த்தாக்களாகக் கொண்டன. அப்பெரியார்களின் ஒவ்வோர் போதனையும் காலத்துக்கு ஏற்ற கருத்து மாற்றங்களையும் இணைப்பது வில்லங்கமாக இருக்கலாம். ஆனால் இந்துசமயம் அவ்வாறு இல்லை. இந்து சமயம் காலத்துக்கு ஏற்ற மாற்றங்களை அனுசரித்து வந்துள்ளது. இது இந்து சமயத்தின் தனிச்சிறப்பாகும். வேதகாலத்தில் இந்து சமயத்திலே உயிர்ப்பலியோடு கூடிய வேள்வி நடைபெற்றது. பின்பு சமண பௌத்த சமயங்களின் செல்வாக்கு மிகுந்திருந்த காலத்தில் உயிர்ப்பலி நிற்பாட்டப்பட்டது. பின்பு வேள்வியும் அருகிப் பூஜை முக்கியத்துவம் பெற்றது. இந்துசமயம் தனது முதல் நூலாக இன்றும் கொள்ளும் வேதம் குறிப்பிடும் வேள்வி உருமாறி அருகியபோதிலும் இந்து சமயத்தின் நிலையும் வளர்ச்சியும் பாதிக்கப்படவில்லை.

இந்துசமயம் முழுவதையும் எடுத்து விளக்கும் தத்துவ முறையாக இன்றும் எதையும் கூற முடியாது. பௌத்த மதம் தர்க்க முறையிலே நன்கு வகுக்கப்பட்ட தத்துவ முறை உடையதாக இருந்து இந்து சமயத்தைத் தாக்கி வந்ததால் இந்து சமயத்தை அதேமுறையில் விளக்குவதற்காக ''குமாரிய பட்டர்'' ''பிரபாகர்'' என்போர் பூர்வமீமாம்சை என்ற தத்துவ முறையை உருவாக்கினர். இவர்களுடைய முயற்சி முழுப்பயனை அளிக்கவில்லை. அதனாலேயே சங்கரர் அத்துவித வேதாந்தத்தை எழுதினார். அத்துவித பௌத்த சமயக் கருத்துக்கள் சிலவற்றிற்கும் இந்து சமயக் கொள்கைகளுக்கும் அமைதி காணுகின்றது. பௌத்த சமயத்தை எதிர்த்து நிற்கவும், வெல்லவும் வல்ல சமயமாக இந்துசமயம் மாறியது. இதனைப் போன்று இக்காலத்துக்கேற்ற விளக்கம் ஒன்றுதான் இந்து சமயத்துக்கு தேவைப்படுகின்றது.

அத்துவிதம் இந்துக்கள் எல்லோருக்கும் உடன்பாடாக அமையவில்லை. வேதாந்தத்தில் நம்பிக்கையுடையோர் எல்லோர்க்கும் கூட அத்துவிதம் திருப்தி அளிக்கவில்லை. இராமனுஜர் விஷிட்டாத்துவைதத்தையும் மத்துவர் துவைதத்தையும் பிரச்சாரம் செய்தனர். ஒவ்வொரு தத்துவ விளக்கத்தையும் இந்துக்களின் ஒவ்வொரு பகுதியினர் ஏற்றனர். இவற்றின் விளைவாக இந்துமதம் பயன் பெற்றதே தவிர நிலை குலையவில்லை. எனவே அறிவியல் நோக்கை அனுசரித்து இந்து சமய உணர்ச்சியைப் பேணிப் புதிய தத்துவ முறை எழுந்து இந்துசமயத்துக்கு புதிய விளக்கம் தரவேண்டும்.

இப்படிக் கூறுவது இந்து சமயத்துக்கு விரோதமான கூற்றாகாது. சைவ சித்தாந்தம் தமிழில் எழுந்த வரலாறு இந்தக் கூற்றுக்கு அரண் செய்கிறது. சைவசமய உணர்ச்சிகளை வெளியிடும் தோத்திரப் பாடல்களே தமிழில் முதல் முதல் எழுந்தன. சைவ சமய உணர்ச்சிகளை வெளியிடும் தோத்திரப் பாடஙல்களே தமிழில் முதல் முதல் எழுந்தன. சைவசமய உணர்ச்சியைப் பெற்ற மக்களின் மனம், பிற சமய -தத்துவ விளக்கங்களால் அலை புரண்டது அதனாலேயே மற்றச் சமயத்தவர்களின் வாதங்களை நிராகரிக்கத்தக்க அமைப்புடையதாகச் சைவ சித்தாந்தம் ஆக்கப்பட்டது. சைவ சித்தாந்தத்தின் நோக்கிலே பிற சமயத் தத்துவங்களிலுள்ள குறைகளை நேரே எடுத்துக் காட்டுவதற்காக சிவஞான சித்தியாரின் பரபக்கம் சங்கற்ப நிராகரணம் என்பன ஆக்கப்பட்டன.இந்துசமயத்திலே குறைகள் கூறப்பட்டால் அக்குறைகளை கவனிக்காமல் விட்டு விடுவது இந்து சமயத்துக்கு நல்லதல்ல. இந்தக் குறைகளை ஆராய்ந்து தக்க பரிகாரம் காண்பதே இந்து சமயத்துக்கு நல்லதாகும். சைவ மக்கள் மத்தியிலே கிறிஸ்தவ மதம் வலுப்பெற்று வந்த போது ஆறுமுகநாவலர் கிறிஸ்தவ நூல்களையும் கிறிஸ்தவ நடைமுறைகளையும் நன்கு அறிந்து சைவ சமயத்தின் சார்பாக பயன்படுத்தியதனாலேயே அவர் சைவசமயத்தின் பாதுகாவலராக விளங்க முடிந்தது. எனவே இந்து

சமயத்தை விளக்குவதற்கு அறிவியல் நெறிக் காலத்துக்கேற்ற தத்துவமுறை வேண்டும். இந்து சமயத்தில் எவ்வெவ் அம்சங்கள் கண்டிக்கப்படுகின்றன. என ஆராய வேண்டும். நியாயமான கண்டனங்கள் இருந்தால் அவை ஏற்க்கப்படல் வேண்டும். நியாயமற்ற முறையிலான கண்டனங்களுக்குப் பதில்கள் வழங்கப்படல் வேண்டும். புதிய தத்துவ முறை இந்துக்கள் அனைவருக்கும் உடன்பாடாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இந்து சமய வரலாற்றிலே ஒரே தத்துவமுறை இந்துக்கள் அனைவருக்கும் உடன்பாடாக என்றும் இருந்ததில்லை. இந்துசமயம் புதிய முறைகளை ஏற்கும் போது பழைய முறைகளை ஒதுக்கி விடுவதில்லை. கண்டிப்பதுமில்லை. நம்புபவர் பழைய முறைகளை நம்பி வரலாம். எவர் மனமும் புண்பட இடமில்லை. எனவே அறிவியில் நோக்குடையவர்களும் அமைதி காணத்தக்க வகையிலே இந்து சமயத்துக்குப் புதிய தத்துவ விளக்கம் ஒன்று வேண்டும்.

**உசாத்துணை நூல்**

''தமிழர் சமய வரலாறு'' - டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை

✱ நாம் அமைக்கும் கல்வி, நாடு முழுவதற்கும் பொதுவாக விளங்கும் கல்வியாக, ஆன்மீகத்தைக் கொண்டதாகவும், உலக நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் தேசியப் பண்பாட்டிற்கு ஏற்றதாகவும், வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடிய் பண்பாட்டுக் கல்வியாகவும் இருப்பது அவசியம்.

✱ தனக்கு ஆண்டவன் கொடுத்துள்ள அறிவாற்றலைப் பயன்படுத்தாமல் கண்மூடித்தனமாக நம்புகின்றவனை மன்னிப்பதை விட தன்னுடைய பகுத்தறிவை முறையாகப் பயன்படுத்தி நம்பாமல் இருக்கும் ஒருவனைக் கடவுள் மன்னித்து விடுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

✱ 'இல்லை' என்று ஒருபோதும் சொல்லாதே. 'என்னால் இயலாது' என்று ஒருநாளும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது காலமும் இடமும் கூட உனக்கு ஒரு பொருட்டல்ல. நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக்கூடியவன். சர்வ வல்லமை படைத்தவன் நீ.

✱ ஆன்மீக வாழ்க்கைக்கோ, மனதிற்கோ உடலுக்கோ பலவீனத்தை உண்டுபண்ணும் எதையும் உன் கால் விரல்களாலும் தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கையாகும்.

✱ உண்மைக்காக எதனையும் துறக்கலாம். ஆனால் எதன் பொருட்டும் உண்மையைத் துறக்கக்கூடாது.

**- விவேகானந்தர்**

# "ஈழத்திருநாட்டின் சமய வளர்ச்சியில் சித்தர்கள்"

சாந்தகுமார் சிதம்பரம், மூன்றாம் வருடம், இரசாயனவியல்துறை, விஞ்ஞான பீடம்

"இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம்
செல்வம் வலி என்(று) இவை எல்லாம் - மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயர் தாம் உய்யர் கொண்டு"

என்கின்றது நாலடியார். இந்நெறி நின்று வாழ்ந்து சமயத்தை வளர்த்தவர்கள்தான் சித்தர்கள். இலங்கை அநநியராட்சிக்கு உட்பட்டிருந்த காலத்திலும் எமது சமயம் ஓங்கியிருந்ததற்குக் காரணம் சித்தர்கள் என்றால் அது மிகையாகாது.

கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தை வேலடிகள், அருளம்பலம் அடிகள் ஆகியவர்கள் இவற்களிற் குறிப்பிடத்தக்கவர்கள். சித்தர்களில் குருமரபு நிலவி வருகின்றது. இதனால் இன்றும் பல சித்தர்கள் கதிர்காமம், மாத்தளை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் வாழ்ந்து வருவதாக அறிகின்றோம். இவர்கள் அனைவரையும் பற்றி இங்கு நோக்குதல் சாத்தியமாகாது. எவனே இவர்களில் மேலே குறிப்பிட்டவர்கள் மக்களுக்கு மிகவும் அறிமுகமானவர்கள், சமய வளர்ச்சிக்கு அரும் பங்காற்றியவர்கள் என்பதாலும் அவர்களை பற்றி நோக்குதல் முறையென நாம் கருதுகின்றோம்.

இன்று நிலவும் சித்தர் பரம்பரைக்கு அடித்தளமாக அமைந்தவர்கள் இந்தியாவில் தோன்றிய சித்தர்களேயாவார், இந்திய மண் புனிதமானது. உலகின் தலைசிறந்த ஆன்மீகத் தலைவர்களும் தத்துவஞானிகளும் அங்கேதான் தோன்றினார்கள். எமது நாட்டிற்கும், இந்தியாவிற்கும் நிலத் தொடர்புகள் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் ஒப்புவிக்கின்றன. இதனால் முன்தோன்றிய ஞானிகளும் இங்கு வந்து போயிருக்கக் கூடும். இத் தொடர்பு பின்பு அற்றுப் போன பின்பும் பாரதத்தில் தோன்றிய சித்தர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் உண்டாக்கிய குருமரபு இன்றுவரை நிலவி வருகின்றது.

பெரும்பாலும் இன்றுள்ள குருமரபுகளுக்கெல்லாம் முதல்வராக திகழ்பவர் கடையிற்சுவாமிகள். இற்றைக்கு நான்கு தலைமுறைகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகமானவர். சுவாமிகள் தென்னிந்தியாவில் பெங்களூரில் நீதிபதியாக இருந்தவர். ஒரு கொலை வழக்கில் குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டிய போது மனமாற்றம் ஏற்பட்டு அத்தொல்லையிலிருந்து விடுபட்டு, மெய்யுணர்ந்து துறவு வாழ்க்கைக்கு இட்டுச் செல்லப்பட்டார். அந்நாளில் யர்ழ்ப்பாணத்தில் வாழ்ந்த வயிரமுத்து செட்டியார் இந்திய யாத்திரை செய்யுந் தறுவாயில் தற்செயலாக சுவாமிகளை சந்தித்தார். சுவாமிகளால் ஈர்க்கப்பட்டதனால் அவர் இலங்கை வரவேண்டுமென கேட்டுக் கொண்டார், சுவாமிகள் யாழ்ப்பாணம் வந்தபின் குருவருள் பெற்று செட்டியார் தம்மோடு தம் உடமையெல்லாம் சுவாமிகள் பாற் கையளித்தார். இச்சொத்து கந்தர் மடத்தில் "அன்னசத்திரம்" எனும் பெயரால் இன்றும் இருப்பதாக தெரியவருகின்றது. செட்டியார் தொடர்பால் கடையிற் சுவாமிகளின் இயக்கம் மண்டைதீவிலும், வண்ணார் பண்ணைப்பகுதியிலுமே பெரும்பாலும் திகழ்ந்தது. சுவாமிகளின் தொண்டராகிய குழந்தை வேலடிகள் அருளிய திருப்பாடலொன்றில்

"எண்டோள்களும் வீசியெழில் சேர் நடமாடிக்
கண்டோர் கழித்திடும் கடையிற் குருநாதனை
வண்டோவிடுஞ் சோலை வண்ணைப் பதிமேவித்
தொண்டாம் புணையேறித் தொடர்ந்தாட் படுவீரே"

என்று கடையிற் சுவாமிகள் பற்றி குறிப்பிடுகின்றார். கடையிற் சுவாமிகள் வாழ்க்கையின் கடைசிக்காலத்தில் வண்ணார் பண்ணையின் நீராவியடியென்னும் இடத்திலே வாழ்ந்தார். சுவாமிகள் கரவருடம், புரட்டாதி மாதம், பூரட்டாதி நட்சத்திரத்தில் ஒடுக்கமானார். அக்காலத்தில் ஒடுக்க விழாவை நடாத்தி வைத்த அன்பர்களின் முயற்சியினால் ஒடுக்கக் கோயிலொன்று அவ்விடத்தில் (நீராவிப் பிள்ளையார் கோயிலின் தென்மேல் பாற் கோயிலெல்லையிலிருந்து ஏறக்குறைய 150 அடிக்கப்பால்) அமைக்கப்பட்டுள்ளது.

கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணத்திலிருந்த காலத்தில் கீரிமலையில் எழுந்தருளியவர் தான் பரமகுரு சுவாமிகள். கடையிற் சுவாமிகளே இந்தியாவிலிருந்து பரமகுருசுவாமிகளை அழைத்து வந்ததாக அருளம்பலவடிகள் தம்

கையொப்பமிட்டு வெளியிட்ட வெளியீடொன்று கூறுகின்றது. பரமகுரு சுவாமிகள் பற்றி குழந்தைவேலடிகள் பாடிய ஆசிரிய வாழ்த்துச் செய்யுள் சில அவரை ''கிடாரிப் பருப்பதமேய பிதானே'' என்று குறிக்கின்றன. தென்னிந்தியாவில் உள்ள இராமநாதபுரத்துக்கு அண்மையில் கிடாரிப்பட்டி என்னும் :றொன்று இன்றும் உண்டு. சுவாமிகள் தன்னுண்மை ஆராய்ச்சியை நாடிக் கிடாரிப் பருப்பதம் அடைந்தாரோ அல்லது அதுதான் அவர் பிறப்பிடமோ என்பது துணியப்படாத செய்தி. சுவாமிகள் பால் பெரும்பற்று கொண்டிருந்த சேர். பொன். அருணாசலம் தமது குறிப்பொன்றில் சுவாமிகளைப் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார்.

" One of the wisest and best men I have known was one who in his youth had been a cooby on a coffee plantation in Ceylon. He was moved to take to the woods, and for three years dwelt alone in the forests between matale and Trincomalee. Cut off from all human Sociey, living in the Contemplation of nature and in meditation water and wild fruits his sustenance . He was discovered by some way forers, chosed and tended him till by degrees he returned to the ways of human society. His was a sweet personality. Rich and Poor, men, women, and children, alike felt instinctively drawn to him and found peace and comfort. He had been all but illiterate in his youth, but after his experience in the forest was able to hold learned discussions with Pundits and was heard by them with reverence. He lived all his life a mustic and unwearied ingood deeds. He seemed to be one who had succeeded in breaking the barrier. I spoke of in unlocking the gate and letting the great ocean waters in Paramagur Swami Passed away in 1904. A shrine much frequented by worshippers morks the place of his interment at Aluvihare near Matale"

- "By Sir. P. Arunchalam".

பரமகுரு சுவாமிகளின் வாழ்க்கைப்பற்றி முதுபெரும் மலையக எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான திரு. கே. கணேஷ் அவர்கள் கல்கி இதழிலும் குறிப்பிட்டுள்ளார். மலையக மக்கள் மத்தியில் யாராவது ஒரு மகான் தோன்றவில்லையா என்ற கேள்விக்கு விடையாகத்தான் பரமகுரு சுவாமிகளின் வரலாறு அமைகிறது. தென்னிந்தியாவிலிருந்து மலையகம் வந்த தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட உரிமையாளர்கள், வியாபாரிகள் தலைமன்னாரிலிருந்து நடந்தே வரவேண்டியிருந்தது. எனவே மலையகத்தின் நுழைவாயிலாக மாத்தளை திகழ்ந்தது. பரமகுரு சுவாமிகள் இவர்கள் அனைவருக்கும் அருள்பாலித்துள்ளார். மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் அமைவதற்கு சுவாமிகளின் பங்கு முக்கியமாக அமைந்தது. சுவாமிகளுடன் மிகவும் ஈடுபாடு கொண்ட சின்னத்தம்பி என்பவர் சுவாமிகள் பேரால் காங்கேசன்துறையில் ஒன்றும், கீரிமலையில் ஒன்றுமாக இருமடங்கள் கட்டினார். பரமசுவாமிகளின் சமாதிவைபவம் 1904ம் ஆண்டு பங்குனி சதயத்தன்று மாத்தளையில் நடைபெற்றது. குழந்தை வேல் சுவாமிகள் பன்னிரண்டு சீடர்களுடன் சென்று நாற்பது நாட்கள் தங்கியிருந்து பரமகுரு சுவாமிகளின் சமாதி வைபவத்திற் பங்கு பற்றியுள்ளார். சேர். பொன். அருணாசலம் அவர்களே சுவாமிகளின் சமாதித் திருப்பணியை நிறைவேற்றினார். இவ்விடத்தில் சிவலிங்கம் நாட்டி கட்டப்பட்ட ஒடுக்கக்கோயில் இன்றும் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்து குருமரபின் முதல்வராகிய கடையிற் சுவாமிகளின் ஞானவழித் தோன்றலாய் மிளிர்ந்தவர் குழந்தைவேலடிகள். இவர் வேலணை மேற்கில் பிறந்தார். உத்தியோகப் பொறுப்பேற்று முதலியாராகி இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி வந்தார். அநுராதபுரத்தில் உத்தியோகமாயிருக்கையில் அங்கு தம் முயற்சியால் சிறுகோயிலொன்று அமைத்து அதில் வேலொன்று நட்டு வழிபாடாற்றியும் வந்தார். இக்கோயில் இன்று கதிரேசன் கோயில் என அழைக்கப்படுகின்றது. பின்னர் இவர் தம் தொழிலில் ஏற்பட்ட பிணக்கு காரணமாக ஊர்திரும்பி கடையிற் சுவாமிகளை சந்தித்தார். கடையிற் சுவாமிகளது தொடர்பால் வண்ணார் பண்ணையிலும் பரமகுரு சுவாமிகள் தொடர்பினால் கீரிமலையிலும் குழந்தை வேலடிகள் வாழ்ந்து வரலானார். குழந்தை வேலடிகள் 1909ம் ஆண்டு தை மாதம் ஒடுக்கமடைந்தார்.

அருளம்பலம் அடிகள் 1865ம் வருடம் வண்ணார் பண்ணையில் பிறந்தார். இவர் பின் யாழ்ப்பாணக் கச்சேரியில் முதன்மை எழுதுவினைஞராய் கடமை செய்து வந்தார். பின்னர் இவருக்கு குழந்தைவேலடிகளுடன் தொடர்பு உண்டாயிற்று. பின்னர் ஏனைய அடியார் போலவே தாமும் குழந்தை வேலடிகளுக்கு ஆட்பட்டு தொண்டு செய்து வரலானார். குழந்தைவேலடிகள் ஒடுக்கங்கூடியதன் பின் அடியார்கள் பலரும் இவரையே நல்லாசிரிராக ஏற்றனர். இங்ஙனம் சீவன் முத்தராய் திகழ்ந்த அருளம்பலமடிகள் 1925ம் ஆண்டு ஆனித்திங்கள் ஒடுக்கம் பெற்றார்.

இவர்களுக்கு பின்பு நிறைய சித்தர்கள் நம் நாட்டில் தோன்றி எமது சமய வளர்ச்சிக்கு பங்களித்திருக்கிறார்கள். இவர்களின் சேவை அளப்பரியது.

**துணை நூல்கள்:-**

1. நாலடியார்
2. "Studio and translations" by Sir. P. Arunachalam. From National Archives.

* _*_*

# அவதார புருஷா! ஆபத்பாந்தவா !!

**செல்வி. கேதாரேஸ்வரி பொன்னம்பலம்**
**பொறியியற் பீடம்.**

*கீதையின் நாயகன் கிருஷ்ணனைத்தான் - தினம்*
*ராதையும் வேண்டித் தவமிருந்தாள்.*
*போதைகள் நிறைந்த உலகினிலே - வாழப்*
*பாதையைக் காட்டிடும் கடவுளவன்!*

*மச்சவதாரம் எடுத்து வந்தான் - ஆங்கே*
*மற்றொரு கணத்தில் ஆமையானான்*
*அச்சத்தைப் போக்கி அருளிடவே*
*அவதாரம் எடுத்தான் நரசிம்மனாய் !*

*பாரினைக் காக்கும் பரமனவன் - புவி*
*நாளும் நிலைத்திடப் பன்றியானான்.*
*போரினைத் தடுக்கும் வழிதேடி*
*வாமன னாகி உலகளந்தான் !*

*கையிலே கோடரி தனையேந்தி - எமைக்*
*காத்திட வந்தான் பரசுராமன்*
*மெய்யிலே வைத்த பற்றகற்ற*
*பல ராமனாயும் வடிவு கொண்டான்!*

*தந்தையின் சொல்லை மந்திரமாக்கிக்*
*கானகம் சென்றான் ராமபிரான்*
*விந்தை நிறைந்த இவ் உலகினிலே*
*விடியலுக்கு வழி சமைத்து வைத்தான்!*

*தேவகி மகனாய் உருவெடுத்தான்*
*தேடியே சென்றான் கோகுலத்தை*
*பாவவினை பறந் தோடிடவே*
*பாரதப் போரினில் கீதை தந்தான் !*

*பாற்கடல் துயிலும் பரநாதாமன் - அவன்*
*பாதக் கமலங்கள் பற்றிடுவோம்*
*காற்றிலும் அவன்குரல் கேட்டிடுமே - நிதம்*
*காணத் துடிக்கின்ற போதினிலே!*

# 1993/94 ம் ஆண்டுக்கான இந்து மாணவர் சங்க 38வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

உலகின் வேறெந்தப் பல்கலைக்கழகத்திற்குமில்லாத எமது பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மட்டுமேயுள்ள சிறப்பம்சம் சமய வழிபாடாகும் இங்கேதான் எல்லாச் சமயத்தவரும் தமக்குரிய வழிபாடு நடத்துவதற்குரிய ஆலயங்கள் அமைந்துள்ளன.

எமது பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று கூடி வழிபாடு நடத்த ஒரு ஆலயம் பல்கலைக்கழகத்தினுள் அமைய வேண்டும் என 1952ம் ஆண்டு முதல் இந்து மாணவர் சங்கத்தினரும் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மற்றும் பலரும் பெருமுயற்சி செய்து பரந்திருந்த மலைகளை உடைத்துச் சமதரையாக்கி, நிதிதிரட்டி, குறிஞ்சி நிலத்தில் குன்று தோறாடும் குமரனாம் முருகனுக்கே கோயில் கட்டி 1968ம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தினை நிறைவேற்றிவைத்தனர்.

தொடர்ந்து, வருடாந்தம் முற்றுமுழுதாகப் பல்கலைக்கழக மாணவர்களையே தன்னகத்தே கொண்டு தெரிவு செய்யப்படும் இந்து மாணவர் சங்க செயற்குழு ஆலயப் பொறுப்பாண்மைக் குழுவினருடன் சேர்ந்து ஆலயத்தை நிர்வாகித்துப் பராமரிக்கும் பணியுடன் இந்து மாணவர்களது ஆன்மீக வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து வருகிறது.

குறிஞ்சி மலையிலே அமர்ந்திருக்கும் எல்லாம் வல்ல குமரனின் அருளினால் எமது செயற்குழுவும் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கியது. அந்த வகையில் அடக்கமாகவும், பணிவுடனும் எமது ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.

20.11.93 குறிஞ்சிக் குமரன் ஆலய மண்டபத்தில் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்று, கடந்த வருட செயற்குழுவிடமிருந்து சங்கத்தின் பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்டோம்.

**திருக்கல்யாண உற்சவம்** மாலை விசேட பூசையைத் தொடர்ந்து தெய்வானைத் திருமணம் , முருகன் திருவேட்டைக்குச் சென்றமை வள்ளியை மணந்தமை, எட்டுக் குடி ஏசல், யாகசாலைப்பிரவேசம் என்பனவற்றுடன் விநாயகப் பெருமான் , இராஜராஜேஸ்வரி, சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் ஆகியோரின் திருச்சமூகத்தில் திருமாங்கல்ய தாரணம் இரண்டு செயற்குழுக்களினதும் இணைந்த செயற்பாட்டில் இனிதே நிகழ்தேறியது.

28.11.93 **திருக்கார்த்திகை உற்சவம்** ஆலயமும், சுற்றுப்பிரகாரமும் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு ஒளிவீசும் வேளையில் வள்ளி தேவசேனா சமேதராய் ஆறுமுகப்பெருமான் திருவீதியுலாவந்து அடியார்கட்கு அருள்பாலித்தார்.

20.12.93 **திருவெம்பாவை ஆரம்பம்** தொடர்ந்து பத்துத் தினங்களும் அதிகாலை அபிஷேகத்துடன் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாராயணங்களுடன் விஷேட பூஜை நடைபெற்று இறுதிநாளன்று (29.12.93) நடேசர் ஆருத்திரா தரிசனமும் இனிதே நிறைவெய்தின.

07.01.94 வெள்ளிக்கிழமை மாலைப்பூஜை, பஜனையைத் தொடர்ந்து **ஸ்ரீமத்** சுவாமி **ஆத்மகனானந்தஜி** மஹராஜ் (தலைவர் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்) அவர்களால் **தியானம்** என்ற தலைப்பிலான விசேஷ சொற்பொழிவும் தியானப் பயிற்சியும் நிகழ்த்தப்பட்டன.

14.01.94 **தைப்பொங்கல் விஷேட பூஜை** பீட ரீதியாக நடைபெற்ற பொங்கல்விழா. சூரிய பகவானிற்கு

நடைபெற்ற விசேட பூஜையுடன் இனிதே நிறைவெய்தியது. அனைத்துப் பீட மாணவர்களும் கலந்து கொண்டமை விழாவின் சிறப்பம்சமாகும்.

15.01.94 **சிரமதான நிகழ்ச்சி** அலங்கார உற்சவத்தினை முன்னிட்டு ஆலய உள்வீதி, வெளிவீதி, சுற்றாடல் மண்டபங்கள், விளக்குகள் என்பவ சுத்தமாக்கப்பட்டன.

18.01.94 அலங்கார உற்சவ ஆரம்பம் திருவிழாக்கள் அனைத்தும் ஸ்நபனாபிஷேகம், விஷேட பூஜை, வசந்த மண்டபப் பூஜை, பஜனை என்றவாறு நியமப்படி படைபெற்று ஒவ்வொரு தினமும் வெவ்வேறு அலங்காரங்களில் வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசுவாமியாய் எம்பெருமான் மயூரவாகனரூபராகத் திருவுலாக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

4ஆம் நாள் 21.01.94 வெள்ளிக்கிழமை மாலை விஷேட பூஜையைத் தொடர்ந்து பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரது ஆன்மீக அருளுரையும், தமிழ்நாடு திருமதி. சௌந்தரா கைலாசம் அவர்களது சமய சொற்பொழிவும்உற்சாவத்தினை மேலும் சிறப்புறச் செய்தன. இந்நிகழ்ச்சியில் பேரூர் ஆதீன இளையப்பட்டம் மருதாசல அடிகளாரும் இந்தியத்துணைத் தூதுவர் திருவாளர் அ. கருப்பையா அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அலங்கார உற்சவ இறுதித்தினமான தைப்பூசத்தினத்தன்று (27.01.94) காலை அஷ்டோத்திரசத சங்காபிஷேகத்தினையடுத்து அழகிய குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் படத்துடன் 1994ம் ஆண்டிற்கான கலண்டர் முதன்முறையாக வெளியிடப்பட்டது. மதியம் மாகேஸ்வர பூசையைத் தொடர்ந்து அளவையூர் பாலகிருஷ்ணன் குழுவினரின் தவில் நாதஸ்வரக் கச்சேரியும் மாலை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்த மஹராஜ் அவர்களின் அருளுரை, பஜனையும் விழாவைச் சிறப்பித்தன.

தொடர்ந்து விசேட மூலஸ்தான வசந்த மண்டபப் பூஜைகளுடன் திருவூஞ்சலும் இடம்பெற்று வள்ளிதேவசேனா சமேதராக அருள் உலாக்கொள்ளும் முத்துக்குமாரசுவாமி விநாயகப் பெருமான்அம்பாள் ராஜராஜேஸ்வரி இருவரும் புடைசூழ நாதஸ்வரக் கச்சேரியுடன் ஒருங்கே பவனிவந்த காட்சி நெஞ்செல்லாம் நிறைந்தது.

இத்தினத்தில் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் சிறப்புறத் தொகுக்கப்பட்டு 06.02.94 மாலை 5.30 இற்கு ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையிலும், பிறிதொரு தினத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் ஒளி. ஒலி பரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

10.03.94 **மகா சிவராத்திரி** பல்கலைக்கழகம் மூடப்பட்டு வளாகத்தினுள் மாணவர்கள் நடமாடத்தடை விதிக்கப்பட்டிருந்த போதும் விஷேட நான்கு ஜாமப் பூசை, பஜனை, ஆராதனைகளுடன் விழா இனிதே நிறைவேறியது.

11.04.94 **சிரமதான நிகழ்ச்சி** எதிர்வரும் பவ வருடப்பிறப்பை முன்னிட்டு சிரமதான நிகழ்ச்சி நடைபெற்றது. ஆலய உள்வீதி, வெளிவீதி, சுற்றாடல், மண்டபங்கள் என்பன சுத்தப்படுத்தப்பட்டன.

14.04.94 **பவ வருடப்பிறப்பு** புதுவருடப்பிறப்பானது அபிஷேகம், விஷேட பூஜை ஆராதனைகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

25.04.94 **சித்திரா பூரணை விஷேட பூஜை** அபிஷேக விஷேட பூஜை வழிபாடுகளுடன் அடியார்களுக்கு சித்திரைக்கஞ்சி வழங்குவதும் இடம்பெற்றது.

24.05.94 **வைகாசி விசாக உற்சவம்** விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் வள்ளிதேவசேனா சமேதராக ஆறுமுகப் பெருமான் திருவீதியுலாக் கொண்டமை சிறப்பம்சமாகும்.

03.07.94 **புதிய மாணவர் வரவேற்பு வைபவம்** காலை 8.00 மணியளவில் பொதுக்கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு 1992/93ம் கல்வியாண்டின் சகல பீடங்களையும் சேர்ந்த புதிய மாணவர்கள் வரவேற்கப பட்டார்கள். அதில் கோயிலின் பாரம்பரியம் பற்றியும் இந்து மாணவர் சங்கம், ஆலயப் பொறுப்பாண்மைக்குழு,

இந்துப் பட்டதாரிகள் மன்றம் என்பனவற்றின் செயற்பாடுகள் பற்றியும் ஆலயப் பராமரிப்பிற்கும் வளர்ச்சிக்கும் ஒவ்வொருவரினதும் பங்களிப்புக்கள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

கூட்டத்தினையடுத்து சகல மாணவர்களும் ஒன்றினைந்து ஆலய உள்வீதி, வெளிவீதி சிரமதானத்தை மேற்கொண்டனர். இறுதியாக மதிய போசனத்துடன் வைபவம் இனிதே நிறைவு பெற்றது.

14.07.94 **ஆனி உத்தர நடேசரபிஷேகம்** அதிகாலை சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜப் பெருமானுக்கு விஷேட திரவியாபிஷேகம், ஸ்நபிஷேகம், என்பன அகில் , குங்கிலியம் சாம்பிராணி மணக்க சாமரைகள் அசைய முறையாக நடந்து ஸ்ரீ நத்ர பாராயணம் சோடச உபசார பூஜை என்பவற்றையடுத்து விடியற்பொழுதில் நடேசர் தரிசனமும் நடேசர் திருவீதியுலாவும் இடம் பெற்றன.

**மணவாளக்கோலதின சங்காபிஷேகம்** புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக தினமான இத்தினமே மணவாளக் கோல தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. காலை 1009 சங்குகளுடன் நவோத்திர சகஷ்ர நாம சங்காபிஷேகமும் மதியம் மாகேஸ்வரப் பூஜையும் இடம் பெற்றன. மாலை விஷேட வசந்த மண்டப பூஜையுடன் திருவூஞ்சலும் சர்வாலங்காரரூபராக வள்ளிதேசேனா சமேதரராய் முருகப் பெருமானின் திருவீதியுலாவும் பொறியியற்பீட மாணவர்களினால் விஷேட தவில் நாதஸ்வரக் கச்சேரியுடன் வெகுசிறப்பாக நடந்தேறியமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

30.07.94 **ஆன்மீக அருளுரை** காலை 9.00 மணிக்கு வடலூர் வள்ளலார் குடில் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ஊரன் அடிகளின் அருளுரை இடம்பெற்றது.

07.08,94 **ஆடி அமாவாசை** பகல் அபிஷேகம் விஷேட பூஜை என்பவற்றுடன் மதியம் அன்னதானமும் இனிதே நிகழ்ந்தேறின.

09.08.94 **ஆடிப்பூர உற்சவம்** அபிஷேகம், விஷேட பூஜையைத் தொடர்ந்து அம்பாள் இராஜராஜேஸ்வரி திருவீதியுலாவும் இடம்பெற்றது.

09.09.94 **விநாயக (ஆவணிச் சதுர்த்தி உற்சவம்)** விநாயகப் பெருமானுக்கு ஸ்நபனாபிஷேகம், விஷேட பூஜை ஆராதனைகளுடன் மூஷிக வாகனரூபராய் விநாயகப் பெருமான் திருவீதியுலாக் கொண்டு அடியார்கட்டு அருள் பாலித்தார்.

11.09.94 **திருத்தலயாத்திரை** ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு மஹோற்சவ தினத்தில் யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி யாத்திரை சிறப்புற அமைய எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் பல புரிந்த விஞ்ஞான பீட உதவி விரிவுரையாளர் திரு. ச.விஜயமோகன் அவர்கட்கும் இதில் கலந்து கொண்ட எமது பெருந்தலைவர் கலாநிதி இ.சிவகணேசன்,கலாநிதி. வ.முத்துக்குமாரசாமி, திருமதி மல்லிகா இராஜரட்னம் ஆகியோருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகள்.

05.10.94 நவராத்திரி விழா பிரதமை முதல் நவமியீறாக தினமும் மாலை அம்பாளுக்கு அபிஷேகம், வசந்த மண்டப விஷேட பூஜை ஆராதனைகளுடன் தேவி தோத்திர பாராயணமும் இடம்பெற்று இறுதி நாளான விஜயதசமியன்று அம்பாள் மகிடாசுரமர்த்தனியாக எழுந்தருளி ஆலய முற்றலில் **மானப்பூ** வைபவம், கலை நிகழ்ச்சிகள், இராப்போசனம் என்பவற்றுடன் இனிதே நிறைவெய்தியது.

28.10.94 **அமரர் பேராசிரியர் துரைராஜா நினைவஞ்சலி** எமது ஆலயப் பொறுப்பாண்மைக் குழுவில் அங்கத்துவம் வகித்தவரும் ஆலய நிர்வாகப் பணிகளில் பெரும்பங்காற்றியவருமான அமரர் பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் நினைவாக அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்கள். பேராசிரியர் த. யோகரட்ணம், பெருந்தலைவர் கலாநிதி. இ.சிவகணேசன், பேராசிரியர் சி.தில்லைநாதன் ஆகியோரது இரங்கலுரைகளும் மாணவர்களது அஞ்சலிக் கவிதைகளும் இடம்பெற்றன.

02.11.94 **தீபாவளி** காலை முருகப் பெருமானுக்கு அபிஷேகத்தைத் தொடர்ந்து அனைத்து விக்கிரகங்களுக்கும் புதிய பட்டாடைகள் அணிவிக்கப்பட்டு விஷேட பூஜையுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

04.11.94 **கந்தஷஷ்டி.** தினமும் அபிஷேகம் வசந்த மண்டப விஷேட பூஜை என்பன இடம்பெற்று இறுதி நாளன்று ஆறுமுகப் பெருமான திருவீதியுலாக் கொள்ளலும் இடம்பெற்றன.

**திருக்கல்யாணம், திருக்கார்த்திகை, திருவெம்பாவை** ஆகியவை மீண்டும் எமது செயற்குழுவின் பதவிக் காலத்தில் சிறப்புற நடந்தேறின.

24.12.94 **இந்து சமயக் கருத்தரங்கு** ஆலயத்திற்கு வெளியே இந்து மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக **இன்றைய வாழ்வில் இந்து மதம்** என்னும் தலைப்பிலானகருத்தரங்கு பொறியியற்பீட E.O.E பெரெய்ரா அரங்கில் நடைபெற்றது.

கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி மஹராஜ் அவர்களினதும் சிவஸ்ரீ பா.நித்தியானந்தக் குருக்கள் அவர்களினதும் ஆசியுரையுடனும் பேராசிரியர் சி. தில்லைநாதன் ஆரம்பவுடையுடனும் ஆரம்பித்து பெருந்தலைவர் கலாநிதி இரா.சிவகணேசன் அவர்களின் தலைமையில் இரு அமர்வுகளில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் ஆலயப் பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் பேராசிரியர் த.யோகரட்ணம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

**இந்து சமயம் காட்டும் ஆன்மீகவழி** என்ற உபதலைப்பில் நடைபெற்ற முதலாம் அமர்வு, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் தலைமையிலும் சைவநன்மணி நா.செல்லப்பா, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு.தெய்வநாயகம், கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி வி. இராமகிருஷ்ணன் ஆகியோரின் சொற்பொழிவுடன் சிறப்புற நடைபெற்றது.

**இன்றைய நிலையில் இந்து மதம் எதிர் நோக்கும் சவால்கள்** என்ற உபதலைப்பில் நடைபெற்ற இரண்டாம் அமர்வு, உயர்நீதிமன்ற நீதிபதி C.V. விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில், பண்டிதர் கா.செ.நடராஜா, திருமதி பத்மா சோமகாந்தன், பிள்ளைக் கவி வ.சிவராஜசிங்கம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த செல்வி சற்சொரூபவதிநாதன் ஆகியோரின் சொற்பொழிவுடனும் யாழ். கம்பன் கழகம் திரு.இ.ஜெயராஜ் அவர்களின் கருத்துரையுடனும் சிறப்புற நடைபெற்றது.

31.12.94 **சிரமதான நிகழ்ச்சி** அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆலய உள்வீதி, வெளிவீதி சுற்றாடல், மண்டபங்கள், விளக்குகள் என்பன தூய்தாக்கப்பட்டன.

08.01.95 ஆரம்பமாகிய **அலங்கார உற்சவம்** மீண்டும் எமது செயற்குழுவின் பதவிக் காலத்தில் சிறப்புற நடந்தேறியது.

மேற்குறிப்பிட்டவையுடன் வருஷ விஷேஷாதி விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு **கார்த்திகை உற்சவங்கள், நடேசர் தரிசனங்கள், மாசிமகம், பங்குனி உத்தரம், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, சுவர்க்கவாயிலேகாதசி** என்பனவும் விஜேஷாதி விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படா பிரத்தியேக அபிஷேகங்கள் பூஜைகள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் விஷேட பூஜை, பஜனை இதைத் தொடர்ந்து இரண்டு நிமிடத் தியானமும் சிறப்பாக இடம்பெற்றன.

**நவில்கின்றோம் நன்றிகள் பல!**

தகுந்தமுறையில் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் ஆலோசனை நல்கின்ற எமது பெருந்தலைவர் இ.சிவகணேசன், பெரும்பொருளாளர் வைத்திய கலாநிதி வி.விஜயகுமாரன், பொறுப்பாண்மைக் குழுவின் தலைவர் பேராசிரியர் த.யோகரட்னம், பொதுச் செயலாளர் திரு.வ.நந்தகுமார், நிர்வாகச் செயலாளர் கலாநிதி வ.முத்துக்குமாரசாமி அவர்களுக்கும் ஆலயத்தில் தங்கியிருந்து நித்திய நைமித்திய பூஜைகளை சிறப்பாக ஆற்றிவரும் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்கள் அவர்களுக்கும் பூஜை மற்றும் கிரியைகளில் பிரதம குருவிற்கு உதவியும் இந்து மாணவர் சங்கப் பணிகளிலும் பெரும்பங்கெடுத்துக் கொள்ளும் பொறியியற்பீட உதவி விரிவுரையாளர் க.பாலகிருஷ்ணஐயர் அவர்களுக்கும்,

பல்கலைக் கழகம் மூடப்பட்டு அனைத்து மாணவர்களும் வீடுகளுக்குச் சென்றிருந்த வேளையில் ஆலயப் பணிகளை

**மேற்கொள்ள நாம் தட்**டுத்தடுமாறியபோது எம்முடன் ஆலயத்தில் தங்கியிருந்து தோளோடு தோள்கொடுத்த **பொறியியற்பீட மூன்**றாம் ஆண்டு மாணவன் ச.கண்ணன், விஞ்ஞானப் பீட உதவி விரிவுரையாளர் ச.விஜயமோகன் **மற்றும் பொறியி**யற்பீடப் போதனாசிரியர்களான த.ரிஷீந்திரன், மு.மகாசேனன் ஆகியோருக்கும்,

**தற்**போது ஆலயத்தில் தங்கியிருந்து ஆலயக்கிரியைகள் குறித்த நேரத்தில் ஒழுங்காக நடந்தேற தக்க **தருணங்களில்** உதவிகள் புரிந்து வரும் பொறியியற்பீடப் போதனாசிரியர்களான வி.மதிதரன், தி.நவநீதன், ப.குகனேசன், க.மணிவண்ணன், ஏ.இரகுராமன்குமார், க.பாஸ்கரன், க.தங்கவேல் ஆகியோருக்கும் **திரு**.த.குணசீலனுக்கும்,

எமது ஆலயத்திற்கு உபயங்கள், அன்பளிப்புகள் நல்குகின்ற அன்பர்கள் அடியார்கள், வர்த்தகப் பிரமுகர்கள் அனைவருக்கும் கருத்தரங்கு, விளம்பரம் என்று நாம் சொல்ல, இது நல்லகாரியம் என்று சொல்லித் தாராளமாகப் பொருளுதவி வழங்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும்,

சிரமதானம், உற்சவம் மற்றும் இந்து மாணவர் சங்கத்தின் பிற செயற்பாடுகளுக்கு உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது மனமுவர்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவர்கள் பணி மென்மேலும் தொடரவும், எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரனின் அருள் என்றென்றும் இவர்களிற்குக் கிடைக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறோம்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

நன்றி

**இந்துமாணவர் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

**செல்வன் தி. கேதீஸ்வரசுதன்**
**செல்வி. ஸ்ரீ. வதனா**
(இணைச் செயலாளர்கள்)

*With Best Compliments From*

**LANKA STEEL CENTRE**

**GENERAL HARDWARE MERCHANTS AND IMPORTERS**

*316 A, OLD MOOR STREET,*
*COLOMBO-12.*
*T'Phone: 320104, 334957.*

*With Best Compliments From*

**ONIDA STEELS**

Importers & General Hardware Merchants

41, QUARRY ROAD, COLOMBO 12.
TELE : 445065
FAX : 440950 - 448516

*With Best Compliments From*

**JINI GLASS TRADING**

*N. KANDIAH*
*5, CIRLULAR ROAD,*
*HATTON*

*With Best Compliments From*

**Sri Mutumari Stores**

*NO. 80, MAIN STREET*
*MASKELIYA.*

*With Best Compliments From*

KALYANI STORES

*NO. 55, YATINUWARA VIDIYA,*
*KANDY.*

*With Best Compliments From*

**ASHOK MOTOR CENTRE**

37, PERADENIYA ROAD,
KANDY.
Phone - 22864, 32420
Fax - 32148

*With Best Compliments From*

**LANKA CENTRAL BOOK DEPOT**

Book Sellers & Stationers

**84, COLOMBO ST,**
**KANDY.**
**TEL: 22562**

*With Best Compliments From*

VIMALA TOBACCO INDUSTRY

(Dealers in Vimala Snuff & Cigars)

*208, Colombo Street,*
*Kandy,*
*T.P. 08-22602.*

*With Best Compliments From*

# THULASHI TRADE CENTRE

**General Merchants**
**&**
**Commission Agerts**

*30, 4th Cross Street,*
*Colombo-11.*
*Tel: 422637.*

*With Best Compliments From*

# MICRO METALS

**Importers, General Hardware Merchants**

*126, Mahavidyalaya Mawatha,*
*(Barber Street)*
*COLOMBO-13.*
*Phone: 325764, 445349.*

*With Best Compliments From*

# Arasan Company

**GENERAL**
**RICE MERCHANTS**

*72-A, 4th Cross Street,*
*Colombo-11.*
*Telephone: 329407, 439797.*

*With Best Compliments From*

# MALAVANS

**IMPORTERS DISTRIBUTORS**
**&**
**WHOLESALE DEALERS**

*214, 4th Cross Street,*
*COLOMBO-11.*
*Phone: 327951, 323668.*

*With Best Compliments From*

**SARASWATHI STORES**

90, COLOMBO STREET,
KANDY.
TEL: 22104, 33027

*With Best Compliments From*

**KANDY TRACTOR AND MOTOR SPARES**

68 B, COLOMBO STREET
KANDY.

*With Best Compliments From*

**SRI LANKA PHARMACY LTD.,**

**48 years of excellent service to the nation**

39, D.S. SENANAYAKE VEEDIYA,
KANDY.
PHONE: 08. 23606, 32649
ESTD. 1947

*With Best Compliments From*

Guaranteed 22 Ct.
Sovereign Gold Jewellary
Designers

*Vasanthas*

JEWELLERS & PAWN BROKERS

56, D. S. Senanayake Vidiya,
Kandy

T.P. 08-33151
08-24300
Estd: 1967

**Famous Over 25 Years for Quality Jewelleries**

*With Best Compliments From*

# S.S .WILSON & CO. (PVT) LTD.

**GENERAL MERCHANTS**

*176, Fourth Cross Street,*
*Colombo- 11.*
*T'Phone: 327662*

*With Best Compliments From*

# TRANSWOOD

**Importers & Dealers in Plywood, Plywood Doors, Chipboard, Formica, Hardboard and General Hardware Merchants**

*27, Ouarry Road,*
*Colombo- 12.*
*T'Phone: 320103, 331483.*
Fax: 332680.

*With Best Compliments From*

# S.P.S. AGENCY

*113, 4th CROSS STREET,*
*COLOMBO-11.*
*TELEPHONE. 326204.*

*With Best Compliments From*

# KRISHNA STORES

DEALERS IN FERTILISERS,
AGRO-CHEMICALS, VEGETABLE SEEDS
AND PROVISIONS
Stockist:- **J.E.D.B. FERTILISERS**

Distributors For:-
**LANKEM-AGRO-CHEMICALS**
**CEYPETCO-AGRO-CHEMICALS**

*163, COLOMBO STREET,*
*KANDY.*
*T.P. 34204.*

*With Best Compliments From*

# Modern Hardware Centre

**DEALERS AND STOCKIST OF IRON AND STEEL**

*43, ABDUL JABBAR MAWATHA, COLOMBO 12, SRI LANKA.*
*TELEPHONE: 435468, 328614, 436537*
*FAX: 0094 1 431890.*

*With Best Compliments From*

தமிழ் வளர்ச்சியில்
தமிழ் மக்களின் வளர்ச்சியில்
50 ஆண்டு காலமாகத் தொண்டாற்றி வரும்
சிறந்த நிறுவனம்

# KALALVANI BOOK CENTRE

NO, 231 D.S. Senanayake Vidiya,
Kandy.
T.P, 08-23196, 078/71418.

*With Best Compliments From*

**The International Hardware Stores**

*Authorized Dealers for C.I.C. Paints, Hardwares & Estate Suppliers.*

60, D.S. SENANAYAKE VEEDIYA,
KANDY.
DIAL : 22220

*With Best Compliments From*

**DEVI JEWELLERS**

Sovereign Gold Jewellers

38, D.S. SENANAYAKE VEEDIYA,
KANDY - SRI LANKA.
TEL: 24110

*With Best Compliments From*

*Chithra Jewellers*

22 Carat Sovereign Gold Jewellers

41, D.S. Senanayake Vidiya,
KANDY.
Phone: 08-23290

*With Best Compliments From*

**HOTEL KALPANA**

30, KOTUGODELLA VIDIYA,
KANDY.

*With Best Compliments From*

நல்வாழ்த்துக்கள்

"செல்டெல்"

தொடர்பான விபரங்களைத் தமிழிலேயே தொடர்பு கொள்ள

**செல் பொயின்ட்**

S.மனோஜ்காந்த்

316, காலி வீதி,
பம்பலப்பிட்டி
072 48585
072 40915

104, புத்தளம் வீதி,
சிலாபம்
072 47986.

*With Best Compliments From*

இந்து தருமத்திற்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்கள்!

# நந்தன் அச்சகம்

கண்டி

*With Best Compliments From*

**MAHESWARI STORES**

*Dealers in:*
Eversilver, Aluminium, Brass & Enamelware, Glassware, Plastic & Gift Items

34, Kotugodella Veediya,
KANDY.
Phone: 22133

*With Best Compliments From*

**The Ultimate Choice**
**For all Hardware & Software Services**

**Information Development Systems**

285, Peradeniya Rd, Kandy.
TEL: 08-25153

454/12A Pincahud Gardens, Kandy.
TEL: 08-24420

Fax: 08-32148

*Dealers for Asia Pac Computers*

*With Best Compliments From*

**For Hiring of Best Quality Video Cassettes**

**NEW SHABANAZ MUSIC CORNER**

AUDEO AND VIDEO CENTRE

**NO. 10/2/2 NIZAM SHOPPING COMPLEX,**
**2ND FLOOR,**
**YATINUWARA VEEDIYA,**
**KANDY.**

For High Quality Recording in All Kinds of Audio Songs

*With Best Compliments From*

**UNI LANKA MEDICAL**

*Dispensing Chemists & Grocers*

*NO. 45, PERADENIYA ROAD,*
*KANDY.*

*With Best Compliments From*

***Real Difference***

**COME ONCE**

# Sri Ranee

**HAIR DRESSERS**
**&**
**BEAUTY PALOURS**

**KING STREET,**
**KANDY.**

*With Best Compliments From*

## DEVI TRADING COMPANY

Dealers in Foodstuff & Commission Agents

No. 62, Fourth Cross Street,
COLOMBO - 11
Telephone : 422034

*With Best Compliments From*

**"இந்து தருமம்"**
**சிறப்புற**
**வாழ்த்துகின்றோம்.**

**கேசவன் புத்தக நிலையம்,**
**இல. 52இ டன்பார் வீதி,**
**ஹட்டன்.**

# ஏற்றிடுக! எம் இனிய நன்றிகளை

இந்து தருமம்'94 இனிதே வெளிவர துணை நின்ற குமரன் திருவருளை மனதிற் கொண்டு....

இம் மலர் சிறப்புற ஆசிகள் நல்கிய சுவாமி ஆத்மகானாந்தா, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்

நல்வாழ்த்துக்கள் தந்து மரலைச் சிறப்புறச் செய்த எமது பல்கலைக் கழக துணை வேந்தர், இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர், இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர், பெரும் பொருளாளர்

தமது நல்லாக்கங்களைத் தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் மற்றும் சக மாணவ மாணவிகள்,

விளம்பரங்களை உவகையுடன் தந்து மலர் வெளியிட உதவி புரிந்த வர்த்தகப் பிரமுகர்கள்

விளம்பரங்கள் சேகரிப்பதில் எம்முடன் உதவி புரிந்த நண்பர்கள், மற்றும் பல வழிகளில் உதவிகள் நல்கிய நண்பர்கள்

கட்டுரைகளைச் சரி பார்த்து தொகுப்பதற்கு உதவிய இந்து நாகரிக முதுநிலை விரிவுரையாளர் திரு.இரா.வை.கனகரத்தினரம் அவர்கள், தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு.வ.மகேஸ்வரன் அவர்கள்

பல வேலைப் பழுக்களுக்கு மத்தியிலும், மிகக் குறுகிய காலத்தில் இம் மலரைக் கணணி எழுத்துக்களைக் கொண்டு அழகுற அச்சிட்டுத் தந்த 'டெக்னோ பிரின்ட்' ஸ்தாபனத்தினர்

அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நன்றி.**

**பேராதனைப் பல்கலைக் கழகம்,**
**பேராதனை.**

**இந்து மாணவர் சங்கம்**

Graphics : ***Technoprint,*** *No.6, Jeyawardena Avenue, Dehiwela. Tel : 727708.*